வெளியீடு 5-7-2002 Issued 5-7-2002

510/2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 28, 2001 – தொகுதி 7 – எண் 2

Tuesday the 28th August, 2001 – Volume 7 – No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

5/10 2003

**28-8-2001**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. **வினாக்கள்–விடைகள்–** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 413, 414-431, 436-451 |
| 2. **ஓர் உறுப்பினர் சட்டை அணியாமல் அவைக்கு வந்துள்ளமை–** | 413-414, 431-436 |
| 3. **தகவல் கோரல்–** | |
| (அ) உறுப்பினரின் முன்னறிவிப்பு | 452 |
| (ஆ) பேரவையில் இருக்கைகள் ஒதுக்கியது | 452-453 |
| 4. **சிறப்புக் கவன ஈர்ப்பு–** | |
| வாக்காளர் பட்டியலில் பெயர்கள் விடுபட்டுள்ளது | 454-460 |
| 5. **கவன ஈர்ப்பு–** | |
| நீலகிரி மாவட்டம், கருவண்ணுராயர் எம்மட்டம் பள்ளத்தில், பாலம் மழை நீரால் அடித்துச் செல்லப்பட்டது | 460-463 |
| 6. **மானியக் கோரிக்கைகள், 2001–02, விவாதமும் வாக்கெடுப்பும்**–தொடர்ச்சி | 463-545 |
| (அ) கோரிக்கை எண் 13 - நீதி நிருவாகம் | |
| (ஆ) கோரிக்கை எண் 14 - சிறைச்சாலைகள் | |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 463, 469, 475, 477, 478, 488, 499, 517-518, 519-524, 526-538, 544, 605, 645-646, 647 |

பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 2001–02, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 13-நீதி நிருவாகம்
(ஆ) கோரிக்கை எண் 14-சிறைச்சாலைகள்—தொடர்ச்சி

| | |
|---|---|
| * திரு. மு.பெ. சாமிநாதன் | 466, 471, 475 - 477, 480 - 485, 539, 542 |
| திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன் | 486 - 490 |
| திரு. எம்.ஏ. ஹக்கீம் | 490 - 497, 501 - 504 |
| திரு. எஸ். நடராஜன் | 464, 504 - 509, 538 |
| * திரு. டி.என். சிவசுப்பிரமணியன் | 509 - 511 |
| திரு. கே.சி. கருணாகரன் | 465, 470, 511 - 514, 538, 541 |
| திரு. எச். ராஜா | 514 - 516 |

(இ) கோரிக்கை எண் 12 – 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு 'இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் — 546 - 655

(ஈ) கோரிக்கை எண் 50—சுற்றுலா

| | |
|---|---|
| * மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி | 485 - 486, 546, 550, 558, 562, 571, 578, 579, 581, 593, 594, 597, 598, 620 - 641, 649, 6[illegible] |

22344




பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 2001–02, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

| | |
|---|---|
| * மாண்புமிகு திருமதி இரா. சரோஜா | 551, 555 - 556, 608 - 619 |
| * திரு. ஆர். சக்ரபாணி | 549, 554, 556 - 563, 652, 654 |
| செல்வி சி. கனகதாரா | 563 - 570 |
| * திரு. எஸ். தாமோதரன் | 570 - 575 |
| திரு. என். நன்மாறன் | 547, 555, 575 - 578, 580, 652, 655 |
| திரு. எஸ்.எம். சீனிவேல் | 581 - 586 |
| * திரு. வே. கிருஷ்ணமூர்த்தி | 586 - 592 |
| திருமதி வி. சிவகாமி | 592 - 596, 640 |
| * திரு. லா. சந்தானம் | 601 - 602, 605 - 607 |
| * திரு. கே.என். இலட்சுமணன் | 607 |

7. அறிவிப்புகள்—

(அ) உறுப்பினர்களுக்குத் தேயிலைப் பாக்கெட்டுகள் வழங்குதல் — 518

(ஆ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல் — 545 - 546

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் — 656

53/1-F-12

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 12, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 ஆகஸ்ட் 28, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்"

*குடிமக்களைப் பிறர் வருத்தாமல் காப்பாற்றுவதும், குற்றங்களுக்குத் தக்க தண்டனை அளிப்பதும் ஆட்சியாளரின் தொழில் ஆகுமேயன்றி பழி ஆகாது.*

## 1. வினாக்கள் – விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள். வினா எண் 20, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மின் துறை அமைச்சர். (குறுக்கீடு*

## 2. சட்டை அணியாமல் ஓர் உறுப்பினர் அவைக்கு வந்துள்ளமை

*(உறுப்பினர் திரு. க. முருகவேல் ராஜன், பேரவையில் சட்டை இல்லாமல் பேசுவதற்காக எழுந்து நின்றார்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *முருகவேல் ராஜன், நீங்கள் உட்காருங்கள்.*

**திரு. க. முருகவேல் ராஜன்:** *பேரவைத் தலைவர் அவர்களே,* Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முருகவேல் ராஜன், கேள்வி நேரத்திலே ஒழுங்குப் பிரச்சினை எதுவும் கிடையாது. அதோடு மட்டுமல்ல, சட்டப் பேரவைக்கு சட்டை அணிந்து வருவதுதான் முறை, மரபு. பாட்டாளிகள் சட்டை இல்லாமல் இருப்பார்கள். பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் சட்டை இல்லாமல் இருக்கக் கூடாது. ஆகவே, அவையின் கண்ணியத்தைக் காப்பாற்றக்கூடிய வகையில் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லிவிட்டு, நீங்கள் வெளியே கிளம்பிச் செல்லலாம். வினாக்கள்–விடைகள் நேரம் முடியட்டும்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** நான் பேச அனுமதி அளிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முருகவேல் ராஜன், இது வினாக்கள்–விடைகள் நேரம். வினாக்கள்–விடைகள் நேரம் முடியட்டும். திரு. ரங்கநாதன்.

## 1. வினாக்கள்–விடைகள்–தொடர்ச்சி

### உடுக்குறியிட்ட வினாக்கள்–தொடர்ச்சி

**20—**

### மின் தடை

*** 82–திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் ஒரு நாளைக்குக் குறைந்தது இரண்டு மணி நேரமாவது மின் தடை ஏற்படுவதால், அதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை மாநகரில் மின் தடை ஏற்படாமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக மார்ச் மாதம் வரையில், சென்னையிலும், சென்னைப்



புறநகர்ப் பகுதியிலும் தடங்கல் இல்லாமல் சீரான முறையில் மின்சாரம் பொதுமக்களுக்கு வாரியத்தால் வழங்கப்பட்டு வந்தது. மார்ச் மாதம் வரையில் உள்ள புள்ளிவிவரங்களில், தமிழ்நாடு மின்சார வாரிய அனல் மின் நிலையம் மற்றும் புனல் மின் நிலையம் மூலமாக சுமார் 23,500 மில்லியன் யூனிட் உற்பத்தியாகிறது என்றும், மத்திய அரசின் தொகுப்பிலிருந்து மின்சார வாரியத்தின் மூலமாகவும் மற்றும் தனியார் மின்சார உற்பத்தி மூலமாகவும் சுமார் 15,000 மில்லியன் யூனிட் மின்சாரத்தை வாரியம் கொள்முதல் செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். ஆக மொத்தம் 38,500 மில்லியன் யூனிட் வாரியம் கொள்முதல் செய்தும், சென்னையிலும், சென்னைப் புறநகர்ப் பகுதியிலும் இருக்கின்ற தொழிற்சாலைகளுக்கும், வீட்டிலே பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்கும் சங்கடம் ஏற்படுத்துகின்ற வகையில் தொடர்ந்து மின் தடங்கல் ஏற்பட்டு வருகிறது. நேற்றைக்குக்கூட, அதிகாலை 3 மணியிலிருந்து காலை 8 மணி வரையில், சுமார் 5 மணி நேரம், 6 மணி நேரம் தொடர்ந்து மின் தட்டுப்பாடு ஏற்படுகின்ற சூழ்நிலை தமிழகத்திலே இருக்கின்ற காரணத்தால், மின்சாரத் துறை அமைச்சர் இதற்கு ஏதேனும் நல்ல முடிவை எடுத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மொத்தம் 1 கோடியே 53 இலட்சம் பயனீட்டாளர்கள், அதாவது நுகர்வோர்கள் உள்ள நிலையில், சென்னையிலே மட்டும் 15 இலட்சம் நுகர்வோர்கள் இருக்கிறார்கள். இந்த 15 இலட்சம் நுகர்வோர்கள் consume செய்கின்ற மின்சாரம், நுகர்வு மின்சாரம் என்று எடுத்துக்கொண்டால், 1300 மெகாவாட் ஆகும். நம்முடைய உறுப்பினர் மாண்புமிகு ரங்கநாதன் அவர்கள் ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். மார்ச் மாதம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி முடிகின்ற தருவாயில் இதுபோன்ற நிலைமை இல்லை என்று சொன்னார்கள். எனவே, அவர் இப்படியெல்லாம் கேட்பார் என்று தெரிந்துதான் ஒரு புள்ளிவிவரத்தை நான் இங்கே எடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன். அதாவது, சென்னையைப் பொறுத்தமட்டிலே கடந்த 100 நாட்களிலே கிட்டத்தட்ட 30 கோடியே 47 இலட்சம் ரூபாய் மின்சார அபிவிருத்திக்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-05

அதேபோன்று, மின்சாரம் தடைபடும்போது, மூன்று விதமாக அந்த மின்சாரத் தடையை, interruption–ஐ நீக்குவதற்கு நம்முடைய மின்சார வாரியம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. முதலாவதாக, Fuse Off Call Centres என்று சென்னையிலே 54 வாகனங்களில் V.H.F. set பொருத்தப்பட்டு உடனடியாக எங்கெங்கெல்லாம் பழுது இருக்கின்றது என்கின்ற தகவல் வரும்போது, அதை உடனடியாக நிவர்த்தி செய்துவிட்டு, அப்படி நிவர்த்தி செய்யப்பட்ட தகவலும் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. அந்த 54 சென்டர்களிலும் ஒரு A.E. and Operators இருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் Pager கொடுக்கப்பட்டு 24 மணி நேரமும் அவர்கள் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது.

இரண்டாவதாக Chairman's Cell ஒன்று இருக்கிறது. அவருக்கு 3, 4 லைன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 8514690. அதேபோன்று, 91, 92, 93, 94 என்று 4 தொலைபேசி இணைப்புகள். அங்கேயும் ஒரு A.E. 24 மணி நேரமும் பணிபுரிந்து வருகிறார். அதுமட்டுமல்ல, மூன்றாவது சிஸ்டம் Interactive Voice Responsive System. 1912 என்ற தொலைபேசிக்கு dial செய்தால் நேரடியாக அவருடைய Account Number–ஐச் சொல்வதன் மூலமாக, I.V.R.S. மூலம் சொல்வதன் மூலமாக உடனடியாக அந்த ஏரியாவின் Fuse Off Call Centre–க்கு fax message சென்றுவிடும். உடனடியாக நம்முடைய ஊழியர்கள் அந்த மின்சாரப் பிரச்சினையைத் தீர்த்து விடுகிறார்கள். மார்ச் மாதத்திலே இருந்த நிலைமையை அவர்கள் இங்கே சொல்லி இருக்கின்றார்கள். ஏப்ரல் மாதம் அவருடைய ஆட்சி, தி.மு.க. ஆட்சி முடியும் தருவாயிலே சென்னையிலே மட்டும் Chairman's Cell–ல் 3739 calls. இப்போது ஆகஸ்டில் 1889 calls பதிவாகி இருக்கின்றது. அதேபோன்று, I.V.R.S.–ல் 1471 calls. இப்போது, ஆகஸ்டில் 434 calls. Fuse Off Call என்பதில் 8374 calls. இப்போது 3180 calls. படிப்படியாக இது, ஏறக்குறைய 70% குறைக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்வார்கள் என்று நினைக்கின்றேன். எனவே, இந்த நிலைமைகூட எதிர்காலத்திலே இருக்கக்கூடாது என்கின்ற வகையிலே நம்முடைய சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையிலே தடை இல்லாத மின் வசதியை ஒரு கொள்கையாக ஏற்றுக்கொண்டு நம்முடைய மின்சார வாரியம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டு வருகிறது. நம்முடைய போற்றுதலுக்குரிய தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்



தலைவி அவர்கள் 250 கோடி ரூபாய் ஒதுக்கி, இந்த ஆண்டு சென்னை மாநகரத்திலே இதுபோன்ற பிரச்சினைகள் முழுமையாக இல்லாத அளவுக்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, (குறுக்கீடு) திரு. ரங்கநாதன் இன்னொரு கேள்வி கேட்கிறார். திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியமே நாள்தோறும் செய்தித் தாள்களில் பத்திரிகைக் குறிப்பைத் தருகிறது. ஒவ்வொரு பகுதியாக பராமரிப்பு வேலைகள் இருக்கின்றன என்று அவர்கள் பத்திரிகையிலே அறிக்கையாகத் தருகிறார்கள். ஒரு நாள் முழுமையாக ஒரு பகுதியை எடுத்துக்கொண்டால் சுமார் 12 மணி நேரம் மின்சாரம் தடை ஏற்படுகிறது. அதாவது, அறிவிக்கப்பட்ட தடை இது. அதுமாத்திரமல்லாமல், மற்ற பகுதிகளிலேயும் நாள்தோறும் தொடர்ந்து 2 மணி நேரம், 3 மணி நேரம் என்று மின் தடங்கல் ஏற்படுகிறது. நேற்றைக்குக்கூட அதிகாலை 3 மணியிலிருந்து காலை 8 மணி வரையில் தொடர்ந்து அண்ணா நகர் பகுதி, புரசைவாக்கம் பகுதி, வில்லிவாக்கம் பகுதி, பெரம்பூர் பகுதி போன்ற இடங்களில் தொடர்ச்சியாக மின் தடங்கல் ஏற்பட்டுள்ளது. (குறுக்கீடு) திருவல்லிக்கேணி பகுதியிலும் ஏற்பட்டுள்ளது. ஆக, இப்படி இருக்கின்ற சூழ்நிலையிலே, இராமகுண்டம் மத்தியத் தொகுப்பு–N.T.P.C.–யிலிருந்து நாள்தோறும் நமக்கு எத்தனை இலட்சம் யூனிட் மின்சாரம் தருகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும். இருந்தாலும்கூட, தெரிந்த விவரங்களின் அடிப்படையிலே நான் சொல்கிறேன். நம்முடைய installed capacity 7414 மெகா வாட். அனல் மின் நிலையம், புனல் மின் நிலையம், எரிவாயு மற்றும் பல்வேறு நிலைகளிலே நமக்கு மின்சாரம் கிடைக்கிறது. இதுவரையிலே எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு, கடந்த கால ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்ட கடுமையான நிதிச் சுமையின் காரணமாக நுகர்வோருக்கு எந்தப் பிரச்சினையும் இல்லாத அளவுக்கு மின்சாரம் தர வேண்டும் என்கின்ற நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய கொள்கையை ஏற்று இப்போது மின்சார வாரியம் முழுமையான அளவுக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதுவரையில் எந்தக் காலத்திலும்

இல்லாத அளவுக்கு peak demand என்று சொல்லக்கூடிய உச்சகட்ட மின் சக்தி—மாலை 6 மணியிலிருந்து 10 மணி வரை கணக்கிடுவார்கள்—6454 மெகாவாட் நமக்குக் கிடைத்திருக்கின்றது. எனவே ஒரு இடத்திலே, ஒரு பகுதியிலே ஏற்படுகிற பிரச்சினைக்கும், ஒட்டுமொத்தமாக நாம் பெறுகிற மின்சாரத்திற்கும் சம்பந்தம் இல்லை.

முற்பகல் 10–10

சில இடங்களிலே maintenance works செய்வது தவிர்க்க முடியாததாகிறது. ஏனென்றால், கிட்டத்தட்ட முப்பது வருடங்களுக்கு முன்பாக கேபிள் பதித்திருப்பார்கள். அந்தக் கேபிள் weak ஆகியிருக்கும். எனவே, அதை மாற்றினால்தான் ஒரு நிரந்தரத் தீர்வு, அந்தப் பகுதியிலே மின்சாரத் தட்டுப்பாடு இல்லாத ஒரு சூழ்நிலை உருவாகும். எனவேதான், அப்படிப்பட்ட அந்த maintenance works எடுக்கும்போதுகூட, முறையாக பத்திரிகையிலே அறிவிப்பு கொடுத்துவிட்டு எடுக்கிறோம். ஆகவே, சில சமயங்களிலே இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம் மின்சாரம் கிடைப்பதில் தாமதமாகிறது. இந்தச் சூழ்நிலையில், இப்போது நிதி நெருக்கடி இருந்தபோதும்கூட கிட்டத்தட்ட தங்குதடையில்லாத மின்சாரத்தை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். கடந்த காலத்திலே, 1998 ஆம் ஆண்டு ஒரு அரசாணை போட்டு, 30 சதவிகிதம் அளவிற்கு மின்வெட்டை திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆனால், தமிழ்நாட்டை மின் வெட்டே இல்லாத அளவிற்கு ஒரு மாநிலமாக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்குவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி.

**திரு. ப. ரங்கநாதன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே இரண்டு கேள்விகள் கேட்டுவிட்டீர்கள். போதும். (குறுக்கீடு)

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியத் தொகுப்பு என்று சொல்லும்போது நெய்வேலி அனல் மின் நிலையம் மற்றும் இராமகுண்டம், இவற்றிலிருந்து எத்தனை யூனிட் மின்சாரம் வருகிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கு மத்தியத் தொகுப்பு என்று சொல்லும்போது நெய்வேலி அனல் மின் நிலையம், அதுமட்டுமல்லாமல் இராமகுண்டம், இவை எல்லாம் சேர்த்தால் ஏறக்குறைய 15 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதம் இருக்கும்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் சென்னை மாநகரிலே தடைகள் ஏற்படுகிறபோது உடனடியாக அவற்றை நீக்குவதற்கான ஏற்பாடுகள் செய்திருக்கிறோம் என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றபோது மக்களுடைய மிக அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றாக இருக்கின்ற மருத்துவமனைகளில் ஆப்பரேஷன் செய்கின்ற இடங்களிலேயெல்லாம் எந்த நேரத்திலும் மின் தடை ஏற்படாத அளவிற்குப் பாதுகாப்புகள் செய்யப்பட்டிருந்தன. ஒரு பழுது ஏற்பட்டு. பழுதை நீக்குவது என்பதைவிட, ஒவ்வொரு நிமிடமும் அங்கே அத்தியாவசியமாக, மிகவும் முக்கியமாகத் தேவைப்படுகின்ற காரணத்தால், சென்னை மட்டுமல்ல, தமிழகம் முழுவதுமே மருத்துவமனை போன்ற முக்கியமான இடங்களில் எல்லாம் எந்தவிதமான மின் தடையும் ஏற்படாமல் இருக்க அரசு ஆவன செய்யுமா? அதுமட்டுமின்றி, திராவிட முன்னேற்றக் கழக அரசு நடைபெற்றபோது ஏதோ மின் தட்டுப்பாடு, மின் வெட்டு என்று சொன்னார்கள். கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஐந்தாண்டு கால ஆட்சியிலேயும்கூட மின் வெட்டு, மின் தட்டுப்பாடுகள் இருந்தன என்பதையும் எடுத்துக்கூறி, வருகின்ற காலத்தில் அப்படி இல்லாமலிருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொத்தாம்போக்காக, அதாவது பொதுவாகச் சொல்லிவிடக்கூடாது. எந்த மருத்துவமனையில் எப்போது மின்சாரம் இல்லை என்கின்ற தகவலைக் குறிப்பாகத் தந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க எல்லாவித ஏற்பாடுகளும் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எவ்வளவுதான் நல்ல விளக்கத்தை இங்கே தந்தாலும்கூட, துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்கள் திராவிட

[2001 ஆகஸ்ட் 28

முன்னேற்றக் கழக ஆட்சியிலும் மாறவில்லை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் மாறவில்லை. நாம் Fuse Off Call Centre–க்கு Phone பண்ணினால், அங்கே, மின் வாரியத்திலே இருப்பவர்கள் அந்த Phone receiver–ஐக்கூட எடுப்பதில்லை. ஆகவே, துறையிலே இருக்கக்கூடிய அலுவலர்களை நீங்கள் சரிசெய்யாத வரையில், நிச்சயமாக நீங்கள் எவ்வளவுதான் நடவடிக்கை எடுத்தாலும்கூட அந்தத் துறையைச் சரிசெய்ய முடியாது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களே, நீங்கள் துறையைச் சார்ந்த யாராவது பத்து பேரை முதலிலே suspend பண்ணுங்கள். ஏனென்றால், current cut என்று சொன்னால் இதுவரைக்கும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** சென்னையாக இருந்தாலும் சரி, கிராமப் புறங்களாக இருந்தாலும் சரி, லைன்மேன்கள் யாருமே அந்த Fuse Off Call Centre–ல் தொலைபேசிச் செய்தியைக்கூடப் பெறுவதற்கில்லாமல், ரிசீவரை எடுத்து வைத்து விடுகிறார்கள். ஆகவே, இதுபோன்ற நிலை இல்லாமல் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்றும் சென்ற ஆட்சியிலே சொல்லப்பட்ட அந்த ஜெயங்கொண்டம் மின் திட்டம் இந்த ஆண்டு தொடங்கப்படுமா என்றும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் மின் திட்டத்தைப் பொறுத்தவரையில் தனிக் கேள்வி போடவும். Fuse Off Call Centres பற்றிக் குறிப்பிடும்போது, அங்கே ரிசீவரை எடுப்பதில்லை, எடுத்தாலும் முறையாக பதில் சொல்வதில்லை என்கிற கருத்தைச் சொன்னார்கள். நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு பொறுப்பேற்றவுடனே உடனடியாக ஆய்வு செய்து, அறிவுரை கொடுக்கப்பட்டது. C.E. (Distribution) மூலமாக தமிழ்நாட்டில் இருக்கின்ற எல்லா Fuse Off Call Centre–களில் இருக்கின்ற Operators, Assistant Engineers யார் எடுத்தாலும், முதலிலே 'வணக்கம், E.B.' என்று சொல்லிவிட்டுத்தான் எடுக்க வேண்டும். நம்முடைய உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்னமாதிரி, கடந்த காலத்திலே அதுபோன்ற நிலைமைகள் இருந்திருக்கலாம். Fuse Off Call Centres Phone Numbers அத்தனையையும்



2001 ஆகஸ்ட் 28]

ஞானசேகரனுக்குக் கொடுக்கின்றேன். உடனடியாகத் தொலைபேசியிலே நீங்கள் அழையுங்கள். 'வணக்கம், E.B.' அடுத்து எங்கே fault என்றுதான் கேட்பார்களே தவிர, யாரும் கடந்த காலத்திலே செய்ததுபோல முறைகேடு செய்யமாட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கிராமங்களிலும், மருத்துவமனைகளிலும், பொது அரசு அலுவலகங்களிலும் மின்சாரத் தட்டுப்பாடு பல நேரங்களிலே இருந்து வருகிறது. குறிப்பாக, விவசாயத்திற்கு 24 மணி நேரமும் மின்சாரம் இருந்தால்தான்–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், சென்னை மாநகரத்திலே உள்ள மின் தடை பற்றியது இது. அதனால், பொதுவாகக் கேட்டால் விளக்கம் சொல்ல முடியாது. அமருங்கள். பொதுவாகக் கேட்டால் அமைச்சரிடத்திலே விளக்கம் இருக்காது. தனிக் கேள்வியாகப் போட்டுக் கேளுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மின்வெட்டே வராமல் இருப்பதற்கு மாநில அரசு சிறப்பான நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் குறிப்பிட்டதுபோல, கடந்த காலத்தில், 1998 ஆம் ஆண்டு 30% அளவுக்கு மின் வெட்டு அறிவித்திருந்தார்கள். இப்போது கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலும் எதிர்காலத்திலே மின் வெட்டு இல்லாத அளவுக்கு, முழுமையான அளவுக்கு மின் வெட்டு இல்லாத ஒரு மாநிலமாக தமிழ்நாட்டை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நிச்சயமாக உருவாக்குவார்கள். எனவே, அந்தத் தட்டுப்பாடு எதிர்காலத்திலே இருக்காது. மேலும், ஏறக்குறைய 4000 கோடி ரூபாய் செலவிலே ஒரு Master Plan தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதையும் நம்முடைய உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியத் தொகுப்பிலேயிருந்து நமக்கு வரக்கூடிய மின்சாரம்

இராமகுண்டம் வழியாக வந்து நெய்வேலியைச் சேருகிறது. 20–லிருந்து 25 சதவிகிதம் வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி இராமகுண்டம் வழியாக நெய்வேலிக்கு வரக்கூடிய அந்த மின்சாரத்தை இராமகுண்டம் பகுதியில் வசிப்பவர்கள் திருடிவிடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா? ஆம் எனில், அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியத் தொகுப்பிலேயிருந்து பெறப்படுகிற மின்சாரத்திற்குக் கட்டணம் ஒரு ரூபாய் 87 காசுகள். எனவே, இராமகுண்டத்திலேயே அது theft ஆகிறது என்றால், அதற்கு நாம் பொறுப்பு அல்ல. அதுகுறித்து N.T.P.C. – National Thermal Power Corporation தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். நமக்கு ஒரு கணக்கு இருக்கிறது. இங்கே வந்து சேருகிற, அதாவது reaching point–ல் எவ்வளவு யூனிட் நமக்குக் கிடைக்கின்றதோ அந்த யூனிட்டுக்கு ஏற்றவாறுதான் பணம் கொடுக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்க. தமிழ்ச்செல்வன்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு முதற்கண் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், ஆளுங்கட்சி பக்கம் திரும்பி, முதலில் பேச அனுமதித்ததற்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரை மானியத்தின் மூலமாக, பிடிக்க முடியவில்லை. இப்போது அவரிடத்திலே கேள்வி கேட்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. மிகவும் முக்கியப் பிரச்சினை. ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி பற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தமிழ்ச்செல்வன், மூலவினா சென்னை மாநகரத்து மின் தடை பற்றியது. ஆண்டிப்பட்டிக்குத் தனிக் கேள்வி போடவும்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** தனிக் கேள்விதான் போட வேண்டும். போடுவதற்கு முன்னால், ஒரு கிராமத்திற்குத் தேவைப்படுகிற முக்கியமான பிரச்சினை. விஞ்ஞானம் வளர்ந்திருக்கிற இந்தச் சூழ்நிலையில் கடமலை பகுதி ஒன்றியத்தினைச் சேர்ந்த பொன்னமராஜபுரம் என்ற கிராமத்தில் மின்சாரமே இல்லாமல் இன்றும் மக்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றி ஏற்கெனவே நான் மின்சாரத்





துறை அமைச்சரிடமும் கூறியிருக்கிறேன். அதற்கு அதிகாரிகள் சொன்ன தகவல், அங்கே காட்டு யானைகள் அதிகமாக இருப்பதால் அங்கே நடக்கூடிய கம்பங்களை இழுத்துவிட்டுச் செல்வதாகக் கூறினார்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், கேபிள் மூலமாகவாவது மின்சாரம் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே 11 மாவட்டங்களில் 44 கிராமங்களில் மின்சாரம் இல்லை என்ற ஒரு கணக்கு இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட கிராமங்கள் என்று பார்த்தால், பொதுவாக வனப் பகுதி வரும். வனப் பகுதியிலே நம்முடைய டிரான்ஸ்ஃபார்மர்கள், Pillar box, cable–கள் மற்றும் overhead lines – இவற்றையெல்லாம் நாம் செய்ய வேண்டும் என்றால் அதற்கு வனத் துறையினுடைய அனுமதியைப் பெற வேண்டும். நம்முடைய உறுப்பினர் குறிப்பிட்டதுபோன்று, அங்கே காட்டு விலங்குகள் பிரச்சினை இருப்பதாகச் சொல்கிற ஒரு சூழ்நிலையில் அதற்கு நம்முடைய வனத் துறை அனுமதி கொடுத்தால்தான் நாம் அந்தக் கேபிள்களைப் புதைக்க முடியும். Overhead line–ஐயும் கொண்டு போக முடியும். எனவே, வனத் துறையினுடைய அனுமதியைப் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும். எடுக்கப்பட்ட பின்பு அந்த இடத்திலே கேபிளைப் புதைத்து electricity connection கொடுக்கலாம்.

முற்பகல் 10–20

அதுமட்டுமல்லாமல், இதுபோன்று 44 கிராமங்களிலே பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தினால் மத்திய அரசில் உள்ள I.R.E.D.A. என்கிற நிறுவனம் மூலம் concrete plan தயாரிக்கப்பட்டு, அதன்மூலம் இதுபோன்ற கிராமங்களில் மரபுசாரா எரிசக்தியின் மூலம் மின்சாரம் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. சிவசாமி.

**திரு. செ. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் இருக்கின்ற பொதுமக்கள் எல்லாம் மின்சாரம் சம்பந்தமாக, அதாவது அங்கே இருக்கக்கூடிய மின் கம்பங்கள் பழுது அடைகின்றபோதும், low voltage போன்ற பிரச்சினைகள் வருகின்றபோதும், அந்தப் பகுதியிலே இருக்கின்ற அதிகாரிகளைச் சந்தித்து மனுக் கொடுத்து, பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்ற சூழ்நிலை நடைமுறையிலே இருந்தாலும்கூட, மின்சாரத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் எல்லாம்

வருடத்திற்கு ஒரு முறையாவது மக்களை நேரடியாகச் சந்தித்துக் குறை கேட்கின்ற சூழ்நிலை அதிகாரிகள் மட்டத்திலே வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கும் அறிவுரை வழங்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் நம்முடைய* C.E., S.E.s and Non–Governmental Organisations, *அதுமட்டுமல்லாமல், நுகர்வோர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவர்களையெல்லாம் அழைத்து, கலந்தாய்வு செய்து, என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் உடனடியாகச் சரி செய்ய வேண்டும், முடியாததை அரசிடம் சொல்லுங்கள், நிச்சயமாகத் தீர்த்து வைக்கிறோம் என்று அறிவுரை வழங்கியிருக்கின்றோம். எனவே, அனைத்து மாவட்டங்களிலும் ஒரு கலந்தாய்வு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. வை. சிவபுண்ணியம்.*

**திரு. வை. சிவபுண்ணியம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் தடையைப் பற்றி இங்கே பேசுவது போலவே, குறைந்த மின் அழுத்தப் பிரச்சினையும் தமிழகம் முழுவதும் உள்ள கிராமப்புறங்களிலே இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதுபோல, 30 ஆண்டுகளுக்கு முன்னாலே நிர்மாணிக்கப்பட்ட மின் மாற்றி இயந்திரங்கள் இதற்குக் காரணமாக இருக்கின்றன. அன்றையதினம் ஒரு கிராமத்திலே 100 மின் இணைப்புகள் வழங்கப்பட்டு இருக்கும். அது வளர்ந்து இன்றையதினம் 500 மின் இணைப்புகள் ஒரு கிராமத்திலே வழங்கப்படுகின்றன. ஆனால், அன்றையதினம் வைக்கப்பட்ட அந்த மின் மாற்றிகளே இன்றையதினம் வரையிலும் இருக்கின்ற காரணத்தினாலே போதுமான மின்சார சப்ளையைச் செய்ய இயலாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை. நான் சென்ற ஆட்சியிலேயும் இதைச் சொன்னேன். ஆகவே, அப்படிப் பழமையாக இருக்கின்ற மின் மாற்றிகளையெல்லாம், தேவை கருதி அப்படி மின் அழுத்தம் குறைவாக இருக்கின்ற பகுதிகளுக்குப் புதியதாக மாற்றுவதற்கும் அல்லது தேவையான இடங்களிலே புதிய மின் மாற்றிகளை–*transformer*–களை நிறுவுவதற்குமான முயற்சியை ஒரு புதிய திட்டமாக நமது அரசு அறிவிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.*





**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற* fluctuations, low voltage, high voltage *என்கிற பிரச்சினையில்லாமல் இருக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்றால், அந்தந்த இடங்களிலே* sub–station *போட வேண்டும். இருக்கின்ற* sub–station–ஐ upgrade *செய்ய வேண்டும். அதற்கெல்லாம் கிட்டத்தட்ட 4 ஆயிரம் கோடி ரூபாய் நிதி இருந்தால்தான் செய்ய முடியும் என்கிற சூழ்நிலை. இருக்கிற நிதியைக் கருத்தில் கொண்டு, வருடத்திற்குக் கிட்டத்தட்ட 61 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது. எனவே, நம்முடைய உறுப்பினருடைய கருத்தைக் கவனத்தில் கொண்டு, எதிர்காலத்திலே, ஒரு ஐந்து ஆண்டு காலத்திலே, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள்* integrated plan *என்று ஒரு தொலைநோக்குப் பார்வையோடு செய்ய இருக்கிறார்கள். ஓராண்டு காலம், ஐந்து ஆண்டு காலம் என்பதைவிட, அனைத்தையும் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அந்த அளவிற்கு சீக்கிரமாகச் செய்து முடிக்க வேண்டுமென்று நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் கட்டளையிட்டிருக்கின்றார்கள். எனவே, 4 ஆயிரம் கோடி ரூபாயிலே அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்றால் இந்தப் பிரச்சினை தமிழ்நாடு முழுவதும் நிச்சயமாக இருக்காது என்பது என்னுடைய கருத்து.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அப்துல் லத்தீப்.*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமகுண்டத்திலிருந்து நெய்வேலிக்கு 30 மெகாவாட் மின்சாரம் வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது ஒப்பந்த அடிப்படையில் வருகிறது என்று நான் கருதுகிறேன். இரண்டு மாநிலங்களுக்கும் இடையே இருக்கக்கூடிய ஒரு ஒப்பந்த அடிப்படையில் 30 மெகாவாட் வர வேண்டும என்பது அடிப்படை. ஆனால், திருட்டைப் பற்றிச் சொன்னபோது, திருட்டு நடக்கலாம், அது 15 மெகாவாட்டாக வந்தாலும், 20 மெகாவாட்டாக வந்தாலும், 20 மெகாவாட் அல்லது 15 மெகாவாட்டுக்கு நாம் கட்டணம் செலுத்துகிறோம் என்று பதில் அளித்தார்கள். ஆனால், ஒப்பந்தப்படி 30 மெகாவாட் நமக்கு வர வேண்டும். வழியில் ஆந்திர மாநிலத்தில் திருட்டு நடந்தாலும், நடக்காவிட்டாலும் நெய்வேலிக்கு வந்து சேருகின்ற மின்சாரம் 30 மெகாவாட்டாக இருக்க வேண்டும். அதுதான் மிக முக்கியமானது. 15 மெகாவாட் வந்தது, நாம் அதற்கான கட்டணத்தைச் செலுத்தினோம்*

[2001 ஆகஸ்ட் 28

என்பது ஒருபுறம் இருக்க, 30 மெகாவாட் வந்தாக வேண்டும் என்பதில்தான் நம்முடைய அக்கறை இருக்க வேண்டும். அது உறுதி செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் திருட்டு என்று சொல்கிறபோது தமிழ்நாட்டு எல்லைக்குள்ளே அந்தத் திருட்டு நடைபெற்றால் முழுமையான அளவுக்கு விழிப்பாக இருந்து நாம் செயலாற்றி அதைத் தடுப்பதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். இந்த 100 நாட்களில்கூட என்றைக்கும் இல்லாத அளவுக்கு ஏறக்குறைய 30 கோடி ரூபாய் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின்பேரில் முழுமையான அளவுக்கு, கடுமையான அளவு நடவடிக்கை எடுக்கப்பட்டு, மின்சாரத் திருட்டின்மூலம் முன்பு வேறெங்கோ சென்றுகொண்டிருந்த revenue assess செய்யப்பட்டுள்ளது. எனவே, நம்முடைய மாநில எல்லைக்குட்பட்ட பகுதியிலே நிச்சயமாகத் திருட்டு இல்லாத அளவுக்கு சூழ்நிலை ஏற்படும். நம்முடைய மாநிலத்திற்கு வெளியே 'கிரிட்'–டிலே அவர்கள் எடுத்தார்கள் என்றால் யாருக்குத் தெரியும்? National Thermal Power Corporation மூலமாகத்தான் நமக்கு அந்த மின்சாரம் கிடைக்கிறது. எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து N.T.P.C.–க்குத் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகராய நகர் தொகுதி, மேற்கு மாம்பலம், அசோக் நகர் பகுதிகளிலே தினமும் குறைந்தது இரண்டு மணி நேரமாவது மின் வெட்டு ஏற்படுகிறது. இதுகுறித்து இரண்டு மாத காலமாக அதிகாரிகளிடத்தில் எடுத்துச் சொல்லியும், இதுவரை நடவடிக்கை இல்லை. இது தீர்த்து வைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே என்னுடைய பதிலிலே நான் குறிப்பிட்டிருக்கிறேன். பொதுவாக, Cable fault, Line fault வரும்போது இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கின்றன. Maintenance work–ல் நிச்சயமாக இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம், நான்கு மணி



2001 ஆகஸ்ட் 28]

நேரம்கூட ஆகும். முன் அறிவிப்பு கொடுத்துவிட்டுத்தான் அதைச் செய்கிறோம். பத்திரிகையின் வாயிலாகவும் கூறுகிறோம். எனவே, அந்த மாதிரி ஒரு சூழ்நிலை எதிர்காலத்தில் இல்லாத அளவுக்கு எந்த, எந்தப் பகுதி என்று அவர்கள் எழுதிக் கொடுத்தால், நிச்சயமாக அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. பாலகிருஷ்ணன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் பகுதியிலே காஸ் மூலம் மின்சாரம் எடுப்பதற்கு பழைய அரசாங்கத்தார் அடிக்கல் நாட்டினார்கள். அதைப் பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதைத் துரிதப்படுத்தி ஓராண்டு காலத்திற்குள் 200 மெகாவாட் அளவுக்கு மின்சாரம் கிடைக்குமா என்ற கேள்வியுடன், அதை நிறைவேற்றுவதற்கு நம்முடைய அரசு தீவிர முயற்சி எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெருங்குளம் பகுதியிலே எரிவாயு மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தைப் பற்றித்தான் குறிப்பிடுகின்றார் என்று நான் நினைக்கின்றேன். ஏற்கெனவே, Independent Power Project என்ற முறையில் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அந்த I.P.P. திட்டத்தை encourage செய்ய வேண்டும் என்பதற்காக முதலீடுகளை தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்து ஊக்கப்படுத்தினார்கள். ஆனால், இடையில் 5 ஆண்டு காலத்தில் அவையெல்லாம் நிறைவேற்றப்படவில்லை. எனவே, எல்லா I.P.P.யையும் ஆய்வு செய்து, எந்தளவு நம்முடைய தமிழ்நாட்டிற்கு அவையெல்லாம் பயன்படும் என்பதைக் கருத்திற்கொண்டு, நிச்சயமாக அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி.

**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை மகளிருக்கு வாய்ப்பு கொடுக்கப்படவில்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொண்டு–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:–** மகளிர் முதலில் கையைத் தூக்கியிருந்தால்–

**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** நான் கையைத் தூக்கிக் கொண்டேதான் இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்காகத்தான் கூப்பிட்டிருக்கிறேன்.

**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மரபும், மாண்பும் மிக்க இந்தப் பேரவைக்கு ஆண்கள் எப்படி வேண்டுமானாலும் வரலாம் என்பதைத் தாங்கள் அனுமதித்தால், பெண் சட்டமன்ற உறுப்பினர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி, மின் துறையில் கேள்வியைக் கேளுங்கள். மற்றவற்றைக் கேள்வி நேரம் முடிந்த பின்பு வைத்துக்கொள்ளலாம். உட்காருங்கள்.

வினா எண் 21, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**21–**

## ஆராய்ச்சிக் கூடம்

***825–திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தாம்பரம் தொகுதி, சானடோரியத்திலுள்ள சித்த மருத்துவ ஆராய்ச்சிக் கூடம் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், தற்போதைய நிலை என்ன?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் சானடோரியத்தில் தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கென 14.78 ஏக்கர் நிலம் தமிழக அரசால் இலவசமாக மத்திய அரசுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலைய வளாகத்தைச் சுற்றி சுற்றுச்சுவர் எழுப்ப மத்திய அரசு ரூ.22.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. பின்னர் இந்நிலையம் அமைப்பதற்கான செலவினை மத்திய அரசும், மாநில அரசும் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்ற நிலை உருவாகியது. இதன் அடிப்படையில், மத்திய,



மாநில அரசுகள் செலவுப் பங்கீட்டு விகிதாச்சாரம் குறித்து முடிவெடுக்கும் நிலையில் உள்ளன. முடிவெடுக்கப்பட்ட பின்னர் கட்டடப் பணிகள் தொடங்கப்படும்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திற்கு மொத்தம் எவ்வளவு மதிப்பீடு? அதிலே எந்தளவுக்கு இப்போது மத்திய அரசும், மாநில அரசும் பங்கீடு செய்துகொள்ள இருக்கிறார்கள்? இன்னும் எத்தனை ஆண்டுகளில் அந்தப் பணி முடிவடையும் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கத்தில் இந்த நிலையம் அமைப்பதற்கான செலவு முழுவதையும், மத்திய அரசே ஏற்கும் வகையில்தான் திட்டங்கள் தீட்டப்பட்டன. பின்பு மத்திய அரசு எடுத்த கொள்கை முடிவின்படி மாநில அரசும் பங்கீடு செய்துகொள்ள வேண்டுமென்று அறிவித்ததன்பேரில், மத்திய அரசினுடைய திட்ட மதிப்பீடு, மூலதனச் செலவு 36 கோடி ரூபாய், தொடரும் செலவினம் 11 கோடி ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டு, அதிலே மூலதனச் செலவிலே மைய அரசு 60 விழுக்காடு மாநில அரசு 40 விழுக்காடு என்ற வகையிலேயும், அதேபோல் தொடரும் செலவினத்திலே 75 விழுக்காடு மைய அரசு, 25 விழுக்காடு மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று 4–12–2000 அன்று நடந்த கூட்டத்திலே கருத்து தெரிவிக்கப்பட்டு இந்தக் கருத்து குறித்து மத்திய அரசினுடைய சம்மதம் இப்போது கோரப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆராய்ச்சிக் கூடத்தில் ஆராய்ச்சி மட்டும் நடைபெற இருக்கிறதா அல்லது மருத்துவப் பணியும் நடைபெற இருக்கிறதா? அதிலே எத்தனை பேர் பயிற்சி, ஆராய்ச்சி செய்வதற்காக பணியிடங்களை நிரப்ப முடியும்? எத்தனை பேருக்கு அதிலே வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பது போன்ற விவரங்களை தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மையத்தில் நவீன ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் புதிய சிறந்த மூலிகை மருந்துகளை உருவாக்கவும் அதிநவீன நோய் குறியியல் ஆய்வுக் கூடங்கள் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவுகள் அமைத்து மக்களுக்குச் சிறந்த முறையில் மருத்துவச் சேவை புரியவும், நவீன வசதிகள் கொண்ட மருத்துவமனையுடன் இணைந்த பட்ட மேற்படிப்பு பிரிவும் செயல்படும் என்கின்ற வகையிலேதான் இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. ஆனால், இதிலே எத்தனை பேர் பயிற்சியாளர்களாகச் சேர்க்கப்படுவார்கள், எத்தனை பேர் பயிற்சி பெற முடியும் என்கிற அந்த விவரங்கள் என்னிடம் இல்லை. அதற்குத் தனிக் கேள்வி போட்டால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பதில் சொல்லப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதி, சானடோரியத்திலுள்ள சித்த மருத்துவ ஆராய்ச்சி மையம் அமைக்கப்படவேண்டும் என்று 15 ஆண்டுகளாகச் சொல்லி இப்போது இந்தத் திட்டம் வருகிறது, நாளைக்கு வருகிறது, நாளை மறுநாள் வருகிறது என்று சொல்லி 15 ஆண்டுகள் ஓடிப்போய்விட்டன. இதிலே உண்மையிலேயே அரசாங்கம் அக்கறை இல்லாமல் இருக்கிறதா? அதைத் தட்டிக்கழித்துக் கொண்டிருக்கிறார்களா என்பது புரியாத புதிராக இருக்கின்றது. எனவே, இப்போது புதியதாக பொறுப்பு ஏற்றிருக்கிற இந்த அரசு அதிலே தனிக் கவனம் செலுத்தி சித்த மருத்துவத்திற்கு மறுவாழ்வு அளிக்கின்ற விதத்தில் மத்திய, மாநில அரசுகளினுடைய பங்கீட்டின் அடிப்படையில் உடனடியாக அந்தக் கட்டடப் பணியைத் தொடங்குவதற்கு முன்வருமா?

அதோடு, சித்த மருத்துவ மருந்துகள் தரம் மிக்க மருந்துகள் என்று சொல்லப்படுகின்றது. நான் இம்ப்காப்ஸ்—னுடைய தலைவராக் இருக்கிறேன். தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலே சித்த மருத்துவர்கள் அல்லது ஆயுர்வேத மருத்துவர்கள் பயன்படுத்துகின்ற மருந்துகளில் 80 சதவிகிதம் எங்களுடைய நிறுவனத்திலேயிருந்து வாங்குகிறார்கள். இது ஒரு Co–operative Sector ஆனாலும் இதிலேயிருந்து அரசு மருந்துகளை வாங்கவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் இது பற்றி முறையிட்டிருக்கிறேன். அவர்களும் ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, ஒரு Co–operative Sector தரமான மருந்துகளை உற்பத்தி செய்கிற காரணத்தாலே, இம்ப்காப்ஸ்





போன்ற கோ–ஆப்பரேடிவ் நிறுவனத்திடமிருந்து தரமான மருந்துகளை வாங்க அரசு முன்வருமா என்பதையும் உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*)
இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால்
சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறி

## 2. சட்டை அணியாமல் ஓர் உறுப்பினர் அவைக்கு வந்துள்ளமை – தொடர்ச்சி

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை என்பது மிகக் கண்ணியமான அவை. மூத்த தலைவர்கள் எல்லாம் அங்கம் வகித்த அவை. அதிலும் குறிப்பாக இந்த நாட்டினுடைய முதலமைச்சர் ஒரு பெண் முதலமைச்சர். வந்திருக்கின்ற உறுப்பினர்களில் பெண் உறுப்பினர்கள் அதிகமாக இருக்கிறார்கள். எங்களுக்கு ஒரு பாதுகாப்பாக நாங்கள் கண்ணியமாக நடந்துகொள்ள ஒரு மிகப் பெரிய பொறுப்பிலே நீங்கள் பாதுகாப்பு அரணாக இருக்கிறீர்கள். அப்படிப்பட்ட இந்த மாமன்றத்தில் உங்களுடைய பாதுகாப்பிற்குக்கீழே இருக்கிற உறுப்பினர் சட்டை இல்லாமல் வந்து அமர்ந்திருப்பது கண்ணியத்தோடு நடக்கக்கூடிய அவையிலே பெண் உறுப்பினர்கள் எந்த நிலையிலே நிமிர்ந்து உட்கார முடியும் என்பதை மட்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தய்வுசெய்து இந்த அவைக்கு அறிவிக்க வேண்டும். இல்லையென்றால் அந்த உறுப்பினர் இந்த அவையிலே இருக்கலாமா என்பதை தயவுசெய்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரம் முடிந்ததற்குப் பிறகு என்ன பிரச்சினை என்று கேட்டுக்கொள்ளலாம் என்று நான் நினைத்தேன். இப்போதே உங்களுடைய கண்ணை உறுத்துகின்ற காரணத்தினாலும், உங்களுக்குக் கண்ணியக் குறைவாகத் தெரிகிற காரணத்தினாலும் இப்போதே நான் கேட்கிறேன். திரு. க. முருகவேல் ராஜன், சட்டப் பேரவையிலே சட்டை இல்லாமல் வரக்கூடாது. இதற்கு முன்னாலே இயல்பாக சில பேர் வந்திருக்கிறார்கள். திரு. சா. கணேசன் போன்றவர்கள், சர்தார் வேதரத்தினம் போன்றவர்கள், மேலவையிலே குன்றக்குடி அடிகளார்

போன்றவர்கள் இயல்பாக சட்டை இல்லாமல் வந்திருக்கிறார்கள். உங்களுக்கு ஏதாவது கோரிக்கை இருந்தால் நேற்றேகூடச் சொல்லியிருக்கலாம். என்ன பிரச்சினை? ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள்.

முற்பகல் 10-45

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சா கணேசன் போன்றவர்கள் துண்டு போர்த்திக் கொண்டுதான் வந்திருந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டை இல்லாமல் வந்தால்கூட அவர்கள் துண்டு போர்த்திக் கொண்டுதான் வந்திருந்தார்கள். ஆகவே, இயல்பாக வருவது என்பது வேறு. திரு. ஜி.கே. மணி, என்ன காரணம் என்பதை நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டப் பேரவை உறுப்பினர் மாண்புமிகு முருகவேல் ராஜன் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினையைச் சொல்வதற்காக கோரிக்கை வைக்கிறார்கள். அதை அவரே விளக்குவார் என்பதைத் தங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, கோரிக்கை என்ன என்பதை நேற்றேகூடக் கொடுத்திருக்கலாம்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** தலைவர் அவர்களே, என்னை அனுமதிக்காமல் இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லிவிடுங்கள்.

***திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்க் காலிலே ஒரு கன்று படுகொலை செய்யப்பட்டதற்காக ஆராய்ச்சி மணியை அடித்தது பசு. அந்தப் பசுவுக்குக்கூட என்ன நேர்ந்தது என்று கேட்ட இந்த நாட்டிலே, அந்த ஆராய்ச்சி மணி இப்போது உங்கள் கையிலே இருக்கிறது. நான் அடக்கப்பட்ட மக்களுடைய பிரதிநிதியாக இருக்கிறேன். இங்கே பலர் நினைக்கிறார்கள். இந்தச் சட்டமன்றத்தினுடைய மரபையும் கண்ணியத்தையும் குறைப்பதற்காக இந்தச் சட்டமன்ற உறுப்பினர் சட்டை இல்லாமல் வந்ததாக யாராவது நினைத்தால் அது மிகவும் தவறு.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, என்ன பிரச்சினை என்பதைச் சொல்லுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** தலைவர் அவர்களே, அதைத்தான் சொல்ல வருகிறேன். சட்டை இல்லாமல் வருகிற அளவுக்கு இந்தச் சகோதரனுக்கு என்ன நேர்ந்தது என்று நீங்கள் எண்ணிப் பார்ப்பீர்கள் என்று சொன்னால் அது நியாயமாக இருக்கலாம். நானும் சகோதரிகளோடுதான் பிறந்திருக்கிறேன். யாரையும் புண்படுத்த வேண்டுமென்பது என்னுடைய நோக்கம் அல்ல. நான் ஒரு பிரச்சினை குறித்து உங்களிடம் இரண்டு முறை – கவன ஈர்ப்புத் தீர்மானமாக ஒரு முறையும், சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக ஒரு முறையும் – கொடுத்திருக்கிறேன். ஆனால் நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளாததன் விளைவாக இன்றைக்குத் தென் தமிழ்நாட்டிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை, தேவேந்திர குல சமுதாயத்தைச் சேர்ந்த நான்கு சகோதரர்கள், அதிலும் அந்தச் சமுதாயத்தினுடைய தலைவராக, தலைமகனாக இருந்து பணியாற்றிய அருமைக்குரிய சகோதரர் கணேச பாண்டியன் அவர்கள் பட்டப்பகலிலேயே வெடிகுண்டு வீசிக் கொலை செய்யப்படக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்று சொன்னால், இங்கே தாழ்த்தப்பட்ட மாணவிகள் பள்ளிக்குச் செல்வதற்கு சைக்கிள் கொடுக்கிறீர்கள். அதை வரவேற்கின்றோம். சாப்பிடுவதற்கு விடுதிக் கட்டணத்தை 225 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கிறோம் என்று சொல்கிறீர்கள், வரவேற்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முருகவேல் ராஜன், சொற்பொழிவாற்ற வேண்டிய நேரம் இல்லை. என்ன பிரச்சினை என்பதை நீங்கள் சொல்லிவிட்டீர்கள். கவன ஈர்ப்பாகவும் தந்திருக்கிறீர்கள். போலீஸ் மானியம் வரவிருக்கிறது. அதிலேயும் நீங்கள் இதைப்பற்றி விரிவாகப் பேசலாம். முதலமைச்சர் அவர்கள் அதற்குரிய விளக்கத்தைச் சொல்வார்கள். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் சொல்வார்கள். அதற்காக இந்த அவையினுடைய கண்ணியத்தைக் குறைக்கின்ற வகையிலே வருவது முறையல்ல. நீங்கள் சட்டை கொண்டு வந்திருக்கிறீர்களா? சட்டையைப் போட்டுக்கொண்டு வாருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமருங்கள். டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** நான் சட்டை போடவே மாட்டேன்.

[2001 ஆகஸ்ட் 28

*(ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலரும் எழுந்து, உறுப்பினர் சட்டை அணிந்து வரவேண்டும், இல்லையேல் வெளியேற வேண்டுமென்று வலியுறுத்தினர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, நீங்கள் சொல்லுங்கள்.

*(உறுப்பினர் திரு. க. முருகவேல் ராஜன் சட்டை அணியாமலேயே தொடர்ந்து நின்று கொண்டிருந்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன், நீங்கள் உங்களுடைய பிரச்சினை என்ன என்பதை அவைக்குத் தெரிவித்துவிட்டீர்கள். இதனையே சிறப்புக் கவன ஈர்ப்பு மூலமாகவும் தந்திருக்கிறீர்கள். அதையும் தெரிவித்துவிட்டீர்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** நீங்கள் அனுமதி கொடுத்தால் நான் விளக்கம் சொல்வேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் தமிழ்நாட்டிலே பரவலாக இருக்கக்கூடிய தேவேந்திர குல சமுதாய மக்களுக்கு – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஆளுநர் உரையிலே உரையாற்றுகின்றபோது நான் பணிவோடு கேட்டுக்கொண்டேன், அந்தச் சமுதாயத்திற்கு நீங்கள் அமைச்சர் பதவி தரவேண்டும், அப்போதுதான் தென் மாவட்டங்களிலே சாதிக் கலவரங்கள் ஒடுங்கும் என்று சொன்னேன். ஆனால், அவர்கள் அதை ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. எனவே, அந்தச் சமுதாயத்திற்கு அமைச்சர் பொறுப்பு கொடுப்பதன் மூலமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதரவாக இருக்கிறோம் என்று சொல்வதைவிட அவர்களுக்கு எதிராக ஒரு ஆட்சி இல்லை என்று சொல்வதன் மூலமாகத்தான் சாதிக் கலவரத்தை அடக்கமுடியும். எனவே, நீங்களெல்லாம் அம்மா, அம்மா, என்று சொல்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

*(ஆளும் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று திரு. க. முருகவேல் ராஜன் அவர்களை வெளியேற்றுமாறு கோரினர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் (குறுக்கீடு) திரு. முருகவேல் ராஜன், நீங்கள் சொல்லவேண்டிய கருத்தைச் சொல்லிவிட்டுப் போங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள்



2001 ஆகஸ்ட் 28] [பேரவைத் தலைவர்]

சொல்லவேண்டிய கருத்தைச் சொல்லிவிட்டுப் போங்கள். அவைக்கு சம்பந்தம் இல்லாதவற்றைப் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) சொல்லவேண்டிய கருத்தை நீங்கள் சொல்லிவிட்டுப் போங்கள். அதோடு பிரச்சினை முடிகிறது. டாக்டர் குமாரதாஸ் அவர்களுடைய கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

*(திரு. க. முருகவேல் ராஜன் தொடர்ந்து நின்று கொண்டே இருந்தார்.)*

*(ஆளும் கட்சி உறுப்பினர்களும் தொடர்ந்து, திரு. க. முருகவேல் ராஜன் அவர்களை வெளியேற்றுமாறு வேண்டி நின்றனர்.)*

பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்கள், முருகவேல் ராஜன் அவர்களுக்குத் துணை செய்யவேண்டும். உங்களுடைய கட்சியினுடைய கண்ணியம் இதிலே பாழாகிறது. ஆகவே, தயவு செய்து நீங்கள் துணை புரியவேண்டும். உறுப்பினருக்கு உரிய அறிவுரையை நீங்கள்தான் சொல்லவேண்டும்.

*(திரு. க. முருகவேல் ராஜன் அவையை விட்டு வெளியேறினார்.)*

*முற்பகல் 10–40*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு முருகவேல் ராஜன் அவர்கள் தங்கள் சமுதாயத்திற்கு இழைத்திருக்கக்கூடிய மிகப்பெரிய ஒரு கொடுமையை இந்தச் சட்டமன்றத்திலே வெளிப்படுத்த வேண்டுமென்று சொல்லி எங்களிடத்திலே எடுத்துச் சொன்னார்கள். அந்த நேரத்திலேகூட நீங்கள் பக்குவத்தோடு நாணயமாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்று அவரிடத்திலே சொல்லியிருந்தும்கூட அவர் குறைகளை இங்கே வைத்திருக்கிறார். யாருடைய மனதும் புண்படும்படியாக அவர் நடந்துகொள்ளவில்லை, நடந்து கொள்ளவேண்டும் என்ற எண்ணமும் இல்லை என்பதை இந்த அவைக்குத் தெரிவித்து அவர் சொல்லியதில் மனது புண்படும்படியான வார்த்தைகள் ஏதும் இல்லை என்று கருதுகிறேன். இருந்தாலும்கூட, நீங்கள் பொறுத்தருளவேண்டும் என்று சொல்லி அமர்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினை இத்துடன் முடிந்துவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் செம்மலை, குமாரதாஸ் கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு)

இந்தப் பிரச்சினை இத்துடன் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) திரு. சந்தானம் அவர்களே, அவர் கருத்தைச் சொல்லிவிட்டு வெளியேறிப் போய்விட்டார். பிரச்சினையை அத்துடன் முற்றுப்புள்ளி வைத்து முடித்துவிடலாம். மாண்புமிகு அமைச்சர் செம்மலை பதில் சொல்லுங்கள்.

## 1. வினாக்கள்-விடைகள்–தொடர்ச்சி

### உடுக்குறியிட்ட வினாக்கள்–தொடர்ச்சி

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்நிலையம் அமைப்பதற்கான செலவினை மாநில அரசும் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று புதிய நிபந்தனையை மைய அரசு விதித்து வருவதால்தான் இந்தக் காலதாமதம் ஏற்பட்டது. இருந்தாலும், நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மைய அரசு இதுகுறித்து உத்தரவை விரைவில் பிறப்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்கள். நானும் கடந்த 22–6–2001 ஆம் தேதி மத்திய மாநில சுகாதார அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றபோது, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து, இதுகுறித்து வலியுறுத்தியுள்ளேன். எனவே, இந்த Cost sharing pattern–ஐ மைய அரசு ஒத்துக்கொள்ளும் என்று எதிர்பார்த்து அவருடைய பதிலுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம். இன்னொன்று, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் தலைவராக இருக்கின்ற அந்தக் கூட்டுறவு நிறுவனங்களிலே சித்த மருத்துவ மருந்துகளை வாங்க வேண்டுமென்று இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். நம்முடைய சித்த மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில் நமக்கென்று மருந்துகள் தயாரிக்கும் நிலையங்கள் இருக்கின்றன. அதிலே, மாத்திரைகள், சூரணம், தைலம், லேகியம், போன்ற மருந்துகள் எல்லாம் தயாரிக்கப்படுகின்றன. எனவே, அப்படி வெளியிலே மருந்துகள் வாங்க வேண்டும் என்கிற நிலைமை இருக்கிறபோது நிச்சயம் கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து மருந்துகளைப் பெறுவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும், அதுகுறித்து பரிசிலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக அளவில் AIDS–க்கு மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. மத்திய,



மாநில அரசுகள் AIDS–ஐத் தடுப்பதற்காக பல்வேறு முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கின்றன. பல சித்த மருத்துவர்கள் AIDS–க்கு எங்களிடம் மருந்து இருப்பதாக போலி விளம்பரங்களைச் செய்து கொண்டிருக்கிறார்களே, அதை அரசு அறியுமா, அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலே ஏமாறுபவர்கள் இருக்கிறவரை ஏமாற்றுகிறவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் AIDS வியாதியைப் போக்குவதற்கு அலோபதியிலும் சரி அல்லது சித்த மருத்துவத்திலும் சரி இன்னும் மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது உண்மைதான். எனவே, அப்படிப்பட்ட போலி விளம்பரங்களைக் கண்டு மக்கள் ஏமாற வேண்டாம் என்பதுதான் இந்த அரசினுடைய கருத்தாக இருக்கிறது. அப்படி யாராவது மக்களை ஏமாற்றுகிற காரியத்திலே ஈடுபட்டிருப்பார்களேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை நிச்சயமாக எடுப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன். பேராசிரியர் மன்னிக்க வேண்டும்.

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி தேவேந்திரகுல வேளாளர் வகுப்புக்கு அமைச்சர் பதவி கொடுக்கவில்லை என்று உறுப்பினர் கண்ணியமற்ற முறையில் சட்டசபைக்கு சட்டையில்லாமல் வந்துள்ளதைக் கண்டிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சித்த மருத்துவம் பற்றி கேட்கவேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** முன்பு அங்கேதான் மைக் கொடுக்கமாட்டேன் என்றார்கள் என்றால், இங்கேயும்கூட கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்தில் சானடோரியத்தில் இருக்கின்ற சித்த மருத்துவ ஆராய்ச்சிக் கூடத்தைக் கட்டுவதற்காக மத்திய அரசும் பணம் ஒதுக்கவில்லை, மாநில அரசும் பணம் ஒதுக்கவில்லை என்று இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் கடந்த சட்டமன்றத்தில் 5 ஆண்டுகாலமாக சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றி இருக்கின்றேன். இந்தக் கேள்வி எழுப்பிய வைதியலிங்கம் அவர்களும் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். என்னுடைய நினைவு சரியாக இருக்குமேயானால், 1999 ஆம் ஆண்டு

[2001 ஆகஸ்ட் 28

அந்தப் பகுதியிலே சித்த மருத்துவ ஆராய்ச்சிக் கூடத்திற்காக அடிக்கல் நாட்டப்பட்டு விழா எல்லாம் எடுக்கப்பட்டது. பணமும் ஒதுக்கவில்லை. மத்திய அரசும் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. மாநில அரசும் எடுத்துக்கொள்ளவில்லை. அந்த நிலையிலே அடிக்கல் நாட்டினார்கள். அடிக்கல் நாட்டியதற்குப் பிறகு இப்போது மீண்டும் மத்திய அரசிடம் அந்தப் பணத்தைக் கேட்டு வாங்கி ஆரம்பிக்க அமைச்சர் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன். சித்த வைத்தியத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்த வைத்தியப் பிரிவுகள் இருக்கின்றன?

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுகுறித்து தனிக் கேள்வி போட்டால்தான் பதில் கொடுக்கமுடியும். அமைச்சர், முதல் கேள்விக்கு பதில் சொல்லுங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** உறுப்பினர் என்னுடைய பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு நிதியொதுக்கி 22 இலட்ச ரூபாய்க்கு சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் தன்னுடைய பதிலிலே சுட்டிக்காட்டினார் என்பதை மாண்புமிகு உறுப்பினர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைதியலிங்கம், திடீரென்று நீங்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக ஆகக்கூடாது, (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொல்வார். (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல அந்த மூலதனச் செலவு, தொடரினச் செலவுக்கென்று மைய அரசு நிதி எதையும் ஒதுக்கவில்லை. அதன் பங்கீடு இப்போதுதான் பேசப்பட்டு வருகிறது. அந்த வகையிலே நமக்கு மூலதனச் செலவாக 14.4 கோடி ரூபாயை நாம் தரவேண்டும். அதிலே 6 கோடி ரூபாய் அளவிற்கு நிலத்தைக் கொடுத்திருக்கிறோம். ஆக மீதம் 8.4 கோடி ரூபாய் நாம் கொடுக்கவேண்டும். அதைப்போல தொடரும் செலவினத்திலே 25 விழுக்காடு என்ற வகையில் நம்முடைய தமிழ்நாடு அரசு 275 கோடி ரூபாய் கொடுக்கவேண்டும். அதை நாம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால், மத்திய அரசு பணத்தை விடுவிக்கும் பட்சத்தில்தான் நாம் அந்தத் தொகையைச் செலுத்த முடியும். அதற்கு தமிழக அரசு தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம்



2001 ஆகஸ்ட் 28]

அவர்கள் அதைத்தான் சொன்னார்கள். மூலதனச் செலவு இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. தொடரினச் செலவு இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. அந்த நிலையிலே 1999–இலே எப்படி விழா எடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால் உள்ளபடியே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது 27–3–1999 அன்று அந்த நிலையத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அந்தச் சமயத்திலே இந்தத் திட்டம் உருப்பெறவே இல்லை. முழுமையாக அந்தத் திட்டம் உருப்பெறாத நிலையில்தான் அந்த விழா எடுக்கப்பட்டது. எப்படியோ பிள்ளை பெறுவதற்கு முன்னாலே பெயர் வைத்துவிட்டார்கள். பிள்ளை சுகமாகப் பிறந்தால் சரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்.

**திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயத்திலே 1989–இலே சித்த மருந்து தயாரிக்கும் ஒரு நிலையம் அமைக்கப்பட்டது. இது நாள்வரை அது இயங்காமல் இருக்கிறது. அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இதற்கென ஒரு தனிக் கேள்வி போட்டால் தகவல் சேகரித்துக் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பிச்சாண்டி அவர்கள் இங்கே சொல்கிறபோது, AIDS–க்கான மருந்து சித்த மருத்துவத்திலே இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை: அதுபோல அலோபதி மருத்துவத்திலும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். அலோபதி மருத்துவத்தில் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என்பது உண்மை. ஆனால், சித்த மருத்துவத்திலும், அதைப்போல யுனானி மருத்துவத்திலும் AIDS–ஐ தடுத்து நிறுத்துவதற்கான மருந்துகளை முழுமையாகக் கண்டுபிடித்து சில டாக்டர்கள் – வாணியம்பாடியில் இருக்கக்கூடிய டாக்டர் அக்பர் கவுசர் போன்றவர்கள், அதைப்போல பெங்களூரிலே சுந்தரமூர்த்தி என்ற டாக்டர், தமிழர். இவர்களெல்லாம் கடந்த ஆட்சியிலே தாம்பரத்தில் சில நோயாளிகளை வைத்துக்கொண்டு, இவர்களே சிகிச்சை செய்து சரி செய்திருக்கிறார்கள். ஆனால், அதற்கு,

proved என்று சொல்லி ஒரு அங்கீகாரத்தை இந்த அரசு வழங்கவில்லை. மாண்புமிகு அமைச்சர்கூட இங்கே, அவர்களெல்லாம் போலி டாக்டர்கள் என்று பொத்தாம்பொதுவாகச் சொல்லிவிட்டார்கள். சித்த மருத்துவத்திலே AIDS-க்கு யார் மருந்து கண்டுபிடித்திருக்கிறார்களோ, அதை AIDS நோயாளிக்குக் கொடுத்து, அவர்கள் சரியானவுடன், அத்தகைய டாக்டர்களுக்கு அரசு அங்கீகாரம் வழங்கியிருக்க வேண்டும். அங்கீகாரத்தை மத்திய அரசும், மாநில அரசும் அளிக்காத ஒரு சூழ்நிலையில்தான் சித்த மருத்துவர்கள்–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அங்கீகாரம் அளிக்கப்படுமா என்று கேளுங்கள், அவ்வளவுதான். அமைச்சர், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம் சித்த மருத்துவம், யுனானி மருத்துவத்திலே AIDS-க்கு அதைப்போல மது அடிமைகள் திரும்பவும் குடிக்காமல் அதை மறப்பதற்கு, எல்லாவற்றிற்கும் சரியான மருந்துகள் நிச்சயமாக உண்டு. யுனானியிலும் இருக்கிறது. சித்தாவிலும் இருக்கிறது. அரசு அதற்கு அங்கீகாரம் கொடுக்க ஆவன செய்வீர்கள் என்று சொன்னால் இளைஞர்கள், நிறைய டாக்டர்கள் இதிலே தங்களுடைய திறமையைப் படைத்து AIDS நோயாளிகளைக் காப்பாற்ற முடியும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எந்த நிலையிலும் போலி டாக்டர்கள் என்று யாரையும் எப்போதும் குறிப்பிடவில்லை. சில டாக்டர்கள் இதற்கான மருந்துகளைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்த முயற்சி முழுமையாக வெற்றிபெறவில்லை என்பதுதான் எங்களுடைய கருத்து. அப்படி முழுமையாக இந்த நோய்களை எல்லாம் தீர்ப்பதற்கு, யாரால் மருந்து கண்டுபிடிக்கப்பட்டாலும் அதை அரசு வரவேற்கும், அதை அங்கீகரிக்கும். ஆனால், அந்த நிலைமை இன்னும் வரவில்லை. ஏதோ பாதி கிணறைத் தாண்டுகின்ற நிலையிலேதான் இப்போது இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படுமானால் அரசு நிச்சயமாக அதுகுறித்துப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 22, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.



**22–**

## தோல் தொழிற்சாலைகள்

***2609–செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) பேரணாம்பட்டு தொகுதியில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தொழிலாளர் நலன் கருதி இத்தொழிற்சாலைகளை திறக்க அரசின் நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பேரணாம்பட்டு தொகுதியில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் சுற்றுப்புறச் சூழல் காரணமாக உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி மூடப்பட்டுள்ளன. அவை மூடப்பட்டுள்ளதற்கு தொழிலாளர் பிரச்சினை ஏதும் காரணம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பேரணாம்பட்டு தொகுதியில் முக்கியமாக இருப்பது, உயிர்மூச்சாக இருப்பது தோல் தொழிற்சாலைகளாகும். இதில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், கண்ணியம் மிக்க இஸ்லாமிய சகோதரிகள், கைம்பெண்கள், விதவைகள் பல்லாயிரக்கணக்கானோர் அங்கே வேலை பார்த்துக்கொண்டு வந்தார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலே இந்தத் தோல் தொழிற்சாலைகள் மூடப்பட்டன. அதனால் 27 கோடி ரூபாய் அன்னியச் செலாவணி இழப்பு ஏற்படுகிறது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் காரணமாக, மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் ஆணைப்படி சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டப்பட வேண்டுமென்று பணிக்கப்பட்டதன் காரணமாக உடனடியாக தோல் தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன. இதனால் அடுத்த வேளைக்கு உணவு இல்லாத நிலையில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் பல்லாயிரக் கணக்கான கோடி ரூபாய் அரசுக்கு

அன்னியச் செலாவணி வருவதும் தவிர்க்கப்படுகிறது. எனவே, உடனடியாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதைப் பரிசீலித்து எங்கள் பகுதியிலுள்ள தோல் தொழிற்சாலைகளை உடனே திறக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடுக்கப்பட்டு 1995–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ஆம் தேதி உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி வேலூர் மாவட்டத்தில் இருக்கின்ற மொத்தம் 593 தொழிற்சாலைகள் மூடப்பட்டன. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு இணங்க Common Effluent Treatment Plant என்ற சுத்திகரிப்பு ஆலையை யார் யார் வைத்திருக்கிறார்களோ அந்த ஆலைகள் மீண்டும் திறக்கப்பட்டிருக்கின்றன. அதுபோல Common Effluent Treatment Plant உருவாக்கிய 356 ஆலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அதேநேரத்தில் பொதுவாக Common Effluent Treatment Plant இல்லாமல் Effluent Treatment Plant –ஐ தனியாக அமைத்துக் கொண்ட 95 தொழிற்சாலைகள் மீண்டும் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, 593 தொழிற்சாலைகளில் திறக்கப்பட்டிருக்கின்ற இந்தத் தொழிற்சாலைகள் போக மீதம் இருப்பது 142 தொழிற்சாலைகள்தான். இந்த 142 தொழிற்சாலைகளில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பேரணாம்பட்டு தொகுதியில் 33 தொழிற்சாலைகள் Effluent Treatment Plant போடாத காரணத்தால் இன்னும் திறக்கப்படாமல் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ம. அப்துல் லத்திப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள் மூடப்பட்டதற்கு தொழிலாளர்கள் காரணம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். தொழிலாளர்கள் காரணம் இல்லையென்றாலும், தொழிலாளர்கள் வேலை இழந்து அன்றாடம் வாழ்வதற்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் தொழிற்சாலைகள் நடைபெறுவது தொழிலாளர்களுடைய நல்வாழ்வுக்கு இன்றியமையாதது என்பதை அரசு உணர்ந்து அவை திறக்கப்படுவதற்கு தடையாக இருக்கின்ற காரணங்களை அகற்றி, தொழிற்சாலைகளை மீண்டும் திறப்பதற்கு அரசு என்னென்ன வகையிலே நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அந்தந்த வகையில் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதற்கு, இதுவரையில் அரசு





முனைப்போடு எந்தெந்த வகையில் செயலபட்டு இருக்கிறது? பொருளாதாரம்தான் காரணம். அதற்காகத்தான் அந்தச் சுத்திகரிப்பு நிலையங்களை சிறிய தொழிற்சாலைகளால் ஏற்படுத்த முடியவில்லை என்றால், அந்த சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்தி, உச்ச நீதிமன்றத்தினுடைய தடை காரணம் என்றால், அந்தத் தடையைப் போக்குவதற்கு அரசு எந்தெந்த வகையில் இந்தத் தொழிற்சாலைகளை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது? தொழிலாளர்கள் இதற்குக் காரணம் இல்லையென்றால், தொழிலாளர்களின் வாழ்வைப் பற்றி அரசுக்கு அக்கறை இல்லையா? ஆகையினால் உடனடியாக அந்தத் தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு தடைகளை அகற்றி, நிலைமைகளை ஆய்வு செய்ய வேண்டும். முத்தரப்பு மாநாடு என்று ஒன்று நடத்தப்பட்டது. அதனுடைய தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு உடனடியாக அரசு எந்தெந்த வகையில் இதற்காக ஒத்துழைப்பு நல்கவேண்டுமோ அந்தந்த வகையில் ஒத்துழைப்பு நல்குவதற்கு நடவடிககை எடுக்கத் தயாரா? என்ன நடவடிக்கை எடுக்க அரசு உத்தேசித்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் காரணம் இல்லை என்று நான் சொல்லவில்லை. தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளால் இந்தத் தொழிற்சாலைகள் மூடப்படவில்லை என்றுதான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். உச்ச நீதியன்றம் இதிலே தலையிட்டு, அதனுடைய தீர்ப்புக்குப் பிறகு, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, ஏறத்தாழ 593 தொழிற்சாலைகளில் இன்னும் திறக்கப்படவேண்டியது 142 தொழிற்சாலைகளில்தான்.

உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பிற்காக, எல்லா தொழிற்சாலைகளின் முதலாளிகளும், சுத்திகரிப்பு ஆலைகளைக் கட்டியிருக்கிறார்கள். மீதம் 142 தொழிற்சாலைகளில்தான் கட்டவேண்டியிருக்கிறது. இதிலேகூட பேரணாம்பட்டுத் தொகுதியிலே 33 தொழிற்சாலைகள் வருகின்றன. தனியாக தனித்தனியாக கட்ட முடியாவிட்டாலும்கூட, கூட்டுறவு முறையில் இதனைச் செய்யலாம். ஏற்கெனவே, Common Effluent Treatment Plant என்ற கூட்டுறவு முறையில் போட்டுத்தான் 356 தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தொழிலாளர் பிரச்சினையில் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மிகுந்த கவனத்தோடு பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நான் அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[2001 ஆகஸ்ட் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ம. அப்துல் லத்தீப் அவர்கள், நீங்கள் ஏற்கெனவே விளக்கமாகச் சொல்லிவிட்டீர்கள் அல்லவா?

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புவது, தடைகள் உள்ளன. 142 தொழிற்சாலைகள் இதுவரையில் திறக்கப்படவில்லை. ஏனைய தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுவிட்டன. கூட்டுறவு முறையில் முயற்சி செய்து, சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்தலாம். தடைகள் என்ன என்பதை ஆய்வு செய்து, அரசு அவற்றைத் திறப்பதற்கு எந்தவகையில் முயற்சி செய்யவேண்டுமோ, ஆக்கபூர்வமாக ஒத்துழைப்பு நல்கவேண்டுமோ, உதவி செய்ய வேண்டுமோ அதன்பால் அரசு கவனம் செலுத்தியிருக்கிறதா, நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறதா என்பதுதான் கேள்வி. எனவே, அதுகுறித்து அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறது என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுடைய நலனைக் கருதி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மீதியிருக்கின்ற 142 தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறக்கூடிய கழிவு நீர் என்பது உடல்நலத்திற்கு மிகுந்த கேடு விளைவிக்கக்கூடிய ஒன்று. ஆகவே, அந்த அடிப்படையிலே உச்ச நீதிமன்றத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அதேநேரத்திலே இப்போது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, எல்லோரும் சேர்ந்து கூட்டு முயற்சியின் அடிப்படையிலே ஏற்படுத்தி இருக்கக்கூடிய அந்தச் சுத்திகரிப்பு நிலையங்கள் என்பதுகூட, முறையாகப் பயன்படுத்தவில்லை என்ற தகவல் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அதை கவனிக்கவேண்டும். அதேநேரத்திலே, எஞ்சியிருக்கின்ற தொழிற்சாலைகளிலே, அவை எல்லாம், சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படாமல் திறக்கக்கூடாது என்ற நிலை இருந்தாலும்கூட, அந்த நலிந்தத் தொழிற்சாலைகளை ஊக்குவிக்கக்கூடிய வகையிலே, தொழிலாளர்கள் நலன் காக்கக்கூடிய வகையிலே, அரசு,



2001 ஆகஸ்ட் 28]

மானியம் கொடுத்து, அந்தச் சுத்திகரிப்பு நிலையங்களை உருவாக்குவதற்கு முன்வருமா? எந்த அளவிலே மானியம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஆங்காங்கே மூடப்பட்டிருக்கின்ற அந்தத் தொழிற்சாலைகளின் அடிப்படையில், அந்தத் தொழிலாளர்களுடைய நலன் கருதி, அவர்களுக்கு உதவி வழங்கப்பட்டு வந்திருக்கிறது. இப்போது மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக்கொண்டு, அந்தத் தொழிற்சாலைகளை அதிவிரைவில் திறப்பதற்கு வேண்டிய எல்லா முன்முயற்சிகளையும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடிக்கணக்கான ரூபாய் அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தருகிற இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதினால், பேரணாம்பட்டு, ஆம்பூர், வாணியம்பாடி, ஈரோடு, திண்டுக்கல், ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையற்றுக் கிடக்கிறார்கள். இந்தத் தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்களில் 80 சதவிகிதம் பேர் தலித்துகள். இந்தத் தொழிலில் ஈடுபடுகிற இவர்களுடைய கரங்கள் எல்லாம், ஏதோ தொழு நோயாளிகளின் கரங்களைப்போல சிவந்திருக்கும்.

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. செ.கு. தமிழரசன்:** அதற்கு சிறப்பு மருத்துவ சிகிச்சை செய்வதற்கு அரசு முயற்சிக்குமா, இது முதல் கேள்வி. இரண்டாவது, கூட்டுறவு அடிப்படையிலே நூற்பு ஆலைகளையும், சர்க்கரைத் தொழிற்சாலைகளையும் உருவாக்கியிருப்பதைப்போல, கூட்டுறவு அடிப்படையிலே, பேரணாம்பட்டு, ஆம்பூர், வாணியம்பாடி ஆகிய பகுதிகளிலே தொழிலாளர்களை மையமாக வைத்து கூட்டுறவு தோல் பதனிடும் தோல் உற்பத்தி தொழிற்சாலைகளை உருவாக்குகிற திட்டம் அரசிடம் இருக்கிறதா, அதற்கு தொழிலாளர் நலத் துறை பரிந்துரை

செய்து தொழிலாளிகளுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இரவிராஜ். இல்லை, திரு. இராஜா மாறி மாறி உட்கார்ந்து கொள்கிறீர்கள். கேள்வி நேரத்திலாவது உறுப்பினர்கள் கொஞ்சம் அவரவர்களுடைய இடத்திலே அமர வேண்டும்.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டிலே கருப்பு மாவட்டம் என்று சொல்கின்ற மாவட்டம் வேலூர் மாவட்டம். இங்கே தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற கழிவு நீரை பாலாற்றிலே கலக்க விடுகிறார்கள். அந்தத் தோலில் உள்ள உரோமங்களை பாலாற்றிலே கொட்டி, இன்று சீரழிக்கப்பட்டு, அங்கே மனித ஜீவனங்கள், உயிரினங்கள், விலங்கினங்கள் வாழ்வதற்கு வகையில்லாத நிலைமை இருக்கின்றது. சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளுக்கு ஏதாவது கட்டுப்பாடு விதித்து, அந்தக் கழிவுநீரைப் பாலாற்றிலே கலக்க விடாமலும், உரோமங்களை பாலாற்றிலே கொட்ட விடாமலும் இருக்க உத்தரவு பிறப்பிக்கப்படுமா என்று நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்துத்தான் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து, அந்த சுத்திகரிப்பு ஆலைகளை வைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் காரணமாக நிலம், நிலத்தடி நீர், ஆற்று நீர் மற்றும் விவசாய நிலங்கள் ஆகியவை மாசு அடைவதால் சுற்றுச்சூழல் மாசு காரணமாக தோல் பதனிடும் தொழிற்சாலைகள் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி மூடப்பட்டன. இப்போது சரிசெய்யப்பட்டுத்தான் திறக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் இன்னும் திறக்கப்படாமல் இருக்கக்கூடிய 142 தொழிற்சாலைகள், பேரணாம்பட்டு தொகுதி, என்னுடைய வேலூர் தொகுதி, இராணிப்பேட்டை தொகுதி, ஆற்காடு தொகுதி, வாணியம்பாடி தொகுதி ஆகிய தொகுதிகளிலெல்லாம் வருகின்றன. இதில் இருக்கக்கூடியவர்களை, ஏற்கெனவே இருந்த அரசு, முத்தரப்புப் பேச்சுவார்த்தை என்று ஒன்றை ஏற்படுத்தி, எல்லோரையும் நேரில் அழைத்துப் பேசினார்கள். ஆனால், அதிலே சரியான பலன் கிட்டவில்லை. ஆகவே, மூடியிருக்கக்கூடிய அந்த 142 ஆலைகளைத் திறப்பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள், அந்த உரிமையாளர்களையும், தொழிலாளர் சங்கத்தினுடைய தலைவர்களையும், இந்த அரசினுடைய பங்காக நீங்களும், சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்து, முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்துவீர்கள் என்று சொன்னால், ஒரு மாத காலத்திற்குள் திறந்தீர்கள் என்று சொன்னால், நிச்சயமாக அந்த ஏழையெளிய தொழிலாளர்களுடைய வாழ்வில் ஒளியேற்றப்படும் என்ற காரணத்தாலே, அமைச்சர் அவர்கள் முத்தரப்புப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்வார்களா? தாராஸ் என்று இராணிப்பேட்டையிலே ஒரு கம்பெனி அருமையான ஒரு கம்பெனி, தோல் நாற்றம் கொஞ்சம்கூட வராமல்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முத்தரப்புப் பேச்சுவார்த்தைக்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா? திரு. ஞானசேகரன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது Employer, Employee–யினுடைய பிரச்சினை அல்ல. முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு, சம்பந்தப்பட்ட ஆலை அதிபர்களை அழைத்து உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பிற்கு இணங்க உடனடியாக இந்தத் தொழிற்சாலைகளைத் திறக்க வேண்டும், இதிலே இவ்வளவு தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்று அவர்களுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கி, அரசின் சார்பில் அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய முடிந்தால், அதையும் செய்து, அந்தத் தொழிற்சாலைகளை வேகமாகத் திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தினசரி கையைத் தூக்கிக் கொண்டே இருக்கிறேன், நீங்கள் இந்தப் பக்கமே பார்க்கமாட்டேன் என்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே, வினாக்கள்–விடைகள் நேரம் முடிந்து, நீட்டிக்கப்பட்டிருக்கிறது. எனவே, உட்காருங்கள். வேறு வாய்ப்புகள் வரும். உட்காருங்கள்.

[2001 ஆகஸ்ட் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 23, திரு. டி. மணி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.*

**23—**

## பட்டா

*216-திரு. டி. மணி:

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், களியல் கிராமம், வலியஏலா விவசாயிகளுக்குத் தாங்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளுக்குப் பட்டா வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், வருவாய்த் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், களியல் கிராமத்தில் உள்ள வலியஏலா என்னுமிடம் கிராமக் கணக்குகளின்படி நில அளவை செய்யப்படாத பாதுகாக்கப்பட்ட காடுகளாகும்* (Reserve Forest). *எனவே, இவ்விடத்தில் வீட்டுமனைப்பட்டா வழங்க இயலாது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**திரு. டி. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டு நிலம் என்று அவர்கள் குறிப்பிட்டிருப்பது 1982—க்குப் பின்னால். அந்த நிலத்தில் விவசாயிகள் உள்ளே நுழைந்தது 1946—ல். 1946—க்கும் 1982—க்கும் இடையில் அவர்களிடமிருந்து நிலவரி வசூல் செய்யப்பட்டிருக்கிறது. எனவேதான், வனத் துறைக்கு அதில் சம்பந்தம் இல்லை என்ற முறையில் தான் அவர்களுக்குப் பட்டா வழங்கவேண்டும். தவறாக ஒரு இன மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது. அந்தவகையில் அந்த விவசாயிகளுக்குப் பட்டா வழங்கவேண்டும். அவர்களுக்குச் செல்வதற்கான பாதையில்லை. மின்சாரம் இல்லை. பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லை. கடந்த 5 ஆண்டு காலமாக இந்த மாமன்றத்திலே இந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கின்றேன். 1980—ஆம் ஆண்டிலிருந்து 1984 வரையிலும் இந்த மாமன்றத்திலே இந்த விவகாரத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். எனவேதான், இந்த முறையில் வனம் என்று சொல்வதை மாற்றி, அதற்குப் பதிலாக அவர்களுக்கு முழுமையான பட்டா வழங்குகின்ற நடவடிக்கைக்கு அரசு மறுபரிசீலனை*



2001 ஆகஸ்ட் 28]

*செய்து நடவடிக்கையினை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 11—05*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட இடம் வனத்துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற புறம்போக்குக் காடுகளாகும். அதன் அடிப்படையில் அதற்கு மின் வசதி இல்லை. அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டிருக்கின்றன. இதனுடைய முடிவு கொள்கை அளவிலான முடிவாக இருப்பதால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு திரு. ஜே. ஹேமச்சந்திரன்.*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு வட்டம், அதேபோன்று அதற்கு அருகாமையிலேயிருக்கின்ற கற்குளம் வட்டம் என்ற இடங்களிலேயெல்லாம், இருக்கின்ற நிலங்களிலே, ஏற்கெனவே வருவாய்த் துறை அவர்களுக்கு* 'B' Memo *கொடுத்து, பல வருடங்களாக அவர்கள் அங்கே தங்கி விவசாயம் செய்தும் மற்றும் பல தொழில்கள் நடத்திக்கொண்டும் இருக்கின்ற இடங்களிலே சமீபகாலமாக, வனத் துறையைச் சார்ந்தவர்கள், அதனை அவர்களுடைய இடம் என்று சொல்லி உள்ளே வந்து அங்கே தங்கியிருக்கிற மக்களுக்கு அடிப்படை வசதிகள்கூடக் கொடுப்பதற்கு தகராறு செய்கிற சூழ்நிலை குறித்து அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? குடிதண்ணீர், மின்சார வசதி செய்து கொடுப்பதற்குக்கூட மறுக்கப்படுகிறது. இது வனத் துறைக்கு எப்படி சொந்தமாகின்றது என்பதைக்கூட அவர்கள் விளக்குவதில்லை. நீதிமன்றம்கூட அங்கே தங்கியிருக்கின்றவர்களுக்கு சொந்தம் என்கின்ற முறையிலே தீர்ப்பு கொடுத்ததற்குப் பிறகும், வனத் துறை இப்படி ஆக்கிரமித்து தகராறு செய்வதை நிறுத்திக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? மேலும் தேவைப்பட்டால் இதுசம்பந்தமாக ஒரு குழுவை, அதாவது அதிகாரிகளுடைய ஒரு குழுவை அமைத்து,* revenue*—க்கு சொந்தமான இடமா அல்லது வனத்துறையினுடைய இடமா என்பதைப்பற்றி முடிவு செய்து அதற்கு ஒரு நல்ல தீர்வை ஏற்படுத்துவதற்கு, அவர்களுடைய வாழ்க்கையிலே வனத்துறை தகராறு செய்யாமல் இருப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

[2001 ஆகஸ்ட் 28

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விடை அளித்தது, குடியிருப்பு பகுதிகளுக்குண்டான பட்டா வழங்குவது குறித்ததான கோரிக்கையாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருவது விவசாய நிலங்களைப் பற்றிய குறிப்பாகும். அதற்குண்டான தனி வினாவை அவர்கள் போடுவார்களேயானால், அதற்கு நான் விடையளிக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, அங்கே தங்கி இருக்கின்றவர்களுக்கு Revenue Department–லிருந்து B–Memo கொடுக்கப் பட்டிருக்கின்றது. அதனாலேதான், அவர்களுடைய உரிமை அங்கே வருகிறது. மேலும், அவர்கள் பட்டாவிற்காக மனுக்களும் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பட்டாவிற்கான மனுக்கள் பெண்டிங்கிலே இருக்கின்ற நேரத்திலே வனத் துறை அங்கே வந்து அவர்களுடைய வாழ்க்கையை சின்னாபின்னமாக்குகின்ற நிலைகுறித்து நடவடிக்கை எடுப்பதற்கு ரெவின்யூ துறை தகுந்த நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்குமா?—(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், ஏற்கெனவே அமைச்சர் இதுபற்றிச் சொன்னார். இதுசம்பந்தமாக முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு போவேன் என்று சொல்லியிருக்கிறார். அதனாலே, பிரச்சினையை விட்டுவிடுங்கள்.

வினா எண் 24, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**24–**

### இரட்டைச் சாலை

***6830–திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூரிலிருந்து பார்த்திபனூர் வரை செல்லும் மாநில நெடுஞ்சாலை, திருவில்லிப்புத்தூர், சிவகாசி, விருதுநகர் மற்றும் சாத்தூர் ஆகிய தொகுதிகளில் இரட்டைச் சாலையாகவுள்ள அச்சாலை அருப்புக்கோட்டை தொகுதியில் மட்டும் இரட்டைச் சாலையாக ஆக்கப்படாமல் உள்ளது அரசிற்குத் தெரியுமா?



2001 ஆகஸ்ட் 28]

(ஆ) ஆம் எனில், அருப்புக்கோட்டைத் தொகுதியிலுள்ள 35 கி.மீ. நீளமுள்ள சாலையையும் இரட்டைச் சாலையாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 33.86 கி.மீ. நீளமுள்ள இச்சாலைப் பகுதியை இரட்டைச்சாலையாக மாற்ற சுமார் 10 கோடியே 84 இலட்சம் தேவைப்படும் என்பதால் தற்பொழுது உள்ள நிதிநிலைமையில் இப்பணியை அண்மைக் காலத்தில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூரிலிருந்து பார்த்திபனூர் வரை செல்லும் மாநில நெடுஞ்சாலை திருவில்லிப்புத்தூர், சிவகாசி, விருதுநகர் மற்றும் சாத்தூர் ஆகிய தொகுதிகளில் இரட்டைச் சாலையாகச் செல்கின்றது. அருப்புக்கோட்டை தொகுதியில் மட்டுமே அது இரட்டைச் சாலையாக ஆக்கப்படாமல் உள்ளது. இது, எந்த நிதியாண்டில் இரட்டைச் சாலையாக ஆக்கப்படும் என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–10

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டையிலிருந்து பார்த்திபனூர் வரை செல்லும் சாலையிலே, அங்குள்ள பகுதியிலே Passenger Car Unit என்ற கணக்கின் பிரகாரம் இப்பொழுது 3171 பி.சி.யூ.தான் இருக்கிறது. அது பத்தாயிரத்திற்கு எப்பொழுது வருகிறதோ அப்பொழுதுதான் அந்தச் சாலை இரட்டைச் சாலையாக மாற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

## 3. தகவல் கோரல்

### (அ) உறுப்பினரின் முன்னறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழகத்தில் பல தொகுதிகளில் வாக்காளர் பட்டியலிலிருந்து பல வாக்காளர் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து-(குறுக்கீடு)

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின், கொஞ்சம் இருங்கள். திரு. ஹேமச்சந்திரன் சொல்லட்டும். பிறகு நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் eve-teasing காரணமாகப் பெண்களுக்கு ஏற்பட்டிருக்கிற கொடுமை, குறிப்பாக பெண் குழந்தைகளுக்குப் பெரிய கொடுமை ஏற்பட்டிருக்கிறது. அங்கே மாணவிகள் கல்லூரிகளுக்குப் படிப்பதற்குப் போகாமல் கல்லூரியிலிருந்து வெளியேறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து பல நாட்கள் ஆகின்றன. ஏற்கெனவே இதுபோன்று மேய்க்காமண்டபம் என்ற இடத்தில்கூட மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் தொகுதியில் இரண்டு மாணவர்கள் குண்டு அடிபட்டு அவர்கள் இன்றைக்கு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து பல நாட்கள் ஆகின்றன. அரசு அதுசம்பந்தமாக விளக்கத்தைக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், காவல் துறை மானியக் கோரிக்கையில் இதைப் பற்றி நீங்கள் விரிவாகப் பேசுங்கள் முதலமைச்சர் அவர்கள் உரிய பதிலைச் சொல்வார்கள்.

### (ஆ) பேரவையில் இருக்கைகள் ஒதுக்கியது

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே உறுப்பினர்களுக்கு இருக்கைகள் ஒதுக்குகிறபோது ஒரு நடைமுறை, மரபு இருக்கிறது. ஒவ்வொரு முறையும் அது பின்பற்றப்பட்டு வருகிறது. இந்த முறையும்கூட அரசியல் கட்சிகளுடைய எண்ணிக்கையின் அடிப்படையில் முதல் வரிசையில் உறுப்பினர்களுக்கு இருக்கைகள்





ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே, முதலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அதற்குப் பிறகு தமிழ் மாநில காங்கிரஸிற்கும், அதற்குப் பிறகு பாட்டாளி மக்கள் கட்சிக்கும், அதற்குப் பிறகு காங்கிரஸ் கட்சிக்கும், அதற்குப் பிறகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், அதற்குப் பிறகு இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும், அதற்குப் பிறகு பாரதீய ஜனதா கட்சிக்கும், 4 உறுப்பினர்களைக் கொண்டிருப்பதால், இருக்கைகள் முறைப்படி ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பாரதீய ஜனதா கட்சிக்கு ஒதுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு அடுத்த இருக்கையை ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. லத்தீப் அவர்களும், திரு. சந்தானம் அவர்களைப் பொறுத்தவரை, என்னைவிட அவர்கள் வயதிலும் சரி, அனுபவத்திலும் சரி, முதியவர்கள். அதை நாங்கள் மதிக்கிறோம். ஆனால், அது வேறு விஷயம். இருக்கைகளை ஒதுக்குகிறபோது அரசியல் கட்சிகளுடைய எண்ணிக்கையின் அடிப்படையில் ஒதுக்கியிருக்க வேண்டும். ஒருவேளை வயதில் முதியவர்கள், அரசியல் அனுபவத்தில் மூத்தவர்கள் என்ற காரணத்திற்காக இந்த இருக்கைகளையெல்லாம் எதிர்க்கட்சித் தலைவருடைய இருக்கையையோ அல்லது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இருக்கையையோ நாம் ஒதுக்கிவிட முடியாது. ஒருவேளை இரண்டு அரசியல் கட்சிகளில் ஒரே எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இருந்தால் அது சபாநாயகருடைய அதிகாரத்திற்கு உட்பட்டு, அந்த இருக்கைகளை யாருக்கு முதலில் ஒதுக்கிட வேண்டுமென்று முடிவு செய்யலாம். அப்படி இருந்தபோதுகூட...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள். பேராசிரியர்கூட இதுபற்றிக் கடிதம் எழுதியிருந்தார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். இதுகுறித்து, என்னுடைய அறையிலே நீங்கள் விவாதித்தீர்கள். நானும் உங்களிடம் சொன்னேன், உங்களைவிட திரு. லத்தீப் அவர்கள் வயதிலே மூத்தவர், சிறுபான்மை இனத்தவரின் சார்பாக வந்திருக்கக்கூடியவர் லத்தீப் அவர்கள், சந்தானம் அவர்கள் என்று சொன்னேன். நீங்களும் அதை ஏற்றுக் கொண்டதைப் போலப் போனீர்கள். மறுபடியும் அதை வலியுறுத்துவதாக இருந்தால், அதைப் பற்றி என்னவென்று நான் பரிசீலிக்கிறேன்.

[2001 ஆகஸ்ட் 28

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### வாக்காளர் பட்டியலில் பெயர்கள் விடுபட்டுள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழகத்தில் பல தொகுதிகளில் வாக்காளர் பட்டியலிலிருந்து பல வாக்காளர் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. வை. சிவபுண்ணியம் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புகள் கொடுத்துள்ளார்கள். முதலில் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மே மாதம் பொதுத் தேர்தலுக்கு முன்னாலேயே வாக்காளர் சேர்ப்பு என்கின்ற பணிக்குச் சென்றவர்கள் சரியாகப் பணியைச் செய்யாமல் பல தொகுதிகளில் இருக்கக்கூடிய வாக்காளர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து பெயர்களை எடுத்துவிட்டார்கள். அதுகுறித்து இந்த மாமன்றத்திலே முந்தைய சட்டமன்றத்தில் தி.மு.க. ஆட்சியில்கூட 40 நிமிடங்களுக்கு மேலே நாங்கள் இங்கே விவாதித்தோம். அதிலே என்னுடைய தொகுதிலே மட்டும் 70000 பெயர்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து அடிக்கப்பட்டிருக்கிறது என்று நான் சான்றுகளோடு எடுத்து வைத்தேன். நிறையப் பேர் அடையாள அட்டை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அடையாள அட்டை வைத்துக் கொண்டிருந்த பல பேருக்கு அங்கே வாக்கு இல்லாத ஒரு சூழ்நிலையை நாங்கள் 10–ஆம் தேதி தேர்தலுக்குப் போகும்போது, பூத் பூத்தாகப் போகும்போது, எல்லோரும் படை, படையாக வந்து, எங்களுடைய பெயர்கள் அடிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அதிலேகூட, கம்ப்யூட்டரில் கோடு போடுகிற மாதிரி, வரிசையாக கோடு போட்டு வைத்திருந்தார்கள். அப்படி அகற்றப்பட்ட காரணத்தாலே, இங்கேகூட நம்முடைய தமிழக அரசு ஒரு கோடி வாக்காளர்கள், அடையாள அட்டை இருந்தும்கூட வாக்களிக்காமல் போய்விட்ட நிலையை ஆளுநர் உரையிலே பாரா 3–லே தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள்.

'தகுதி வாய்ந்த ஒரு கோடிக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் புகைப்பட அடையாள அட்டைகள் இருந்தும், அவர்களுடைய பெயர் வாக்காளர் பட்டியலிலிருந்து அகற்றப்பட்டிருப்பதால், வாக்களிக்க முடியாமல் தடுக்கப்பட்டனர். இவ்வரசு, இதனையும் தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்பாக, இந்த முரண்பாடுகளை நீக்க ஏற்பாடு



2001 ஆகஸ்ட் 28] [திரு. சி. ஞானசேகரன்]

செய்யும்' என்கிற உறுதியினை ஆளுநர் உரையிலே இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கு மாறாக, திடீரென்று எங்களுடைய வேலூர் நகராட்சிக்கும், நாகப்பட்டினம் நகராட்சிக்கும் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, வாக்காளர் பட்டியலைப் போய்ப் பார்த்தபோது–என்னுடைய தொகுதியில் ஒட்டுமொத்தமாக 70000 பேர் முன்பு இல்லை என்று சொன்னேன்–இப்பொழுது வேலூர் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட வகையில் 40000 பேர்கள் அடிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. இன்னும் பெயர்களே சேர்க்கப்படவில்லை.

முற்பகல் 11–15

அதை நான் நம்முடைய நிதியமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்து அதேபோல நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் எல்லாம் கலந்து பேசி உடனடியாக 40000 பேர்களுக்கு வாக்கு இல்லை, நீங்கள் உடனடியாகத் தேர்தலை வைக்கிறீர்கள்; தேர்தலை இப்படி வைத்தீர்கள் என்றால் எப்படி; ஆளுநர் உரையில் சொல்லப்பட்டதற்கு மாறாக வைக்கிறீர்கள் என்று நான் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து ஒரு கோரிக்கை வைத்த பிறகு அந்தத் தேர்தல் பிறகு நிறுத்தப்பட்டது. அதாவது எம்எல்ஏ, எலக்ஷனுக்கு எடுத்த வாக்காளர் பட்டியலைத்தான் அப்படியே re–produce பண்ணியிருக்கிறார்கள். புதியதாக இவர்கள் ஒன்றுமே பண்ணவில்லை. இப்பொழுது அடுத்த உள்ளாட்சித் தேர்தலை அக்டோபரில் வைப்பதாக அரசு அறிவித்திருக்கிறது. இப்படி நீங்கள் உள்ளாட்சி மன்றத் தேர்தலை உடனடியாக வைக்கவேண்டுமென்று சொன்னால், ஏற்கெனவே என்னுடைய தொகுதியில் மட்டுமே 70000 வாக்காளர்கள் விடுபட்டிருக்கிறார்கள். பல தொகுதிகளில் இதே பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும். இதிலே எல்லோரும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். இப்பொழுது எல்லோருக்கும் பிரச்சினை தெரியும். நீங்கள் சொல்லிவிட்டீர்கள். அமைச்சர் அதற்குப் பிறகு விளக்கம் சொல்வார். சிவபுண்ணியத்தைச் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக யார் யாருக்குத் தகுதி இருக்கிறது; இவர் தேர்தலில் நிற்க முடியாது என்று Application–ஐ reject பண்ணுவதற்கு மட்டுமே தேர்தல்

ஆணையம் இருக்கிறது என்பது அல்ல. தேர்தல் ஆணையம் என்பது தமிழகத்தில் இருக்கக்கூடிய, இந்தியாவில் இருக்கக்கூடிய ஒவ்வொரு குடிமகனும் நிச்சயமாக வாக்களிக்கக்கூடிய அந்த உரிமையைப் பயன்படுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்பதற்காக அமைக்கப்பட்டிருக்கின்ற ஒரு ஆணையம்தான் அந்த ஆணையம். ஆகவே, ஆளுநர் உரையில் சொல்லப்பட்டதுபோல எல்லோருக்கும் அந்த வாக்கு உரிமை கிடைக்கக்கூடிய வகையில் நீங்கள் தேர்தல் ஆணையத்திற்குச் சொல்லி, முழுமையாக எல்லோருடைய பெயர்களையும், வாக்காளர்களையும் சேர்க்கின்ற பணியைக் கொஞ்சம் போர்க்கால அடிப்படையில் செய்யவேண்டும். இரண்டு அடுக்கு முறைக்கு இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்துவதாகக்கூடச் சொல்லியிருக்கிறீர்கள். Two–tier system வந்தபிறகு உள்ளாட்சித் தேர்தல் வைத்தால்தான் இந்தத் தேர்தல் உண்மையிலேயே நல்ல தேர்தலாக அமையும் என்ற காரணத்தால் நான் மாண்புமிகு சபாநாயகர் வாயிலாக அறிய விரும்புவது எல்லாம் நம்முடைய அரசு உடனடியாக, விடுபட்டுப் போயிருக்கக்கூடிய அத்தனை பெயர்களையும் தேர்தல் ஆணையத்திற்கு எடுத்துச்சொல்லி, பெயர்களைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர்கள் விடுபட்டு இருப்பது என்பது தமிழகத்திலே ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அது 1 கோடியா 50 இலட்சமா என்பது பிரச்சினைக்குரியது அல்ல. சென்ற முறை நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் குறிப்பிட்டுச் சொன்னதுபோல பெயர்கள் அடிக்கப்பட்டிருக்கிறதே அந்த வாக்காளர் பட்டியலை எடுத்துப் பார்த்தாலே பகீர் என்றிருக்கும். அது ஏதோ மரணமுற்றவர்களுடைய பெயர்களை அடித்ததுபோல் இருக்கிறது என்று வாக்காளர் ஒருவர் வேதனையோடு சொன்னார். தேர்தல் நேரத்திலே வாக்குச் சாவடிகளுக்கு வாக்குப் பதிவினைப் பார்க்கச் செல்கின்ற வேட்பாளராகிய எங்களுக்கு எந்த வாக்குச் சாவடிக்குச் சென்றாலும் மிகப் பெரிய பிரச்சினையாக இருந்தது. என்னுடைய பெயர் இல்லை, உன்னுடைய பெயர் இல்லை, எனக்கு கையிலே அடையாள அட்டை இருக்கிறது, ஆகவே, இப்படி ஏற்பட்டுவிட்டதே என்ற வேதனைச் செய்திதான் எந்த வாக்குச் சாவடிக்குச் சென்றாலும் வந்தது. ஆகவே, இந்தப் பிரச்சினையில் தீர்வு காண்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் பேசி, உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பாக அப்படிப்பட்ட குறைபாடுகள் நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கான முயற்சிகள் எடுக்கவில்லை. மேலும் இப்பொழுது ஆகஸ்ட்



3–ஆம் தேதியோடு வாக்குப் பதிவுக்குரிய அவகாசமும் நிறுத்தப்பட்டுவிட்டது. ஆகவே, இதையெல்லாம் சரி செய்து, புதிய வாக்காளர்களை இணைப்பதற்கான அவகாசத்தையும் நீடிக்க வேண்டும்; இந்தக் குறைபாடுகளையும் நீக்கி உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்துவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டுமென்ற கருத்து இருக்கிறது. அதைச் செய்வதற்கான முயற்சியை தனிக் கவனத்தோடு நம்முடைய தமிழ்நாடு அரசும் செய்ய வேண்டும்; தேர்தல் ஆணையமும் இந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று சென்ற ஆட்சிக் காலத்திலே ஒரு விவாதம் நடைபெற்றது. தேர்தல் ஆணையரையும் இங்கே வரவழைத்து, அவர் முன்னிலையிலேயே இந்த விவாதம் நடைபெற்றது. ஆனால், அது தீர்வு காணப்படாமல் இருக்கிறது என்பதை இங்கு கவனத்திற்குக் கொண்டு வந்து அதை விரைந்து நடவடிக்கை எடுத்து வாக்காளருக்கு இருக்கிற அந்த ஜனநாயக உரிமையைப் பாதுகாப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது எழுப்பப்பட்ட இந்தப் பிரச்சினை ஏறத்தாழ ஓர் ஆண்டுகாலமாக, கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னாலே 6 திங்கள் முன்பிருந்தே தொடர்ந்து இருந்து வருகிறது. மத்திய தேர்தல் ஆணையம், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் தேர்தல்களுக்குத்தான் பொறுப்பு ஏற்கிறது. மாநிலத் தேர்தல் ஆணையம் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களுக்கெல்லாம் பொறுப்பேற்கிறது. மாநிலத் தேர்தல் ஆணையம் தனியாகவே வாக்காளர் பட்டியலை நீண்டகாலமாகப் பயன்படுத்தி வந்தது. அந்த வாக்காளர் பட்டியல் சரியல்ல என்ற ஒரு கருத்து எப்படியோ ஏற்பட்டு சட்டமன்றத் தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட மத்திய தேர்தல் ஆணையத்தினுடைய அதே வாக்காளர் பட்டியலைத் தாங்களும் பயன்படுத்துவதாக மேற்கொண்டார்கள். அந்த நிலையில் அவர்களுக்குத் தெரிவித்து, உள்ளாட்சி மன்றத்திற்காக இருந்த அந்த வாக்காளர் பட்டியல் பயன்படுத்தப்பட்டால் அந்தக் குறைபாடு அவ்வளவாக இருக்காது என்ற நம்பிக்கையில் கேட்டபோது மத்திய தேர்தல் ஆணையத்தினுடைய வாக்காளர் பட்டியலைத்தான் நாங்கள் பயன்படுத்த இருக்கிறோம் என்று தெரிவித்தார்கள்.

*முற்பகல் 11–20*

அப்படி தெரிவித்தபோது, ஏற்கெனவே, ஆளுநர் உரையில் குறிப்பிட்ட அவ்வளவு வாக்காளர்கள் விடுபட்டுப்போய் இருக்கிற காரணத்தால் தேர்தலுக்கு முன்னால் வாக்காளர் சரிபார்க்கிற கடமையின் பெயரால் சில குறிப்பிட்ட தொகுதிகளிலேயிருந்து தொடங்கி, பரவலாக எல்லாத் தொகுதிகளிலேயும்–கட்சி வேறுபாடெல்லாம் கிடையாது–ஒரு தெருவிலே உள்ள ஏறத்தாழ 100, 200 வாக்காளர்களில் 60 வாக்காளர்கள், 100 வாக்காளர்கள் அடிக்கப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டு தேர்தல் நேரத்திலே மிகப் பெரிய வேதனையாக இருந்த காரணத்தால் அதைக் குறிப்பிட்டு நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அந்த வாக்காளர் பட்டியலில் எவை அடிக்கப்பட்டதோ, அவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டு, திருத்தவேண்டும் என்றுகூடக் கேட்டோம். ஆனால், அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. வாக்காளர் பட்டியலை நாங்கள் மாற்றுவதற்கு எங்களுக்கு உரிமை கிடையாது என்று தெரிவித்தார்கள். நல்ல வேளை உரிமை கிடையாது என்று தெரிவித்ததால் அந்த வாக்காளர் பட்டியலை, மத்திய ஆணையத்தினுடைய வாக்காளர் பட்டியலை, சட்டமன்றத்திற்கான வாக்காளர் பட்டியலை adopt செய்கிறோம். எங்களைப் பொறுத்தவரையில், உள்ளாட்சி மன்றத்திற்கு அதை கைக்கொள்கிறோமே தவிர, நாங்கள் செய்கிற திருத்தம் அவர்களைக் கட்டுப்படுத்தாது என்ற முறையில் அந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால். அந்தத் திருத்தம் நடைபெறவில்லை. அதனாலேதான் மாண்புமிகு வேலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அதை வலியுறுத்தி இருக்கிறார்கள். அந்தக் குறையைப் போக்க வேண்டுமென்ற முறையில் இந்த வாக்காளர் பட்டியல் தனி உரிமை உள்ளது என்ற அடிப்படையில் முழு அளவில் அந்தக் குறையைப் போக்கிட வேண்டும். உள்ளாட்சி மன்றத் தேர்தல் என்பதற்கும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் தேர்தல் என்பதற்கும் ஒரு வேறுபாடு உண்டு.

இது ஒரு பரந்துபட்ட இடத்தில் வாக்காளர் பட்டியலில் சிறு குறைபாடு இருந்தாலும்கூட "total reflection" பாராளுமன்றத்தையோ, சட்டமன்றத்தையோ பாதித்துவிடாது. உள்ளாட்சி மன்றத் தேர்தலில் ஒவ்வொரு சிறுசிறு பகுதிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வரவேண்டியிருக்கிற காரணத்தால் அதிலே வாக்காளர்கள் குறைகிறபோது அதனுடைய விளைவுகள் உள்ளாட்சி மன்றத் தேர்தலைப் பெருமளவு பாதிக்கும் என்ற காரணத்தால் சரியான முறையில் திருத்துவதற்கான வழியை அரசு செய்யுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரிவான அறிக்கை ஒன்றினை இந்நிலை குறித்து அரசு பெறவேண்டுமென்ற நோக்கோடு, சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஆய்ந்து அறிக்கையினை அனுப்புமாறு கோரப்பட்டார்கள். இதுவரை 16 மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்தந்த மாவட்டங்களிலுள்ள Electoral Registration Officer எனப்படும் வாக்காளர் பதிவு செய்யும் அதிகாரிகள் தந்த தகவல்களையொட்டி மட்டுமே தங்கள் அறிக்கையை அனுப்பியுள்ளார்கள். அவர்கள் அனைவருமே வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி விதிமுறைகளின்படி கடைப்பிடிக்கப்பட்டு நீக்கங்கள் அனைத்தும் முறையாகவே செய்யப்பட்டதாகவும், முறையான விசாரணை இல்லாமல் வாக்காளர் பெயர்கள் நீக்கம் செய்யப்படவில்லை என்றும் அந்தந்த வாக்காளர் பதிவு செய்யும் அதிகாரிகள் தந்த தகவல்களை மட்டுமே அரசுக்குத் தெரிவித்தனர். ஆனால், வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களை வீடுவீடாக மீண்டும் சென்று விசாரிக்கவில்லை. அவர்கள் பெயர்கள் ஏன் விடுபட்டது என்பதைக் கண்டறிந்து, பாதிக்கப்பட்ட வாக்காளர்களிடமிருந்து பெறப்படும் தகவல், இன்னும் வாக்காளர் பதிவு செய்யும் அதிகாரிகளால் சேகரிக்கப்படவும் இல்லை. இறந்தோர் அல்லது குடிபெயர்ந்தோர் எனும் தலைப்பில் பெரும்பான்மையான தொகுதிகளில் பல்லாயிர்க்கணக்கான வாக்காளர்களின் பெயரகள் விடுபட்டது மக்களுக்குப் பெரும் அதிர்ச்சியை உருவாக்கியுள்ளதை அரசு உணர்ந்திருக்கிறது. "Electoral Registration Officer" எனப்படும் வாக்காளர் பதிவு செய்யும் அதிகாரிகளுக்குப் பதிலாக தனி அமைப்பு மூலம் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மக்களை வீடுவீடாகச் சந்தித்து விசாரித்து, குறைபாடுகள், முறைகேடுகள் நடந்திருப்பதைக் கண்டறியவும், அதற்குக் காரணமானவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவும் அரசு தக்க செயல்பாடுகளை மேற்கொண்டிருக்கிறது. இதற்கிடையில் இந்திய தேர்தல் ஆணையம், தனது 27–7–2001 நாளிட்ட கடிதத்தில் 1–1–2002–ஆம் நாளை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு தீவிர முறையிலான வாக்காளர் பட்டியல் சிறப்பு முறையில் திருத்தத்திற்கு ஆணையிட்டு இருக்கிறது.

*முற்பகல் 11–25*

16–1–2001 முதல் 31–2–2002 வரை சேர்த்தல், நீக்குதல், திருத்தங்களுக்கான மனுக்கள் பெறப்படும் என்றும், இம்மனுக்களின்மீது

[திரு. சி. பொன்னையன்] [2001 ஆகஸ்ட் 28

முடிவு எடுக்கப்பட்டு அனைத்து துணைப் பட்டியல்களும் தொடங்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட இறுதிப் பட்டியலை 25–3–2002–ல் வெளியிடப்படும் என்றும் இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்திருக்கிறது. இந்நிலையில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சிவபுண்ணியம் அவர்களும், மாண்புமிகு திரு. ஞானசேகரன் அவர்களும், மாண்புமிகு பேராசிரியர் அவர்களும் எடுத்துக்கூறி இருப்பதைப்போல, இந்தப் பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. எப்படி, ஏன் செய்தார்கள் என்பதனைக் கண்டறிய புலனாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் கூறியவாறு, வேலூரில் மட்டும் 42000 வாக்குகள்; அதுபோல, ஒவ்வொரு முனிசிபாலிட்டி ஏரியாக்களில் 20000, 30000 என வாக்குகள் ஏன் விடுபட்டது என்று தேர்தல் ஆணையத்தினுடைய மாநில பிரதிநிதியைக் கேட்டால், சார், அவர்கள் எல்லாம் செத்தவர்கள் பட்டியலிலே அல்லது குடிபெயர்ந்துவிட்டவர்கள் பட்டியலிலே இருக்கிறார்கள்; ஒரு கோடி, 1–1/2 கோடி பேர் தமிழகத்திலே செத்துவிட்டார்களா அல்லது குடிபெயர்ந்து விட்டார்களா என்றுகூட சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நாங்கள் கண்டித்துக் கேட்டிருக்கிறோம். இது வேதனைக்குரிய ஒன்று. தக்க நடவடிக்கை, விரைவு நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது.

## 5. கவன ஈர்ப்பு

### நீலகிரி மாவட்டம், கருவண்ணுராயர் எம்மட்டம் பள்ளத்தில், பாலம் மழை நீரால் அடித்துச் செல்லப்பட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து கவன ஈர்ப்பு. திரு. கா. கந்தசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி, விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், தெங்குமரஹாடா கிராமத்திற்குச் செல்லும் வழியில் கருவண்ணுராயர் எம்மட்டம் பள்ளத்தில் வனத் துறையின் மூலம் கட்டப்பட்ட சிறு பாலம் மழை நீரால் அடித்துச் செல்லப்பட்டதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த



2001 ஆகஸ்ட் 28] [திரு. கா. கந்தசாமி]

நிகழ்வினை மாண்புமிகு செய்தி, விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொருள் குறித்த விவரமான அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்:

### அறிக்கை

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வனக் கோட்டத்தைச் சார்ந்த தெங்குமரஹடா கிராமத்துக்குச் செல்லும் வழியிலுள்ள கருவண்ணுராயர் எம்மட்டம் என்ற பள்ளத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சிறு பாலங்கள் அமைக்க நிதி ஏதும் வழங்கப்படவில்லை. மேலும் 1997–98 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் (Employment Assurance Scheme) சுஜாலக்குட்டை தெங்குமரஹடா வன சாலையில் கி.மீ. 8/0 – 9/50 கி.மீ. 14/0 – 16/0 கி.மீ. மற்றும் 0/0 – 20/0 கி.மீ. ஆகிய பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.5.0 இலட்சம் நிதி வழங்கப்பட்டது.

மேற்படி சாலையில் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினைக் கொண்டு கீழ்க்கண்ட மண்வளப் பாதுகாப்புப் பணிகளான (Soil Conservation Works) சாலையின் இரு ஓரத்திலும் வடிகால் வசதியும் மழைநீரை மாற்று வழியில் செல்வதற்கும் மண் அரிப்பினைத் தடுக்க (Gully plugging) உதவும் தடுப்புச் சுவர் (Retaining wall) அமைக்கும் பணியும் செய்யப்பட்டது. மேலும், மண்வளப் பாதுகாப்புப் பணியின் ஒரு பகுதியாக கருவண்ணுராயர் மற்றும் எம்மட்டம் ஆகிய இரு பள்ளங்களில் அச்சமயம் மிகவும் பாதிப்புக்குள்ளாகி இருந்த இப்பள்ளங்களில் உடனடியாகப் பேருந்து வசதிகள் மேற்கொள்ளும்பொருட்டு மேற்கண்ட இரு பள்ளங்களில் தரைப்பாலம் (cause way) அமைக்கப்பட்டது. இவ்விரு தரைப் பாலங்களும் தெங்குமரஹடா கிராம மக்களின் அத்தியாவசியத் தேவை மற்றும் அவர்களின் இடைவிடாத வேண்டுகோள் காரணமாகவும் பேருந்து போக்குவரத்தினை உடனடியாகத் தொடங்கும் நோக்கத்துடனும், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவுரைகளின்படியும் தற்காலிக அடிப்படையில் மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் 1999 நவம்பர் மற்றும் டிசம்பர் 2000 ஆகிய இரு ஆண்டுகளில் ஏற்பட்ட கடும் மழை மற்றும் திடீர் வெள்ளத்தின் காரணமாக மேற்கண்ட இரு

[திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு] [2001 ஆகஸ்ட் 28

தரைப்பாலங்களின் மையப்பகுதி நீரினால் அடித்துச் செல்லப்பட்டு உடைப்பு ஏற்பட்டது. எனினும் எம்மட்டம் என்ற பள்ளத்திலுள்ள தரைப்பாலம் தற்போதும் பொது மக்களால் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. கருவண்ணுராயர் பள்ளத்தில் கட்டப்பட்ட தரைப்பாலத்தின் சிறு பழுதுகள் பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டால் அதனை உபயோகப்படுத்த இயலும்.

கவன ஈர்ப்பு அறிவிப்பில் தெரிவித்தபடி இரு தரைப் பாலங்களும் முழுவதுமாக அடித்துச் செல்லப்படவில்லை.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் வைக்கப்பட்டு இருக்கின்ற அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அந்தப் பாலமானது மழைநீரால் உடைக்கப்பட்டு, பழுது பார்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், உண்மையில் அந்தப் பாலத்தை நான் நேரில் சென்று பார்த்தேன். பாலம் முழுமையாக அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. அப்படி அடித்துச் செல்லப்பட்ட காரணத்தால், சத்தியமங்கலத்திலிருந்தும், கோவையிலிருந்தும் சென்று கொண்டிருந்த பேருந்துகளைக் கடந்த காலத்திலே நிறுத்திவிட்டார்கள். ரேஷன் அரிசி அந்தக் கிராமத்திற்குச் செல்ல முடியவில்லை; தபால்கள் செல்ல முடியவில்லை. மத்திய அரசு இதுபோன்ற பாலங்களுக்கு அனுமதி கொடுக்காத காரணத்தால், வனத் துறை இந்தப் பாலத்தைக் கட்டியது.

புதிய பிரச்சினை என்னவென்று சொன்னால், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் பக்கத்தில் இருக்கின்ற மோயாற்றின் குறுக்கே பாலம் கட்ட ஒரு கோடி ரூபாய் அனுமதி கொடுத்தார்கள். ஆனால், மத்திய அரசு அனுமதி கொடுக்காத காரணத்தால், வனத் துறையினர் அனுமதி கொடுக்க முடியாது என்று திருப்பி அனுப்பிவிட்டார்கள். இப்போது வனத் துறை என்ன சொல்கிறது என்று சொன்னால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மீண்டும் ஒரு கோடி ரூபாயை மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்குவதாகச் சொல்லியிருக்கின்றார்; ஆனால் வனத் துறையினர் நாங்களே அதைக் கட்டிக் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். அப்படி வனத் துறை கட்டிக் கொடுக்க முன்வந்தால், நெடுஞ்சாலைத் துறையில் இருக்கின்ற வசதிகள் வனத் துறையிடம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் 2 சிறு பாலங்கள் கட்டப்பட்டன. அந்தப் பாலங்கள் தரைப் பாலங்கள். கடந்த 2000 ஆம் ஆண்டு அந்தப் பகுதியில் ஏற்பட்ட பெரும் மழையின் காரணமாக அந்த 2 தரைப் பாலங்களும் அடித்துச் செல்லப்பட்டன. ஆனால், முழுமையாக அடித்துச் செல்லப்படவில்லை. ஒரு பகுதிதான், குறிப்பாக நடுப் பகுதி அடித்துச் செல்லப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர், E.A.S.–வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் சுமார் 5 இலட்சம் ரூபாய் செலவு செய்து அந்தப் பாலத்தைக் கட்டினார்கள். ஆனால், மழையின் காரணமாக அது அடித்துச் செல்லப்பட்டதால், மீண்டும் அந்த 2 பாலங்களில் ஒரு பாலம் சரி செய்யப்பட்டு இன்று மக்கள் உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள். மற்றோர் பாலமும் கூடிய விரைவிலே வனத் துறை சார்பாக நாங்கள் சரிசெய்து கொடுக்கிறோம் என்பதை இந்த மன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2001 ஆகஸ்ட் 28] [திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு]

*முற்பகல் 11–30*

## 6. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும் – தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 13 – நீதி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001–2002 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 13 – நீதி நிருவாகம். மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.144,57,35,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 128, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் திருப்பத்தூர், குடியாத்தம், அரக்கோணம், வாலாஜாபேட்டை, ஆம்பூர், வாணியம்பாடியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடங்கள் கட்ட வேண்டியதின் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,57,35,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 824, திரு. டி.பி.எம். மைதீன்கான், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 595, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், குன்னூர் நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,57,35,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1271, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,57,35,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1472, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் நாட்றாம்பள்ளிக்கு ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,57,35,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2442, திரு. கே.சி. கருணாகரன்.





**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,57,35,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1129, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் நீதிமன்ற வளாகம் உடனடியாகக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,57,35,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1530, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலத்தில் சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,57,35,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 803, திரு. இ. புகழேந்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1429, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலையில் இயங்கிவரும் நீதிமன்றங்கள் ஒரே இடத்தில் இயங்கும் வகையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,57,35,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 472, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோட்டில் உள்ள குற்றவியல் நீதிமன்றங்களுக்கு ஒரே இடத்தில் நீதிமன்ற வளாகம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,57,35,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1307, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 80, திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 558, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டத்தில் கடலூரில் ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்ற வளாகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,57,35,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 718, திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேதாரண்யத்தில் குற்றவியல் நீதிமன்றம் புதிதாகத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,57,35,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1810, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 1230, திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 908, திருமதி எஸ். மகேஸ்வரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 206, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,57,35,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 383, திரு. க. முருகவேல் ராஜன், சட்டை இல்லாமல் போய்விட்டார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1018, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,57,35,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1209, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,57,35,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1493, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,57,35,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 715, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,57,35,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 855, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1104, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,57,35,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 44, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 516, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் குற்றவியல் நீதிமன்றமும், நடுவியல் மன்றமும் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,57,35,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 642, திரு. கே. ஆறுமுகம்.



**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கழுக்குன்றத்தில் கூடுதல் மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,57,35,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2957, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.144,57,35,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 14 – சிறைச்சாலைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 14 – சிறைச்சாலைகள், மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், ரூ.60,56,24,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 125, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் ஆண்கள் மத்திய சிறைச்சாலையில் நவீன கழிப்பிட வசதி, குளியல் அறை வசதிகள் செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,56,24,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *829*, திரு. டி.பி.எம். மைதீன்கான், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *2441*, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,56,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1132*, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் பெண்களுக்கென்று தனியாக சார்புநிலை சிறைச்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,56,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1563*, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக சிறைகளில் பணிபுரியும் சிறைக் காவலர்களுக்கு மத்திய அரசு சிறைக் காவலர்களுக்கு இணையான ஊதியம் வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,56,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *802*, திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் கேப்பர் மலை மத்திய சிறைச்சாலையை நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



*"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,56,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1439*, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டத்திற்கென தனியே மாவட்ட சிறைச்சாலை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,56,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1620*, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவையிலுள்ள மத்திய சிறைச்சாலையை புறநகர்ப் பகுதிக்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,56,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *458*, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோட்டில் மத்திய சிறைச்சாலை அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,56,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1311*, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 77, திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 557, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறைச்சாலைகளில் பணிபுரியும் சிறைக் காவலர்களுக்கு பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,56,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1809, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 216, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,56,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 377, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 934, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,56,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1212, திரு. கி. பாரிமோகன்.



**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,56,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1518, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,56,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 716, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 856, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1103, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,56,24,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1233, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 56, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 512, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மத்திய சிறைச்சாலையில் புதிதாக கூடுதல் கட்டடம் கட்ட

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,56,24,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 640, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கழுகுன்றத்தில் ஒரு புதிய சிறைச்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,56,24,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 822, திரு. து. நெப்போலியன்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்குன்றம் அருகே உள்ள சிறைச்சாலையினை விரைவில் புதுப்பித்து இயங்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,56,24,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 594, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறைச்சாலைகளில் கைதிகளுக்குத் தரமான உணவு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,56,24,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1233, திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.



மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம் மற்றும் சிறைச்சாலைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்தபின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

***திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–2002 ஆம் நிதி ஆண்டில் நீதி நிருவாகம் மற்றும் சிறைச்சாலைகள் நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கைகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பேசுகின்ற வாய்ப்பு வழங்கிய தங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். இம்மாமன்றத்தில் இரண்டாவது முறையாக நான் அங்கம் பெறுவதற்கு வாய்ப்பு வழங்கிய கழகத் தலைவர், எங்கள் குடும்பத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், கழகப் பொதுச் செயலாளர் இனமான பேராசிரியர் அவர்களுக்கும், கழக இளைஞரணியினுடைய செயலாளர், வணக்கத்திற்குரிய சென்னை மேயர் அவர்களுக்கும், வாக்களித்து வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும், வெற்றிக்கு தேர்தல் பணிபுரிந்த தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளினுடைய தோழர்களுக்கும், பத்திரிகை நண்பர்களுக்கும், பொது வாழ்க்கையில் எனக்கு உறுதுணையாக இருக்கும் எனது அப்பா பெருமாள்சாமி அவர்களுக்கும், எனது அம்மா தங்கமணி அம்மாள் அவர்களுக்கும், குடும்பத்தில் ஏனைய உறுப்பினர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

அ.தி.மு.க. ஆட்சி வந்தால் நாட்டில் பணப் புழக்கம் ஏற்படும் என்ற பொய்ப் பிரச்சாரத்தை நம்பி மக்கள் வாக்களித்தார்கள். ஆனால்,

---

@ 637 முதல் 710 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

[திரு. மு.பெ. சாமிநாதன்] [2001 ஆகஸ்ட் 28

இப்போது நிலைமை, பிணப் புழக்கம்தான் நாட்டில் அதிகமாக உள்ளது. நல்லவேளை மகாமகம் வரவில்லை. கடந்த மே மாதம், மேதகு ஆளுநர் அவர்கள், இம்மாமன்றத்தில் ஆற்றிய உரையில், இன்றைக்கு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக எழுப்பப்பட்ட வாக்காளர் பட்டியல் பிரச்சினை குறித்து, முதல் அறிவிப்பைக் கொடுத்தார்கள். நடந்த சட்டமன்றத் தேர்தலில் ஒரு கோடி மக்களுக்கு மேல் அடையாள அட்டை இருந்தும் வாக்களிக்கின்ற வாய்ப்பு இல்லை என்கின்ற நிலையைக் கோடிட்டுக் காட்டி, அது சரி செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆனால், உள்ளாட்சி மன்றத் தேர்தலுக்கு வாக்காளர் பட்டியல் தயாரிக்கின்ற பணி, இந்த அரசு மூலம் எள்ளளவும் எடுக்கப்படவில்லை என்பதை இந்த மாமன்றத்தில் ஒரு குற்றச்சாட்டாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசு ஏற்பட்டவுடன் தலைவர் கலைஞர் அவர்களைக் கைது செய்தீர்கள். மதிப்பிற்குரிய சென்னை நகர மேயர் அவர்களைக் கைது செய்தீர்கள். முன்னாள் அமைச்சர்கள் சில பேர்களைக் கைது செய்தீர்கள். கழகத் தோழர்களைக் கைது செய்தீர்கள். ஆனால், அதனுடைய காரணத்தை நாங்கள் நீதிமன்றத்திலே சந்திக்க இருக்கின்றோம். கைது செய்யப்பட்ட பிறகு தலைவர் கலைஞர் அவர்கள் நீதிபதி முன் ஆஜர்படுத்தப்படுகிறார். நீதிபதி என்ன சொன்னார்? தலைவர் கலைஞர் அவர்களை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி உடலைப் பரிசோதனை செய்த பிறகு, சிறைக்கு அனுப்புங்கள் என்று சொன்னார்கள். அதேபோல, வணக்கத்திற்குரிய சென்னை மேயர் அவர்களை–நான் குறுக்கீட்டை விரும்பவில்லை–அதே நீதிபதி அவர்கள் சென்னை சிறையிலே காவலிலே வையுங்கள் என்று சொன்னார். ஆனால், அதையும் துச்சமென மதித்து காவல் துறை அதிகாரிகள் மதுரை மத்திய சிறையிலே அடைத்தார்கள். மதுரை மத்திய சிறைக்கு அனுப்பிவைத்தார்கள். இந்த அரசு, ஆட்சியாளர்கள், காவல் துறையை தன்னுடைய ஏவல் துறையாகப் பயன்படுத்துவதுதான் இதற்குரிய காரணமாக அமைந்திருக்கிறது என்று மக்கள் வெளியிலே பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 11–40*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறை இருந்தாலும்கூட வருமானத்தைப் பெருக்கி, செலவினத்தைக் கட்டுப்படுத்தி நிதி நிலையைச் சரிசெய்து கொள்ளலாம். பேரவைத் தலைவர் அவர்களே, நிதிக்குப் பற்றாக்குறை வந்துவிடக் கூடாது என்பதுதான் இன்றைக்கு



2001 ஆகஸ்ட் 28] [திரு. மு.பெ. சாமிநாதன்]

மக்கள் வெளியிலே பேசிக் கொண்டிருக்கிற ஆதங்கம். அந்த அடிப்படையில், ஒரு காலகட்டத்தில் நீதியரசர் ஒருவர் இன்றைக்கு இருக்கிற அரசுக்கு எதிர்ப்பாக முன்பு தீர்ப்பு வழங்கிய காரணத்தால் அவருடைய மருமகன்மீதுகூட கஞ்சா வழக்கு போடப்பட்டது என்பது உங்களுக்கு நினைவு இருக்கும். **

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு கன்னிப் பேச்சு என்று சொன்னார்கள். ஒரு வழக்கை முன்கூட்டியே எடுப்பதா, அடுத்து பொறுத்து எடுப்பதா என்பது நீதிமன்றத்தினுடைய முடிவுக்கு விடப்படக் கூடிய ஒன்று. நீதிமன்றத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே நீங்கள் பழைய உறுப்பினர், விவரம் தெரிந்தவர். நீதிமன்றத்தைப் பற்றிச் சொன்ன அந்தக் கருத்துகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கவலை எல்லாம் அரசு தலையீடு இல்லாமல் இருந்தால் சரி என்பதுதானே ஒழிய, பேச வேண்டும் என்பதற்காகவோ, பதிவு செய்ய வேண்டும் என்பதற்காகவோ அல்ல.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதிகளை, உயர் நீதிமன்ற நீதிபதிகளை மாற்றுகிற அதிகாரம் மைய அரசுக்கு இருக்கிறது. மைய அரசு, உங்களுடைய அரசு. நாங்கள் எதிர் வரிசையிலே இருக்கிறோம். மாற்றுகிற முயற்சியிலே ஈடுபடுவது நீங்களா, நாங்களா என்ற பிரச்சினை எழும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து பேசாமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளை சம்பந்தப்பட்ட அரசு மாற்றுவது இயல்பு தான். ஆனால், அதிலேயும் சிலபேர் ஒட்டிக்கொண்டு, அவர்களுக்கு அரசு ஆதரவு தெரிவித்துக்கொண்டு, இப்போது நாட்டினுடைய நலனைக்கூடக் கருதாமல் மத்திய அரசோடு 3 அதிகாரிகளுக்காக மோதுகின்ற நிலையைப்பற்றி மக்கள் பேசிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இதுதான் மக்களுடைய ஆதங்கம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை அதிகாரியை கையை ஓங்கி, குத்து, குத்து என்று குத்திவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அதிகாரியே டெல்லிக்கு தங்களுக்கு பாதுகாப்புக்கு வரவேண்டும் என்று கேட்பது கேலிக்கூத்து என்று மக்கள் எள்ளி நகையாடுகிறார்கள். அதுவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் அவர்கள் வெளியிலே நடந்ததை எல்லாம் இங்கே பேசிக் கொண்டிருக்கிறார். நான் சபையிலே நடந்ததை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இதே சட்ட அமைச்சர், ஒரு காலத்திலே, இங்கே எங்களுடைய தலைவர் மேல் பேப்பர் வெயிட்டைத் தூக்கி எறிந்து, யார் வன்முறையாளர் என்பதை அவரே அடையாளம் காட்டியவர். அவர் மற்றவர்களுக்கு உபதேசம் செய்ய வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்பழகன் அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அமைச்சர் அப்படி நடந்துகொள்ளவில்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** துரதிர்ஷ்டவசமான அந்த நிகழ்வு நடந்தபோது, எத்தகைய அமங்கலச் சொல்லை, கெட்ட வார்த்தையை, உங்கள் தலைவர் பேசினார் என்பதைக் கேட்டால், நீங்கள் தமிழ்ப் பண்புக்கே ஒரு முற்றுப்புள்ளி வைத்து விடுவீர்கள் என்று கூறுகிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** இதையும் அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டும்.

(திரு. துரைமுருகன், திரு. கோ.சி. மணி, திரு. பரிதி இளம்வழுதி, திரு. ஜெ. அன்பழகன் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையும் எடுத்து விடுவோம். துரைமுருகன், உட்காருங்கள். நான் சொல்கிறேன். இது பழைய நிகழ்ச்சி. அப்போது நடைபெற்றது. அப்போது என்னென்னவோ நடந்திருக்கலாம். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். அமைச்சர் அவர்கள் சொன்னதும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதும், அதுகுறித்து அமைச்சர் அவர்கள் சொன்னதும், அந்தப் பழைய சம்பவத்தைப் பற்றிச் சொன்னது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. இன்றைக்கு ஆளுக்கு 5 நிமிடங்கள்தான் வரும். அதனால், கொஞ்சம் சுருக்கமாகப் பேசுங்கள். நீதி நிருவாகம், சிறைச்சாலைகள் பற்றிப் பேசுங்கள்.



**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்பழகன், உட்காருங்கள்.

முற்பகல் 11–45

***திரு. கோ.சி. மணி:** அதை ஏற்றுக்கொள்கிறோம் நாங்கள். ஏற்றுக்கொண்டு உட்காருகிறோம். ஆனால், இதேமாதிரி சொல்லும்போது, ஆளுங்கட்சியிலே எண்ணிக்கை அதிகமான அளவு இருக்கின்ற காரணத்தினாலே 'ஓ'–வென்று கத்தினால் அதைத் தாங்கள் தயவுசெய்து கட்டுப்படுத்தக் கூடாதா? (கூச்சல்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.சி. மணி அவர்களே, இது எல்லாக் காலத்திலும் நடக்கின்ற நிகழ்ச்சி. ஆளுங்கட்சித் தரப்பிலே'ஓ'வென்று கத்துவதை திரு. சுந்தரம் அனுபவித்தவர். (கூச்சல்) அதனாலே, அடக்குகின்ற பொறுப்பு என்னைச் சேர்ந்தது. நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். பழைய சம்பவங்கள் பற்றிச் சொல்லப்பட்டவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், நீங்கள் உட்காருங்கள். திரு. மு.பெ. சாமிநாதன், நீதி நிருவாகம், சிறைச்சாலைகள் பற்றி மட்டுமே பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.சி. மணி அவர்கள் 'ஓ'–வென்று கத்துகிறார்கள் என்று சொல்கிறார்கள். நாங்கள் 'ஐயோ கொல்றாங்க, கொல்றாங்க' என்று கத்தமாட்டோம்.

(தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டனர்.)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுச் சொன்ன வார்த்தை காரணமாக நான் என்னுடைய எண்ணத்தை, கருத்தைப் பதிவு செய்ய வேண்டிய கட்டாயமான நிலை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. 'ஐயோ கொல்றான், கொல்றான்' என்று கத்த வேண்டிய நிலைமை, யாராவது தாக்கப்பட்டால் அவர்கள் யாராயினும் கத்துவார்கள். (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமிநாதன், பேசுங்கள். *(குறுக்கீடு)* அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு, பேராசிரியர் அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அவை இரண்டும் இருக்கட்டும். மாண்புமிகு உறுப்பினர் பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், உட்காருங்கள். ஐந்து நிமிடங்கள்தான் இன்று ஒவ்வொருவரும் பேசமுடியும். நீங்கள் உட்காருங்கள். உறுப்பினர் பேசட்டும்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் கடந்த ஐந்தாண்டு காலம் இந்த அவையில் எவ்வளவோ குறுக்கீடுகள் செய்தார்கள். இப்போதும் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். உபகாரம் பண்ணாவிட்டாலும், உபத்திரவம் பண்ணாமல் இருந்தால் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். திரு. சாமிநாதன் அவர்களே, அவர் இப்போது தொல்லை கொடுக்கிறார் என்று சொல்வது சரியல்ல. அவர் முன்பும் தொல்லை கொடுக்கவில்லை. பாவம் அவர் பரிதாபத்திற்குரிய நிலையிலேதான் முன்பு இருந்தார். அவர் தொல்லை ஒன்றும் கொடுக்கவில்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், என்ன சொல்லப் போகிறீர்கள், சொல்லுங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு திருமதி வளர்மதி, நீங்கள் உட்காருங்கள். திரு. சுந்தரம் அவர்கள் சொல்லட்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** *(கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுகுறித்து விசாரணைக் கமிஷன் போடப்பட்டிருக்கிறது. இதுபற்றிப் பேச வேண்டாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



பேராசிரியர் அவர்கள் ஒரு விளக்கம் சொன்னார்கள். அமைச்சர் சொன்னதும், பேராசிரியர் சொன்னதும் அவைக் குறிப்பில் இருக்கும். தாங்கள் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமிநாதன், நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு அமைச்சர் திரு. இராமசாமி, நீங்கள் உட்காருங்கள். உங்கள் மானியக் கோரிக்கைக்கான பதிலுரையின்போது நீங்கள் பேசுங்கள், இப்போது உட்காருங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் இந்த அவையின் நடவடிக்கை பற்றிச் சொன்னார்கள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது நீக்கப்பட்டுவிட்டது.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** இதே அவையிலே கண்ணியம் இல்லாமல் நடந்தது 1989–91–ல்....*(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி அவர்களே, அதுபற்றிப் பேசப்பட்டவைகள், பழைய அவையிலே நடைபெற்ற நிகழ்ச்சிகள் தொடர்பானவைகள் எல்லாம், பேசப்பட்டவைகள் எல்லாம் நீக்கப்பட்டுவிட்டன. மறுபடியும் அதையே புதுப்பிக்க வேண்டாம்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** அதை அனுமதித்தால், இதையும் அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விட்டது. நீங்கள் அமருங்கள். திரு. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசாக இருந்தாலும் சரி, அதிகாரத்தில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி, நீதிக்குள் சென்று, நீதியைத் தனக்கேற்ப வளைப்பதைக் கண்டித்துத்தான் 1999–2000 ஆம் நிதி ஆண்டில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் ஒரு சில கருத்துக்களை இங்கே கூறியிருக்கிறார்கள். அதை இங்கே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

"வெள்ளையன் ஆண்ட காலத்தில் அவன் சட்டங்களை இயற்றினான். அந்தச் சட்டங்களை இயற்றிவிட்டு, சட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிற பொறுப்பு யாருக்கு அளிக்கப்பட்டதோ, அவர்களுடைய நிர்வாகத்தில் வெள்ளையன்

[திரு. மு.பெ. சாமிநாதன்] [2001 ஆகஸ்ட் 28

எங்கேயும் தலையிட்டான் என்று பரவலாகப் பேசப்படவில்லை. அந்தச் செய்திகள் வரவில்லை. மக்கள் வெள்ளையனை முறையாக எதிர்த்தார்களே தவிர, சட்டத்தை அவர்கள் மீறினார்கள், சட்டத்தை ஊனப்படுத்தினார்கள், அதை ஆட்சி, பார்த்துக் கொண்டிருந்தது என்கின்ற நிலை மட்டுமல்ல, மக்கள் ஓரளவிற்கு இயற்றப்பட்ட சட்டங்களுக்கேற்ப தங்களுடைய வழியை அமைத்துக் கொண்டார்கள் என்பது வரலாறு. ஆனால், கடந்த ஐம்பதாண்டு காலமாக ஜனநாயகத்தினுடைய பெயரால் சட்டம் எங்கெல்லாம் வளைகிறது, வளைந்து கொடுக்க முற்படுகிறது என்பதைப் பார்த்தபோது, சட்டத்தின்மீது இருக்கக்கூடிய நம்பிக்கை சிறிது சிறிதாகக் குறைந்து வருகிறது என்றுதான் நான் கவலைப்படுகிறேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு இன்றைக்கு அரசாக இருந்தாலும் சரி, அதிகாரத்தில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி, வசதியானவர்களாக இருந்தாலும் சரி நீதியை தனக்கேற்ப வளைக்கின்ற முயற்சியைக் கைவிட வேண்டுமென்றுதான் என்னுடைய வாதமாக இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 11–50*

அதேபோல, தலைவர் கலைஞர் அவர்கள் கடந்த நான்காவது முறையாக முதலமைச்சராக இருந்த நேரத்தில் தென் மாவட்ட மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான மதுரையில் உயர் நீதிமன்றத்தினுடைய கிளை ஒன்று தொடங்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்ததை ஏற்று, கடந்த நிதியாண்டில் அதற்குரிய நிதியை வழங்கி, ஆணையை வழங்கி, அதற்குரிய பணிகள் இப்போது நடை பெறுவதாகக் கூட கொள்கைக் குறிப்பிலே கூறியிருக்கிறார்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள். அந்தப் பணி எந்தவிதத்திலும் தொய்வில்லாமல் விரைவாக நடந்து, பல வழக்குகளில் இன்னும் விரைவாக நீதி கிடைக்கிற வகையில் இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சாமிநாதன், இன்னும் மூன்று நிமிடங்களில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். எல்லோருக்கும் ஐந்து நிமிடங்கள்தான் வருகிறது.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** குறைவுதான். கடந்த ஐந்தாண்டு காலத்தில் ஆளும்கட்சியாக இருந்த நேரத்தில் எங்களுக்கு வாய்ப்பு அதிகமாகக் கிடைக்கவில்லை. இந்த நேரத்திலே தாங்கள் மனது வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2001 ஆகஸ்ட் 28] [திரு. மு.பெ. சாமிநாதன்]

ஈரோடு மாவட்டத்தில், காங்கேயத்தில் உரிமையியல் நீதிமன்றத்துக்கும், குற்றவியல் நீதிமன்றத்துக்கும் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஈரோட்டில் குற்றவியல் நீதிமன்றங்கள் பல இடங்களில் அமைந்துள்ளன. அவற்றையெல்லாம் சம்பத் நகர் உரிமையியல் நீதிமன்றம் அருகிலே கட்ட அரசு முயற்சி எடுக்க வேண்டும். அதற்கு இடம் அங்கேயே உள்ளது.

அடுத்து, அரசியல் காரணங்களுக்காக கைது செய்யப்படுபவர்களை சிறையில் அடைக்கும்போது பிரச்சினைகள் எழுகின்றன. உதாரணமாக, 29–6–2001 அன்று தலைவர் கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்ட நடவடிக்கையை எதிர்த்து கழகத் தோழர்கள், தோழமைக் கட்சித் தோழர்கள், சிறைகள் நிரம்புகிற அளவில் காவல் துறை மூலம் கைது செய்யப்பட்டார்கள். ஆனால், அங்கே ஏற்பட்ட நிலைமை என்ன? சிறையில் எந்த அளவிற்கு இடம் தர வசதி இருக்கிறது என்பதைக்கூட காவல் துறை அதிகாரிகள் தெரிந்துகொள்ளாமல், எங்களை ஈரோட்டிலிருந்தும் சரி, பல மாவட்டங்களிலிருந்தும், கோவை மத்திய சிறைக்கு அனுப்பினர். ஆனால், அங்கே போய் நாங்கள் சேர்ந்தவுடன் கண்காணிப்பாளர் இந்தச் சிறையிலே அந்த அளவிற்கு இடம் இல்லை; நீங்கள் சேலம் செல்கிறீர்களா, வேலூர் செல்கிறீர்களா, திருச்சி செல்கிறீர்களா என்று எங்களை திசை திருப்பப் பார்த்தார்கள். ஆனால், நாங்கள் "எங்களை காவல் துறை அதிகாரி இங்கேதான் அழைத்து வந்திருக்கிறார்கள், இங்கேதான் எங்களை நீங்கள் அனுமதிக்க வேண்டும்" என்று சொல்லி வாதாடிய பிறகுதான் பல சூழ்நிலைகள் ஏற்பட்டன. அடிக்கடி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இரண்டு விரலைக் காட்டுவது எனக்குக் கொஞ்சம் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான் வேண்டுமானால், நீங்கள் இன்னும் கொஞ்சம் முன்னாலே முடித்தால் ஐந்து விரலைக்கூட காட்டுகிறேன். *(சிரிப்பு)*

**திரு. மு.பெ. சாமிநாதன்:** அதைச் சரி செய்ய வேண்டும். கோவை மத்திய சிறையிலே இடம் இல்லாத காரணத்தால் வேறு சிறைக்குச் செல்லுங்கள் என்று சொன்னார்கள். ஆனால், பல சூழ்நிலைகளுக்கு இடையிலேதான், கோவை மத்திய சிறையிலே அடைக்கப்பட்டோம். இதேபோலத்தான் அன்றைக்கு நாடு முழுவதும் கழகத் தோழர்களாகட்டும், தோழமைக் கட்சி நண்பர்களாகட்டும், விடிய விடிய பேருந்துகளிலேயே அங்கும் இங்குமாக அவர்களை அலைக்கழித்துக் கொண்டிருந்தார்கள். அதையெல்லாம் போக்குகிற வகையிலே, இட வசதி இருக்கிற மத்திய

சிறையிலே ஆங்காங்கே கட்டட வசதிகள், கழிப்பிட வசதிகள் எல்லாம் நவீனப்படுத்துகிற வகையிலே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அங்கேயிருக்கிற சமையல் கூடங்கள் எல்லாம் இன்னும் நவீனப்படுத்தப்படாமல் ஆதி காலத்திலிருந்த பழைய முறையிலேதான் அங்கே கையாளப்படுகின்றன. உணவுகூட அங்கே சரியாக, முறையாக வழங்கப்படாத காரணத்தால் அங்கே பெரும் பிரச்சினைகள் எல்லாம் ஏற்பட்டன என்பது கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு நாங்கள் அங்கே நேரிலே அனுபவித்த காரணத்தால், இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், அதேபோல நிதியையும் கையிலே வைத்திருக்கிற காரணத்தால் கூடுதலாக இந்தத் துறைகளுக்கு நிதியை வழங்கி, சிறைகளை நவீனப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, ஈரோட்டிலே ஒரு மத்திய சிறை புதிதாகத் தொடங்க வேண்டுமென்றும் இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடிக்கடி போக வேண்டியதிருக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள் போலிருக்கிறது. (சிரிப்பு)

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால்கூட நம்முடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர் மரியாதைக்குரிய எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் பேசும்போது, "திராவிட முன்னேற்றக் கழகம் பதவிக்காக இடுப்பு வேஷ்டியை இன்றைக்கு நழுவ விட்டிருக்கிறது" என்று சொன்னார்கள். ஐந்தாண்டு காலத்திற்கு முன்பு அவர்களுடைய நிலைமை என்ன, ஒரு கட்சியோடு கூட்டு சேரக் கூடாது என்பதற்காகத்தான் இந்திரா காங்கிரஸிலிருந்து வெளியேறி தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியை ஆரம்பித்து, இன்றைக்கு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமிநாதன், இது சிறைச்சாலை மானியக் கோரிக்கை. எஸ்.ஆர்.பி. மானியக் கோரிக்கை அல்ல. உரையை முடியுங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** நேற்றைக்கு எழுப்பப்பட்ட காரணத்தால் நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனுடைய அடிப்படையிலே, அந்த முறையைவிட இன்னும் மேலே சொல்லப் போனால் அது அநாகரீகமாகப் போய்விடும் என்பதற்காக இதோடு நிறுத்திக்கொள்கிறேன். அந்த மோசமான நிலைமைக்கு எல்லாம் திராவிட



முன்னேற்றக் கழகம் செல்லாது என்று சொல்லி, இந்த வாய்ப்பு வழங்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கி, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன். (குறுக்கீடு)

*முற்பகல் 11–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, ஞானசேகரன் உட்காருங்கள். அவையிலே இல்லாத ஓர் உறுப்பினரைப்பற்றிப் பேசக் கூடாது. (குறுக்கீடு) அவர் இல்லை. இப்போது இல்லை. (குறுக்கீடு) திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சாமிநாதன் அவர்கள் சொல்கிறபோது எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் சொன்ன கருத்தைச் சொன்னார்கள். தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி அன்றும் சரி, இன்றும் சரி பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக ஆளுங் கட்சிமீது என்னென்ன குறைகளை மக்கள் சொல்கிறார்களோ, அவற்றையெல்லாம் தட்டிக் கேட்கின்ற கட்சியாக நாங்கள் இருப்பதையே கொள்கையாக வைத்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் எங்களுடைய கொள்கையை நாங்கள் விட்டுக் கொடுக்கவில்லை. உங்களைப் போல மதச்சார்பற்ற ஒரு கூட்டணியோடு சேர்ந்து கொள்கையைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு நீங்கள் பேசுவதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

***திரு. துரைமுருகன்:** அப்படிப் பார்த்தீர்கள் என்றால் காங்கிரஸ் கட்சியிலிருந்து தமிழ் மாநில காங்கிரஸ் ஏன் வந்தது? யாரை எதிர்த்து வந்தது? எதற்காக வந்தது? பிறகு மறுபடியும் யாரிடத்திலே போய் சரண்டர் ஆனது? இதையெல்லாம் சொன்னால் அசிங்கமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம் அவர்தான் பேச வேண்டும். திரு. துரைமுருகன், அவர்கள்தான் பேச வேண்டும் எல்லாவற்றையும்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** ஒரு நிமிஷம். Point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளக்கோவில் தொகுதியினுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பேசுகின்ற நேரத்தில் காவல் துறையை ஏவல் துறையாக இந்த அரசு பயன் படுத்துவதாகச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்திலே வெள்ளக்கோவில் தொகுதியில் ஒரு பெரிய நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது அவருடைய

உறவினர் காரிலே வருகிற நேரத்தில் காவல் துறை அவரை இறக்கிவிட்டு வந்தது என்பதைப் பல்வேறு பத்திரிகைகளில் நாங்கள் படித்திருக்கிறோம். அப்படிப்பட்டவர் இப்படிப் பேசலாமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருடைய கட்சியினுடைய கருத்தை அவர் பேசி இருக்கிறார். நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பிஎச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றிக் கொண்டிருந்த என்னை இந்த மாமன்றத்திற்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க வாய்ப்பை அளித்த கழகத்தின் காவல் தெய்வம், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதற்கண் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

நான் தேர்ந்தெடுக்கப்பட, எனக்கு வாக்களித்த சேரன்மகாதேவி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வாய்ப்பைக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், துணைத் தலைவர் அவர்களுக்கும், அரிய வாய்ப்பு என்று கருதி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும் மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் என்னுடைய கருத்துகளைச் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையில் நீதிமன்றங்களின் செயல்பாடுகள் குறித்து நல்ல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, விரைவு நீதிமன்றங்கள் Fast Track Courts என்று சொல்வார்கள். அத்தகைய 30 விரைவு நீதிமன்றங்கள் புரட்சித் தலைவியின் அரசால் அனுமதிக்கப் பட்டுள்ளன. 19 நீதிமன்றங்கள் அனுமதிக்க, உயர் நீதிமன்றத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டு, இப்போது அது பரிசீலனையில் உள்ளது. எனவே, 100 நாள் புரட்சித் தலைவியின் ஆட்சியையும், இந்த நிதிநிலை அறிக்கையையும் பார்க்கும்போது, இந்தியாவில் சிறந்த முதலமைச்சராக விளங்குவது டாக்டர் புரட்சித் தலைவிதான் என்பதை இது தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அவர்களின் தொலைநோக்குப் பார்வை இதில் வெளிப்படுகிறது.



மற்றொன்று, இங்கே மனித உரிமை நீதிமன்றங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலம் அதுபற்றி விவரமாகக் கூற விரும்புகிறேன். மனித உரிமை நீதிமன்றத்திற்கான சட்ட வாதிட்டாளர்களை இந்த அரசு நியமித்திருக்கிறது. மனித உரிமைக் கமிஷன் என்று ஒரு கமிஷன் இருக்கிறது. அதில் நீதிபதிகளாக ** உள்ளார்கள்.

*நண்பகல் 12–00*

இந்த ** என்ற அந்த மாவட்ட நீதிபதி கடந்தகால ஆட்சியில் சிறப்பு நீதிமன்றங்களில் நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அவர் ஓய்வு பெற்ற பின்பு தமிழக தேர்வாணையத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். தற்போது, மனித உரிமைக் கமிஷனில் உறுப்பினராக அவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். நான் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, அரசியல் சட்டம் 319 பிரிவு (டி) அடிப்படையில் ஒருவர் மாநில தேர்வாணையத்திலோ, மத்திய தேர்வாணையத்திலோ உறுப்பினராக நியமிக்கப்பட்டால் அதற்குப் பின்பு ஒரு காலமும் அவர் அந்த மாநில அரசிலோ, மத்திய அரசிலோ அங்கீகரிக்கப்பட்ட எந்தப் பதவியையும் வகிக்கக்கூடாது. ஒருவர், சிறப்பு நீதிமன்றங்களில் நீதிபதியாக இருந்த ** அவர்கள், தேர்வாணையத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்ட பின்பு, விதிக்கு மாறாக, அரசியல் சட்டத்திற்கு மாறாக, இன்று அவர் மனித உரிமைக் கமிஷனில் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆகவே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இதற்கு நடவடிக்கை எடுத்து, அவரை இந்தப் பதவியிலிருந்து நீக்கப் பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மனோஜ் பாண்டியன் அவர்களுடைய பேச்சில் குறுக்கிட விரும்பவில்லை. காரணம், அவர் கன்னிப்பேச்சு பேசுகிறார். இருந்தாலும், பெயரைச் சொல்லக் கூடாது. நீதிபதியினுடைய பெயரைச் சொல்லக் கூடாது. யார் மேலும் குற்றம் சொல்லலாம், பெயரைச் சொல்லக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்ட அமைச்சர் பதிலைச் சொல்வார்கள். மனோஜ் பாண்டியன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, கடைசியில் பதில் சொல்வார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. இ. புகழேந்தி:** பெயரைச் சொல்லக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தப் பெயர் மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிபதி ** என்கிற பெயருக்குப் பதிலாக, ஒரு நீதிபதி என்று வேண்டுமென்றால் சொல்லலாம்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்றது என்று இந்த நாடே அறியும். அந்த நிதிப் பற்றாக்குறைக்கு யார் காரணம், எந்த முறைகேடுகள் அதற்குக் காரணம் என்பதனையும் நாடு அறியும். குறிப்பாக, கொப்பரைக் கொள்முதலில் மாபெரும் முறைகேடு நடந்து அரசாங்கத்திற்கு பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கின்றது. இது சம்பந்தமாக, சென்னை உயர் நீதிமன்றம் விசாரணை செய்ய வேண்டும் என்று ஓர் ஆணை பிறப்பித்திருக்கின்றது. ஆகையினால், நான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களிடமும், மாண்புமிகு சட்ட அமைச்சரிடமும் வைக்கின்ற கோரிக்கை, இந்த முறைகேட்டில் யாராக இருந்தாலும், அமைச்சராக இருந்தாலும், அதிகாரியாக இருந்தாலும், நடவடிக்கை எடுத்து, அந்த வழக்கினை சிறப்பு நீதிமன்றங்களுக்கு எடுத்துச்சென்று அவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே இந்தக் கொப்பரைத் தேங்காய் கொள்முதலிலே மிகப் பெரிய ஊழல் நடைபெற்றதாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி அமைந்ததற்குப் பின்னாலே, பலதரப்பட்ட மக்களிடத்திலேயிருந்தும், பல நிறுவனங்களிடமிருந்தும் வேண்டுகோள் வந்ததன் அடிப்படையிலே–இந்தக் கொப்பரைத் தேங்காய் இந்திய துணைக் கண்டத்திலேயிருக்கின்ற அனைத்து மாநிலங்களிலேயும் ஏறக்குறைய 800 கோடி ரூபாய் அளவிற்கு கொள்முதல் செய்யப்பட்டது. அதிலே கடந்த ஆட்சியிலே, அந்த ஓர் ஆண்டிலே மட்டும் நம்முடைய தமிழ்நாட்டிலே மட்டும் 377 கோடி ரூபாய்க்கு, ஏறக்குறைய பாதி அளவிற்கு இங்கே கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அதிலே மிகப் பெரிய தவறுகள் நடந்திருப்பதாக பலதரப்பட்ட இடங்களிலிருந்து வந்த வேண்டுகோளின்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அடிப்படையிலே–மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 14–6–2001 அன்றைக்கு அதிலே நடந்த ஊழல்களையெல்லாம் அறிந்து விவரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று D.V.& A.C. Enquiry–க்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். 14–6–2001 அன்றைக்கு உத்தரவிடப் பட்டு, இப்போது இந்தக் கொப்பரை தேங்காய் கொள்முதலிலே நடந்த அத்தனை ஊழல்கள் பற்றியும் D.V. & A.C.–ல் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது என்பதனை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12–05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களில் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகள் சம்பந்தமாக மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள் இந்தியாவில் எந்த மாநிலத்திலும இல்லை. சிறைவாசிகளுக்காக நிறுவப்பட்ட சிறப்பு நீதிமன்றங்கள் தமிழ்நாட்டில் புரட்சித் தலைவியின் ஆணையால் உருவாக்கப்பட்டுள்ளது என்று மானியக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நான் இதற்கு முன்பு கூறியதுபோலவே, அரசாங்க நிதிநிலை பற்றாக்குறைக்குக் காரணம் முறைகேடு, ஊழல் என்பதை இந்த நாடறியும். சேலம் மாநகராட்சியில் ஆழ்குழாய்க் கிணறு தோண்டும் பணியில் விஞ்ஞான ரீதியாக மாபெரும் முறைகேடு நடைபெற்றுள்ளது. இதுசம்பந்தமாக விசாரிக்க வேண்டுமென்று உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த வழக்கையும் எடுத்து, விசாரித்து, குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறப்பு நீதிமன்றத்தில், 'போர் வெல்' ஊழல், கொப்பரைத் தேங்காய் ஊழல், மேம்பால ஊழல் மற்றும் அனைத்து ஊழல்களையும் எடுத்துச்சென்று குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் ஏழை, எளிய மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக மதுரையில் உயர் நீதிமன்றம் உடனடியாகக் கட்டி முடிக்கப்பட வேண்டும். உச்ச நீதிமன்றக் கிளை தமிழகத்திலோ அல்லது தென் மாநிலங்களிலோ கண்டிப்பாக நிறுவ மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய தொகுதியான சேரன்மகாதேவியைப்பற்றி என்னுடைய கன்னிப் பேச்சில் ஓரிரு கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கிறேன்.

[திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்] [2001 ஆகஸ்ட் 28

சேரன்மகாதேவி தொகுதியில் ஒரு குற்றவியல் நீதிமன்றத்துக்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்தில் இன்னும் கட்டடம் கட்டப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களிடம் நான் வைக்கும் கோரிக்கையெல்லாம் அந்த இடத்தில் குற்றவியல் நீதிமன்றத்தை உடனே கட்டி மக்கள் பயன்படுத்தும் வகையில் அதைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, சேரன்மகாதேவி தொகுதியில் ஜனத்தொகை அடிப்படையில் கூடுதல் நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டித் தரப்படவேண்டும். குறிப்பாக, கோபாலசமுத்திரம், பத்தமடை ஆகிய இரண்டு பேரூராட்சிகள் இருக்கின்றன. கல்லிடைக்குறிச்சி என்ற ஊரில் திம்மராஜபுரம் பாலம், கடந்த 5 ஆண்டு காலமாக அந்தப் பாலம் பழுதடைந்துள்ளது. அதனைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எலுமிச்சையாறு, வண்டலோடை என்ற இரு திட்டங்களும் நிறைவேற்றப்பட்டால் பாசனம் நன்றாக இருக்கும். விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்று சொல்லி, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களிடம் ஒரு கோரிக்கையை வைக்கிறேன். சேரன்மகாதேவியிலுள்ள அனைத்து கிராமங்களிலும் தெருவுக்கு ஒரு நள்ளி என்ற திட்டத்தை அறிவிக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களிடம் கோரிக்கை வைக்கிறேன்.

இறுதியாக, கடந்த கால ஆட்சியில் அளவுக்கு மீறி, வருமானத்திற்கு மீறி, சொத்து சேர்த்த அனைத்து அமைச்சர்கள், அதிகாரிகள், மற்ற பொது ஊழியர்கள்மீதும் நடவடிக்கை எடுத்து, சிறப்பு நீதிமன்றத்திற்கு அந்த வழக்கினைத் தொடுத்து, தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களிடம் கேட்டுக்கொண்டு, என்னுடைய கன்னி உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எம்.ஏ. ஹக்கீம் அவர்கள் சிறந்த பேச்சாளர், 5 நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்வார் என்று நினைக்கிறேன்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடைசி பெஞ்சில் உட்கார்ந்தால், மாப்பிள்ளை பெஞ்ச் என்று பள்ளிக்கூடத்தில் சொல்வார்கள். கையைத் தூக்கினாலும் சபாநாயகர் பார்க்கமாட்டேன் என்கிறார். நான் பேச வருகிற நேரத்திலே, முதலிலேயே 5 நிமிடங்களிலேயே பேசி முடியுங்கள் என்று சொல்கிறீர்கள்.



2001 ஆகஸ்ட் 28]

பிற்பகல் 12–10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சபாநாயகர் போய்விட்டார். துணை சபாநாயகர்தான் இப்போது இருக்கிறார்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** அதைத்தான் நான் சொல்கிறேன். சபாநாயகர் இங்கே பார்ப்பதே கிடையாது. நீங்களும் பார்க்கிற நேரத்திலே 10 நிமிடங்களாவது கொடுக்கலாம். எடுத்த எடுப்பிலேயே 5 நமிடங்கள்தான் என்று சொல்லியிருக்கிறீர்கள். கொஞ்சம் வேகமாகச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

(திரு. துரைமுருகன் உட்கார்ந்துகொண்டே, 'இதிலேயே இரண்டு நிமிடங்கள் போய்விட்டன' என்று கூறினார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் தலையிட்டால் அதுவும் போய்விடும்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைச் சமர்ப்பிக்கின்றேன். மதுரையிலே உயர் நீதிமன்றக் கிளை 23 மாத காலத்திற்குள்ளாக கட்டி முடிக்கப்படும் என்று சொல்லி அது தீர்மானிக்கப்பட்டது. 12 மாதங்கள் ஆகிவிட்டன. இன்னும் 11 மாதங்கள்தான் இருக்கின்றன. அது விரைவாகக் கட்டி முடிக்கப்பட சிறப்பான முறையிலே பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதோடு, ஒரு பணிவான வேண்டுகோளை நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களிடம் வைக்க விரும்புகிறேன். அந்த உயர் நீதிமன்றக் கிளையினுடைய sketch–ஐ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்த்திருப்பீர்கள் என்று கருதுகிறேன். அது திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியினுடைய தலைமையிடத்தைப்போல, தலைமைக் கழக அலுவலகத்தைப்போல தோற்றம் கொண்டதாக இருந்தது. தாங்கள் அதைப் பார்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தைப்போல அந்த அமைப்பை, கட்டடத்தைக் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்று சொன்னால் அவர்கள் காலத்திலே அந்த உத்தரவு கொடுக்கப்பட்ட காரணத்தினால் அந்தத் தோற்றத்தில் அந்த sketch கொண்டு வரப்பட்டது.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே—

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** முதல் தளம் முடிந்து இரண்டாவது தளத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. நான் பேசி முடித்ததற்குப் பிறகு

அவர் சொல்லலாம். எனக்கு ஏற்கெனவே ரொம்பக் குறைவான நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகையினாலே என்னைப் பேச விட்டதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசலாம். ஆகவே, முதல் தளம் முடிக்கப்பட்டு இரண்டாவது தளம், அது முடிவுறும் கட்டத்திற்கு முன்பாகவே அது மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று எனது பணிவான கோரிக்கையை வைத்துக்கொள்கிறேன்.

நான் மதுரை மத்திய தொகுதி எம்.எல்.ஏ. என்று சொன்னாலும் நான் வாக்காளராக இருக்கக்கூடிய தொகுதி திருமங்கலம். நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுடைய தொகுதி திருமங்கலம் என்ற காரணத்தினால், சப்–கோர்ட் அங்கே வேண்டியிருக்கிறது. டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டிலே இருந்து ஏராளமான வழக்குகள் அப்பீலுக்காக மதுரைக்குச் செல்லக்கூடிய சூழ்நிலையிலே மிகப் பெரிய இடையூறுகள், கஷ்டங்கள் ஏற்படுகின்றன. போக்குவரத்துக் கஷ்டங்களும் இருக்கின்றன. அது நீண்டகால கோரிக்கையாக இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய தொகுதி என்பது மாத்திரமல்ல, அதிகப்படியான வழக்குகள் அங்கே அப்பீல் செய்யப்படுகிற காரணத்தினால் வழக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலே அங்கே ஒரு சப்–கோர்ட் அமைக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் ஒருங்கிணைந்த கோர்ட்டு வளாகம் – Integrated Courts – வேண்டும் என்று ஏற்கெனவே கோரிக்கை வைத்து 53 வழக்கறிஞர்கள் போராட்டத்திலே ஈடுபட்டு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே விடுவிக்கப் பட்டிருக்கிறார்கள். தொடர்ந்து அந்தப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. இது ஒரு மிகப் பெரிய கஷ்டமான சமாச்சாரமே அல்ல என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அம்மா அவர்களுடைய ஆட்சியில், அரை மணி நேரத்திற்குள்ளாக நீங்கள் இதை முடிவு செய்துவிட்டால், 6 மாதத்தில் கட்டி முடிக்கப்படக்கூடிய சாதாரண வேலை என்ற காரணத்தினால், இதை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரியாக ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் தேவைப்படுகிறது. மூலைக்கு மூலை ஒரு கோர்ட்டு என்று வைத்திருக்கிறார்கள். செஷன்ஸ் ஒரு பக்கத்திலே இருக்கிறது. சப்–கோர்ட் ஒரு பக்கத்திலே இருக்கிறது. முன்சீப் கோர்ட் ஒரு பக்கத்திலே



இருக்கிறது. இப்படி நாலா பக்கத்திலேயும் பரவிக் கிடக்கிற காரணத்தினாலும், மேலும் அவை 300 ஆண்டுகளாக வாடகைக் கட்டடங்களிலேயே இருக்கின்ற காரணத்தினாலும், அவை ஓரிடத்திலேயே இருக்க ஒருங்கிணைந்த வளாகமாகக் கட்டித் தரப்பட வேண்டும் என்று நான் மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வக்கீல்களுக்குச் சேம நல நிதி என்று 2 இலட்சம் ரூபாய் தரப்படுகிறது. வக்கீல்கள் என்ற முறையில் நாங்கள் வக்காலத்து ஸ்டாம்பு என்று ஒட்டுகிறோம். மெமோ ஃபீஸ் என்று கொடுக்கப்படுகிறது. மேலும், எந்த பெட்டிஷனாக இருந்தாலும் அது தரப்படுகிறது, ஒட்டப்படுகிறது. தேவைப்படுகிற அளவிற்கு அரசாங்கத்திற்கு வருவாயை உருவாக்கித் தருகிற அளவிலே வழக்கறிஞர்களுடைய தொழில், பணி இருக்கின்ற காரணத்தினாலே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், வழக்கறிஞர்கள் சேம நல நிதியை 2 இலட்சம் ரூபாயிலேயிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தர வேண்டும் என்று நான் மிகப் பணிவோடு இந்தச் சபையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேமாதிரியாக, தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் கோர்ட். அந்த நீதிமன்றத்திற்கு உட்பட்ட, உரிமையியல் நீதிமன்றத்திற்கு உட்பட்ட 3, 4 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள 69 கிராமங்களைச் சார்ந்தவர்கள், திருவையாறு நீதிமன்றத்திற்கு வழக்குகளைக் கொண்டு செல்லக்கூடிய சூழ்நிலையில், அவர்கள் 60 கிலோ மீட்டர் தூரம் சென்று வருவதற்கு கஷ்டமாக இருக்கிறது என்று அங்கே இருக்கின்ற வழக்கறிஞர்கள் சொல்கிற காரணத்தினால், அந்தக் கிராமங்களை உள்ளடக்கி இருக்கக்கூடிய வழக்குகளை பாபநாசம் நீதிமன்றத்திலேயே தீர்மானிக்க வேண்டும் என்பதை மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேமாதிரியாக, விருதுநகரில் கோர்ட் கட்டும் பணிகள் அப்படியே முடக்கப்பட்ட காரணத்தினாலே பணி தொடரப்படாமல் இருக்கிறது. நீதிமன்றப் பணியைத் தொடருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துணை புரியவேண்டும் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நீதி, நியாயம், சட்டம், தர்மத்தைப்பற்றியெல்லாம் இங்கே பேசுகிறபோது மாண்புமிகு திமுக. கட்சி உறுப்பினர்கள் அடுக்கடுக்காகச் சொன்னார்கள். எதிர்க்கட்சிக்கு எதிர்க்கட்சி பேசக்கூடாது, அது சரியாக வராது. ஆனால், வெள்ளையன் காலத்திலே நடந்த ஆட்சியை எல்லாம்

வெகுவாகப் பாராட்டிப் பேசுவதற்கு இன்னும் தி.மு.க. ஆசைப்பட்டுக்கொண்டிருக்கிறதா என்பதை நினைத்து வேதனைப்பட்டுத்தான் இப்போது நான் வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது. ஏனென்றால், ஒரு பெரிய வரலாறே தி.மு.க.–வைப்பற்றி உண்டு. வெள்ளையன் காலம், வெள்ளையன் காலம் என்கிறபோது, இதையெல்லாம் நாங்கள் திரும்பச் சொல்வதற்கு வேதனையாக இருந்தாலும்கூட, இன்றைக்கு வெள்ளையன் காலத்தில் எப்படிப்பட்ட நீதி இருந்தது என்று சொல்லிப் பாராட்டப்படுகிறபோது ஜாலியன் வாலாபாக் சம்பவத்தை மறந்துவிட்டார்களா? ஏன் மறந்தார்கள்? ஜாலியன் வாலாபாக்கை தாமிரபரணியிலே அவர்கள் நடத்திய காரணத்தினால், இன்று அவர்கள் ஞாபகத்திற்கு வராமல், வர மறுக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்றைக்கு நீதியைப்பற்றிப் பேசுகிறார்கள். தர்மத்தைப்பற்றி இங்கே பேசுகிறார்கள்—

*பிற்பகல் 12–15*

***திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, Point of Order. *(குறுக்கீடு)* Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஹக்கீம் அவர்கள் உட்காருங்கள். உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் Point of Order கேட்கிறார்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு விஷயங்கள். நான் முதலிலே Point of Order–க்கு வருகிறேன். ஒன்று வெள்ளைக்காரர்களுக்கு நாங்கள் வக்காலத்து வாங்கி இங்கே பேசினோம் என்று சொன்னார். திரு. சாமிநாதன் படித்தது அவருடைய பேச்சு அல்ல. மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் பேசிய பேச்சை சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து எடுத்துப் படித்தார். எனவே, பாய் பேசியது பாய்க்கே அர்ப்பணம் செய்து விடுகிறோம். அது நமக்கு இல்லை.

இரண்டாவது, நீதிமன்றக் கட்டடத்தைப்பற்றிச் சொன்னார். நீதிமன்றக் கட்டடங்கள் அண்ணா அறிவாலயம்போல இருக்கும் என்றார். அது அப்படி இருக்காது. நாங்களெல்லாம், பார்த்த உடனேயே அது கோர்ட் ஆகத்தான் தெரிய வேண்டும் என்பதற்கு, சென்னை ஹை கோர்ட் போலத்தான் மதுரையிலே வருகிற கோர்ட்டும் அமையும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படித்தான் நாங்கள் கட்டட அமைப்பைச் செய்திருக்கிறோம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதிலே 3 நிமிஷங்களை இவரே எடுத்துக்கொண்டார். உறுப்பினர் ஹக்கீம், நீங்கள் பேசுங்கள். உங்கள் நேரம் குறைந்துவிடும்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த 3 நிமிடங்களை எனக்கு நீங்கள் கொடுத்துவிட வேண்டும்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சை மேற்கோள் காட்டியதுபற்றி நான் மகிழ்கிறேன். ஆனால், அதே நேரத்தில், வெள்ளைக்காரர்களுக்கு தி.மு.க.காரர்கள் வக்காலத்து வாங்கினார்க்ள் அல்லது அவர்களை ஆதரித்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்குமானால்—

**திரு. துரைமுருகன்:** துணைத் தலைவர் அவர்களே, அப்படியில்லை, வெள்ளைக்காரன் காலத்திலேகூட நீதி இப்படி படாதபாடுபடவில்லை—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆம். ஜாலியன் வாலாபாக், அதைப் பற்றிச் சொன்னார்.

**திரு. துரைமுருகன்:** ஆனால், இப்போது அதைவிட படாதபாடுபடுகிறது என்று நீங்கள் பேசியிருக்கிறீர்கள். தி.மு.க. என்று பேசவில்லை. வெள்ளைக்காரர்கள் காலத்திலேகூட நீதி இவ்வளவு பாடுபடவில்லை. ரொம்பக் கஷ்டப்படுகிறது என்று ஒரு காலத்திலே மனம் வெதும்பிப் பேசியிருக்கிறீர்கள் *(மணியடிக்கப்பெற்றது)* அது அந்தக் குறிப்பிலே இருக்கிறது. அவ்வளவுதான் வேறொன்றும் இல்லை, உட்காருங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** துணைத் தலைவர் அவர்களே, அண்ணா எந்தக் கொள்கையை ஆதரித்தாரோ அது எதுவென்றாலும் அதை நான் ஆதரிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி. திரு. ஹக்கீம் நீங்கள் பேசுங்கள்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதாவது சர்ச்சைக்குரிய பிரச்சினையை நான் கொண்டு

வரவில்லை. வாசிக்கப்பட்ட விவகாரங்கள் என்றாலும் அதன்மீது உங்களுக்கிருக்கின்ற காதலின் காரணமாகத்தான், அந்த வரிகள் படிக்கப்பட்டன என்ற காரணத்தால் அதற்கு ஒரு விளக்கத்தைத் தெரிவிக்க வேண்டுமென்ற அடிப்படையில் சொன்னேன்.

1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் முன்னாள் பிரதமராக இருந்த எங்கள் அன்னை இந்திரா, தமிழகத்திலே நடந்த தேர்தலிலே காங்கிரஸ் கட்சிக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி சொல்வதற்காக வந்தபோது, அவரை தமிழகத்தினுடைய எல்லைக்குள்ளே வர விடமாட்டோம், எந்தப் பகுதிக்கு வந்தாலும் அவருக்கெதிராகக் கறுப்புக் கொடி காட்டுவோம், அவரைப் பேச விடமாட்டோம் என்று சொல்லி, இன்றைக்கு ஜனநாயகத்தைப்பற்றிப் பேசுகின்ற திராவிட முன்னேற்றக் கழகம் அவரைத் துரத்தித் துரத்தி அடித்ததையும் (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டையே ரத்தக் களரியாக்கியதையும், சட்டத்திற்கு விரோதமாக நடந்ததையும், கடைசியிலே சென்னைக்கு வருகிறபோது எங்கள் தாயைப் பேச முடியாதபடி வழிமறித்து, துப்பாக்கிச் சூடு நடத்துகிற அளவிற்கு கலவரத்தை நடத்தி – இங்கே நடந்த 12 ஆம் தேதி எப்படி கலவரத்தைத் தூண்டிவிட்டு நடத்தினார்களோ, அதேமாதிரியாக அன்றைக்கும் நடத்தினார்கள். இதே சென்னை பீச் ரோட்டிலே அன்றைக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தாங்கிக்கொள்ள முடியாமல், சகித்துக்கொள்ள முடியாமல், எங்கள் தாயைக் காப்பாற்றுவதற்காகத்தான் சொன்னார், 'ஷூட், சுட்டுத் தள்ளுங்கள் அன்னை இந்திரா காந்தியைக் காப்பாற்றுவதற்காக' என்று சொல்லி, அன்றைக்கு சட்டத்தைக் காப்பாற்றுவதற்காக நடந்த அந்தச் சம்பவத்தை நினைவுபடுத்துகிறேன்.

மனித உரிமை, நீதி, நியாயம்பற்றிப் பேசுகிறார்கள். அப்படித்தானே? 'பக்தி என் தங்கையைப் பயமுறுத்தியது, ஓடினாள். பகட்டு என் தங்கையை விரட்டியது, ஓடினாள். ஓடினாள், ஓடினாள், ஓடினாள் வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள், அவள் ஓட்டத்தைத் தடுத்திருக்க வேண்டும், வாட்டத்தைப் போக்கியிருக்க வேண்டும், இன்றைக்குச் சட்டத்தை நீட்டுவோர். செய்தார்களா, வாழ விட்டார்களா என் தங்கை கல்யாணியை' என்று கேட்டவர்களைக் கேட்கிறேன். நீதி கேட்டு ஊர்வலம் வந்தார்கள், அடித்தார்கள். நீதி கேட்டு அந்த ஊர்வலத்திலே போராடினார்கள், அடித்தார்கள். ஓடினார்கள், ஓடினார்கள், ஓடினார்கள் தாமிரபரணிக் கரையெல்லாம் நோக்கி ஓடினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஓடிய ஓட்டத்தைத் தடுத்திருக்க வேண்டும், நீதியைக் கொடுத்திருக்க வேண்டும், அவர்கள் பசியைப் போக்கியிருக்க வேண்டும்.



செய்தார்களா? ஓட்டத்தைத் தடுத்தார்களா? அன்றைக்குச் சுட்டார்கள், அடித்தார்கள், இரும்புக் கம்பியால் தாக்கினார்கள். 17 உயிர்களைப் போக்கடித்தவர்கள் மனித உரிமையைப்பற்றிப் பேசுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஹூம். மனித உரிமையைப்பற்றி நீங்கள் பேசுகிறீர்கள்.

உதயகுமாரை அடித்து நொறுக்கி குளத்திலே தூக்கியெறிந்துவிட்டு, என்ன நியாயம் என்று கேட்க வந்தபோது பெற்ற தாய், தகப்பனிடம் இந்தப் பிள்ளை எங்களுக்குப் பிறக்கவில்லை என்று எழுதி வாங்கிவிட்டு, நீங்கள் மனித உரிமையைப்பற்றிப் பேசுகிறீர்கள். நீதியைப்பற்றிப் பேசுகிறீர்கள். தர்மத்தைப்பற்றிப் பேசுகிறீர்கள். இந்த நாடு தாங்காது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாடு தாங்காது. அம்மாவினுடைய நிதானத்தால், அடக்கத்தால், பொறுமையால், அவருடைய சகிப்புத் தன்மையால் இங்கே நீங்கள் ஜனநாயகக் கடமையை முழுமையாக நிறைவேற்றிக் கொண்டிருக்க முடிகிறது என்ற காரணத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அவர்களுக்கு எங்களுடைய பொன்னான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறோம்.

*பிற்பகல் 12–20*

ஜனநாயகம், ஜனநாயகம், என்று பேசுகிறார்கள், என் அருமைத் தோழர்களே, மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்கிறேன். ஜனநாயகம், மக்கள் தேர்ந்தெடுத்தார்கள், வாக்களித்தார்கள், வெற்றி பெற்றார் உங்கள் தலைவர். சபைக்கே வருவதில்லை. ஜனநாயகத்திற்கு என்ன மரியாதை என்று நான் கேட்கிறேன். சபைக்கு வருவதில்லை என்று சொன்னால், ஜனநாயகத்தை கொச்சைப்படுத்துவதாக அர்த்தம். இல்லை என்று சொன்னால், அவருடைய தலைவருக்கு என்னுடைய பணிவான வேண்டுகோள், அவர் இராஜினாமா செய்துவிட்டு, இன்னொருவரை நிறுத்தச் சொல்லி, வேறு யாரையாவது வரச் சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) "நான் வர முடியாது, சபையைப் பார்க்க முடியாது. பேச வர மாட்டோம், வெளியிலே இருந்துதான் வியாக்கியானம் பண்ணுவோம்" என்று சொல்லக்கூடிய விளக்கங்கள் இந்த நாட்டில் சட்டமன்ற அரசியல் ஜனநாயகத்திற்கு உட்பட்டது அல்ல, யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரைப் பேச விடுங்கள். நேரம் ஆகிக்கொண்டே போகிறது. (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** *அவர் Demand–லே பேசினால் நான் கேட்கப்போவதில்லை. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *இல்லை, நீங்கள் இதை விடுங்கள். தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் ஹக்கீம் அவர்கள் பேசியது சட்டத்தைப்பற்றி. சட்டம், நீதித் துறையைப் பற்றித்தான் பேசுகிறார்கள். நீதித் துறையைப்பற்றி பேசும்போது எல்லாம் வரத்தான் செய்யும்.*

**திரு. துரைமுருகன்:** *Point of Order கிளப்பினால், எனக்குப் பேசுவதற்கு உரிமையுண்டு.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *உங்களுக்கு உரிமை உண்டு, நான் பேசுவதற்கு அனுமதித்தால்தான் உரிமையுண்டு. (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். ஹக்கீம் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். என்ன Point of Order இதிலே உங்களுக்கு? (குறுக்கீடுகள்)*

**திரு. துரைமுருகன்:** *என்ன Point of Order என்று நான் பேசி முடித்த பிறகு சொல்லுங்கள். இப்போது நீங்கள் சொல்லக்கூடாது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வேன் Point of Order என்ன என்று.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினராகிய நீங்கள் அனுபவம் பெற்றவர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தவர்கள். இருந்தாலும் நீங்கள் அடிக்கடி குறுக்கிடுகிறீர்கள். சரி சொல்லுங்கள், என்ன Point of Order என்று.*

**திரு. துரைமுருகன்:** *நான் Point of Order சொல்கிறேன். அது சரியில்லை என்று சொல்வதற்கு, சபாநாயகருக்கு உரிமை உண்டு. அதிலே நான் குறுக்கிடவில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மானிய கோரிக்கையின்மீது பேசியிருந்தால் எங்களுக்குப் பிரச்சினையில்லை. ஆனால், ஒரு நல்ல மாதிரி, நன்றிக் கடனாற்றிட அதற்கு வேண்டிய முறையிலே ஆளுங்கட்சியை திருப்திப்படுத்திப் பேசுகிறார். (குறுக்கீடுகள்) அதிலே எனக்கு ஒன்றும் பிரச்சினை கிடையாது. (குறுக்கீடுகள்) அதிலே எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை.*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*



*ஆனால், எங்களுடைய கட்சித் தலைவரைப்பற்றி அவர் குறிப்பிட்டுப் பேசுகிறபோது, அதற்குப் பதில் சொல்ல வேண்டிய காலக்கட்டத்தில் நான் நிற்கிறேன். அதனால்தான், சொல்கிறேன். எனவே, ஹக்கீம் அவர்கள் பேசுவதைப் பற்றியோ ஆளுங் கட்சியைப் புகழுவதைப்பற்றியோ எனக்கு அக்கறை இல்லை. ஆனால், ஒன்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவைக்கு எங்களுடைய தலைவர் வருவதும், வராததும் அது எங்கள் கட்சியினுடைய நிலை. காரணம், ஏற்கெனவே இரண்டு பேர், மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும், மாண்புமிகு இன்றைய முதலமைச்சர் அவர்களும் இந்தச் சபைக்கு வராமலேதான் இருந்து, வெளியில் அரசியல் நடத்தி உள்ளே வந்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நிலைப்பாடுகள் வேறுபடலாம். (குறுக்கீடுகள்) நிலைப்பாடுகள் இதிலே வேறுபடலாம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, இல்லை, துரைமுருகன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் வராததற்கு ஒரு நிலைப்பாடு. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த அவைக்கு வராததற்கு, அவர் எடுத்த நிலைப்பாடு வேறு. இன்றைய முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற நிலைப்பாடு வேறு. எங்கள் தலைவர் எடுத்திருக்கிற நிலைப்பாடு வேறு. முடிவு எல்லாம் ஒன்றுதான். இந்த அவைக்கு அவர்கள் வரவில்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் சொன்னது போதும், உட்காருங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணியத்தைக் காக்க வேண்டிய சட்டப் பேரவையிலே வன்முறை தாண்டவம் ஆடிய காரணத்தினால், அந்தக் காலத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், புரட்சித் தலைவி அவர்களும் அவைக்கு வரமுடியாத நிலை ஏற்பட்டது. ஆனால், எதிர்க்கட்சித் தலைவருக்கு அப்படிப்பட்ட ஒரு நிலை தற்போது உருவாக்கப்படவில்லை என்பதை அவை அறிய வேண்டும். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *துரைமுருகன், நீங்கள் சொன்னதற்கு அவர் சொல்கிறார். (குறுக்கீடு) நீங்கள் சொன்ன காரணத்தைத்தான் அவர் சொல்கிறார். (குறுக்கீடு)*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள முதலமைச்சராக இருந்த காலத்திலே வரவில்லை. ஆனால், வன்முறை ஒன்றும் இல்லை. அவருக்கு ஒரு நிலைப்பாடு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், நானும் அவர் பின்னாலே இருந்தவன். என்ன நடந்தது என்று எனக்கும் தெரியும், துரைமுருகன். அதனாலே அதெல்லாம் வேண்டாம். அதற்குள்ளே, அந்தப் பிரச்சினைக்குள்ளே போக வேண்டாம். ஏன் என்றால், எம்.ஜி.ஆர். அவர்கள் இங்கே வந்து, நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை முன்மொழிந்து அவர் பேசத் தொடங்கிய நேரத்திலே ஒலிபெருக்கி துண்டிக்கப்பட்டதையும், அப்போது நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தையும் நான் கூட இருந்து பார்த்தவன். நானும் இங்கேயுள்ள எம்.எல்.ஏ.க்கள் சிலரும் கூட இருந்தவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கோ.சி. மணி:** அதற்குக் காலம் இருக்கிறது. இன்னும் 5 வருடங்கள் முடிந்து போய்விடவில்லை. அவர் வருவார். வந்து பதில் அளிப்பார். (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் எப்போதும் யார் பேசினாலும்—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீனிவேல், நீங்கள் உட்காருங்கள். சீனிவேல், நீங்கள் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) துரைமுருகன் அவர்கள் சொன்ன கருத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன். என்ன சொல்கிறார் அவர் என்றால், அப்போது அவர் எடுத்த நிலைப்பாடு. அதேபோல, புரட்சித் தலைவி அவர்கள் அவைக்கு வரவில்லை, அதற்கு விளக்கங்கள் சொல்லியிருக்கிறார்கள். அறிக்கைகள் எல்லாம் விட்டிருக்கிறார்கள். அது அவர்கள் எடுத்த நிலைப்பாடு. எங்கள் தலைவர் அவைக்கு வராததற்குக் காரணம் நாங்கள் எடுத்திருக்கிற நிலைப்பாடு என்று சொல்கிறார். முடிவு செய்ய வேண்டியது நீங்கள். அதிலே ஒன்றும் தலையிடுவதற்கு இல்லை.

ஹக்கீம் அவர்கள், ஜனநாயகக் கடமையை ஆற்றவில்லை என்று சொல்வதற்கு அவர்களுக்கு உரிமையிருக்கிறது. ஏனென்றால், ஒரு முன்னாள் முதலமைச்சர் நீண்ட கால அனுபவம் உள்ளவர், அவர் அவைக்கு வந்து பேசினால் பல கருத்துகள் வருமே, அவர் வரவில்லையே என்கிற அவருடைய ஆதங்கத்தைத் தெரிவிப்பதற்கு உரிமையிருக்கிறது. அதில் ஒன்றும் தவறில்லை. திரு. துரைமுருகன், உட்காருங்கள்.



**திரு. கோ.சி. மணி:** 5 வருடங்கள் முடியவில்லை. அவர் வருவார். வந்து பதில் சொல்வார். (குறுக்கீடு)

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, போளூர் வரதன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் ஹக்கீம், பேசுங்கள்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நேரத்தில் இரண்டு உறுப்பினர்கள் பேசுகிறார்கள். இவர்கள் பண்ணிய விவகாரத்திற்கு என்னுடைய நேரத்தைக் குறைத்துக்கொள்வது என்பது—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். முக்கால் மணி நேரம் தேவை. நிறைய உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள். தங்களுடைய பேச்சின் சிறப்பு எப்படிப்பட்டது என்பதை நானும் அறிவேன். நீங்கள் என்னுடைய தொகுதிக்காரர். என்னுடைய தொகுதிக்காகவும் பேசியிருக்கிறீர்கள். அதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனாலும், உங்களுடைய உரையினுடைய இறுதிப் பகுதிக்கு வாருங்கள்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மிக்க நன்றி. சபைத் தலைவர், நம்முடைய மரியாதைக்குரிய பேரவைத் தலைவருடைய உத்தரவுக்குக் கட்டுப்படுகிறேன், அடிக்கொரு தடவை எனக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பதற்காக.

மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் என்னுடைய college-mate. சட்டக் கல்லூரியிலே நானும் அவரும் ஒன்றாகப் படித்தவர்கள். அதனால் அடிக்கொரு தடவை எங்களுக்குள்ளே நட்புரீதியான மோதல்கள் வரும். அதையெல்லாம் நான் பெரிதாக நினைக்கவில்லை. ரொம்ப கண்ணியமாக, உயர்வாக, மரியாதையாக நினைக்கின்றவன்தான்.

சிறைச்சாலை. செப்டம்பர் 27. தமிழகத்தில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய மக்கள் விரோதப் போக்கை எதிர்த்து கடந்த ஆண்டில், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பிலே, போராட்டம் நடத்தினோம். எங்கள் மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுடைய கட்டளையை ஏற்று ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் பேர்

223441.
சென்னை-600 008

நாடு முழுக்க காவல் துறையாலே அன்றைக்கு கைது செய்யப்பட்டோம். 80 ஆயிரம் பேர்கள்மீது அன்றைக்கு F.I.R. போடப்பட்டது. 18 ஆயிரம் பேர்கள் சிறைச்சாலைக்கு அனுப்பப்படுவதற்கு உண்டான தகுதி பெற்றவர்கள் என்ற அடிப்படையில் எங்களையெல்லாம் பிடித்துக்கொண்டு போய் உள்ளே அடைத்தார்கள். எல்லோரையும் அடைக்க இடமில்லை என்ற காரணத்தினாலே, அந்த 18 ஆயிரம் பேரில் ஒருவனாக, மதுரைச் சிறைச்சாலையிலே நான் இருந்தேன். மதுரைச் சிறைச்சாலைக்குள்ளே இருக்கிறபோது, அங்கேயிருக்கிற கைதிகள் ஏற்கெனவே தண்டிக்கப்பட்டவர்களாக இருக்கிறவர்கள், அதேமாதிரியாக remand கைதிகளாக இருக்கிறவர்கள் சில பிரச்சினைகளையெல்லாம் சொன்னார்கள். அதை மனதில் வைத்துக்கொண்டுதான் இன்றைக்குச் சொல்கிறேன். தண்டிக்கப்பட்டு ஆயுட்கைதிகளாக இருப்பவர்களுக்கு ஆடைகள்கூட வழங்கப்படுவதில்லை. அந்தத் துணிமணிகள், வெள்ளை டிரவுசர் சட்டைகூட வெளியிலே இருக்கிற அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வாங்கிக் கொடுத்தால்தான் போட முடிகிறது. அந்த அளவிற்குக்கூட உள்ளே வசதி அவர்களுக்குச் செய்து கொடுப்பதில்லை என்பதோடு, அதைக் கேட்டால் தாக்கப்படுகிறார்கள் என்று அன்றைய ஆட்சியில் நாங்கள் உள்ளே அடைக்கப்பட்ட நேரத்தில் அந்தக் கைதிகள் என்னிடத்திலே தெரிவித்தார்கள். அம்மா அவர்களுடைய ஆட்சியில் அது நிச்சயமாக மாற்றியமைக்கப்படும் என்ற நம்பிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். சில நேரங்களில், மனித உரிமைகள் என்கிற பெயராலே சிறைச்சாலைக்குள்ளே விசாரிக்க வந்தால் அவர்களிடத்திலே இந்த விளக்கத்தைச் சொன்னாலே, அவர்கள் சென்றதற்குப் பிறகு தண்டிக்கப்படுவார்கள் என்கிற அளவில் எல்லாம் அன்றைக்கு சிறைக்குள்ளே எங்களுக்கு செய்தி தரப்பட்ட காரணத்தால்தான் நான் இன்றைக்கு மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அதை என்னுடைய கோரிக்கையாக பணிவோடு வைத்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல remand கைதிகள். தண்டனைக்காகக் காத்திருப்பவர்கள் அல்லது தண்டனை இல்லாமல் வெளியில் வரக்கூடிய வாய்ப்பு பெற்றவர்கள், ஆக, அவர்களைப் பொறுத்தமட்டில் சாப்பாடுகூட சரியாக தரப்படுவதில்லை. இந்தப் புகார் என்னிடத்திலே தரப்பட்டது. தண்டிக்கப்பட்டவர்கள் எல்லாம் குற்றவாளிகளும் அல்ல, தண்டனை பெறாமல் தப்பித்து விட்டவர்கள் எல்லாம் தருமவான்களும் அல்ல என்பது இந்த நாட்டு மக்களுக்கு நன்றாகவே தெரியும். (மேசையைத்



தட்டும் ஒலி) அவையெல்லாம் தெரிந்துதான் ஜனநாயகத்தில் மக்கள் தங்களுடைய தீர்ப்பையும் அளித்திருக்கிறார்கள் என்பதை அறிந்துதான் நாங்கள் இன்றைக்கு இங்கே நிற்கிறோம். ஆகையினாலே நீதி, தர்மம் இவையெல்லாவற்றையும்பற்றிப் பேசுகிறபோது சிறைச்சாலைக்குள்ளே இந்த சமாச்சாரங்கள், இவை சம்பந்தப்பட்ட செய்திகள் எங்களுக்குத் தரப்பட்ட காரணத்தால் இன்றைக்கு இந்த விளக்கத்தைத் தருவதற்கு எனக்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கிறது.

நீண்ட நேரம் பேசுவதை சபைத் தலைவர் அவர்கள் விரும்பமாட்டார்கள். மரியாதைக்குரிய அம்மா அவர்களுக்கும் என்னுடைய பணிவான வேண்டுகோளாக வைத்து–நான் இதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்திச் சொல்வதற்காக இங்கே இருக்கின்றவர்கள் தவறாக நினைத்துவிடக்கூடாது–எங்கள் அன்னை பாதிக்கப்பட்டபோது இந்திரா காந்தி பாதிக்கப்பட்டபோது, கிடைக்காத நீதி, உதயகுமார் அடித்துக் கொல்லப்பட்டபோது கிடைக்காத நீதி, தாமிரபரணி ஆற்றிலே 17 பேர் அடித்து, துரத்தி, கொல்லப்பட்டபோது கிடைக்காத நீதி நிச்சயமாக இந்த நாட்டில் இன்றைக்கு ஒரு அற்புதமான தீர்ப்பினை வழங்கியிருக்கக்கூடிய இந்த மக்கள் ஜனநாயகம் எதிர்பார்க்கின்ற அந்த அற்புதமான நீதி. புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே, அவர்கள் ஆட்சியிலே கிடைக்குமென்ற அந்த மக்களின் நம்பிக்கையை நிறைவேற்றி வைக்கிறவிதத்திலே. உங்களுடைய பணிகள் இருக்க வேண்டும் என்பதைப் பணிவோடு தெரிவித்து, நான் ஏற்கெனவே சொன்னது மாதிரி எதிர்ப்புகளைத் தாங்கித் தாங்கி வளர்ந்துவிட்ட எங்களுடைய உள்ளமும் உணர்வும், ஆதிக்கம், பதவி, அதைச் சுற்றி வரக்கூடிய வழிகள் எது என்பதைப் பற்றி குறுக்கு வழிச் சிந்தனைக்கு ஆளாகாமல், தமிழ் மாநில காங்கிரஸ் என்று இன்றைக்கு அவர்கள் சொன்ன காரணத்தால் சொல்லுகிறேன். எங்கள் கண்ணியத்திற்குரிய மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் அன்றைக்கும் சொன்னார், அதற்குப் பின்னாலே மக்களைச் சந்தித்துவிட்டு தீர்ப்பு அளிக்கப்படும்போதும் புரட்சித் தலைவியைப்பற்றி கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் சொன்னார். புரட்சித் தலைவி நல்லாட்சி தருவார், நல்லாட்சி தருவார், நல்லாட்சி தருவார் அதற்கு நாங்கள் உத்தரவாதம் என்று சொன்னார். அவர் சொன்ன அந்த வசனத்தின் அடிப்படையில் சொல்கிறேன். அக்கினிக் குண்டங்களை அள்ளி வீசியபோதும், அல்வாவைப் போல் சாப்பிட்ட புரட்சித் தலைவி அவர்களே, நீங்கள் விடுகின்ற சுவாசக் காற்று இருக்கிறதே அது எதிரிகளுக்கு சூறாவளியாக மாறி அடித்துக் கொண்டிருக்கின்ற காட்சியை இந்த நாடு பார்க்கிறது.

*பிற்பகல் 12–30*

நீதியும், தர்மமும் நிலைத்து நிற்கும் என்ற நம்பிக்கையில் எங்களுடைய கண்ணியத்திற்குரிய ஐயா மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களின் தலைமை உங்களுக்குப் பக்கத்தில் துணையாக இருக்கும் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் தெரிவித்து, வாழ்க்கையில் மிகப் பெரிய போராட்டத்தில், உடல் நலம் குறைந்து, மிகக் கஷ்டமான சூழ்நிலையில் எங்கள் கண்ணியத்திற்குரிய ஐயா அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். நான் ஆரம்பத்திலே, பேரவைத் தலைவர் வருவதற்கு முன்பு, துணைத் தலைவர் அனுமதி கொடுத்தபோது, முழுக்க முழுக்க மனநிலை சரியில்லாமலேயே என்னுடைய வாதத்தைத் தொடங்கிய நிலையில் மக்கள் பிரச்சினையைச் சொல்ல வருகிறபோது, எங்களை நாங்களே திடப்படுத்திக்கொண்டு சொல்லக்கூடிய ஒரு பக்குவத்தை எங்கள் அன்னை இந்திரா வாயிலாகப் பெற்றிருக்கிறோம். அந்தப் பாடத்தின் அடிப்படையில் இன்று சில வாதத்தை நான் வைத்ததில் ஏதேனும் தவறு இருந்தால், அருள்கூர்ந்து, அடுத்த தரப்பில், மாற்றுத் தரப்பில் இருக்கிறவர்கள்கூட பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, என்றைக்கும் எப்போதும் எந்தக் காலகட்டத்திலும் மக்கள் ஜனநாயகத்தை மதிக்கக்கூடிய தேசிய உணர்வில் நாங்கள் என்றைக்கும் எங்கள் பணியை ஆற்றக் காத்திருக்கிறோம் என்று சொல்லி, வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இந்த மாமன்றத்தில் அமர்ந்துள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு சாதாரண ஏழைக் குடும்பத்தில் என்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கி வழக்கறிஞராக்கிய என்னுடைய தாய் தந்தையரையும், நாட்ராம்பள்ளி தொகுதியில் பாட்டாளி மக்கள் கட்சியின் வேட்பாளராக என்னை அறிமுகப்படுத்தி இந்த மாமன்றத்தில் பணியாற்ற அனுப்பி வைத்த தமிழினப் போராளி டாக்டர் அய்யா அவர்களுக்கும், பசுமைத் தாயகத்தின் தலைவர் டாக்டர் சின்ன அய்யா அவர்களுக்கும், மாநிலத் தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும், நாட்ராம்பள்ளி தொகுதியின் கூட்டணித் தொண்டர்களுக்கும், எனக்கு வாக்களித்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.



2001–2002 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் நீதி நிருவாகம் மற்றும் சிறைச்சாலை நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கைகள்மீது விவாதிக்க வழக்கறிஞரான எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, விவாதத்தைத் தொடங்குகின்றேன்.

மக்களின் வாழ்க்கைத் தரமே ஒரு மாநிலத்தின் வளர்ச்சியை அறிய உதவும் அளவுகோல் என்பதை இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ள கோட்பாடுகளுக்கு இணங்க குடிமக்கள் அனைவருக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்வதே அரசின் நோக்கமாகும். நீதியை நிருவகிப்பது நீதிமன்றங்களின் பொறுப்பாகும். நீதிமன்றங்கள் செயல்படுவதற்கு அனைத்து வசதிகளையும் அரசு செய்து கொடுக்கின்றது. உயர் நீதிமன்றத்தின் பரிந்துரையின் அடிப்படையில் நிதிநிலையைக் கருத்தில்கொண்டு தேவைப்படும் இடங்களிலெல்லாம் புதிய மற்றும் கூடுதல் நீதிமன்றங்களுக்கு அரசு அனுமதி வழங்கி வருகின்றது.

மாநில அளவில் நீதித் துறையின் நிலை பலவாறாகப் பிரிக்கப்பட்டு, உயர் நீதிமன்றம், மாநகர உரிமையியல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், குற்றவியல் நீதிமன்றம், அமர்வு நீதிமன்றங்கள், சார்நிலை நீதிமன்றங்கள், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இதுபோன்ற பல வகையான நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இருந்தாலும் இன்னும் ஆங்கிலேயர்கள் வகுத்துக் கொடுத்த சட்டத்தையே அவ்வப்போது வழிநடத்தி வருகின்றது அரசு. மக்கள் நலன் கருதியும், சமுதாய சூழ்நிலைக்கு ஏற்புடையதாகவும் இருந்தால், அதையும் amendment செய்து சட்டவடிவம் கொடுத்து பயன்படுத்துகின்றோம்.

பொதுவாக, எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குகள் தேக்க நிலையில் இருந்து வருகின்றன. வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்குவதற்கு சில நீதிமன்றங்களில் நீதித் துறை நடுவர்கள் நியமிக்கப்படாமல் உள்ளதும் இதற்கு ஒரு காரணமாகும். காலியாக உள்ள இடங்களை இந்த அரசு நிரப்பி வழக்குகளை விரைவில் முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

*பிற்பகல் 12–35*

மத்திய அரசு விரைவு நீதிமன்றம் ஏற்படுத்த ஏற்பாடு செய்துள்ளது. நிதியும் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்திற்கு 30 நீதிமன்றங்களுக்கு நீதிபதிகள் நியமனம் செய்து செயல்படுத்த வேண்டுகின்றேன். எல்லா

நீதிமன்றங்களுக்கும், நீதிபதி நியமனத்தில் தாழ்த்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஆகியவர்களுக்கு சமூக நீதி கிடைக்கின்ற வகையில் இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்ற வேண்டும். எல்லா நீதிமன்றங்களும் கணினிமயமாக்கப்பட வேண்டும்.

நீதிமன்றங்களில் எல்லா நிலைகளிலும் தமிழ் மொழியைப் பின்பற்ற வேண்டும். நீதிமன்றங்களுக்குச் செல்லக்கூடிய வழக்குகள் பெரும் பாலானவை அப்பாவிகள்மீது உண்மைக்கு மாறாக, அவதூறாக காவல் துறையினர் பதிவு செய்வதாக புகார் வருவதை அரசு நிவர்த்தி செய்ய வேண்டும்.

என்னுடைய தொகுதிக்குட்பட்ட திருப்பத்தூரில் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட பழமையான பழுதடைந்த கட்டடத்தில் நீதிமன்றம் இயங்கி வருகிறது. மொத்தம் 4 குற்றவியல் நீதிமன்றங்களும், ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், சார்பு நீதிமன்றமும், சந்தனக் கட்டைகள் வழக்குகளை விசாரிக்க ஒரு சிறப்பு குற்றவியல் நீதிமன்றமும் உள்ளன. ஆனால், இவற்றில் இரண்டு நீதிமன்றங்கள் வாடகைக் கட்டடங்களிலும், சார்பு நீதிமன்றமும், உரிமையியல் நீதிமன்றமும் பழமைவாய்ந்த கட்டடம் என்பதால், மழை நீரால் நீதிமன்றத்தில் உள்ள அனைத்து ஆவணங்களும் நனைந்து போயின. மேலும் நீதிமன்றங்களில் வழக்குகள் நடந்து கொண்டிருக்கும்போது, கூரையின் மீதுள்ள ஓடுகள் கீழே விழுந்து வந்தன. ஒருமுறை கூரையின் மேல்பகுதியில் சுழன்று கொண்டிருந்த fan—கூட கழன்று விழுந்து அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்கள். இதுபோன்ற பல இன்னல்களுக்கும் மத்தியில், வழக்குகளை வழக்கறிஞர்களும், நீதிமன்ற அலுவலர்களும், பொதுமக்கள் நலன் கருதி நடத்தி வருகின்றார்கள். இதை அரசு கவனத்தில்கொள்ள வேண்டும்.

நீதிமன்றங்கள் ஆங்காங்கே இயங்கி வருவதால், வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்கள், நீதிமன்றங்களுக்குச் செல்வதற்கு அவதியுறுகின்றார்கள். கடந்த கால ஆட்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்காக ரூ.4.65 கோடி அரசு நிதி ஒதுக்கீடு செய்தும், அதற்குண்டான முயற்சி எதையும் எடுத்துக்கொள்ளாததால் கட்டடம் கட்டும் பணி நிலுவையிலேயே இருந்து வருகின்றது. தற்போது திருப்பத்தூரில் உள்ள சுமார் 170 வழக்கறிஞர்களும், நீதிமன்றத்தைப் புறக்கணித்தும் பல அறப்போராட்டங்களும் நீதிமன்றக் கட்டடம் வேண்டி நடத்தி வருகின்றார்கள். ஒருநாள் 50 வழக்கறிஞர்களுக்கு மேல் கைதாகி விடுதலையானார்கள் என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



ஒருங்கிணைந்த நீதிமன்றம் அனைத்து வசதிகளுடன் கட்டிக் கொடுக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டும். ஏற்கெனவே இயங்கி வரும் சார்பு நீதிமன்றத்திற்கு பொதுப் பணித் துறை மதிப்பீடு தயார் செய்ததில், Zero value செய்துள்ளதாகவும், சான்றிதழ் வைத்துள்ளார்கள். ஏற்கெனவே உள்ள பழைய நீதிமன்றக் கட்டடங்களை இடித்துவிட்டு, அதே இடத்தில் கட்டுவதற்கு உயர் நீதிமன்றம் அனுமதியும், அளித்துள்ளதால் அரசுக்குப் புதியதாக இடம் வாங்கத் தேவைப்படாது என்பதால், இதன்மூலம் சுமார் 2.00 கோடி ரூபாய் அரசுக்கு மிச்சப்படுகிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் நீதிமன்றக் கட்டடம் இல்லையென்ற குறைபாடுகள் இருந்தாலும், அரசு இதனை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டும். திருப்பத்தூர், நாட்ராம்பள்ளி தொகுதியில் உள்ளவர்கள் மாவட்ட அமர்வு நீதிமன்றங்களுக்கு 100 கி.மீ. தூரம் கடந்து வேலூர் செல்ல வேண்டியுள்ளதாலும், ஏலகிரி, ஜவ்வாது மலைகளில் வாழும் மலைவாழ் மக்கள் நலன் கருதியும், எல்லா மாவட்ட அலுவலர்களும் திருப்பத்தூரில் இருப்பதாலும், திருப்பத்தூரில் கூடுதல் அமர்வு நீதிமன்றம் அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதோடு நுகர்வோர் பாதுகாப்பு நீதிமன்றம், கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், தொழிலாளர் நல நீதிமன்றம் ஆகியவற்றை அமைத்துத் தர இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் உள்ள எல்லா அரசு அலுவலகங்களிலும் சட்ட ஆலோசகர்களை, வழக்கறிஞர்களை நிரந்தரமாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறை நிர்வாகம்பற்றிக் குறிப்பிட விரும்புகின்றேன். தமிழகத்தில் உள்ள சிறைச்சாலைகள் இன்னும் நவீனப்படுத்தப்பட வேண்டும். மத்தியச் சிறைச்சாலைகளில் பழைய கட்டடங்கள்தான் உள்ளன. சிறைக் கைதிகளுக்குக் கொடுக்கும் உணவுக் கட்டணத்தைக் கூட்ட வேண்டும். அவர்களுக்கு வழங்கும் சோப்பு, எண்ணெய் போன்ற பொருட்கள் சரியான முறையில் சென்றுசேர வேண்டும். சிறைச்சாலைகளில் மனித உரிமைகள் மீறப்படுவதாக செய்திகள் வருகின்றன. அவற்றின்மீது அரசு கவனம் செலுத்த வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

சிறைச்சாலைகள் வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் இருந்ததைப்போலவே உள்ளன. இதையும் மாற்றியமைக்க வேண்டும். சிறைத் துறை காவலர்களுக்கு குறைவான சம்பளம் உள்ளதால் ஊதிய உயர்வு அளிக்க வேண்டும்.

*சிறைத் துறையில் பெண் காவலர்களும், ஆண் காவலர்களும் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்பட்டு, இன்னும் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருந்து வருகின்றார்கள். அவர்களை பணி நிரந்தரம் செய்து, ஊதிய உயர்வு அளிக்க வேண்டும். சிறைக் காவலர்களுக்கு நல்லொழுக்கப் பயிற்சி அளிக்க வேண்டும். கைதிகள் மனம் திருந்தி, நல்லவர்களாக மாறிடவும், நாட்டுப் பற்றும், நற்பண்புகளும் வளர்ந்திடவும் நல்லொழுக்க வகுப்புகளை சிறைச்சாலைகளில் நடத்த வேண்டும்.*

*சிறைச்சாலைகளில் பெண் கைதிகள் கொடுமைப்படுத்தப் படுவதாகவும், தவறாக நடத்தப்படுவதாகவும் தகவல் வருகின்றபடியால், அதையும் அரசு கண்காணித்து இவர்களுக்கும் ஆதரவு தர வேண்டும். இன்னும் பல மாவட்டங்களிலும், தாலுகாக்களிலும் சிறைச்சாலைகள் இல்லாமலும், பழைய கட்டடங்களில் இருந்து வருகின்றமையாலும், அவற்றையும் அரசு உடனே மாறறி அதிநவீன வசதிகளுடன் அமைத்துக் கொடுக்க வேண்டும்.*

*பிற்பகல் 12-40*

*தமிழகத்தில் உள்ள சிறைச்சாலைகளைச் சீர் செய்யவும், சிறைக் கைதிகளின் நலன் காக்கவும் மேம்பாட்டுக் கமிஷன் ஒன்று அமைக்க வேண்டும். சிறைக் கைதிகள் பார்வையாளர்களுக்கு மிக அருகில் நின்று பேசுவதற்கும், அவர்களுடைய செய்திகளைப் பரிமாறிக்கொள்வதற்கும் அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.*

*சிறைத் துறைத் தலைவர் பதவிக்கு* I.P.S. *அதிகாரிகளே நியமிக்கப்படுகிறார்கள். சிறைத் துறையிலேயே திறமை வாய்ந்த அதிகாரிகளை சிறைத் துறைத் தலைவர் பதவிக்கு நியமிக்கலாம் என்று கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) சிறைக் காவலர் (தரம் 1 மற்றும் 2) ஆகியோருக்கு காவல் துறைக் காவலர் (தரம் 1 மற்றும் 2) ஆகியோருக்கு இணையான சம்பளம் வழங்கலாம். சிறையில் உணவு வழங்குவதைக் கண்காணிக்க இருக்கும் குழுவில் தலைமைச் செயலகத்தில் இருக்கும் அலுவலர்களையும் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். கருமார் தொழில் போன்ற தொன்மையான தொழில்களில் பயிற்சி கொடுப்பதுபோல, தற்காலத்தில் பிரபலமாக இருக்கும் கணிப்பொறி, தொலைக்காட்சிப் பெட்டி போன்றவற்றைச் சீர் செய்யும் தொழில்களிலும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கலாம்.*



*சிறைவாசிகளுக்குக் கல்வி வசதி செய்யப்படும் அதே நேரத்தில், அவர்கள் ஒன்று சேர்ந்து நாடகம் நடத்துவது, கூட்டமாகப் பாடுவது போன்ற நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்தால் சிறைவாசிகளின் மன இறுக்கம் குறையும்.*

*கொள்கை விளக்கக் குறிப்பில், கடந்த ஆண்டில் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு சிறையிலிருக்கும் சிறைவாசிகளின் எண்ணிக்கை, மாவட்டவாரியாகவும், குற்றவாரியாகவும், மொத்த ஆயுள் தண்டனைக் கைதிகள், அவர்களில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு நன்னடத்தையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, பரோலில் விடப்பட்டவர்களின் எண்ணிக்கை போன்றவற்றை இணைப்பாகக் கொடுத்திருக்கலாம் என்று கூறிக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு திரு. டி.என். சிவசுப்பிரமணியன்.*

***திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** *வேறுபாடுகளுக்கும், மாறுபாடுகளுக்கும் வழிதராமல் நடுநிலை தவறாது நல்வழியில் சபை நடத்தும் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சாதி மத பேதங்களுக்குச் சாவு மணி அடித்து, மத நல்லிணக்கத்தை மலரச் செய்து, மடிந்து வந்த மனித நேயத்திற்கு மறுவாழ்வு அளித்து, மாசற்ற ஆட்சி தர சூளுரைத்து, பாரதியின் புதுமைப் பெண்ணாய், புரட்சிப் புயலாய், புதுமை புரிந்து, புதுயுகம் படைக்க புத்துணர்வோடு வந்திருக்கும் புரட்சித் தலைவி அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் உரிய அமைச்சர் பெருமக்களே, பாசத்திற்கும், நேசத்திற்கும் உரிய எனது சக சட்டமன்ற உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் என் சார்பாகவும், இந்திய தேசிய காங்கிரஸின் சார்பாகவும் முதற்கண் வணக்கங்களை உரித்தாக்கிக் கொள்கின்றேன்.*

*'சட்டம் ஒரு இருட்டறை' என, இருட்டறையிலே அமர்ந்து குருட்டுப் பாடம் படிப்போரே, இருட்டறை அல்ல சட்டம்; இருள் நீக்கி, ஒளி காட்டி, வழி காட்டும் கலங்கரை விளக்கம் என சொல்லத் தூண்டும் வகையில் நீதித் துறைக்கு அரசியல் தலையீடு அற்ற அதிகாரம் அளித்து நீதி காக்கும் வகையிலே, நீதி நிருவாகக் கொள்கை விளக்கக் குறிப்பினை அளித்தமைக்காக நான் முதற்கண் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதிலே பாராட்டத்தக்க பல அம்சங்கள்*

இருந்தாலும், நீதி நிர்வாகத்தை இன்னும் எப்படி நெறிப்படுத்தலாம் என்பதனை இப்பேரவை வாயிலாக எடுத்துச் சொல்ல விழைகின்றேன். முதற்கண் 30 கோடி முகம் உடையாள் என்று பாரதி சொன்னது, இன்று 100 கோடியைத் தாண்டிவிட்டது. ஆகவே, பெருகி வரும் மக்கட்தொகைக்கு ஏற்ப கூடுதலாக நீதிமன்றங்கள் அமைக்கப்படுவதோடு, ஏற்கெனவே இருக்கும் நீதிமன்றங்களில் நிரப்பப்படாமல் இருக்கும் காலியிடங்களை நிரப்பி, நீதிமன்றங்களை முடுக்கிவிட வேண்டும். அப்பொழுதுதான் வழக்குகள் தேங்காமல் இருப்பதோடு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவாக நீதி கிடைக்க ஏதுவாகும். ஏனென்றால், 'Justice delayed is Justice denied' என்பார்கள். அத்தோடு, சட்டங்களும், நீதிமன்ற நெறிமுறைகளும் பாமர மக்களுக்கும் புரியும் வண்ணம் எளிமைப்படுத்தப்பட வேண்டும். இதற்கு முதற்படியாக சட்டங்களையும், நீதித் திட்டங்களையும் தமிழாக்கம் செய்வது அவசியமானது. இந்தக் கணினி யுகத்திலே வழக்கறிஞர்களும், வழக்குத் தொடரும் பொதுமக்களும் வழக்கின் நிலை குறித்து எளிதாக அறிந்துகொள்ளும் வண்ணம், நீதிமன்ற நடவடிக்கைகளையும், வழக்கு விவரங்களையும், தீர்ப்புகளையும், உயர் நீதிமன்றத்தில் மட்டுமல்லாமல், அனைத்து சார்பு நீதிமன்றங்களிலும் தெரிந்துகொள்ள, கணினிமயம் ஆக்கப்பட வேண்டும். தனித்தன்மை வாய்ந்த முக்கிய வழக்குகளை விசாரிப்பதற்கென்று, Special Courts எனப்படும் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும். அப்போதுதான், இதுபோன்ற வழக்குகளின் விசாரணையால் பொது நீதிமன்றத்தின் பணிகள் பாதிக்கப்படாமல் இருக்கும். அதேபோன்று, சுற்றுச்சூழல் சம்பந்தமான வழக்குகளை விசாரிப்பதற்காக தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும். மேலும், விரைவு நீதிமன்றங்களை வெகுவிரைவாகச் செயல்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும். ஏனென்றால் மக்கள், நீதிமன்றங்களின்மீது நம்பிக்கை இழந்து, கட்டப் பஞ்சாயத்துக்களின் மீது கவனத்தைத் திருப்பியிருக்கின்றார்கள்.

*பிற்பகல் 12-45*

மேலும், மாவட்டந்தோறும், மாவட்ட மையங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்களை ஏற்படுத்த வேண்டும். வழிச்செலவிற்கு இல்லாதவன் வழக்கை இழந்தான் என்ற வழக்குச் சொல் ஒன்று உண்டு. இந்த நிலை மாறி, ஏழை எளியோருக்கும் எளிதாக நீதி கிடைக்கும் வகையிலே இலவச சட்ட உதவி மையங்கள் வலிமைப்படுத்தப்பட வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)* எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலை உருவாவதற்குக் கீழ் நீதிமன்றங்கள் முதல் உயர் நீதிமன்றம் வரை தமிழிலே வழக்குகளும், தீர்ப்புகளும் இருக்க வேண்டும்.



சட்டக் கல்லூரிகளின் தரத்தை உயர்த்த போதிய நூலக வசதியை ஏற்படுத்த வேண்டும். சட்டக் கல்லூரிப் படிப்பினை முடித்த மாணவர்கள் வழக்குரைஞர்களாகப் பணி தொடங்கும், முதல் 3 ஆண்டுகள் பயிற்சிக் காலமாகக் கருதப்பட்டு, இளம் பயிற்சி வழக்குரைஞர்களை ஊக்குவிக்கும்பொருட்டு மாதம் ரூபாய் 1000 உதவித் தொகை அளிக்க அரசு முன்வர வேண்டும்.

சிறை நிருவாகம் குறித்து எனது கருத்துகளைச் சொல்ல விழைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவசுப்பிரமணியன், குறிப்புகள் நிறைய இருக்கின்றன என்பது தெரிகிறது. கொஞ்சம் சீக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** முதலாவதாக, சிறைக்குக் கொண்டு வரப்படும் கைதிகளை சிறை நிருவாகிகள், குற்றவாளிகள் என்ற கண்ணோட்டத்தில் பார்க்காமல், சூழ்நிலைக்கு இரையான மனிதர்கள் என்ற கண்ணோட்டத்தோடு அவர்களை நடத்த வேண்டும். கைதிகளுக்குப் போதுமான, தரமான உணவு அளிக்கப்பட வேண்டும். கைதிகளுக்கு நூலகங்களையும், இதர பொழுதுபோக்கு அம்சங்களையும் ஏற்படுத்திக் கொடுத்து மாறுதலான சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டும். சிறைக்குள்ளே கல்வி கற்பிக்கவும், நல்லொழுக்கப் பயிற்சி அளிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும், கைதிகளுக்கு நல்ல மருத்துவ வசதி அளிக்கப்பட வேண்டும். தவிரவும், கைதிகளின் நலத்தைப் பாதுகாக்கவும், சிறை நிருவாகத்தை மேற்பார்வையிடவும் மாவட்ட நீதிபதிகள், வாரம் ஒரு முறையாவது சிறைச்சாலைகளை நேரிடையாகப் பார்வையிட வேண்டும். மேலும், சிறை நிர்வாகிகளுக்கும், சிறைக் காவலர்களுக்கும் மனித நேயப் பயிற்சியும், நல்லொழுக்கப் பயிற்சிகளும் அளித்தல் அவசியம். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவசுப்பிரமணியன், உரையை முடித்துவிடுங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன். 5 மணித் துளிகள்தான். அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். உங்கள் தலைவர் ஒப்புக்கொண்டுதான் உங்களைப் பேச அழைக்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரத்தைச் சுருக்கியது சிக்கலாக இருக்கிறது.

நீதித் துறையில், நிருவாக நடைமுறைகள் அனைத்தும் தமிழில் நடைபெற வேண்டுமென்பதற்கான முறையிலே அரசு சட்டம் இயற்ற

வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன். ஆயிரக்கணக்கிலே தேங்கியுள்ள வழக்குகளை உரிய காலத்திலே முடிப்பதற்காக, மதுரையில் உயர் நீதிமன்றக் கிளையை உடனே தொடங்க வேண்டுமென்றும், துணை நீதிமன்றங்களும் தொடங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நீதிபதிகளுக்கு எவ்வளவு வழிகாட்டு நெறிமுறைகள் இருந்தபோதும் கூட, மதச் சார்புடையவர்களாகவும், அரசியல் சார்புடையவர்களாகவும், சில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளாகவும் மாறி வருகின்ற அபாயத்தை முடிவிற்குக் கொண்டு வருகிற வகையில் நீதிபதிகள் செயல்படுவதை உத்தரவாதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்திலே சில நீதிபதிகள் அரசியல்கூட பேசத் தலைப் பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் பார்த்தோம். பெண்கள் மீதான குடும்ப வன்முறைகள் அதிகரித்து வருவதால் அனைத்து மாவட்டங்களிலும் குடும்ப நீதிமன்றங்கள் அமைக்க வேண்டுமென்பதை வலியுறுத்த விரும்புகிறோம். 31–12–2000 வரை தீர்வு காணப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 1,02,159 ஆகும். இவற்றில் 91,178 வழக்குகள், முழுக்க, முழுக்க விபத்துக்கள் சம்பந்தப்பட்டவை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது எந்தக் காலம் தொடங்கி எப்போது முடிக்கப்பட்டது என்பதையும், விபத்து வழக்குகள் மூன்று ஆண்டுகளில் தொடங்கி, 5 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படுகின்றன என்பதையும் கவனப்படுத்த விரும்புகிறேன். அவ்வாறு வழங்கப்படுகிற தீர்ப்புகளில் நிவாரணத் தொகை உரிய காலங்களிலே வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்படும் நிலை நீடித்து வருகிறது.

அதேபோல, சிறைவாசிகள் தீர்வு நீதிமன்றங்கள் சம்பந்தப்பட்ட வரை, அவை சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர் மத்திய சிறைகளிலும் மற்றும் வேலூர் மகளிர் தனிச் சிறைச்சாலையிலும் செயல்படுகின்றன. சிறைவாசிகள் தீர்வு நீதிமன்றங்கள் விரைவில் மாநிலத்தினுடைய அனைத்து மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டு, குறைந்த கால அவகாசத்தில் அவை செயல்படுத்தப்படுவதை உத்தரவாதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய 5 இடங்களில் அரசு சட்டக் கல்லூரிகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. குறைந்தபட்சம் மாநகராட்சியாக இருக்கின்ற சேலத்தில் உடனடியாகவும், படிப்படியாக அனைத்து மாவட்டங்களிலும், அரசு சட்டக் கல்லூரிகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். தமிழ் மொழியில் சட்டக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு 1999–2000



கல்வி நிதியாண்டிலிருந்து, ஆண்டுக்கு 400 ரூபாய் பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுவதை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

பிற்பகல் 12–50

சிறைத் துறையில், சிறைக் கைதிகளுக்கு உணவு கொடுப்பதிலே கொள்முதல் செய்யப்படுவதில் தொடர்ந்து ஊழல் நடப்பதாகத் தெரிய வருகிறது. ஆகவே, அரசாங்கத்தில் கூட்டுறவுத் துறை மூலமாகக் கொள்முதலுக்காக உத்தரவாதத்தை அளிப்பதும், அதைக் கண்காணிப்பதற்கு மக்கள் பிரதிநிதித்துவக் கமிட்டி அமைப்பதும் அவசியம் என்று வலியுறுத்த விரும்புகிறேன். சிறைவாசிகள் வேலை செய்யும்போது, அவர்களுக்குத் தரப்படுகிற ஊதியம் சம்பந்தமாக இந்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் ஊதிய நிர்ணயக் குழு ஒன்றினை அமைத்து, அதன் பரிந்துரையின்படி கொடுக்கப்படுகிறது. பணித் திறன் உள்ளவர்களுக்கு- skilled workers–60 ரூபாய், ஓரளவு பணித் திறன் உள்ளவர்களுக்கு–semi–skilled workers–நாள் ஒன்றுக்கு 50 ரூபாய்,–unskilled–பணித் திறன் பெறாதவர்களுக்கு 45 ரூபாய். இதில் இழப்பீடு மற்றும் சிறைவாசிகளின் பராமரிப்புச் செலவு போக, அவர்கள் கையில் பணமாகக் கொடுப்பது, skilled workers–க்கு, ரூ.18/–, semi–skilled worker–க்கு ரூ. 15/–, பணித் திறன் பெறாதவர்களுக்கு ரூ. 13.50 என்று இருக்கிறது. இது எப்போது போட்ட சட்டமோ தெரியவில்லை. ஆகவே, இன்றுள்ள சூழ்நிலையில் கட்டாயம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். அதேபோல, மருத்துவ வசதிகள், Leave சலுகைகள் வழங்கப்பட வேண்டும். பெண் சிறைவாசிகளுக்கு எதிரான கொடுமை நிறுத்தப்பட வேண்டும். மாநில நிருவாகத் தீர்ப்பாயத்தின்படி, காவல் துறைக் காவலர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்பட வேண்டும். மத்திய சிறைக் காவலர்களுக்கு வாராந்திர ஓய்வு வழங்கப்பட வேண்டும். 8 மணி நேர பணித் திட்டத்தை கிளைச் சிறைகளுக்கும் விரிவுபடுத்துதல் வேண்டும். கிளைச் சிறைக் காவலர்களுக்கு இரவு உணவு மற்றும் தேனீர் வழங்குதல் வேண்டும். தொலைதூர மாவட்டங்களுக்குக் காவலர்களைப் பணி மாற்றம் செய்வதைத் தவிர்த்தல் வேண்டும். கிளைச் சிறைப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு வசதி வேண்டும்.

கடந்த ஆட்சிக்கு முந்தைய ஆட்சியில் இப்போதைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்போது முதல்வராக இருந்தபோது, 1995 ஆம் ஆண்டில் 8 மணி நேரப் பணிக்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதற்கு நன்றி தெரிவித்து, மதுரை மத்திய சிறைக் காவலர்கள் போஸ்டர்

ஒட்டிய குற்றச்சாட்டுக்காக அவர்கள் மீது கடந்த தி.மு.க. ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவற்றைத் திரும்பப் பெறுவதோடு, 1995 ஆம் ஆண்டு அரசாணையை நடப்பு ஆண்டிலும் தொடர்ந்து அமல்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம். மானியக் கோரிக்கைமீது நேற்றையதினம் சில அரசியல் விவாதங்கள் இங்கே நடைபெற்றன. இரவு நேரம் முழுவதும் பல இடங்களில் இருந்து தொலைபேசி அழைப்புகள் எனக்கு வந்தன. இரண்டு தினங்களுக்கு முன்பாக B.J.P. தலைவர்–மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசுகின்றபோது, 'சிக்னல் வந்திருக்கிறது' என்று சொன்னார். நேற்றையதினம் தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் பேசும்போது, 'நாங்கள் வெளியேறினால், அங்கே நீங்கள் நுழையமாட்டீர்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் தருகிறீர்கள்' என்று கேட்டார். மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'நாங்கள் இங்கிருந்தே சொன்னால் போதும், உங்களை வெளியேற்றிவிடுவார்கள்' என்று சொன்னார்கள். நேற்று இரவு மரியாதைக்குரிய பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் இராமதாஸ் அய்யா அவர்கள் பத்திரிகைகளுக்குக் கொடுத்த செய்தியில், தேசிய ஜனநாயகக் கூட்டணியில் டெல்லியிலே நாங்கள் சேர்ந்துவிட்டோம், தமிழகத்தில் தேசிய ஜனநாயக் கூட்டணி இல்லை, தி.மு.க.வை தமிழகத்திலே நான் சந்திக்கமாட்டேன் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், மதச் சார்பற்ற நம்முடைய அணியின் மீதும், குறிப்பாக மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீதும் தமிழக மக்கள் வைத்திருக்கும் உருக்கு போன்ற அசைக்க முடியாத நம்பிக்கையில் எங்கே அச்சுறுத்தல் ஏற்பட்டுவிடுமோ என்று ஒருபுறம் (மேசையைத் தட்டும் ஒலி) இவர் சொன்ன சிக்னல், அவர்களுக்குப் பச்சையாக இருந்தால் எங்களுக்குச் சிவப்பாக மாறிவிடுமோ என்ற அச்சத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சிக்னலைச் சொல்வதற்கு திரு. எச். ராஜா அவர்கள் வருகிறார். (சிரிப்பு)

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கையிலே மாநில அரசின் நீதித் துறையினுடைய பணி நிலையிலே பொதுவான அமைப்போடு சில வழக்குகளின் விசேஷத் தன்மைகளையும் கருத்திலே கொண்டு சில விசேஷ நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, குண்டு வெடிப்பு



வழக்குகளை விசாரணை செய்வதற்காகச் சென்னையிலும், கோவையிலும் கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தமிழகத்திலே 1983–லே கோவையிலே தொடங்கி, சென்னை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பயங்கரவாத செயல்களும், குண்டு வெடிப்புச் சம்பவங்களும் அதிகரித்து வந்துள்ளன. இதுபோன்ற சம்பவங்களின் உச்சகட்டமாக மாண்புமிகு உள் துறை அமைச்சர் திரு. அத்வானி அவர்கள் 1998 பிப்ரவரி 14 ஆம் தேதி கோவைக்கு வந்தபோது, 26 இடங்களுக்கு மேலே வெடிகுண்டுகள் வைக்கப்பட்டு, 60–க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் உயிர் இழந்தார்கள். அதேபோல, சென்னையிலே அண்ணா மேம்பாலம் அருகிலே வெடிகுண்டு வெடித்தது. பல இடங்களிலே வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டன. எனவே, கோவை மற்றும் சென்னை ஆகிய இரண்டு நகரங்களில் கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. ஆனால் 3–1/2 ஆண்டுகளுக்குப் பிறகும்கூட, இன்னமும் கோவை குண்டு வெடிப்பு வழக்கிலே தீர்ப்பு வரவில்லை. 'தாமதிக்கப்பட்ட நியாயம், மறுக்கப்பட்ட நியாயத்திற்குச் சமம்' என்கின்ற பழமொழியைக் கருத்திலே கொண்டு நம் அரசாங்கம் இதைத் துரிதப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–55

ஆனால் இங்குகூட ஒவ்வொரு நீதிமன்றத்தைப் பொறுத்தவரையிலும் செலவு மதிப்பீடு வரையறுத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இங்கே கோவை மற்றும் சென்னை அமர்வு நீதிமன்றங்கள் குறித்த விஷயத்திலே செலவு மதிப்பீடுகூட வரையறுத்துத் தெரிவிக்கப்படவில்லை என்பதை நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். கோவை குண்டு வெடிப்பு வழக்கை விசாரிக்க அமைக்கப்பட்டிருக்கின்ற கூடுதல் அமர்வு நீதிமன்றங்களைப் பொறுத்தவரை செலவு மதிப்பீடு குறிப்பிடப்படவில்லை. மேலும், மதுரை, திண்டுக்கல், உத்தமபாளையம், மேலப்பாளையம் ஆகிய பல பகுதிகளிலும்கூட பயங்கரவாத சதிகள், செயல்பாடுகளாலே படுகொலைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. எனவே, இந்த அனைத்து வழக்குகளையும் ஒன்றாகச் சேர்த்து – காரணம் என்னவென்று சொன்னால், இதில் குறிப்பாக 78 நபர்கள் பல்வேறு வழக்குகளிலே தொடர்பு உடையவர்களாக இருக்கிறார்கள். ஒரே குற்றவாளிகள் பல்வேறு வழக்குகளிலே சம்பந்தப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே, இந்த பயங்கரவாதச் சம்பவங்கள் தொடர்பான அனைத்து வழக்குகளையும்—

ஒரு விசேஷ நீதிமன்றத்தின்கீழ் கொண்டுவந்து, விரைவிலே தீர்ப்பு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தமிழ்நாடு வைப்பீட்டாளர்கள் நலன் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தமான வழக்குகளை விசாரண செய்வதற்காக தனி நீதிமன்றமானது சென்னையிலே இயங்கி வருகிறது. 30% வட்டியும், 6% ஊக்கத் தொகையும் தருவதாக எந்த ஒரு பொருளாதாரத்திலே அடிப்படை ஞானம் இருப்பவர்கள்கூட 42% நாம் சம்பாதிக்க முடியாது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அப்படியிருந்தும்கூட, இம்மாதிரியான கவர்ச்சிகரமான விளம்பரங்களைப் பார்த்து, 'fly by night' என்று சொல்லுகின்ற கம்பெனிகளிலே பல்லாயிரக்கணக்கான நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், ஏழை மக்கள்கூட, டெப்பாசிட் செய்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, இம்மாதிரியான Non-Banking Finance Company–களில் பணம் போட்டு, மூடப்பட்ட கம்பெனிகள் கிட்டத்தட்ட 80% தமிழகத்தில்தான் இருக்கின்றன. ஆகவே, இதுபற்றிய வழக்குகளைத் துரிதப்படுத்த வேண்டும். அதோடுகூட, இப்போதெல்லாம் இம்மாதிரியான கம்பெனிகளில் கிராமப் பகுதி மக்கள்கூட மூலதனம் செய்கிறார்கள். எனவே, Investor Education என்ற முறையில் முதலீட்டாளர்களுக்கு, எப்படிப்பட்ட கம்பெனிகளிலே மூலதனம் செய்ய வேண்டும் என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அதாவது எய்ட்ஸ் விழிப்புணர்வு இயக்கங்கள் நடத்துவதைப்போல N.G.O.s மூலமாக முதலீட்டாளர்களுக்கு முதலீடு செய்வதற்கான அடிப்படை விஷயங்கள் என்ன இருக்க வேண்டும் என்பதைப் பற்றி அவர்களுக்கு ஓர் அறிவினைப் புகட்டுவதற்கு, விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு, Investor Education என்ற முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் சபையிலே தெரிவித்து என்னுடைய கருத்துகளை நிறைவு செய்கிறேன், வணக்கம். 5 மணித் துளிகளுக்குள் முடித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிக்க நன்றி, ராஜா அவர்களே. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) என்ன சொல்ல வேண்டும்?

***திரு. எச்.எம். ராஜு:** தலைவர் அவர்களே, நன்றி சொல்ல வேண்டும். நீலகிரி மாவட்டத்து மக்களின் கோரிக்கையைப் பாசத்துடனும், அன்புடனும் ஏற்று, அவர்கள் உற்பத்தி செய்யும் தேயிலைத் தூளுக்கு அதிக விலை கிடைக்கும் வகையில் இன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள நியாய விலைக் கடைகளில் 'ஊட்டி' என்ற பெயரில் விற்பனை செய்ய



அறிவிப்புச் செய்து, இன்று காலை 10–15 மணிக்கு, முதல் விற்பனையைத் தன்னுடைய தங்கக் கரத்தினால் ஆரம்பித்து வைத்து உதவியதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்டத்து மக்களின் சார்பாகவும், மாண்புமிகு குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கா. கந்தசாமி அவர்கள் சார்பாகவும், மாண்புமிகு கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் அ. மில்லர் அவர்கள் சார்பாகவும், எங்கள் சார்பாகவும் உளமார்ந்த கோடானுகோடி நன்றியையும், நல்வாழ்த்துக்களையும், எல்லா சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் தெரிவித்துக்கொள்வதில் பெருமைப்படுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏதாவது தேயிலைப் பாக்கெட் கொடுக்கிறீர்களா?

பிற்பகல் 1–00

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் தேயிலைப் பாக்கெட்டை தலைமைச் செயலாளர் அவர்களுக்கு நான் கொடுத்தேன். அவரிடம்கூட பணம் வாங்கிவிட்டேன். வாங்காமல் விடவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் முதல் விற்பனை. தலைமைச் செயலாளர் 100 ரூபாய் கொடுத்தார். ஒரு பாக்கெட் விலை 9 ரூபாய். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் பணம் கொடுத்தால் அவர்களுக்கும் தேயிலைப் பாக்கெட் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு அரிய கருத்துகளை எடுத்து இயம்பியிருக்கின்றார்கள். தி.மு.க.–வினுடைய உறுப்பினர் மாண்புமிகு சாமிநாதன் அவர்கள் பேசுகிறபோது, நீதித் துறையில் தலையிடாமல் இந்த ஆட்சி இருக்க வேண்டுமென்ற ஒரு கருத்தை வெளிப்படுத்தினார்கள். அவர்களுக்கு நிலைமை தெரியும் என்று கருதுகிறேன். நீதித் துறை, மாநில அரசைப் பொறுத்தவரைக்கும் தனித்து இயங்குகிற, தனித்தன்மை வாய்ந்த ஒன்றாக இருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால், உயர் நீதிமன்றத்திலே இருக்கிற நீதிபதிகளை எங்கு வேண்டுமென்றாலும் மாற்றலாம் என்ற நிலை இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற காரணத்தால், மத்தியிலே ஆட்சியிலே

இருக்கின்றவர்கள், யார், யாரை, எங்கெங்கு மாற்ற வேண்டும் எதற்காக மாற்ற வேண்டும் என்று அவர்கள் சுயநலத்தோடு எண்ணுவார்களே யானால், அந்தத் தவறான எண்ணத்திற்கு நீதி தேவதை பலிகடா ஆக்கப்படுவதை நாம் இன்று நாட்டிலே கண்கூடாகக் கண்டு வருகிறோம். மத்தியிலே உங்களது ஆட்சி விளங்குகிறது. அதன் காரணமாகத்தான் எந்த நீதிபதி எந்தக் காரியத்திற்கு உயர் நீதிமன்றத்திலே இருக்க வேண்டும், அந்த உயர் நீதிமன்ற நீதிபதி மூலமாக எந்த நீதிபதி எந்த வழக்குக்கு, கீழ் நீதிமன்றங்களிலே இருக்க வேண்டுமென்பதை மத்திய ஆட்சியிலே இருக்கின்றவர்கள் வேண்டுமென்றால் அவர்கள் எண்ணுகிற எண்ணத்தை ஈடேற்றுகிற தவறான அணுகுமுறையை மேற்கொள்ள முடியுமேயொழிய தமிழகத்தில் தற்போது நடைபெறுகின்ற புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி அதுபோன்ற பணிகளில் ஈடுபடாது, ஈடுபடவும் முடியாது. காரணம், அந்தப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பது மையத்தை ஆளுகிற உங்களது அரசு என்பதனை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் மனோஜ் பாண்டியன் அவர்கள் பேசுகிறபோது, ஒரு குறிப்பிட்ட நீதிபதி, தமிழ்நாடு சர்வீஸ் கமிஷனிலே உறுப்பினர் பொறுப்பிலே இருந்து, பின்னர் வேறு ஒரு பொறுப்பிற்கு மைய அரசாலே நியமிக்கப்பட்டு இருக்கிறார் என்றும், அப்படி ஏற்கெனவே பொறுப்பிலே இருக்கின்றவர்கள்....

## 7. அறிவிப்புகள்

### (அ) உறுப்பினர்களுக்குத் தேயிலைப் பாக்கெட்டுகள் வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, ஒரு அறிவிப்பைச் செய்துவிடுகிறேன். சட்டப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் தேயிலைப் பாக்கெட்டுகள் வழங்கப்படுகின்றன. பணத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்து விடுகிறார்கள். டீயைக் குடிக்கிறபோது மட்டும் அம்மாவை நினைத்துக்கொண்டு, அவருக்கு வாழ்த்துத் சொல்லிவிட்டுக் குடியுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



## 6. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி விதிமுறையினை மீறி, நியமிக்கப் பட்டிருக்கின்ற அந்த நீதிபதி, அவர் நியமிக்கப்பட்ட முறை தவறானது என்பது குறித்து மாநில அரசு–இந்த அரசு மைய அரசுக்கு எடுத்துச் சொல்லும் என்பதனை நான் கூற விழைகிறேன்.

ஏழையெளிய மக்களுக்கு, நலிவு நிலையிலே இருக்கிற மக்களுக்கு நீதி விரைவில் கிட்ட வேண்டுமென்ற கருத்துகளை மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகின்றபோது எடுத்துச்சொன்னார்கள். அந்த அடிப்படையில் பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகளை, துரிதமாக வழக்குகள் முடிக்கப்பட வேண்டும் என்பதற்காக எடுக்க வேண்டுமென்ற ஆணையை, அதற்கான நிதியினை ஒதுக்கி மாண்புமிகு முதல்வர் அவர்கள் இட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1–05

உதாரணமாக, Fast Track Courts என்று சொல்லக்கூடிய, துரிதமாக வழக்குகளை விசாரித்து, தீர்வுகளை வழங்கக்கூடிய 30 நீதிமன்றங்களை உடனடியாக அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அண்மையிலே ஆணையிட்டிருக்கிறார்கள். அதைப்போலவே, இன்னும் 19 நீதிமன்றங்களை, Fast Track Courts விரைவிலே அமைத்து, பன்னெடு ஆண்டு காலமாக நிலுவையில் இருந்து, அதனால் விசாரணைக் கைதிகள்கூட பெரிதும் பாதிக்கப்படக்கூடிய ஒரு கொடுமை இருக்கிறதே, அந்தக் கொடுமையிலிருந்து அவர்களுக்கும் ஒரு விடுதலையைத் தர மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவு எடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது Special Grade District Judges நீதிமன்றங்கள் 18 இருக்கின்றன. வழக்குகளினுடைய தேக்கம் அதிகமாக இருக்கிறது. ஓராண்டு, ஈராண்டு, பல ஆண்டுகள் என வழக்குகள் தேங்கிக் கிடக்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தால் வழக்குகளின் தேக்க நிலையைப் போக்கி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவில் தீர்ப்பினை அளிக்க உதவுகிற வகையில் உயர் நீதிமன்றத்தோடு கலந்து, ஆய்ந்து, இன்னுமொரு 19 Special Grade District Judges பதவிகளை நிலையுயர்த்தவும் ஏழை மக்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்ற காரணத்தால், ஓர் ஆணையையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அண்மையிலே இட்டு இருக்கிறார்கள்.

[திரு. சி. பொன்னையன்] [2001 ஆகஸ்ட் 28

நீதிமன்றங்களிலே பல கட்டங்களில் பன்னெடு ஆண்டு காலமாக வழக்குகள் பெரிதும் தேக்க நிலையிலே இருப்பதை நான் அவைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். உதாரணமாக, உயர் நீதிமன்றத்தில் மட்டும் 3,20,958 வழக்குகள் நிலுவையிலே இருக்கின்றன. ஆனால், அந்த வழக்குகள் எல்லாம் accumulated pendency என்று சொல்லக்கூடிய அளவிற்கு நிலுவையிலே இருக்கின்றன. இந்த ஆண்டு மட்டும், 1,01,004 வழக்குகள் ஒட்டுமொத்தமாகத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றுள் pendency வழக்குகளையும் சேர்த்து, 1,85,035 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டு இருக்கின்றன. இங்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, அப்படிப்பட்ட நிலையிலும்கூட இந்த வருடம் எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றனவோ, அந்த வழக்குகளில் 80 சதவீதம், 90 சதவீதம்தான் தீர்வுக்கு உள்ளாக்கப்படுகிறதேயொழிய, accumulated pendency என்று சொல்லக்கூடிய 3,20,000 வழக்குகள் தொடர் நிலுவையிலேயே இருந்து வருகிற காரணத்தால், ஓராண்டு காலத்தில் முடிய வேண்டிய வழக்குகள், 4 ஆண்டு, 5 ஆண்டு, சில நேரம் 7 ஆண்டு, 8 ஆண்டு என்றுகூட நிலுவையிலேயிருக்கின்ற ஒரு நிலை உயர் நீதிமன்றத்திலேகூட இருக்கிறது. அதைப்போலத்தான், City Civil Courts-லும் அதே நிலை இருக்கிறது. கிட்டத்தட்ட 67,181 வழக்குகள் பன்னெடு ஆண்டு காலமாக முடிக்கப்பட முடியாத நிலையிலே இருக்கின்றன. Small Causes Courts–லே 44,323 வழக்குகள் பல காலமாக முடிக்கப்பட முடியாத நிலையிலே இருக்கின்றன.

மாவட்ட நீதிமன்றங்கள், அதைப்போல Sub Courts என்று எடுத்துப் பார்த்தால், ஒட்டுமொத்தமாக 9,81,468 வழக்குகள் முடிக்கப்பட முடியாத நிலையிலே பல ஆண்டுகளாக நிலுவையிலே இருக்கின்றன. இந்த நிலையினை மாற்றவேண்டும். 10 ஆண்டுகள் ஒரு வழக்கு நிலுவையிலேயே இருந்து, 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஒருவர் நிரபராதி எனத் தீர்ப்பு அளிக்கப்படுகிறார். அவருடைய கோரிக்கை நியாயமென தீர்வு அளிக்கப்படுகிறது என்ற நிலை வருகிறபோது, குற்றத்திற்கு உள்ளாக்கப்படாதவர்கள், தவறு இழைக்காதவர்கள் அல்லது உரிமை கொண்டாட வேண்டியவர்கள் எப்படி 10 ஆண்டுகளாகக் காலதாமதத்தின் காரணமாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதனை இந்த அரசு உணர்ந்துள்ள காரணத்தினால்தான், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, 30 Fast Track Courts உடனடியாக நிறுவுவதற்கும், மேலுமொரு 19 துரித நீதிமன்றங்களை உடனடியாக அமைப்பதற்கும், அத்தோடு சேர்த்து, மேலும் 19 Special Grade District Judges பதவிகளையும் உடனடியாக



2001 ஆகஸ்ட் 28] [திரு. சி. பொன்னையன்]

உருவாக்குவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1–10

அதைப்போலவே, நீதிபதிகள் வழக்குகளைத் துரிதமாக முடிக்க வேண்டும், ஒன்று. இரண்டாவது, we also should have the knowledge updated then and there. உச்ச நீதிமன்றத்திலே தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன. பல்வேறு உயர் நீதிமன்றங்களிலே தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன. நீதிபதிகளும் நடப்பிலே இருக்கின்ற நீதிமன்றத் தீர்ப்புகள்–Case Laws என்ன என்பதை, அவ்வப்போது அவர்கள் அதனை அறிகின்ற காரணத்தால், appeal, appeal என்று செல்லக்கூடிய ஒரு நிலைகூட ஏற்படாமல் கீழ்மட்ட நீதிமன்றத்திலேகூட அதற்குப் பரிகாரம் கிடைக்கும் என்ற முறையிலே, Judicial Academy என்ற ஒன்றை நிறுவுவதற்குத் தற்போது முடிவு செய்து, அதற்கான ஆணையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அடுத்து, நீதிபதிகளுக்கு ஒரு கோடியே 67 இலட்சம் ரூபாயிலே விருந்தினர் இல்லமும், அதைப்போலவே, பல மாநிலங்களில் இருந்து இங்கு வரும் நீதிபதிகள் கலந்துரையாடி, நீதி பரிபாலனத்தைச் செவ்வனே செம்மையாக்குவதற்கு வழிவகைகளைக் கண்டறியக்கூடிய தங்கும் இடங்களும், ஆய்வு இடங்களும் தேவை என்ற அடிப்படையில், அப்படிப்பட்ட ஒரு விருந்தினர் இல்லமும், ஆய்வகத்தோடு கூடிய விருந்தினர் இல்லமும் அமைப்பதற்கும் அரசு உத்தரவிட்டிருக்கிறது.

உங்களுக்குத் தெரியும், வழக்குகள் எல்லாம் தாமதமாவதற்கு இன்னுமொரு காரணம் – APP–I, APP–II அல்லது Prosecutors என்று சொல்லக்கூடிய அரசு வழக்குரைஞர்கள் ஒருவேளை தாமதத்திற்குக் காரணமாக இருக்கிறார்களோ என்ற ஆய்வை நடத்தி, அதிலே அடிப்படை உண்மையிருக்கிற காரணத்தால் அவர்களுக்குத் தக்க பயிற்சியை அளித்து, எப்படி வழக்குகளைத் துரிதமாக நடத்துவதற்கு நீதிமன்றத்திற்கும், தனியார் வழக்குரைஞர்களுக்கும் இடையே பாலமாக, உறுதுணையாக அவர்கள் விளங்க வேண்டும் என்ற முறையில் அதற்கான ஒரு அமைப்பினையும் அரசு தற்போது நியமிக்க இருக்கிறது.

நீதிமன்றங்களில் காலதாமதமாவதற்கு சில நேரங்களில் அங்கு administrative level–ல் நடக்கின்ற, நடப்பதாக மக்களால் சொல்லப்படுகின்ற குற்றங்குறைகளைக் களைவதற்கும் உறுதுணையாக, நீதிமன்றங்கள் எல்லாம்

கணினிமயமாக்கப்பட வேண்டும் என்ற ஒரு முடிவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்து, அதற்கான நிதியினையும் ஒதுக்கி ஆணையிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகின்றபோது, பல்வேறு கருத்துகளைச் சொன்னார்கள். அதிலே மிக முக்கியமான ஒன்று, பல்வேறு பகுதிகளுக்கு நீதிமன்றங்கள் புதிதாகத் தேவை என்ற ஒரு கோரிக்கையைத் தந்திருக்கிறீர்கள். சில நீதிமன்றங்கள் தொலைதூரத்திலிருக்கின்ற காரணத்தால், நீதிமன்றங்கள் இல்லாத பகுதிகளுக்குப் புதிய நீதிமன்றங்கள் வேண்டும் என்றவொரு கோரிக்கையை, நியாயமான கோரிக்கையை வெட்டுத் தீர்மானங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தந்திருக்கிறீர்கள். அதைப்போலவே, பேசுகின்றபோதும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். அது குறித்து உயர் நீதிமன்றத்தோடு கலந்து, நிதியாதாரத்திற்கும் உட்பட்டு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையிலே இருக்கிறது. நிதிநிலை அறிக்கையிலே இதுபற்றிய தெளிவான விளக்கத்தை அவைக்கு நான் கூறினேன். மைய அரசு நிதி ஒதுக்குகிறபோது, நீதித் துறைக்கென சற்று அதிகமான நிதியை ஒதுக்குகிற மனமில்லாத நிலையிலிருக்கிற காரணத்தால், நிதித் தட்டுப்பாடு காரணமாக நீதித் துறைக்கு வேண்டிய பணம் கிட்டாத நிலையிலே நீதிமன்றங்கள் அதிகமாக அமைக்கப்பட முடியாத ஒரு நிலை இருக்கிறது. அதிகப்படியான நீதிமன்றங்கள் கட்டாயம் தேவை. மாவட்டங்கள் பல உருவாக்கப்பட்டுவிட்டன. ஆனால், அந்த மாவட்டங்களுக்கு மாவட்ட நீதிமன்றங்கள் இல்லாத நிலையிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள்கூட ஒரு வெட்டுத் தீர்மானத்தைத் தந்திருக்கிறார்கள். பலர் வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். மாவட்ட நீதிமன்றங்களைப் பல இடங்களில் அமைக்க வேண்டிய நிலையிருக்கிறது. இதற்குத்தான் நாங்கள் மைய அரசிடம் கேட்பது, நிதியாதாரத்தினை அதிகம் தர வேண்டும். ஒரு புறம் நிதி ஒதுக்குகிறபோது, நீதித் துறைக்கு யாரும் நேரடியாக அரசிடம் அதிகமாக வாதாடுகிற நிலை இல்லை என்ற காரணத்திற்காக, அதிகமான நிதியை ஒதுக்காமல் விட்டால், 10 ஆண்டு காலமாக, நான் சொன்னதுபோல், 9 இலட்சம் வழக்குகள் நிலுவையிலே இருக்கின்ற அந்தக் கொடுமை மக்களைப் பெரிதும் பாதிக்கிறது என்பதனை மைய அரசு உணர வேண்டிய நிலையிலிருக்கிறது. மைய அரசு உணர்ந்தாக வேண்டும்.

*பிற்பகல் 1–15*

வழக்குகளை எல்லாம் முடிக்க வேண்டுமென்றால், நீதித் துறைக்கு



மட்டும் குறைந்தது 1000 கோடி ரூபாய் நிதியை உடனடியாகத் தந்தால்தான் 10 ஆண்டு காலமாக நிலுவையிலேயிருக்கின்ற வழக்குகளை எல்லாம் குறைந்தது 3 ஆண்டு காலத்தில் முடிக்க முடியும் என்ற ஒரு துரதிருஷ்டவசமான நிலை இருந்து வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு கட்டாயம் மைய அரசைத் தொடர்ந்து வற்புறுத்தி, அதிக நிதியினை நீதித் துறைக்காகப் பெற்று, அதிகப்படியான நீதிமன்றக் கட்டடங்களை அமைத்து, அதிகப்படியான நீதிமன்றப் பணியாளர்களை, நீதிபதிகளை நியமித்து 10 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையிலே இலட்சக்கணக்கான வழக்குகள் இருக்கின்றனவே, அவற்றையெல்லாம் துரிதமாக நடத்தி முடிக்க, தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்று நான் கூற விரும்புகிறேன்.

அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது, சிறைத் துறையைப்பற்றிச் சொன்னார்கள். சிறைத் துறைபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாகரன் அவர்கள் பேசுகிறபோது உணவு வழங்குதலில் ஊழல் என்பதை எடுத்துச் சொன்னார்கள். புரட்சித் தலைவியினுடைய அரசு இதை மிக உன்னிப்பாக, ஆழமாக ஆய்ந்து வருகிறது. இதுபோன்ற குற்றச்சாட்டுக்களை வெட்டுத் தீர்மானத்தின் மூலமாக நான்கைந்து மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கிறீர்கள். உணவு வழங்குகிறபோது, கூட்டுறவுத் துறையின் மூலமாக உணவினை வழங்கினால் இந்தக் குறைபாடு இல்லாமல் இருக்கலாம் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாகரன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். கடந்த கால வரலாறு, கூட்டுறவுத் துறையின் மூலமாகத்தான் சிறைச்சாலைகளுக்கு உணவு வழங்கப்பட்டது. ஆனால், எத்தகைய முறைகேடுகள் அதில் நடந்திருக்கின்றன என்பதனை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் கடந்த 5 ஆண்டுக் கால ஆட்சியில் தேர்தலுக்கு உள்ளாக்கப்பட்டபோது, விவசாயத் துறையில், கூட்டுறவுச் சங்கங்கள் என்றால், விவசாயிகள் பல கூட்டுறவுச் சங்கங்களின் தலைவராக வர முடியவில்லை. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் என்றால் ஆர்வமுடைய நுகர்வோர்கள் அந்தச் சங்கங்களில் அங்கத்தினர்களாக வர முடியவில்லை. வியாபாரிகள், அரசியல் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள், கூட்டுறவுச் சங்கங்களை ஆக்கிரமித்து, அபகரித்துக்கொண்ட காரணத்தால் சிறையிலே இருக்கின்ற கைதிகள், நலிந்த நிலையிலேயிருக்கின்ற கைதிகள் கால்வயிறு, அரைவயிறு சாப்பிடக்கூட அவர்களுக்கு உணவு கிட்டாத அளவுக்கு அவர்கள் போடுகிற சாதமும் குறைவு; குழம்பும் குறைவு;

காய்கறிகள் இல்லையே என்ற நிலை; முட்டை, கறி என்றால் ஏதோ, எப்போதோ என்ற நிலையை உருவாக்கி, சிறைக் கைதிகள் கிட்டத்தட்ட 19,000 பேர் தொடர்ந்து ஐந்தாண்டுக் காலத்தில் பலவித இன்னல்களுக்கு, கடந்த கால தி.மு.க. ஆட்சியினுடைய கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொண்ட முறைகேடுகள் காரணமாக ஆளாகியிருக்கிறார்கள். அதைக் களைந்து, நல்லதொரு நடைமுறையை மேற்கொண்டு, எப்படி உணவு வழங்குதலில் உணவுக்கு வேண்டிய உணவுப்பொருள்களைக் கொள்முதல் செய்வதில் தவறுகள் இல்லாமல், நியாயமான முறையில் நடக்க வேண்டும் என்பதற்காக, உள் துறைச் செயலாளர் அவர்களும், சிறைத் துறையிலே இருக்கின்ற சிறைத் துறைத் தலைவர் (I.G.) அவர்களும், தற்போது ஒரு கமிட்டி போட்டு ஆய்ந்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணைப்படி அந்தப் பணி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. விரைவிலே புதிய ஒரு வழிமுறையை வகுத்து, சிறையிலே நடந்து வருகின்ற உணவு வழங்குதலில் நடக்கின்ற ஊழலை அறவே ஒழித்திட புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற உத்தரவாதத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாகரன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் இங்கே பதில் அளிக்கிறபோது, சிறைச்சாலைகளுக்கு கூட்டுறவுத் துறை மூலமாக உணவுப் பொருட்கள், அரிசி போன்ற பொருட்கள் எல்லாம் வழங்குவதாகச் சொன்னார்கள். அது உண்மையல்ல. எங்களுடைய வேலூர் சிறைச்சாலையை எடுத்துக்கொண்டாலும்கூட, Karpagam Super Market மூலமாகப் பொருட்களை வழங்க வேண்டுமென்று அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன. ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அங்கே 12 கோடி ரூபாய் Karpagam Super Market–ல் ஊழல் நடந்து, Karpagam Super Market–டே மூடப்பட்டுவிட்டது. அதற்கு முன்னால் இருந்து பார்த்தீர்கள் என்று சொன்னால் யாராவது ஒரு ஏஜெண்ட் இருப்பார். காய்கறி கடைக்குப் போய், அவர்கள் யாராவது ஒரு காய்கறிக் கடைக்காரரிடம் சரக்கு daily அனுப்பச் சொல்வார்கள். Bill–ஐ மட்டும் இவர்கள் Karpagam Super Market பெயரிலே வாங்கிக் கொண்டு போய்க் கொடுப்பார்கள்.



பிற்பகல் 1–20

அதேபோல, எல்லாப் பொருள்களுக்கும் இப்படித்தான் செய்கிறார்களேயொழிய, இவர்கள் உண்மையிலேயே கூட்டுறவுத் துறையின் மூலமாக சிறைச்சாலைகளுக்கு–இந்த மன்றத்திலே நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து, கவன ஈர்ப்பு அறிவிப்பு மூன்று முறை கொண்டு வந்திருக்கிறேன். இதிலே உண்மை, தமிழகத்திலே இருக்கக்கூடிய சிறைகளுக்கு கூட்டுறவுத் துறையின் மூலம் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன என்பது முழுக்க, முழுக்க தவறானது. ஆகவே, நீங்கள் இதைக் கண்டறிய வேண்டும். நியாயமான முறையில் இங்கே correct–ஆக அதாவது Market Rate–படி, அந்த rate–ல் அப்படியே சிறைச்சாலைகளுக்குக் கொண்டுபோனால் அதிலே பல கோடி ரூபாய் தமிழக அரசுக்கு இந்த இடத்திலே மிச்சமாகும். அதற்கு மாண்புமிகு முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே தவறு செய்தவர்கள் மீது, இன்னும்கூட 12 கோடி ரூபாய் ஊழல்காரனை இதுவரைக்கும் arrest செய்யவும் இல்லை, இதுவரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையும் கூட்டுறவுத் துறையில் இல்லை. இதற்கு நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, சிறைச்சாலையிலே இருக்கக்கூடிய கைதிகளுக்கு நல்ல உணவுப் பொருட்களை வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சொல்லியிருக்கிற இந்த முறைகேடுகளுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி, அம்மா அவர்கள் கடந்த ஆகஸ்ட் 1 ஆம் தேதியிலிருந்து இந்த சிறைத் துறைக்கு கூட்டுறவுத் துறையின் மூலமாக வழங்குகிற உணவுப் பொருள்களை கூட்டுறவுத் துறை அங்காடிகளிடம் மட்டுமே வாங்க வேண்டும் என்பதனை உறுதியிட்டுச் சொல்லி, இப்போது 1 ஆம் தேதியிலிருந்து கூட்டுறவுத் துறையிலேயிருந்து நேரடியாக சிறைத் துறையே உணவுப் பொருள்களை வாங்கிக்கொண்டு போகிறது என்பதனையும், இடைத்தரகர்கள் யாரும் இல்லவே இல்லை என்பதனையும், அதற்கான கடுமையான நடவடிக்கையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருக்கிறார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) உத்தரவும் இட்டிருக்கிறார்கள் என்பதனையும் நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** நான் சொல்வது, அங்கே என் ஊரிலே Super Market–டே இல்லை. இல்லாத ஒரு மார்க்கெட்டிலே கூட்டுறவுத் துறை மூலம் நீங்கள் எப்படிப் பொருட்களைக் கொடுக்கமுடியும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒட்டுமொத்தமாக தமிழகத்திலிருக்கிற அனைத்து சிறைச்சாலைகளிலும் கடந்த காலத்தில் உணவுப் பொருள் கொள்முதலில் நடந்த ஊழலைக் களைவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆணையின்படி கூட்டுறவு அங்காடிகளிலிருந்து நேரடியாக வாங்க வேண்டும் என்ற ஆணையை தற்போது போட்டிருப்பதாகச் சொல்கிறார். உண்மை நிலை என்ன என்றால் மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள், கடந்த காலத்திலே நடந்த ஊழலைப்பற்றிச் சொல்கிறார். கூட்டுறவுத் துறையில் தற்போது, there is no elected body in co–operative departments. Special Officers மூலமாக தற்போது நடந்து வருகிற நிலையிலே, தவறுகள் இல்லாத அளவிற்கு நேரடியாக அங்காடிகள் மூலமாக அங்கு செல்கின்றன. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப்போல, நாங்கள் இதை விசாரித்திருக்கிறோம். உண்மை என்னவென்றால், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம்தான் வாங்க வேண்டும் என்பது ஏற்கெனவே இருந்த ஓர் ஆணை, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இருந்தபோது, கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரை வைத்துக்கொண்டு, அந்தப் பெயரிலே கடந்த காலத்தில் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் ஆங்காங்கு கொள்முதல் செய்து, எப்படியோ ஏஜெண்ட் என்ற பெயரிலே மறைமுகமாக நுழைந்து இந்த ஊழலைத் தொடர்ந்து செய்திருக்கிறார்கள். இதன் மூலம் பல கோடி ரூபாய் அரசுக்கு ஒருபுறம் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இன்னும் ஒருபுறம் கைதிகள் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் குறையைக் களையத்தான் there should be a self–checking system. The system should be a foolproof system, என்ற முறையிலே ஊழலே நடைபெற முடியாத அளவுக்கு நல்லதொரு திட்டத்தை நடைமுறைப்படுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அது நடைமுறைப்படுத்தப்படும். பல கோடி ரூபாய் அளவிற்கு கடந்த காலத்திலே அந்த ஊழல் நடந்து, அதற்குக் காரணமானவர்கள் அவர்கள் அதிகாரிகளாக இருந்தாலும் சரி அல்லது கூட்டுறவுச் சங்கங்களுடைய ஏஜெண்ட்டுகளாக இருந்தாலும் சரி, அவர்களைக் கண்டறிந்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் அரசு செயல்பாடுகளை மேற்கொண்டிருக்கிறது என்பதனை நான் அவைக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–25*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போலவே சிறைத் துறைக்குப் பலவித நவீன அணுகுமுறைகளைக் கொண்டுவர



வேண்டுமென்ற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்காக நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, எப்படி நீதித் துறையிலே கணினிமயமாக்க வேண்டும், காலதாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டும், முறைகேடுகள் களையப்பட வேண்டும் என்ற நோக்கோடு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறாரோ, அதைப்போலவே கணினிமயம் சிறைத் துறைக்கும் வருகின்றபோது, இந்த உணவுப்பொருள் ஊழலிலிருந்து, we can maintain proper inventory. We can maintain proper material management என்ற முறையிலே சிறைச்சாலைகளுக்கு கணினிமயத்தை, எல்லா சிறைச்சாலைகளுக்கும் தர வேண்டுமென்ற ஓர் ஆணையினையும் புரட்சித் தலைவி அவர்கள் இட்டிருக்கிறார்கள்.

அதைப்போலவே நவீன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அங்கு சுகாதார வசதிகளைச் செய்து தரவும், குடி தண்ணீர் இல்லை என்ற நிலை எங்குமே இருக்கக்கூடாது என்ற முறையிலே குடிநீர் வசதியை எல்லா சிறைகளுக்கும் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் தந்தாக வேண்டும் என்பதற்கும், சிறைச்சாலையிலே பணியாற்றுகின்ற பணியாளர்கள் கைதிகளை மனிதாபிமான முறையோடு நடத்துவதற்கு அவர்களுக்கு சிறப்புப் பயிற்சிகளை அளிப்பதற்கும் தக்க ஆணைகளை அரசு பிறப்பித்திருக்கிறது என்பதனை அவைக்கு நான் எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

இன்னும் மிக முக்கியமான ஒன்று. நவீனமாக வளர்ந்து வருகின்ற விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி கைதிகள் எல்லாம் ஒவ்வொரு முறையும், there may be remand prisoners போன்று இருக்கின்றவர்கள் எல்லாம் நீதிமன்றத்திற்கு வர வேண்டிய நிலை இல்லாமலே அல்லது Free Legal Aid Society மூலமாக கைதிகளுடைய குறைகளைக் கேட்டு அவர்களுக்குப் பரிகாரம் தருகின்றபோது அந்தந்த சிறைக்குச் சென்றுதான் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று அல்ல, Remote Control மூலமாக தூரத்தில் இருந்தேகூட பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்ற முறையிலே Video Conferencing முறையிலே, in a phased programme, முதற்கட்டமாக 8 இடங்களில் வீடியோ படக் காட்சிகளுடன் Video Conference கருத்தாய்வு மேற்கொள்ள வேண்டும் என்ற ஒரு நவீன முறையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக சிறைத் துறைக்கும் தரவேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) போலீஸ்காரர்கள் இல்லை என்ற காரணத்தால் 15 நாட்கள் Remand Prisoners, போலீஸ்காரர்கள் பற்றவில்லை என்ற காரணத்தால் நீதிமன்றத்திற்கு எடுத்துச்செல்லப்படமுடியாத நிலை இருக்கலாம் அல்லது பலவிதக் காரணங்களால் ஏற்படும் தாமதங்கள் எல்லாம் தவிர்க்கப்பட்டு,

விசாரணைக் கைதிகளுக்கும் இது ஒரு விடிவுகாலமாக அவர்களுடைய குறைகளைப் போக்குகின்ற நிலையிலே இது அமையும். ஏனென்றால், whether a person is guilty or not will be known only after the judicial process is over. அதிலே பல காலம் 15 நாள் Remand. Further 15 days, further 15 days என்றாகி இறுதியிலே கைதிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் உயர் நீதிமன்றம் "Prisoners' Adalat" என்ற ஒரு முறையைக் கையாண்டு நீதிமன்றங்களுக்குச் சென்று விசாரித்து தீர்வுகளைத் தற்போது வழங்கி வருகிறது. ஒவ்வொரு கிளைச் சிறைக்கும் செல்ல முடியாது. ஏதோ ஓர் இடத்தில், தற்போது 5 இடங்களில் அந்த "Prisoners' Adalat" நடந்து வருகிறது. ஒரு மாவட்ட மையத்திலிருந்து கிளைச் சிறைகளுக்கும் இப்போது அந்தப் பணிகளை Video Conference மூலம் நீட்டிக்கிறபோது விரைவிலே பிரச்சினைகளைத் தீர்த்து, தாமதத்தைத் தவிர்க்க முடியும் என்று உயர் நீதிமன்றமும் கருதி இந்தப் பணியினை மேற்கொண்டிருக்கிறது.

அதைப்போலவே நடப்பு நிதியாண்டிலிருந்து அனைத்து மத்திய சிறைகளிலும் 8 மணி நேரமும்...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், Video Conference என்று சொன்னால் அது என்ன என்று எங்களுக்கு இன்னும் புரியவில்லை. அதைக் கொஞ்சம் புரிய வைத்தால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைதிகளை விசாரணைக்காக நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லும்போது காவலர்களுக்கு பல கஷ்டங்கள், சிரமங்கள் ஏற்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் தெரிவித்ததைப்போல, சட்ட அமைச்சர் தெரிவித்ததைப்போல, சில சமயம் காலதாமதம் ஏற்படுகிறது. சில சமயம் சில பயங்கரமான குற்றவாளிகள் இருக்கும்போது அவர்கள் தப்பித்தும் சென்றுவிடுகிறார்கள். இதனால் காவல் துறையினருக்குப் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. இவற்றை எல்லாம் தவிர்க்க நேரடியாக சம்பந்தப்பட்ட மனிதரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமல், இதற்கான ஓர் ஏற்பாட்டைச் செய்து நீதிமன்றத்தில் நீதிபதிக்கு முன்னால் ஒரு T.V. Screen இருக்கும். அதற்கு இந்த Video Conferencing அமைப்பை ஏற்படுத்திக் கொடுப்பார்கள். இங்கே சிறையிலே எந்த ஊரில் இருந்தாலும் அந்தக் கைதியை அங்கே ஒரு Screen முன் நிறுத்துவார்கள். ஆக, அவர் அங்கே நிற்பது அந்த நீதிமன்றத்தில் அந்தத் தொலைக்காட்சியில் நீதிபதிக்குத் தெரியும். ஆகவே, அவரை நீதிமன்றத்தில்



ஆஜர்படுத்தாமலேயே நீதிபதி குற்றவாளியை அல்லது விசாரணைக் கைதியைப் பார்க்கமுடியும். ஆக, இப்போது உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டீர்களானால், நாகப்பட்டினத்தில் சிறையில் ஒரு கைதி இருப்பார், நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டுமானால் தொலைதூரம் செல்ல வேண்டும். கைதியை அழைத்துச் செல்ல வேண்டிய அவசியமே இல்லாமல் சிறையில் இருந்து கொண்டே நீதிபதி அந்தக் கைதியைப் பார்க்கலாம். இதுதான் Video Conferencing. அதன் வழியாகப் பேசிக் கொள்ளலாம். நீதிபதி கேள்விகள்கூட கேட்கலாம். சம்பந்தப்பட்ட கைதி பதிலும் சொல்லலாம். அதுவும் கேட்கும். ஆகவே, இந்த நவீன முறை வந்துவிட்டால் பல சிரமங்களும், தாமதங்களும் தவிர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன், 9 இலட்சம் வழக்குகள் 10, 12 ஆண்டுக் காலமாக நிலுவையிலே இருக்கின்றன. மக்கள் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றார்கள். மக்களின் பாதிப்பைப் போக்க வேண்டும் என்ற உயரிய நோக்கோடு...

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இந்த வளர்ந்துவிட்ட விஞ்ஞானத்தை நிர்வாகத்திலே கொண்டு வர வேண்டும். e-Governance என்ற நிர்வாக முறையினை தமிழகத்திலே கொண்டு வருகிறபோது மக்களுக்கு உடனடி பலன் கிட்டும் என்ற முறையில்தான் advanced information technology-ஐ தமிழகத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவு எடுத்து, அதற்கான நிதியையும் ஒதுக்கியிருக்கின்றார்கள் என்பதனை நான் கூறிக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழக்குகளைத் துரிதமாக முடிப்பதற்காகவும், காவல் துறையிலே இருக்கின்ற காவலர்களுக்கு இருக்கக்கூடிய சிரமங்களைப் போக்குவதற்காகவும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இந்த நல்ல திட்டம் இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு மாநிலங்களில் இருக்கின்றதா? இங்கேதான் முதலாவதாக அறிமுகப்படுத்தப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எங்களது தேர்தல் அறிக்கையிலேயே கூறியுள்ளவாறு E–Governance என்று சொல்லக்கூடிய, ஆட்சி மக்களுடன் நேரடித் தொடர்பு, மக்களுக்கு ஆட்சியிடம் நேரடித் தொடர்பு, கீழ் மட்டத்திலே தாலுகா அளவிலே இருக்கின்ற அதிகாரிகளுக்கு கோட்டையிலே நேரடித் தொடர்பு, மாவட்ட அளவிலே நேரடித் தொடர்பு என்று tele–connectivity என்று சொல்லக்கூடிய நவீன information technology முறையை நடைமுறைக்குக் கொண்டு வந்தால், காலதாமதங்கள் நீக்கப்படும். காலதாமதத்தினால் அரசுக்கு ஏகப்பட்ட இழப்பு, பண இழப்பு. குறிப்பாக, ஓராண்டு காலத்திலே முடிக்க வேண்டிய ஒரு பணி, இரண்டு ஆண்டுக் காலம், மூன்று ஆண்டுக் காலம் என்றால் அரசுக்கு பண இழப்பு, வரி விதிப்பு, மக்களுடைய எதிர்ப்பு, இப்படிப்பட்ட தொல்லைகள் எல்லாம் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் வளர்ந்துவிட்ட விஞ்ஞானத்தை, மேநாடுகளிலே இருக்கின்ற விஞ்ஞானத்தை தமிழகத்திலே நடைமுறைக்குக் கொண்டு வந்து நிர்வாகத்திலே தூய்மை மலர வேண்டும், நிர்வாகத்திலே நேர்மை இருக்க வேண்டும், நிர்வாகத்திலே முறைகேடுகள், ஊழல்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்ற நோக்கோடு இதுபோன்ற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதல் முறையாக இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழகத்தில் நடைமுறைப்படுத்த கொண்டு வந்திருக்கின்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உண்மையிலேயே வரவேற்க வேண்டிய ஒரு திட்டம். நிச்சயமாக we have to appreciate it. But at the same time, there are some difficulties in implementing this process because we have to amend the Criminal Procedure Code. As per Section 167 of the Cr.P.C. the accused should be produced in person once in 15 days. இப்படி வருகிறபோது, 15 நாட்களுக்கு ஒரு முறை இந்தக் குற்றவாளி நீதிமன்றத்தில், நிச்சயமாக, அவரைக் கொண்டு போய் appear செய்ய வேண்டும். அவரைக் கொண்டுபோய் ஆஜர்படுத்த வேண்டுமென்ற சட்டம் எல்லாம் இருக்கிறபோது, நாம் Criminal Procedure Code–ஐ திருத்தம் செய்யாமல் இதைச் செயல்படுத்துவதற்கான வழிமுறைகளை அரசு ஆய்ந்ததா? அது செயல்வடிவம் பெறுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறபோது அதற்கு முன்னாலே இருக்கின்ற தடைக் கற்கள் அகற்றப்பட்டாக வேண்டும்



என்பது அரசு உணர்ந்த ஒன்று. Section 167 of the Criminal Procedure Code has to be positively amended. Action has already been taken in this regard also என்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, நடப்பு நிதியாண்டிலே அனைத்து மத்திய சிறைகளிலும் 8 மணி நேர பணி முறையைச் செயல்படுத்துவதற்காக அரசு தற்போது ஆணையிட்டிருக்கிறது. அதற்காக, காவலர்களின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். வார விடுமுறை நாட்களுக்குப் பதிலாக பணிபுரிவதற்கும், கூடுதல் பணி நேரங்களுக்கும், காவல் துறை பணியாளர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத்தைப் போலவே, சிறைத் துறைக் காவலர்களுக்கும் கூடுதல் பணி நேரத்திற்கு ஊதியம் வழங்க வேண்டுமென்ற ஆணையையும்—மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது சொன்னீர்கள். வெட்டுத் தீர்மானத்திலும் கொடுத்திருக்கிறீர்கள் – மாண்புமிகு முதல்வர் அவர்கள் அண்மையிலே அதற்கான ஆணையும் இட்டிருக்கின்றார்கள் என்ற மகிழ்வான செய்தியை நான் சொல்லிக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதைப்போலவே, சிறைவாசிகள் பெரும் அளவிற்கு சேர்த்துக் கொள்ளும்போது எழுகின்ற பிரச்சினையைச் சமாளிப்பதற்கு அவர்களை அவசரமாக வேறு சிறைச்சாலைகளுக்குக் கொண்டு செல்வது போன்ற சில பணிகள் ஏற்படுகின்றன. அப்போது காவல் துறைப் பணியாளர்களுக்கெல்லாம் உணவு அளிக்க வேண்டியிருக்கிறது. அப்படி சிறைக்காவல் பணியாளர்களுக்கு உணவு அளிப்பதற்கு மிகக்குறைந்த பணமே இதுகாறும் ஒதுக்கப்பட்டு வந்தது. காவல் துறைக்கு உள்ளதைப்போலவே, சிறைக் காவலர்களுக்கும் உணவு அளிப்பதற்கும், தொகையை அதிகரித்துக் கொடுக்கப்பட வேண்டுமென்ற உத்தரவையும் அண்மையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–35*

***டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை அதிகாரிகளுக்கும், சிறைக் காவலர்களுக்கும் ஒரேவிதமான Basic Pay இருந்தது, அது மத்திய அரசின் ஊதிய உயர்வுக் குழு பரிந்துரையின் அடிப்படையில் இப்போது மாற்றப்பட்டிருக்கிறது. சிறைக் காவலர்கள் அதில் குறைவாகப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

காவல் துறையிலே இருப்பவர்களைப் போலவே சிறை அலுவலர்களுக்கும் அதே Basic Pay வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஏதேனும் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து நான் செய்வதைவிட, உங்களால்தான் அதிகம் செய்ய முடியும். மத்திய அரசுக்கு நீங்கள்தான் சொல்லவேண்டும். இந்த ஆக்கப் பணியை அவர்கள் செய்து, அதிக நிதி ஒதுக்கீட்டை அவர்கள் ஒதுக்குகின்றபோது கட்டாயமாக இதுகுறித்து அரசு உடனே நடவடிக்கை மேற்கொள்ளும். அதைப்போலவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சார்நிலை சிறைச்சாலைகளில் உள்ள 112 சிறைக் காவலர்களையும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.சி. மணி.

***திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிலைகள் வருகிறபோது, வேறு சிறைச்சாலைக்கு, ஒரு சிறைச் சாலையிலிருந்து அழைத்துச் செல்கிற நிலையில் மாறுபட்ட கருத்து இல்லாமல் ஒரு நவீன முயற்சியை மேற்கொண்டிருக்கிறீர்கள். ஆனால், இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலும் சரி, அமைச்சரின் இதுவரையில் பேசிய பேச்சிலும் சரி, எந்த நீதிபதி, எந்த இடத்திலிருந்து அவரைக் காவல் கைதியாக நிர்ணயிக்கிறார்? அவர் அந்த சிறைக்குப் போகவேண்டுமென்று நீதிபதிகள் உத்தரவிட்டா? அல்லது எந்த சிறைச்சாலைக்கு வேண்டுமானாலும் அனுப்பலாம் என்ற நிலை உண்டா? இதை யார் நிர்ணயிப்பது? சிறைக்குக் கொண்டு போன பிறகு அதனுடைய சிறைத் தலைவர் அதற்கான பொறுப்பை ஏற்கிறார். அது வேறு விஷயம். ஆனால், நீதிபதி அவர்கள் அவரை காவலில் வைக்க வேண்டுமென்ற உத்தரவைப் போடுகிறபோது, அவரை எந்த இடத்திற்கு அனுப்புவது என்ற வரையறை இல்லை. அதைப் பற்றி அமைச்சர் விளக்குவாரா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதி எப்படி உத்தரவு போடுவது என்பது நடைமுறையில் இருந்து வருகின்ற ஒன்று. சிறைச்சாலையிலே எந்தளவுக்கு இடம் இருக்கிறது என்பதைப் பொறுத்து அந்தந்த சிறைகளுக்கு அவர்களை மாற்றுகிற அதிகாரம் Prison Mannual–லிலே இருக்கிறது என்பதை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நடைமுறையில் இருக்கிறது என்று சொல்கிறார்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியென்றால், எங்கள்மீது போடப்பட்ட வழக்கில் 5 பேர் கைது செய்யப்பட்டோம். அதிலே எங்கள் தலைவரை சென்னை மத்திய சிறைக்கு அழைத்துக் கொண்டு போனார்கள். அங்கு போய் வேலூருக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனிப்பட்ட பிரச்சினைகளை எல்லாம் பிறகு கொண்டு வாருங்கள். சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. கோ.சி. மணி:** இது தனிப்பட்ட பிரச்சினை அல்ல. இனிமேலாவது இதை வைத்துக்கொண்டு சிறை அதிகாரிகளோ அல்லது வேறு அலுவலர்களோ, தங்கள் இஷ்டத்திற்கு நடக்காமல் இருப்பதற்கான விளக்கத்தை நீங்கள் தந்தால் நலமாக இருக்கும் என்பதற்காகத்தான் நான் விளக்கம் கேட்கிறேனே தவிர, நான் உள்ளே நுழையவில்லை. நுழைந்தால் எனக்குப் பலன் ஒன்றும் இல்லை. ஆகையால், நான் கேட்பது, இனிமேலாவது அவர்கள் இஷ்டத்திற்கு நடக்காமல் நீதித் துறைக்குக் கட்டுப்பட்டு அல்லது அரசுக்குக் கட்டுப்பட்டு சிறைத் துறை அதிகாரிகள் நடக்க வேண்டுமென்பதை வலியுறுத்தித்தான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேனே தவிர வேறு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பேசுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் சாமிநாதன் அவர்கள் பேசிய பேச்சுக்குப் பதில் அளிக்கிறபோது ஒன்றைச் சொன்னேன். நீதிபதிகள் எப்படியெல்லாம் சில நேரங்களில் பேசுகிறார்கள். அந்தப் பேச்சு சரியில்லை என்று எப்படி உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது என்பதைப் பற்றிக்கூட அண்மையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பத்திரிகையிலே படித்திருப்பார்கள். இதைப் பொறுத்தவரைக்கும் நீதிபதி இந்த சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டுமென்று உத்தரவிட்டாலுங்கூட அந்த சிறைச்சாலையிலே இடம் இல்லாதபோது மாற்று சிறைச்சாலைக்குக் கொண்டு செல்ல சிறைத் துறைத் தலைவருக்கு, சிறை அதிகாரிகளுக்கு Prison Mannual விதிகளின்படி இடம் இருக்கிறது என்பதைத்தான் நான் எடுத்துச்சொன்னேன்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு குறிப்பிட்ட வழக்கை மட்டும் சொல்கிறேன் என்பதல்ல. இப்படிப் பல வழக்குகள் நடந்திருக்கின்றன. எனக்குத் தெரிந்த

உதாரணத்தைக் குறிப்பிடுகிறேன். நான் ஆடுதுறையிலே கைது செய்யப்பட்டேன். என்னை ரிமாண்ட் செய்ய வேண்டிய நீதிபதி அவர்கள் சென்னையில் இருந்தார்கள் என்பதற்காக என்னைக் கைது செய்தவர்கள் இரவு 3–1/2 மணிக்குக் கைது செய்தவர்கள் திருச்சி கொண்டு வந்து மறுநாள் இரவு 3–1/2 மணிக்கு சேலம் கொண்டு வந்தார்கள். இதில் இரண்டு மத்திய சிறைச்சாலைகளைத் தாண்டி நான் போயிருக்கிறேன். திருச்சி மத்திய சிறைச்சாலை, சென்னை மத்திய சிறைச்சாலை, சேலம் மத்திய சிறைச்சாலை. என்ன காரணம்? அங்கே இடம் அப்போது இருக்கிறது. மறுநாள் கைதிகளைச் சேர்த்திருக்கிறார்கள். அதேபோல, சென்னை நகர வணக்கத்திற்குரிய மேயர் அவர்களை மதுரை மத்திய சிறையில் அடைத்துள்ளார்கள். சென்னை மாநகர கவுன்சிலர் ஒருவரை சென்னையில் கைது செய்து திருச்சி மத்திய சிறையில் அடைத்துள்ளார்கள். அதுபோல, அந்த ஊரிலே ஒரு கவுன்சிலர் மாற்றப்பட்டார்...

பிற்பகல் 1–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விதிகளைச் சொல்லுங்கள். என்ன விதி என்று சொல்லுங்கள்.

**திரு. கோ.சி. மணி:** அதற்கு வரைமுறைப்படுத்துங்கள். இந்த வழக்கைவிட்டு விடுங்கள். அதை அடையாளமாக, உதாரணத்திற்காகத்தான் சொல்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. இனிமேலாவது எப்படிப்பட்ட நடைமுறை கடைப்பிடிக்கப்படும் என்பதற்கு விளக்கம் தேவை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தகுதிக்கு ஏற்ப சிறந்த சிறைச்சாலை சேலம் என்று எடுத்து, அங்கு அவர்களை எடுத்துச் சென்றிருக்கலாம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அவையில் இல்லாதவர்களைப் பற்றி பொதுவாகப் பேசக்கூடாது என்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி அவையில் இல்லாதவர்களைப் பற்றி பேசுவதால் நானும் பேசலாம் என்று கருதுகிறேன்.

அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் திருமதி சசிகலா அவர்கள் கைது செய்யப்பட்டு, சென்னை மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். அதேநேரத்தில் அவருடைய அக்காவின் மகன்கள்



திரு. தினகரன் அவர்களும், திரு. பாஸ்கரன் அவர்களும் இருவரும் கைது செய்யப்பட்டு, இதே சென்னை மத்திய சிறைச்சாலையில் வைக்கப்பட்டார்கள். கைதிகளுக்குக் கிடைக்கின்ற நேரத்திலே மூவரும் சந்தித்துக்கொண்டு பேசினார்கள். இதை சிறை அதிகாரிகள் பார்த்துவிட்டார்கள். அன்று இரவே, திருமதி சசிகலா அவர்களை மட்டும் இங்கே சென்னையில் வைத்துவிட்டு, திரு. தினகரன் அவர்கள் உடனே கடலூர் சிறைக்கு மாற்றப்பட்டார். இரவோடு இரவாக திரு. பாஸ்கரன் அவர்கள் பாளையங்கோட்டை சிறைக்கு மாற்றப்பட்டார். எந்தச் சட்டத்தின்கீழ் அவர்கள் மாற்றம் செய்யப்பட்டார்களோ, அதே சட்டத்தின்கீழ்தான் இவர்களும் மாற்றம் செய்யப்பட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அவை முன்னவர் பதில் சொல்கிறார்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அவை முன்னவர் பதில் சொல்கிறார். முதலமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் சொல்லி விட்டார்கள். அவை முன்னவர் பதில் சொல்கிறார். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** போதும், அது முடிந்துவிட்டது.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறை நிர்வாகத்தைப் பொறுத்தவரைக்கும் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவருக்கும் நேர்மையான முறையில் விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நடைமுறை இருக்க வேண்டும் என்பதுதான் நீதிதேவதையாகச் செயல்படுகிற எங்கள் புரட்சித் தலைவி அவர்களின் ஆணை, அவா. (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவி அவர்களைப் பெண் என்றும் பாராமல் அந்தக் காலத்திலே கைதுசெய்து இதே மத்திய சிறைச்சாலையிலே B-கிளாசிலே போட்டீர்கள். கட்டில்கூட இல்லை. வெறும் தரையிலே அவரைப் படுக்க வைத்தீர்கள். அதுபோன்று கொடுமைகள் எல்லாம், புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இல்லை, நடக்காது. கட்டில்

தரப்படுகிறது, Fan தரப்படுகிறது, Toilet–க்கு commode–கூட தரப்படுகிறது என்பதுதான். வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் சிறையிலே எல்லோருக்கும் நல்ல வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்ற ஆணையைத்தான் புரட்சித் தலைவி அவர்கள் இட்டிருக்கிறார்கள் என்பதனை நான் சொல்லி...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வசதி செய்து தருகிறோம் என்று சொல்கிறார், அதை வேண்டாம் என்கிறீர்களா?

**திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, நான் இங்கே கேட்கிறேன். சிறையிலே எங்களுக்கு வசதி செய்து கொடுக்கவில்லை என்பது பற்றியது அல்ல என் கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத்தான் விளக்கம் கொடுக்கப்படுகிறது.

**திரு. கோ.சி. மணி:** அங்கே அப்படிப்பட்ட வரைமுறை இல்லை. அந்த வரைமுறை இனிமேலாவது கடைப்பிடிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேச்சை முடித்துவிடுகிறேன்.

**திரு. கோ.சி. மணி:** முதலமைச்சர் சொன்னதும், மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் சொன்னதும் ஏற்கெனவே நீங்கள் செய்யவில்லையா, அந்தச் சட்டப்படிதான் நாங்கள் செய்கிறோம் என்று குறிப்பிட்டார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** ஒரு நிமிடம். (குறுக்கீடு) நான் உங்களுக்குத்தான் பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, ஒரு குற்றவாளியை ரிமாண்டு செய்யும்போது பெரும்பாலான நீதிபதிகள் ரிமாண்டுதான் செய்கிறார்களே தவிர, அவர்களை எந்தச் சிறையில் வைக்க வேண்டும் என்று குறிப்பிடுவது இல்லை. சென்னையில் அந்த வழக்கு நடந்து, இப்படி ஒரு தண்டனை வழங்கப்பட்டால் ரிமாண்டு செய்யப்பட்டால் அவரை பொதுவர்க சென்னை மத்திய சிறைச்சாலைக்குத்தான் கொண்டு செல்கிறார்கள். அங்கே இடம் இருந்தால், வசதி இருந்தால் அந்தச் சிறையின் கண்காணிப்பாளர்–Superintendent அந்தக் கைதியை அங்கேயே வைத்துக் கொள்கிறார். இடம் இல்லை, வசதி இல்லை எனறு சொன்னால் அந்த சிறைக்



கண்காணிப்பாளருக்கு – Prison Superintendent–க்கு வேறு இடம் இருக்கின்ற ஒரு சிறைச்சாலைக்கு அந்தக் கைதியை மாற்றி அனுப்புவதற்கு அதிகாரங்கள் உண்டு. அதைத்தான் பொதுவாகச் செய்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் அதிகப்படியான விசாரணைக் கைதிகளாக வருகின்ற பலர் குடிப்பழக்கத்திற்குள்ளாகியிருக்கின்றவர்கள் சிறைக்கு வந்தவுடன், அவர்கள் addicted to alcohol என்ற நிலையிலேயிருந்து சிறைக்கு வந்து 5 தினங்கள், 10 தினங்கள் அதற்கு வாய்ப்பே இல்லாமல் இருக்கின்றபோது withdrawal symptom என்ற நோய்க்கு உள்ளாக்கப்பட்டு இறந்துவிடுகின்ற நிலையும் ஏற்படுகிறது. அதனால் குடிப்பழக்கமுள்ள குற்றவாளிகளை, அவர்களைத் திருத்துவதற்காக de–addiction centres என்று சொல்லக்கூடிய அந்தக் குடிப்பழக்கத்திலிருந்து அவர்கள் விடுபடக்கூடிய மருத்துவ சிகிச்சை தரக்கூடிய மையங்களைச் சிறைச் சாலைகளில், மாவட்டச் சிறைச்சாலைகளில் நிறுவுவதற்கும் அரசு ஏற்பாடு செய்திருக்கிறது என்பதையும் அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1–45

அதைப்போலவே, தற்போது மாவட்டச் சிறைச்சாலைகள் அளவிலே இருக்கின்ற Yoga and Meditation என்று சொல்லக்கூடிய தியானப் பயிற்சிகள், கைதிகள் மனம் மாறக்கூடிய பயிற்சிகள், விடுதலைக்குப் பிறகு வெளியே சென்று மனம் திருந்தி நல்வாழ்வில் ஈடுபடக்கூடிய மனப்பக்குவத்தை Meditation and Yoga தரும் என்ற காரணத்தால், கிளைச் சிறைச்சாலைகளுக்கும் அவற்றை நீட்டிக்க, கைதிகளைத் திருத்த வேண்டுமென்ற நோக்கோடு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் இதற்கான ஆணையினையும் இட்டிருக்கிறார்கள் என்ற செய்தியினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றுமொரு மகிழ்வான செய்தி. பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய 93–வது பிறந்த நாளையொட்டி 15–9–2001 அன்று 10 ஆண்டுகாலம் தொடர்ந்து சிறையிலே நன்னடத்தையோடு செயல்பட்ட கைதிகள் 63 பேரை அரசு விடுதலை செய்ய வேண்டுமென்ற உத்தரவையும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இட்டிருக்கிறார்கள் என்ற மகிழ்வான செய்தியினையும் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். பல்வேறு வெட்டுத் தீர்மானங்களையும் தந்திருக்கிறீர்கள். எல்லாமே, மிக அதிகப்படியான வெட்டுத் தீர்மானங்கள்,

நீதிமன்றங்கள் வேண்டுமென்ற கோரிக்கையை உள்ளடக்கியதாக இருக்கின்றன. உங்களது கோரிக்கைகளை எல்லாம் அரசு நிச்சயமாகப் பரிவுடன் பரிசீலித்து, நிதி ஆதாரத்தையும் டில்லியிடம் தொடர்ந்து வாதாடி, போராடிப் பெற்று, படிப்படியாக உங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உறுதுணையாக நிற்கும் என்ற உறுதியினை அளிப்பதுடன், வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று மானியக் கோரிக்கையை ஏற்குமாறு பணிவோடு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 13 – நீதி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 13, நீதி நிருவாகம் வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.கே. வேதரத்தினம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சக்ரபாணி.

திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை. திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.



**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.144,57,35,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஆ) கோரிக்கை எண் 14 – சிறைச்சாலைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 14– சிறைச்சாலைகள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.



**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆர். சக்கரபாணி, இருக்கையில் இல்லை. திரு. ஆர். சக்கரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. நெப்போலியன்.

**திரு. து. நெப்போலியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. நெப்போலியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

*"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.60,56,24,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"* என்னும் மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.*

*பிற்பகல் 1–50*

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை நடந்த விவாதத்தில் நம்முடைய சட்டத் துறை அமைச்சரும், நம்முடைய அவை முன்னவரும் பற்றிய விவாதங்களில் நடவடிக்கை குறிப்பேட்டிலே சிலவற்றை நீக்குவதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். அன்பழகன் அவர்கள் பேசியது, அவற்றில் எதையெதை நீக்கி இருக்கின்றீர்கள் என்று விளக்கம் தந்தால், நன்றாக இருக்கும். சில வார்த்தைகளை நீக்கலாம். முழுவதுமாக நீக்கிவிடுவது என்பது சரியாக இருக்காது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் நான் மாண்புமிகு உறுப்பினர் சாமிநாதன் அவர்கள் பேசுகின்றபோது, விளக்கம் சொல்லிக் கொண்டு இருந்தபோது, மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் அவர்கள் எழுந்து பொன்னையன் சட்டப் பேரவையிலேயே கலைஞர் அவர்களை டேபிள் வெயிட்டால் அடித்து வன்முறையில் ஈடுபட்டார். அவர்கள் இதைப்பற்றிப் பேசலாமா என்று கூறினார். அதற்கு நான் விளக்கம் தருகிறபோது, எதிர்க்கட்சித் தலைவர் அன்று காதில் கேட்க முடியாத அளவிற்கு அமங்கலமான, கெட்ட வார்த்தைகளில் பேசியதன் காரணத்தால் தமிழ் உணர்வுகூட இல்லாமல் அவர் அப்படி பேசிய காரணத்தால், இந்த நிகழ்வு நடந்தது என்பதுபற்றி நான் குறிப்பிட்டேன். அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னீர்கள். அவைக் குறிப்பில் அவற்றுக்கு இடம் தரலாம் என்ற கருத்தை நான் சொல்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்பழகன் அவர்கள் தங்களைப் பற்றிச் சொன்ன அந்தக் கருத்துகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு நான் உத்தரவிட்டேன். அவை நீக்கப்பட்ட காரணத்தால் அதற்குப்பிறகு நீங்கள் சொன்ன பதில் அதற்குத் தேவையில்லை என்ற காரணத்தால்தான் ஒட்டுமொத்தமாக அவை நீக்கப்பெற்றன. என்ன இருந்தாலும், நடவடிக்கை குறிப்பைப் பார்த்துவிட்டு, எப்படி அதை வைத்துக்கொள்ளலாம் என்பதுபற்றி நான் பிறகு அறிவிக்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனி வருங்காலங்களில் சட்டமன்ற உறுப்பினர்களாக வருபவர்கள் கடந்தகால வரலாறை தெரிந்துகொள்வதற்காகவாவது இந்த நடவடிக்கைகளை தாங்கள் அவைக் குறிப்பில் இருக்கும்படி உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்பழகன் பேசியது, "இதே சட்ட அமைச்சர் ஒரு காலத்திலே இங்கே எங்களுடைய தலைவரை பேப்பர் வெயிட்டைத் தூக்கி எறிந்து, யார் வன்முறையாளர் என்பதை அவரே அடையாளம் காட்டியவர். அவர் மற்றவர்களுக்கு உபதேசம் செய்ய வேண்டாம்" என்று அவர் சொன்னார். அதற்கு, அன்பழகன் அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது என்று அப்போது நான் குறிப்பிட்டேன். அதற்குத் தாங்கள் சொன்ன பதில், அவை முன்னவர் அவர்கள் சொன்ன பதில், "துரதிர்ஷ்டவசமான அந்த நிகழ்வு நடந்தபோது எத்தகைய அமங்கலச் சொல்லை, கெட்ட வார்த்தையை உங்கள் தலைவர் பேசினார் என்பதைக் கேட்டால், நீங்கள் தமிழ்ப் பண்புக்கே ஒரு முற்றுப் புள்ளி வைத்துவிடுவீர்கள் என்று கூறுகிறேன்" என்று தாங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இதில் ஒன்றும் தவறு ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. அன்பழகன் பேசியதும் இருக்கட்டும். தாங்கள் சொன்னதும் இருக்கட்டும். நாட்டிற்கு உண்மைகள் தெரியட்டும்.

## 6. அறிவிப்புகள்

### (ஆ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாலை சட்டமன்றப் பேரவையின் கூட்டம் நடைபெற இருப்பதால், மாலை 4–30 மணியளவில் சட்டமன்றப்

பேரவை மண்டபத்தையொட்டிய பகுதியில், உறுப்பினர்களுக்குச் சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-53 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4-30

பேரவை மீண்டும் பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் கூடியது.

## 5. மாணியக் கோரிக்கைகள், 2001-02, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

### (இ) கோரிக்கை எண் 12 - 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-02 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 12 - 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.26,48,55,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 161, திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் உள்ள வெட்டுவானம் எல்லையம்மன் கோயில் குளத்தைச் சீர் செய்து, நீர் நிரப்பி, பக்தர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,48,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 596, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1245, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தில் மழைநீரைச் சேமித்து நிரந்தரமாக தண்ணீர் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,48,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1564, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 801, திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,48,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1425, திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 457, திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1297, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 101, திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 540, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 196, திரு. ஜி.கே.மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 381, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 972, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1205, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1492, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,48,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 753, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இலலை.

வெட்டுத் தீர்மானம் எண் 854, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1102, திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 42, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 495, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலுக்கு அருகில் பக்தர்களுக்கு வசதியாக நட்சத்திர தங்கும் விடுதி, கோயில் தேவஸ்தானம் மூலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,48,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 629, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கழுக்குன்றம் கிரிவலம் பாதையைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,48,55,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1192, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2956, திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1811, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1236, திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இலலை.

வெட்டுத் தீர்மானம் எண் 1458, திரு. அன்பில் பெரியசாமி, இருக்கையில் இல்லை.

[பேரவைத் தலைவர்] [2001 ஆகஸ்ட் 28

வெட்டுத் தீர்மானம் எண் 1085, திரு. எச். ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1121, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் திருக்கோயில்களில் நியமிக்கப்படும் அறங்காவலர்கள் ஒரே குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட அறங்காவலர்கள் நியமனம் செய்யப்படுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.20,48,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 12 – தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு ஆங்கிலத்திலும், தமிழிலும் அவையில் வைக்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பை @ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் மானியக் கோரிக்கையின்மீது தங்களுடைய மேலான கருத்துகளைக் கூறிய பின்பு இறுதியில் என்னுடைய பதிலுரையை அளிக்கிறேன்.

## (ச) கோரிக்கை எண் 50 - சுற்றுலா

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 50 – சுற்றுலா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

@ 711 முதல் 734 வரையிலான பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



2001 ஆகஸ்ட் 28]

**மாண்புமிகு திருமதி இரா. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.16,93,10,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 150, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வேலூர் தொகுதியில் உள்ள பாலமதி, செங்காநத்தம் மலைக் கிராமங்களையும், வாணியம்பாடி தொகுதியில் உள்ள காவலூர் மலைக் கிராமத்தையும் சுற்றுலா மையங்களாக அறிவித்து வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,93,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[illegible]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1153, திரு. வே. [illegible], இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 570, திரு. கா. சுந்தரம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1119, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆழியார் அருகிலுள்ள குரங்கு பால்ஸ் பகுதியை சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,93,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1178, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் உள்ள ஏரியில் ஆயிரக்கணக்கில் வளர்ந்துவரும் ஆகாய தாமரை செடிகளை உடனடியாக அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,93,10,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1321, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 800, திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் தேவனாம்பட்டினம் (சில்வர் பீச்) வெள்ளி கடற்கரையினை சுற்றுலாத் துறை ஏற்று மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து"விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,93,10,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1423, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை நகருக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வசதியைக் கருத்தில் கொண்டு சுற்றுலாத் துறையின் மூலம் ஒரு சுற்றுலா விடுதி கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,93,10,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1323, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 76, திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 732, திரு. எஸ்.கே. வேதரத்தினம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1231, திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 819, திரு. துரை கி. சரவணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 266, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1636, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 371, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 996, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீாமானம் எண் 1214, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,93,10,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1485, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம் குருவம்பட்டி உயிரியல் பூங்காவினை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,93,10,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 717, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 853, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1097, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,93,10,000/-ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 53, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 496, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதி, வடகாடு ஊராட்சியில் உள்ள பரப்பலாறு அணையில் பூங்காக்கள், படகுப் போக்குவரத்து ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,93,10,000/-ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 644, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,93,10,000/-ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 532, திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1086, திரு. எச். ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 658, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**THIRU J. HEMACHANDRAN:** Hon'ble Speaker Sir, "To discuss the need to develop the Tourist Centres like the famous flume at Mathoor Thirpparappu water falls, Muttukizhi wildlife centre, Pechiparai Dam and Sivalogam in Kanyakumari District", I move–

"That the sum of Rs.16,93,10,000/– allocated under the Demand No.50 – Tourism be reduced by Rs.100/–."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2943, திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1241, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை திருமலை நாயக்கர் மகாலினை பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,93,10,000/-ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திருமதி இரா. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பை@ நான் இந்தப்

---

@ 735 முதல் 768 வரையிலான பக்கங்களில் இணைப்பு IV-ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் எனது பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மானியக் கோரிக்கைகள் மீதும் உறுப்பினர்கள் பேசலாம். நிறைய உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொருவரும் 6 மணித்துளிகளுக்கு மேல் பேசாமல் கட்டுப்பட்டு பேச்சை முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், அண்ணன் திரு. லத்தீப் அவர்கள் உட்பட முதலில் திரு. ஆர். சக்ரபாணி.

***திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சுற்றுலாத் துறை குறித்த மானியக் கோரிக்கைகளில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தத் தங்களுக்கும், இந்த அவையில் இரண்டாவது முறையாக நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த தமிழகத்தின் முத்தமிழ் அறிஞர், எங்கள் குடும்பத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், சென்னை மாநகரத்தினுடைய தந்தை தளபதி அவர்களுக்கும், தொகுதி வாக்காளர்களுக்கும், தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் இந்த நேரத்தில் முதலில் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறையானது 1925 ஆம் ஆண்டு நீதிக் கட்சி ஆட்சிக்காலத்திலே பனகல் அரசர் முதலமைச்சராக இருந்த காலத்தில்தான் தோற்றுவிக்கப்பட்டது. பல்வேறு வகைப்பட்ட கருத்துகள் இருந்தாலும், இந்தத் துறை அப்போது தோற்றுவிக்கப்பட்டதற்குக் காரணம், கோயில்கள் தனியார் ஆதிக்கத்திலும், அதேபோல், சிலரின் விருப்பு வெறுப்புகளால் ஏற்பட்ட கொடுமைகளைத் தடுக்கவும், கோயில்களில் வரக்கூடிய வருமானங்கள் வழியிலே கசிந்து, காய்ந்துவிடாமல் தடுக்கவும், அவை அந்தக் கோயில்களைச் சென்றடைவதற்கும், அதேபோல, அந்தக் கோயில்களுக்குச் சொந்தமான சிலைகள், நகைகள், அந்தக் காலத்திலிருந்த தக்கார்கள் பராமரிப்பில் இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் அப்போது இந்தத் துறை தோற்றுவிக்கப்பட்டது.

அதேபோல, நமது நாட்டு திருக்கோயில்கள் எல்லாம் மிகத் தொன்மை வாய்ந்தவை. இயல், இசை, நாடகம், சிற்பக் கலை ஆகியவற்றை



வளர்க்கவும், அதேபோல, சமுதாய ஒற்றுமையைப் பேணவும் பெரிதும் உதவியது என்பது வரலாறு. பழங்காலத்தில் கோயில்களில் 4 கால பூஜைகள், 6 கால பூஜைகள் எல்லாம் உண்டு. பல்வேறு கிராமங்களிலிருந்து வருகின்ற மக்கள் ஒரு *கிராமத்திலுள்ள கோயிலுக்கு வந்து வழிபாடு செய்வது, பூஜைக் காலங்களில், திருவிழாக் காலங்களில் எல்லாம், பல்வேறு சாதி சமயத்திற்குட்பட்ட மக்கள் எல்லாம் ஒரே ஊரிலே வந்து, ஒரே கோயிலிலே ஒற்றுமையாக ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, அந்தக் கோயிலை வழிபட்டார்கள் என்பது வரலாறு.

பிற்பகல் 4–40

அதேபோல, நமது திருக்கோயில்கள் தமிழர்களின் நாகரீகத்தின் சின்னங்களாகவும், வரலாற்றுப் பெட்டகங்களாகவும், பண்பாட்டின் நிலைகலன்களாகவும் விளங்கி வருகின்றன. பாரத நாட்டின் சிறப்பை எடுத்தியம்பக்கூடிய இருப்பிடமாக இருப்பது, தமிழ்நாட்டிலுள்ள ஆலயங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அதேபோல, எங்களுடைய தலைவர் டாக்டார் கலைஞர் அவர்கள் 1953 ஆம் ஆண்டு பராசக்தி படத்திலே, ஒரு காட்சியிலே, ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார். 'கோயில் கூடாது என்பதல்ல, அது கொடியவர்களின் கூடாரமாக மாறி விடக்கூடாது' என்று சொன்னார். அந்தக் கருத்தைச் சொல்வதற்குக் காரணம், 1996 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக, தி.மு.க. ஆட்சிக்கு வந்தால், தி.மு.க.–வைச் சேர்ந்தவர்கள் கோயில்களை எல்லாம் இழுத்து மூடிவிடுவார்கள். எந்தக் கோயிலிலும் பூஜை நடக்காது, அர்ச்சனை நடக்காது, கும்பாபிஷேகம் எல்லாம் நடக்காது என்றெல்லாம் சொன்னார்கள். அப்படிப்பட்ட வஞ்சகர்களின் கருத்துகளை தவிடுபொடி ஆக்குகின்ற வகையில்தான், 1996 ஆம் ஆண்டு முதல் 2001 வரை நடைபெற்ற 5 ஆண்டுக்கால ஆட்சிக்காலத்திலே, இந்து சமய அறநிலையத் துறையைப் பொறுத்தவரையிலே பல்வேறு சாதனைகளைச் செய்த பெருமை டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசைச் சேரும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த அருமை பெருமைகளையெல்லாம் பக்திமார்களும், மடாதிபதிகளும், பாராட்டிய வண்ணம் உள்ளனர் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, அண்ணா அவர்கள் ஒரு காலத்திலே சொன்னார்கள், 'நான் திருநீர் பூசாத இந்து–(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய தலைவர் அப்படிச் சொன்னார் என்று உறுப்பினர் சொல்கிறார். ஆனால், முன்னாள் அமைச்சர் ஒருவரை தீக்குண்டம் மிதிக்கக் கூடாது என்று அவர் சொன்னதையெல்லாம் பல பத்திரிகைகளிலே வந்ததையெல்லாம் நாங்கள் பார்த்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் அப்படிச் சொன்னார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. (சிரிப்பு) காட்டுமிராண்டித்தனம் என்றெல்லாம் சொன்னார்கள்.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நீடிக்கவேண்டுமென்பது அவருடைய கருத்தாக அந்தக் காலத்திலே அமைந்தது. அதேபோல, அண்ணா அவர்கள் ஒரு காலத்திலே ஒரு பழமொழியைச் சொன்னார்கள், 'நான் திருநீர் பூசாத இந்து, லுங்கி அணியாத முஸ்லீம், சிலுவை அணியாத கிறிஸ்துவர்' என்று சொன்னார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம், 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற அடிப்படையிலே, தமிழ்நாட்டைச் சேர்ந்த மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்க்கை நடத்தவேண்டுமென்ற ஒரு கருத்தை வலியுறுத்தினார். அண்ணா வழியில் வந்த டாக்டர் கலைஞர் அவர்கள், கடந்த காலத்திலே ஒரு பழமொழியைச் சொன்னார்கள், 'விவேகம் என்னும் வெள்ளி முளைத்து, சாதிப்பித்து என்னும் சனி தொலைந்தால்தான், சமத்துவம் என்ற ஞாயிறு தோன்றும்' என்று சொன்னார்கள்.

அதற்கேற்ப தமிழகத்திலே சாதி பேதமற்ற சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்காகத் தமிழகம் முழுவதும் 150 இடங்களிலே சமத்துவபுரத்தையும் நிறுவி அங்கே தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், முற்படுத்தப்பட்ட மக்கள், இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதற்காகத் தமிழகம் முழுவதும் 150 இடங்களிலே சமத்துவபுரத்தை நிறுவிக் காட்டியவர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதன் காரணமாகத்தான், கடந்த இரண்டு, மூன்று ஆண்டு காலமாகத் தமிழ்நாட்டிலே எங்கும் சாதிச் சண்டைகள் வரவில்லை என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கடந்த 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஆட்சியில், 828 கோயில்களுக்குக் குடமுழுக்குகள் நடைபெற்றன. ஆனால், கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலத்திலே 2,459 கோயில்களுக்குத் திருப்பணிகள் நடைபெற்றன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோல, கோயில்களுடைய வருவாய், கோயில் சொத்துக்கள் முழுமையாக பாதுகாக்கப்பட வேண்டுமென்ற ஆவலுடன் சென்ற அரசு அதிரடியாய் நடவடிக்கைகளை எடுத்து, பல நிலங்களையும், வீட்டுமனைகளையும் மீட்டு இருக்கின்றது. நியாய வாடகை நிர்ணயம் செய்து, நிலுவைகளை வேகமாக வசூலித்து, கோயில்களின் வருமானத்தை சென்ற அரசு உயர்த்திக் காட்டியுள்ளது. எந்தவொரு தனியாருக்கும், கோயில் நிலங்களை விற்பனை செய்வதில்லை என்ற முடிவை அந்த அரசு எடுத்திருந்தது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, 1991 முதல் 1996 ஆம் ஆண்டுவரை நடைபெற்ற ஆட்சிக்காலத்திலே ஏழையெளியவர்களின் திருமணத்திற்காக, 1,500 ரூபாய் வீதம் 327 பேருக்குத்தான் வழங்கப்பட்டது. ஆனால், 1996 ஆம் ஆண்டு டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி பொறுப்பேற்ற பின்பு ரூபாய் 3,000 வீதம் 2,166 பேருக்கு, திருமண உதவித் தொகை வழங்கப்பட்டது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 4-45

அதேபோல, தமிழ்ப் புலவர்கள். நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் வருமானத்தை அடிப்படையாகக்கொண்டு தமிழ்ப் புலவர்கள் 150 பேருக்கு ரூபாய் 3 ஆயிரம் வீதம் தொகுப்பு ஊதியம் வழங்கப்பட்டது. அதேபோல, சென்ற ஆட்சிக் காலத்திலே செயல் அலுவலர்கள் பணியிடங்கள் நிறைய காலியாக இருக்கின்றன என்பதை உணர்ந்து, டாக்டர் கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு பொறுப்பேற்றபின்பு செயல்நிலை-3 அலுவலர் 100 பேரும், செயல்நிலை-4 அலுவலர் என்ற இடத்திலே 100 பேரும் பணியமர்த்தப்பட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

1991 ஆம் ஆண்டு இந்தத் திருக்கோயில்கள் மூலமாக கிடைத்த வருவாய் 365.20 கோடி ரூபாய். ஆனால், 1996 ஆம் ஆண்டு கோயில்கள் மூலம் கிடைத்த வருவாய் 648.7 கோடி ரூபாய் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, ஆதிதிராவிடர், பழங்குடியினர் வசிக்கின்ற பகுதிகளிலே இப்போது இந்து சமய

அறநிலையத் துறைக்கு உட்படாத, 25 ஆண்டுகளுக்கு முற்பட்ட கோயில்களுக்கு ரூ.25 ஆயிரம் வீதம் சுமார் 350 கோயில்களுக்கு நிதி வழங்கப்பட்டது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, சொத்துப் பதிவேடுகள். 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரையான ஆட்சிக்காலத்திலே 1,628 சொத்துக்கள்தான் பதிவு செய்யப்பட்டன. ஆனால், 1996 முதல் பொறுப்பு ஏற்ற கலைஞருடைய ஆட்சிக் காலத்திலே பதிவு செய்யப்பட்டவை 8,325 என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, சுற்றுலாத் துறைக்கு நான் வருகின்றேன். சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையிலே பல்வேறு கருத்துகளை இங்கே கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே சொல்லியிருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் நீங்கள் நிறைவேற்றினால் கண்டிப்பாக நாங்கள் வரவேற்போம்.

அதேபோல, பழனி, நாகூர், வேளாங்கண்ணி, திருவண்ணாமலை போன்ற இடங்களிலெல்லாம் நட்சத்திர விடுதிகள் கட்டப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். கண்டிப்பாக அதை நாங்கள் வரவேற்கத் தயாராக இருக்கிறோம், செய்யுங்கள். அதை வரவேற்கத் தயாராக இருக்கின்றோம்.

அதேபோல, சென்ற கலைஞருடைய ஆட்சிக் காலத்திலே, சுமார் இரண்டரை கோடி ரூபாய் மதிப்பிலே சென்னை கலைவாணர் அரங்கத்திற்குப் பக்கத்தில் அனைத்து வசதிகளும் கொண்ட ஒரு Tourism Centre அமைக்கப்பட்டு, அந்தக் கட்டடத்திலே இப்போது அனைத்து மாநிலங்களுடைய Information Centre அமைவதற்கு இந்த அரசு அந்தந்த மாநிலங்களுக்கு ஒதுக்காமல் இருப்பது வருத்தத்திற்குரியது. அதை ஒதுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அந்தக் கட்டடத்திற்குக் குளிர்சாதன வசதி செய்தால்தான், வெளிநாட்டுப் பயணிகளும் வருவதற்கு வசதியாக இருக்கும். எனவே, அதற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே நிதி ஒதுக்கப்படவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு நிதி ஒதுக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 14 ஆண்டுகளாக நிலுவையில் இருந்த ஒகேனக்கல் தொங்குபாலம் கலைஞருடைய ஆட்சிக் காலத்திலேதான் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, வீரபாண்டிய கட்டபொம்மன்



நினைவு இடத்திற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது டாக்டர் கலைஞருடைய அரசு. அதேபோல, முக்கொம்பிலே சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது கலைஞருடைய அரசு. சென்ற ஆட்சிக்காலத்திலே சுற்றுலாத் துறையிலே கணினி மையத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர் டாக்டர் கலைஞர் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, சுற்றுலாத் துறையிலே 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஆட்சியிலே பல கவர்ச்சிகரமான திட்டங்களை அந்த அரசு அறிவித்தது. தனியார்கள் நட்சத்திர ஓட்டல்கள் கட்டினால் அதற்காக மானியம் வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், 7 ஓட்டல் உரிமையாளர்கள் அதைக் கட்டி, 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஆட்சியிலே அந்த மானியத்தைப் பெற முடியவில்லை. ஆனால், 1996 ஆம் ஆண்டு டாக்டர் கலைஞருடைய அரசு பொறுப்பேற்ற பிறகுதான், அந்த மானியம் அவர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இப்போது சுற்றுலா அபிவிருத்தியைக் கொண்டு, தனியார் தங்கும் விடுதிகளை ஊக்குவிப்போம் என்று இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது. அதேபோல, இன்றைக்கு நகர்ப்புறங்களிலே இருக்கின்ற முக்கியமான இடங்களை நீண்டநாள் குத்தகைக்கு தனியாருக்கு தாரை வார்க்கக் கூடாது என்று நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இப்போது பழனி நகரமானது இந்தியாவிலேயே இரண்டாவது வருமானம் ஈட்டக்கூடிய கோயில் உள்ள நகரமாகும். சென்ற ஆட்சிக் காலத்திலே (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களும் பிரிக்கப்படாத இந்த மாவட்டத்திற்குச் சொந்தக்காரர். பழனி பற்றி நான்கு கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.

பங்குனி உத்திரம், தைப்பூசம் போன்ற விழாக் காலங்களிலே சுற்றுலாப் பயணிகளும், இலட்சக்கணக்கான மக்களும் பழனி பேருந்து நிலையத்திற்கு வந்து செல்கிறார்கள். அங்கே வந்து செல்கின்ற மக்களுக்குப் பேருந்து நிலையம் முறையாக இல்லை. ஆனால், கலைஞருடைய அரசு சென்ற ஆட்சிக்காலத்திலே, கோயில் நிர்வாகத்திலேயிருந்து 1–1/2 கோடி ரூபாயும், அதேபோல மாநில அரசு 5–1/2 கோடி ரூபாயும் நிதி கொடுத்து, அதற்கு நிதி ஒதுக்கப்பட்டு கால்கோள் விழாவும் நடைபெற்றிருக்கிறது. எனவே, அந்தக் கோயில் நிருவாகத்தைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள்

பேருந்து நிலைய விரிவாக்கத்திற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, குடிநீர் வசதி. இப்போது பழனி நகரைப் பொறுத்தவரை, சென்ற ஆட்சிக் காலத்திலே 10 கோடி ரூபாய் ஒதுக்கி பக்தர்களுக்காக வசதிகளைச் செய்து கொடுத்த அரசு கலைஞர் அவர்களுடைய அரசு. அந்தக் கோயிலில் 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டி கட்டவேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். அதற்குண்டான ஒரு கோடி ரூபாயை பழனி நகராட்சிக்கோ அல்லது குடிநீர் வடிகால் வாரியத்திற்கோ கொடுத்தால் உடனடியாக அந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டு, அந்தக் கோயிலுக்கு வருகின்ற மக்கள் தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கு உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல—

பிற்பகல் 4–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வாக்கியத்தோடு உரையை முடியுங்கள்.(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து ஆலயங்களிலேயும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த ஆணைக்கிணங்க எல்லா ஆலயங்களிலேயும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுப்போம் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சக்ரபாணி, தண்ணீர் கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டார். எனவே, இத்தோடு உரையை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு)

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே சாதி மோதல்கள் கிடையாது; சாதிக் கலவரங்கள்—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம். திரு. சக்ரபாணி, பேசி முடியுங்கள்.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான சுமார் 300 ஏக்கர் நிலம் இப்போது



கள்ளிமந்தையம் அருகே இருக்கிறது. அந்தக் கோயிலுக்கு சுமார் 100 கோடி ரூபாய் இருப்பு இருக்கிறது. அதேபோல், ஆண்டிற்கு 20 கோடி ரூபாய் முதல், 30 கோடி ரூபாய், 40 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. அந்த வருமானத்தை வைத்து அந்தப் பகுதியிலே நிலம் இருப்பதால், அந்த நிலத்திலே ஒரு பொறியியல் கல்லூரியும், மருத்துவக் கல்லூரியும் இந்தத் துறையின் மூலமாக அமைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, புறவழிச் சாலை. பழனி நகரத்தைப் பொறுத்தளவிலே, இப்போது பக்தர்கள் தைப்பூசத்திற்கும் பங்குனி உத்திரத்திற்கெல்லாம் பல இலட்சம் பேர் வருகின்றார்கள். அந்தச் சமயத்திலே போக்குவரத்து இடைஞ்சல் ஏற்படுகின்றது. புறவழிச் சாலைக்குக் கடந்த காலத்திலே திட்டம் போடப்பட்டு, அது சம்பந்தமாக வழக்கு நீதிமன்றத்திலே நிலுவையில் இருக்கின்றது. எனவே, இந்த அரசு அந்த வழக்கினை விரைந்து முடித்து, அந்தப் புறவழிச் சாலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி சி. கனகதாரா.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம்.

"செந்தமிழே தேனே என்றன்
செயலினை மூச்சினை உமக்களித்தேனே"
"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

என்று தமிழ் உணர்ச்சி ஊட்டுகின்ற அழகிய கவிதைகளை புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதியிருந்தாலும், மேலும் அவ்வழகிய கவிதை வரிகளுக்கு தேனிசை சேர்த்து, திரையில் உணர்ச்சிகரமான ஒரு காட்சியையும் அமைத்து, அப்பாடல் வரிகளின் அழகையும், வீர உணர்ச்சிகளையும் அப்படியே மக்களிடம் கொண்டு சென்று சேர்த்த பெருமை நம் கழக நிறுவனர் மக்கள் திலகம், பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர். அவர்களையே சேரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே எனக்கு உரையாற்ற நீங்கள் அளித்த வாய்ப்பிற்கு நன்றி கூற மீண்டும்

கடமைப்பட்டிருக்கின்றேன். பல நாள் பட்டினியில் காத்திருந்த ஒருவனுக்கு அமுத சுரபி என்ற அட்சய பாத்திரம் கிடைத்தால் எவ்வாறு இருக்குமோ அதுபோன்ற மனநிலையில்தான் இன்று நான் இருந்துகொண்டிருக்கின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

தமிழர் பெருமையும், தமிழ் மக்களின் வாழ்வையும், வளத்தையும் நம் இந்தியத் துணைக் கண்டத்தில் உயர தூக்கி நிறுத்தும் ஆற்றல் நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு மட்டுமே உண்டு என்பதை நன்குணர்ந்த இத்தமிழ்க்கூறும் நல்லுலகம், இரண்டாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக கோட்டையிலே புதுப்பொலிவோடும் மிக்க வலிமையோடும் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களை அமர வைத்திருக்கிறது. 132 அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர்களையும், 68 தோழமைக் கட்சிகளையும் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களையும் இம்மாமன்றத்தில் அமர வைக்கும் ஆற்றல் படைத்திருக்கும் நம் கழகத்தின் காவல் தெய்வம் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமர்ந்திருக்கும் திசை நோக்கி எனது கன்னிப் பேச்சைத் தொடர்ந்து,

"காற்று வந்ததால் கொடி அசைந்ததா,

கொடி அசைந்ததால் காற்று வந்ததா"

என்ற நிலையிலே சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கைக்கும், திருக்கோயில்கள், அறநிலையங்கள் சார்ந்த மானியக் கோரிக்கைக்கும் செல்ல விழைகிறேன்.

*பிற்பகல் 4-55*

தமிழ்நாடு, ஆந்திரா மாநிலங்கள் முற்றும் கர்நாடகா, கேரளா மாநிலங்களின் சில பகுதிகளையும் தன்னுள் இணைத்துக்கொண்டு ஒரிசாவில் இருக்கும் கஞ்சம் என்ற பகுதிவரை நீண்டு பரந்து, விரிந்து கிடந்த வரலாற்றுப் புகழ்மிக்க சென்னை மாகாணத்தை – Madras Presidency – தன்னுடைய ஆளுகையின்கீழ வைத்திருந்த இந்த மாபெரும் சட்டமன்றத்தில் உரையாற்றுகின்ற பேறு, பெருமை கிடைத்ததற்காக மீண்டும் நம் கழகக் காவல் தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு, மீண்டும் மீண்டும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அனைத்திற்கும் மேலாக, பேரணாம்பட்டு சட்டமன்ற உறுப்பினராக என்னைத் தேர்ந்தெடுத்த —ஏழை ஆசிரியையாக இருந்த என்னை, ஓர் ஏழை ஆசிரியை, ஆசிரியையாகத்தான் ஓய்வு பெற வேண்டுமா என்று எண்ணி, ஆசிரியர் பிரதிநிதிகளுக்கெல்லாம் ஒரு பிரதிநிதியாக இருந்த என்னை, உதவிக் கல்வி அலுவலராக இருந்த என்னை வடாற்காடு அம்பேத்கர் மாவட்டத்திலே முதலாவதாக வெற்றி பெறச் செய்த – எனது பேரணாம்பட்டு தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு எனது இதயம் கலந்த நன்றியினை, நெஞ்சார்ந்த நன்றியினை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்றும் உண்மையைப் போற்றி பாதுகாத்த அரிச்சந்திரனும், விடாமுயற்சிக்குப் பெயர்போன திலீபனும், ரகுவும், ரகுவம்சத்தில் பிறந்து அதற்குப் பெருமையைச் சேர்த்திருந்தபோதிலும், ரகுநந்தன் என்ற பெருமைக்குரிய மகன் ஸ்ரீராமபிரான் பிறந்த பிறகுதான் அந்த இனத்திற்கே புகழ் இருமடங்காகக் கிடைத்தது.

பரதனும், நகுஷனும், யயாதியும் பிறந்த சந்திரகுலத்திற்குப் பெருமையைச் சேர்த்தபோதிலும், பாண்டவர்கள் பிறந்தபோதுதான் அந்த சந்திரகுலத்திற்கே பெருமை கிடைத்தது. அதைப்போல, சரித்திர நாயகர்கள் அலங்கரித்த இந்த மாபெரும் சட்டப் பேரவையிலே தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், இந்தி என்று பன்மொழி அறிஞர் நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஈடு இணையற்ற அரசியல் திறமையோடும், இந்த மாபெரும் சபையிலே அமர்ந்தபோதுதான், இந்த மாபெரும் சபையின் பெருமை பல மடங்காக உயர்ந்திருக்கிறது என்பதை மிகப் பெருமையோடு இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையை சிரமேற்கொண்டு அவருடைய பொற்கால ஆட்சியிலே வழங்கும் பல நலத் திட்டங்களை உடனுக்குடன் மக்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்து அயராமல் மக்கள் பணியாற்றுவதன் மூலமாகவும், இனி என்றென்றும் வேலூர் மாவட்டம், அ.தி.மு.க. கோட்டையாகவே வைத்திருக்கப் பாடுபடுவோம் என்பதை நம் கழகத்தின் காவல் தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உறுதி அளித்துக் கூறிக்கொள்கின்றேன்.

கடந்த கால அரசால், பெரிதும் பயன் பெற்றவர்கள் நடுநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் மட்டுமே. அதுவும் முற்கால அரசின் சுயநலத்தை மட்டுமே மனதில் வைத்து நியமிக்கப்பட்ட பதவி நியமனங்கள். ஏழையெளிய மக்கள் உயர்ந்திட எந்தத் திட்டமும் தராமல் போனது

[செல்வி சி. கனகதாரா] [2001 ஆகஸ்ட் 28

கடந்த கால அரசு. விவசாய உற்பத்தியில் இந்தியாவில் தமிழ்நாடு முதலிடம் என்ற உண்மைக்கு மாறான செய்தியை கட்டவிழ்த்துவிட்டது. பட்டதாரி ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்காமல் புறக்கணித்து ஒதுக்கியது முந்தைய அரசு. கடந்த பல ஆண்டுகளாகவே வேலைவாய்ப்பின்றி தவித்துவரும் எண்ணற்ற விவசாயப் பட்டதாரிகளின் அவல நிலையே இதற்கு எடுத்துக்காட்டாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மருத்துவமனைகளில் மருத்துவ வசதி கிடைக்காமல் செய்தது முந்தைய அரசு. ஏழை மக்கள் நம்பியிருக்கும் ரேஷன் அரிசி, மண்ணெண்ணெய் மற்றும் சர்க்கரை ஆகியவற்றின் விலைகளை விஷம் போல் ஏற்றியது முந்தைய அரசு.

உலகத்தில் ஏழு அதிசயங்கள் இருப்பதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுவதுண்டு. அதைப்போல வடாற்காடு அம்பேத்கர் மாவட்டத்திலும் பல அதிசயங்கள் இருப்பதாக இலக்கியத் தென்றல் திரு. பாஸ்கர தொண்டைமான் அவர்கள் வேடிக்கையாகக் குறிப்பிட்டுள்ளார். அதாவது வேலூர் நகரில் கோட்டை உண்டு. கோமகன் இல்லை. கோவில் உண்டு. கடவுள் இல்லை. போலீஸ் உண்டு. அதிகாரம் இல்லை என்று கூறுவது உண்டு. ஆறுகள் உண்டு. ஆனால் நீர் நிலைகளே இல்லாத பல அதிசயங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். வெள்ளத்தையே பார்க்காத வடாற்காடு மாவட்டத்திலுள்ள ஆறுகளில் பாலங்களைக் கட்டி, மக்கள் வரிப் பணத்தை வீணாக்கியது முந்தைய அரசு. இப்படியே பல வழிகளில் தமிழ் மக்களுக்கும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஏழை மக்களுக்கும் துரோகமிழைத்தது முந்தைய அரசு. அந்த அரசை வீட்டிற்கு அனுப்பிவிட்டு, தமிழ்நாடு தழைக்க நம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் இரண்டாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர வைத்து அழகு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நம் புரட்சித் தலைவி ஆணையை சிரமேற்கொண்டு பொற்கால ஆட்சியில் வழங்கும் பல திட்டங்களை உடனுக்குடன் மக்களுக்கு எடுத்துச் செல்ல கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே மிக்க வாஞ்சையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைப் பற்றி நான் சொல்லாமல் போய்விட்டால், உடல் இருந்தும் எனக்கு உயிர் இல்லாத நிலைதான் ஏற்பட்டுவிடும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை முதலிலேயே சொல்லியிருக்க வேண்டும்.



2001 ஆகஸ்ட் 28]

*பிற்பகல் 5-00*

**செல்வி சி. கனகதாரா:** கன்னிப் பேச்சாக இருப்பதால், என்னை மன்னிப்பீர்கள் என்ற ஒரே மன ஆறுதலில், மீண்டும் ஐந்து நிமிடங்கள் கொடுக்க வேண்டுமென்று உங்களை இருகரம் கூப்பி வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அம்மா, புரட்சித் தலைவி அம்மா, நீங்கள் வேங்குழலின் பாட்டாளீர், வெண்சங்கின் எழுத்தாணீர், ஆடையில்லா ஏழை விவசாய மக்களுக்கு ஆடை தந்த எங்கள் வள்ளலே, இதய தெய்வமே, இருளகன்ற தமிழகத்தின் ஈடு இணையற்ற தலைவியே, இந்தியத் திருநாட்டின் ஜோன் ஆப் ஆர்க்கே, இந்தியாவின் இதயத் துடிப்பே, இமயத்து உச்சியே, இந்திய ஒருமைப்பாட்டின் லட்சியத் தீபமே, எங்கள் குல தெய்வமே, எங்கள் குன்றத்துக் குல விளக்கே, எங்கள் ஒளி விளக்கே, எங்கள் குடும்ப விளக்கே, எங்கள் அன்னையே, எங்கள் ஊரில் பேரணாம்பட்டு சட்டமன்ற தொகுதி வேட்பாளர் என்ற முறையில் அம்மா அவர்கள் எனக்கு வாக்கு சேகரிக்க பேரணாம்பட்டுக்கு வருகை தந்திருந்தார்கள். அப்போது அம்மா அவர்கள் வந்த நேரத்தில் அந்த ரோட்டைப் பார்த்தோமானால், அந்த ரோடு எங்கே இருக்கிறது, எங்கே பஸ் போகிறது, எங்கே நிற்கிறது என்ற நிலையே இருந்து கொண்டிருந்தது. 17 முறை அங்கே எனக்கு ஓட்டு சேகரித்தார்கள். அன்பின் வடிவம், கருணையின் தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி நான் மாவட்டத்திலே முதலாவதாக வெற்றி அடைந்தேன் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அத்தகைய ரோடு அது. உண்மையிலேயே பஸ்ஸில் உட்கார்ந்து கண்களை மூடினால் அது நேராக பரலோகத்திற்குச் சென்றுவிடும். அடிக்கடி பத்திரிகையிலே நீங்கள் செய்தி படித்திருப்பீர்கள். பஸ் ஓடிக்கொண்டிருக்கும்போதே தாய்மார்களுக்கு பிரசவம் ஏற்பட்டுவிடும். தாயும் சேயும் நன்றாக இருக்கின்றது என்று. அத்தகைய ஒரு சீரழிந்த நிலையில், மோசமான நிலையில் பேரணாம்பட்டில் கடந்த பல ஆண்டுகளாக ரோடுகள் மிகவும் சீர்கெட்டு இருந்தன. அப்படிப்பட்ட ஆம்பூர்-பேரணாம்பட்டு ரோடுக்கு, நெடுஞ்சாலைத் துறை மூலம் நல்ல ரோடு அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களை நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக என் தொகுதியில் இருப்பது பீடி சுற்றும் தொழிலாகும். நிறைய ஏழைத் தாய்மார்கள், பாமரத் தாய்மார்கள் அந்த பீடி சுற்றும் தொழிலை செய்துகொண்டிருக்கிறார்கள். காலையிலே

நான் கூறியத்தைப்போல, தோல் பதனிடும் தொழில்கள் அனைத்தும் தூங்கிவிட்டன. அடுத்து இருப்பது பீடி சுற்றும் தொழிலாகும். அந்தத் தொழிலும் நசிந்து இருக்கிறது. ஆகவே அவர்களுக்குச் சமமான கூலி கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக பேரணாம்பட்டில் 30000—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் ஏதாவது தொடாத துறை இருந்தால் அதையும் தொட்டுவிட்டு சீக்கிரம் உரையை முடியுங்கள். மானியக் கோரிக்கையில் பேசுங்கள்.

**செல்வி சி. கனகதாரா:** நான் அறநிலையத் துறை திருக்கோயில்கள் பற்றி பேச விழைகின்றேன். அன்னைத் தமிழே, அணிமலர் தேனே, பொன்னை பொருளை போற்றிடும் இவ்வுலகில் என்னைப் பொருளாய், பொருட்டாய் ஏற்றுக்கொண்ட ஆண்டவன் இருக்கின்றான். அழுதிடும் எனக்கோர் ஆறுதல் வழங்க ஆண்டவன் இருக்கின்றான். நான் தொழுதிடும் கரங்களில் தூயவன் இருந்தே துன்பத்தைத் துடைக்கின்றான். எழுகின்ற புயலை இதயத்துச் சுமையை இறைவனின் காலடியில் தினம் விழுகின்ற மலர் என விட்டிடும்போது விலகிடும் விரைவில். விழுதுகள் என்றே வித்தகன் இருந்து விதையினை நடுகின்றான், அது பழுதின்றி வளர பாவெனும் மழையை தாயெனத் தருகின்றான். ஆகவே, என்னுடைய பேரணாம்பட்டு தொகுதி உட்பட அம்மா அவர்கள் தமிழகம் முழுவதும் அனைத்து திருக்கோயில்களில் ஒரு கால பூசை நடத்திட மேம்பாடு அடையச் செய்திருக்கிறார்கள். அம்மா அவர்கள் தாழ்வுற்ற தமிழகத்தை தடையின்றி ஆள்வதற்கு எத்தனை எத்தனை இன்னல்கள் வந்தாலும் அனைத்து தெய்வங்களும் அம்மா அவர்களுக்குத் துணையாக இருந்து அம்மா அவர்களை வழி நடத்திச் செல்கின்றன என்பதை இந்த நேரத்தில் அனைவருக்கும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, பேரணாம்பட்டு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆண்டி முருகன் கோவில் ஒன்று இருக்கிறது. அது அங்கு மலைப் பாதையில் உள்ளது. கடந்த 65 ஆண்டுகளுக்கு முன்னால், பேரணாம்பட்டு என்று சொன்னால் sensitive area என்று சொன்னார்கள். அப்பொழுது காவடியில் clash ஏற்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் அவர்கள் ஆட்சியிலே கண்ணியமிக்க இஸ்லாமியப் பெருமக்களும், இந்து மக்களும் ஒற்றுமையோடு வாழ்ந்து



கொண்டிருந்தார்கள். இன்றும் இப்பொழுதும் அந்த ஆண்டி முருகன் கோவிலுக்கு மலைப் பாதையில் அடிவாரம் இல்லாததால் அதை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை இருகரம் கூப்பி வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பேரணாம்பட்டு தொகுதிக்கு உட்பட்ட ஆலங்காயம் ஒன்றியத்தில் தேவஸ்தானம் என்ற திருக்கோயில் இருக்கிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தங்களின் திருக்கரங்களால் அங்கு கும்பாபிஷேகம் நடத்திட ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-05*

அடுத்தபடியாக நேரம் நெருங்கிவிட்ட காரணத்தினால் சுற்றுலாத் துறை பற்றிய மானியக் கோரிக்கையைத் தொட்டுவிட்டு இடம் சாரலாம் என்று நினைக்கிறேன். சுற்றுலா வளர துணை நிற்போம். தமிழ்நாடு சுற்றுலாப் பயணிகளுடைய சொர்க்க பூமியாக இருந்து வருகிறது. இது கலையும் கலாச்சாரமும் மிகுந்த நாடாகும். தொன்றுதொட்டு வளங்கள் கொண்ட சரித்திர பூமி. காண்போரை கவரத்தக்க எழில் மிகுந்த கோடைவாச ஸ்தலங்கள், தமிழ்நாட்டில் நிலைக்களங்களாக விளங்கும் பெருங்கோயில்கள், சிற்பக் கலைக்கு மகுடம் சூட்டிய பெருமை, இணையற்ற கலாச்சாரத்தை வெளியுலகிற்குக் கொண்டு வந்த பெருமை நம் புரட்சித் தலைவின் பொற்கால ஆட்சியில்தான் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இறைவனை பார்க்க வருகின்ற நோக்கில் தமிழ்நாட்டிற்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றது. நம் புரட்சித் தலைவி அம்மாவின் ஆட்சியில் தெய்வங்களே அம்மாவுக்கு துணை நிற்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**செல்வி சி. கனகதாரா:** பணம் படைத்தவர்கள்தான் சொகுசான ஓட்டல்களில் தங்க முடியும் என்ற நிலையினை மாற்றி, ஏழை மற்றும் நடுத்தர மக்களும் வசதியோடு தங்குகின்ற வகையில் அம்மா அவர்கள் சுற்றுலாத் துறைக்கு உரம் கொடுத்து இப்பொழுது மேம்படுத்தி

வருகிறார்கள் என்ற உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். மோர்தானா என்ற ஓர் அணை பேரணாம்பட்டிலே இருக்கிறது. Operation success, ஆள் out–தான். அந்த மோர்தானா அணை என்பது எனது பேரணாம்பட்டு தொகுதிக்கு உட்பட்ட பகுதியாகும். எனக்கு அருகிலே குடியாத்தம் தொகுதி மாண்புமிகு உறுப்பினர் இருந்துகொண்டு இருக்கிறார்கள். என் தொகுதிக்கு தண்ணீர் வரவில்லை. ஆனால் அவருடைய ஊருக்குத்தான் தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது என்பதை மிக்க வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே என் தொகுதிக்கு தண்ணீர் வரவில்லை என்றாலும்கூட பரவாயில்லை. மோர்தானா அணைக்கட்டை சுற்றுலா மையமாக்கி, பூங்காக்கள் அமைத்துத்தர வேண்டும் என்று இந்த நேரத்திலே சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களை இருகரம் கூப்பி வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். நேரம் இல்லை. அனைத்திற்கும் மேலாக சுற்றுலா என்பது தொழிலாக 1980 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. அதுவும் புரட்சித் தலைவரின் பொற்கால ஆட்சியில்தான். எனவே, சுற்றுலாத் திட்டங்களுக்கு தொழிற்சாலைகளுக்குரிய சலுகைகளை நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவிக்க வேண்டுகின்றேன்; இருகரம் கூப்பி வேண்டுகின்றேன்; அம்மாவின் பொற்பாதங்களைத் தொட்டு வேண்டுகின்றேன். நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுற்றுலாத் தலங்களின் தனித்தன்மையைப் பாதுகாக்கவும் அழகுபடுத்தவும் சிறப்புச் சுற்றுலாத் தேர்விடங்களை விரிவுபடுத்தியுள்ளார்கள் என்பதைக் கூறி, நன்றி கூறி விடைபெற விழைகின்றேன். அனைவருக்கும் நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். தாமோதரன்.

***திரு. எஸ். தாமோதரன்:** பேரன்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரதப் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த புண்ணிய பூமியிலே தமிழ் மாநில காங்கிரஸ் சார்பிலே போட்டியிட்டு சட்டசபைக்குச் செல்ல வாய்ப்புக் கொடுத்த ஐயா திரு. ஜி.கே. மூப்பனார் அவர்களுக்கும், எனது சார்பிலே எனது தொகுதி முழுவதும் சுற்றுப்பயணம் செய்து ஓட்டுகள் சேகரித்த அம்மா அவர்களுக்கும், எனது சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடர்கின்றேன். உலகத்திலேயே மிகவும் பழமைவாய்ந்த இந்து மதம் தமிழகத்திலே மிகவும் தழைத்து ஓங்கி நிற்கிறது. சேர, சோழ, பாண்டிய கோயில்கள், பழனியிலே திருக்கோயில்கள், மதுரை, கன்னியாகுமரி, திருவண்ணாமலை, ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், இராமேஸ்வரம் போன்ற பழமைவாய்ந்த கோயில்கள் உடைய நம்



தமிழகத்திலே எண்ணற்ற கோயில்கள் பூசைகள் இல்லாமலும் பூசாரிகள் இல்லாமலும் இருக்கின்றன. எல்லா கோயில்களிலுமே பூசைகள் சரிவர செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக நமது திருக்கோயில்கள் சுகாதாரமாகவும் சுத்தமாகவும் இருப்பதில்லை.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே இருக்கின்ற வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலே இருக்கின்ற அத்தனை ஆலயங்களிலும் இந்த 5 ஆண்டு காலத்தில் உடனடியாக ஒருகால பூஜை நடத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். தாமோதரன்:** எனது சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கோல்வார்பட்டியிலே சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட மீனாட்சி அம்மன் திருக்கோயில் ஒன்று உள்ளது. அந்தக் கோயில் அமைப்பு மிகவும் நன்றாகவும், அங்குள்ள அம்மன் சிலைகள் மிகவும் நன்றாகவும் இருக்கின்றன. அந்தக் கோயிலுக்குப் பூஜைகள் செய்ய ஆரம்ப ஏற்பாடுகள் செய்யும்படியும்அந்தக் கோயிலுடைய திருப்பணிகளை முடிக்கும்படியும் நான் இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன். அவர்களும் இதை விரைவில் செய்து முடிப்பார்கள் என்று நினைக்கிறேன். மேலும், விருதுநகர்–மதுரை எல்லைக்குட்பட்ட சதுரகிரி மகாலிங்கம் கோயிலிலே அமாவாசைக்கும் பௌர்ணமிக்கும் இலட்சக் கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர். ஆனால், அந்தக் கோயிலுக்குச் செல்வதற்குப் பாதையோ, லைட் வசதியோ இல்லை. அவற்றை செய்து கொடுக்கும்படி தமிழக அரசை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–10

பழனியிலே கேபிள் கார் ஒன்று போடுவது குறித்து, இந்த மானியத்திலே நிதி ஒதுக்கீடு செய்து இருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்த கேபிள் கார் சிஸ்டத்தை சிங்கப்பூர், ஹாங்காங் ஆகிய நாடுகளில் இருப்பதைப் போன்று, பயணிகள் மிக அதிகமாகச் சென்று வரும் வகையிலே ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நமது இந்து மதம் தழைக்கவும், இன்னும் நன்றாக முன்னேறவும், இந்து மதத்தை வழிபடுபவர்களை மதிக்கவும், நமது பண்பாடு தழைக்கவும் அவற்றிற்கான எல்லா ஏற்பாடுகளையும் நமது அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சுற்றுலாவைப் பொறுத்தவரையில், பழமைவாய்ந்த நமது தமிழகத்திலே பண்டைக் காலத்தை நினைவுகூறும் கோயில்கள், கோட்டைகள், யானைக்காடுகள், முத்துக் குளிக்கும் இடங்கள், கோடைவாசஸ்தலங்கள், மகாபலிபுரம், குற்றாலம், ஒகேனக்கல் அருவிகள்– இப்படி நிறைய இடங்கள் உள்ளன. இவற்றை நன்றாக அபிவிருத்தி செய்து, மக்கள் அங்கெல்லாம் இலட்சக் கணக்கில் சென்று வருவதற்கு ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எங்களுடைய விருதுநகர் மாவட்டத்தில் உள்ள பிளவக்கல் அணையை ஒரு சுற்றுலா மையமாக ஆக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

உலகில் பல நாடுகளுக்கு சென்ற நான், அங்கெல்லாம் மிகச் சிறிய ஒரு சுற்றுலா இடமாக இருந்தாலும்கூட, அதற்கு மிகப் பெரிய அளவிலே விளம்பரம் செய்து சுற்றுலாப் பயணிகளை இலட்சக் கணக்கிலே கவர்ந்திழுப்பதைப் பார்த்திருக்கிறேன். அதுபோல் நமது தமிழகத்திலும் சுற்றுலா இடங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இது எனது கன்னிப் பேச்சாக இருப்பதால், நான் எனது தொகுதி பற்றியும் தமிழகத்தின் முன்னேற்றம் குறித்தும் ஒருசில வார்த்தைகளை சொல்வதற்கு கூடுதலாக ஒருசில நிமிடங்கள் நான் பேசுவதற்கு அனுமதிக்கும்படி பேரவைத் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே சராசரி 60 சென்டிமீட்டர் மழை பெய்கிறது. ஆனால், இந்த மழை எல்லாம் குறிப்பிட்ட சில நாட்களில் பெய்து விடுவதால், இந்த மழைநீர் யாவும் வீணாக கடலிலே கலந்து வீணாகிறது. திருச்சியிலே வெள்ளம், வீராணத்திலே பெருவெள்ளம், எங்கள் ஊராகிய வெம்பக்கோட்டையில் உள்ள சிறிய வைப்பார் அணையில் 1997–லே 40 அணைக்கட்டு அளவிலான சுமார் 12 டி.எம்.சி. தண்ணீர் கடலிலே கலந்து வீணாகிவிட்டது. இதுபோல் தாமிரபரணி, வைகை, காவேரி, பாலாறு ஆறுகளிலும் தண்ணீர் வீணாகிவிட்டது. நமது முன்னோர்கள்



கூற்றுப்படி இவ்வருடம் மழைக்காலத்தில் மிக அதிகமாக மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. எனவே, குளங்களை மிகவும் ஆழப்படுத்தி, கரைகளை சரி செய்து, தண்ணீர் வரத்தை சரி செய்து, குளங்கள், ஏரிகள், நீர்வரத்து நிலைகளில் எல்லாம் நீரை நிரப்ப வேண்டும். வரப்பு உயர்ந்தால் நெல் உயரும் என்பதில் சந்தேகம் இல்லை. இதனால் அரசுக்கு முக்கால் பங்கு பிரச்சினை தீரும். ஆதலால் எல்லா நீர்வரத்துக்களையும் சரி செய்ய வேண்டும் என்று அம்மா அரசை நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் ஒரு இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலங்களை நஞ்சை நிலங்களாக மாற்ற, நிலுவையில் உள்ள பம்பை–அச்சன்கோயில்–வைப்பார் நதிகள் இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென நான் இந்த அரசைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

விருதுநகர் மாவட்டத்தில் பிளவக்கல் அணையை 1964–லே பெருந்தலைவர் காமராசர் அவர்கள் மிகப் பெரிய அணையாகக் கட்டத் தீர்மானித்த போதிலும், பின்னால் வந்த அரசுகள் அதை மிகச் சிறிய அளவிலே கட்டி, 3 குளங்கள் மட்டும் நீர் நிரம்பும்படி செய்துவிட்டன. இந்தத் திட்டத்தை ஒரிஜினல் திட்டப்படி கட்டி, 60 குளங்களுக்குத் தண்ணீர் நிரப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வெம்பக்கோட்டையில் உள்ள அணையை ஆழப்படுத்தி, தற்போதுள்ள 298 மில்லியன் கன அடி கொள்ளளவிலிருந்து 900 மில்லியன் கன அடி கொள்ளளவாக மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிவகாசியிலே தண்ணீர்ப் பஞ்சம் மிக அதிகமாக உள்ளது. இதை நிரந்தரமாகப் போக்கும்பொருட்டு எல்லா ஏற்பாடும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நமது தமிழகத்திலே 3–ல் ஒரு பகுதியாக இருக்கும் ஹரியானா நம்மைவிட 3 மடங்கு உணவு உற்பத்தி செய்கிறது. நமது விவசாயிகளுக்குத் தண்ணீர் மட்டும் கொடுத்தால், விளைச்சலை 9 மடங்காக உயர்த்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 40 இலட்சம் மக்கள் தொகை கொண்ட இஸ்ரேல் ஒரு பாலைவனப் பகுதியாகும். ஆனால், அங்கே விளைபொருட்கள் மட்டும் 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வருடத்திற்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இதைக் கணக்கிலே எடுத்துக்

கொண்டால், நாம் 1-1/2 இலட்சம் கோடி ரூபாய்க்கு உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியும் என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் கடந்த 6 ஆண்டுகளாக தொழில்கள் தேக்க நிலையில் உள்ளன. இதற்கு அநேகமாக எந்தத் தொழிலும் விதிவிலக்கு அல்ல. கடந்த 6 ஆண்டு காலத்தில் எந்தவிதமான தொழிற்சாலைகளும் தங்களுடைய ஆரம்பகால விளம்பரங்கள் எந்தச் செய்தித்தாள்களிலும் வராதது இதற்கு ஆதாரமாகும். தாராளமயமாக்கல் குறித்து—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன் அவர்கள். (குறுக்கீடு) நிறைய உறுப்பினர்கள் தங்களுடைய கன்னிப் பேச்சையே பேச முடியவில்லை என்று கூறி வருத்தத்தோடு இருக்கிறார்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் துணைகொண்டு சுமார் 2 இலட்சம் கோடி ரூபாய் வரை நாம் நிதி திரட்டி தமிழ்நாட்டில் தொழில்களைப் பெருக்க முடியும் என்று நான் கருதுகிறேன். இதுபோன்று தமிழ்நாட்டிலே, போகாங் ஸ்டீல் கம்பெனி, பிலிப்ஸ் உறாலந்து, சோனி ஜப்பான் போன்ற பெரிய தொழிற்சாலைகளையும் ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5–15*

மூடிக் கிடக்கும் 130 பெரிய தொழிற்சாலைகளைத் திறக்க வேண்டும். நியூயார்க்கிலே மூன்று 100 மாடிக் கட்டடங்கள் Empire State Buildings என்று மூன்று ஏக்கர் பரப்பளவிலே உள்ளன. சிறிய அளவிலான மலேசியாவிலே 110 மாடிக் கட்டடம் உள்ளது. ஆனால் pollution, environmental ecology என்று வளர்ந்துள்ள நாடுகள், வளராத நாடுகளை தரித்திர நாடுகளாக என்றும் வைத்திருக்க உபயோகப்படுத்தும் ஆயுதம் என்பதை மறந்துவிடக்கூடாது. சென்னையிலே இதுபோன்ற ஒரு 100 மாடிக் கட்டடம் கட்டி, அரசு அலுவலகங்களை ஒரே இடத்தில்



நடத்தவும், சுற்றுலா வசதிகளைப் பெருக்கவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது முடியாத காரியம் அல்ல. வெளிநாட்டுக் கம்பெனிகளால், இதை இரண்டாண்டு காலத்திற்குள்ளாக கட்டி முடிக்க முடியும் என்பதிலே எள்ளளவும் சந்தேகம் இல்லை. மேலும், ஐரோப்பாவிலே, ரஷியா நீங்கலாக 130 அணு மின்சார நிலையங்கள் உள்ளன. (மணியடிக்கப்பெற்றது) நம் நாட்டிலும் அதுபோன்று அதிகமான அளவிலே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை சம்பந்தமாக அவைமுன் வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பு, உண்மையிலேயே சிறந்த முன்முயற்சியோடு வைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் துறை மேம்பட வேண்டுமென்கிற உணர்வோடு ஏராளமான விவரங்களைக் கொடுத்து, அதிலே உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பையும், ஆலோசனைகளையும் கேட்டிருக்கிறீர்கள். அதில் குறிப்பிட வேண்டிய ஒரம்சம், புதிய இடங்கள் கண்டறியப்பட வேண்டும் என்பது இந்த அறிக்கையிலே குறிப்பிடப் பட்டுள்ளது. அந்த அடிப்படையில் சில விவரங்களை இம்மன்றத்திற்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குமரி மாவட்டத்தில் திற்பரப்பு என்கிற இடத்தில் நீர்வீழ்ச்சி உள்ளது. அங்கு படகு சவாரிக்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த இடத்தைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று மாத்தூர் என்ற இடத்தில் ஒரு பெரிய பாலம். அது ஆசியாவிலேயே அதிக உயரம், அதிக நீளம் என்று குறிப்பிடுகிறார்கள். அதையும் சுற்றுலாத் தலமாக அறிவித்துப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிவலோகம் அணைக்கட்டு, அதே குமரி மாவட்டத்தில் இருக்கிறது. அதையும் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அழகர்கோயில் மலை உச்சி; அங்கு எந்நேரமும் தண்ணீர் ஊறும். அந்தத் தண்ணீரில் குளித்துவிட்டு சாப்பிட்டால், மிக நன்றாகப் பசிக்கும். எந்தச் சாப்பாடும்

[திரு. என். நன்மாறன்] [2001 ஆகஸ்ட் 28

அதில் ஜீரணம் ஆகிவிடும். அங்கே இருந்து கீழே நடந்து வந்தால், பக்கத்திலே ஒரு சிறிய ஆறு ஓடிக் கொண்டிருக்கும். அந்த ஆறுக்குப் பெயர் சிலம்பாறு. கண்ணகியும், கோவலனும் அந்தப் பகுதியிலே நடந்து வந்ததாகவும் சொல்கிறார்கள். ஆகவே, அதையும் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டும். எந்த வயதினர் விரும்புகிறார்கள் என்பதையும் இந்த அறிக்கையில் கூறியிருக்கிறீர்கள். அனைத்து வயதினருக்கும் பொருத்தமான இடம். இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் இன்னும் பொருத்தமானது என்பதைக் குறிப்பிட்டு அந்த அழகர் மலை உச்சியிலிருந்து இறங்கி வரக்கூடிய பாதையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, மதுரை மன்னர் திருமலை மகால். அங்கு ஒளி-ஒலிக் காட்சி நிறுத்தப்பட்டுள்ளது. அதை மீண்டும் கொண்டுவர அரசு ஆவன செய்யும் என்று அறிவித்திருக்கிறீர்கள். இந்த அறிவிப்புக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில், திருமலை மகால் பழுதுபட்ட நிலையில் இருக்கிறது. அங்கிருக்கிற ஊழியர்களில் ஒரு பொறியியல் வல்லுநர் சிறப்பான ஊழியராக இருக்கிறார். அந்த மன்னர் மகால் எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி ஜூனியர் விகடன் வார ஏட்டிலே செய்தி வந்திருக்கிறது. அதையும் இந்த அமைச்சரகம் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மன்னர் மகால் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்குக் கூடுதல் நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்பதையும் இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், மாரியம்மன் தெப்பக்குளம். அது உண்மையிலேயே ஒரு அற்புதமான இடம். அங்கு தண்ணீர் அதிகமாக விட்டு பராமரிப்பதற்குரிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அது இந்து அறநிலையத் துறையின்கீழ் வருகிறது என்றாலும் சுற்றுலாத் துறைக்கும் பயன்படும். குதுப்மினார் கட்டடத்தினுடைய அந்தப் பாணி, மாரியம்மன் தெப்பக்குளத்தின் மைய மண்டபத்தில் இருக்கிறது. வளைந்து வளைந்து செல்லக்கூடிய ஏணிப் படிகள் இருக்கின்றன. மிக அற்புதமான இடம். அங்கே இருந்து மீனாட்சியம்மன் திருக்கோயிலைப் பார்க்கலாம். அங்கே இருந்து காளையார் கோயிலைப் பார்க்கலாம். "மதுரை கோபுரம் தெரிந்துரை செய்த மருதுபாண்டியரைப் பாருங்கடி" என்று கவியரசர் கண்ணதாசன் கூறிய வரிகள், அந்த இடத்திலே இருந்து பார்க்கும்போது நமக்கு நினைவுக்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2001 ஆகஸ்ட் 28] [திரு. என். நன்மாறன்]

இதுபோன்று கோவை குற்றாலம், கொல்லிமலை, கோவையில் Monkey Falls, திண்டுக்கல் சிறுமலை. அந்தச் சிறுமலையில் அருமையான காற்று இருக்கிறது. சிறுமலையைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். சுற்றுலா பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்ற இளைஞர்கள் பணியில் அமர்த்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல இருக்கக்கூடிய அலுவலர்களுக்கு பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். சுற்றுலாத் துறையில் மாவட்ட சுற்றுலா அலுவலர்களில் ஒருவர்கூட எஸ்.ஸி., எஸ்.டி. பிரிவினர் இல்லை என்று கூறப்படுகிறது. அதையும் கவனத்தில் எடுத்து அத்தகைய ஊழியர்களை நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-20*

அதேபோல, அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில், குமரி மாவட்ட ஆலய ஊழியர்கள் சங்கம் சி.ஐ.டி. என்கின்ற பெயரில் ஒரு விரிவான விண்ணப்பம் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலுள்ள contingency ஊழியர்கள் சம்பந்தமாக கருணையோடு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய ஆலயப் பணியாளர்கள் அண்மைக் காலமாக ஒன்று திரண்டு கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, குமரி மாவட்டத்தில் குழித்துறையில் அறநிலையத் துறை சார்பாக ஒரு மகளிர் கல்லூரி கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதற்குத் தேவையான ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். ஆய்வுக்கூடம் என்பது 1/2 கிலோமீட்டர் தள்ளி இருக்கிறது. அது இந்தக் கல்லூரி வளாகத்திலேயே கட்டப்பட வேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, குழித்துறையில் சாமுண்டி அம்மன் திருக்கோயில் இருக்கிறது. இங்கு குட முழுக்கு நடைபெற்று 50 ஆண்டுகள் ஆகின்றன. இங்கே மீண்டும் குட முழுக்கிற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திருவட்டாறு கோயிலிலே நகைத் திருட்டு நடைபெற்றது. அது ஏற்கெனவே தெரிந்த விஷயம். அது என்ன ஆனது என்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, ஆலயத்திற்குரிய சொத்துக்கள், விவரங்கள் எல்லாம் நிறைய இருக்கின்றன. நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இந்து

சமய அறநிலையத் துறைக்கு உட்பட்ட ஆலயங்கள், அதற்கு உட்பட்ட சொத்துக்கள் போன்ற விவரங்கள் இருந்தாலும்கூட தனி சாமியார்கள் நிறைய பேர் வந்துகொண்டே இருக்கிறார்கள். அதில் திடீர் சாமியார்களும் இருக்கிறார்கள்; திடீர் புளியோதரை, திடீர் சாம்பார் மாதிரி. இவர்களுக்கு சொத்துக்கள் ஏராளமாக பெருகிக்கொண்டே போகிறது. இவர்கள்மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் இந்த அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாரியம்மன் கோயில் தெப்பக்குளத்தில் தண்ணீர் இல்லை. அதில் நிரந்தரமாக தண்ணீர் இருப்பதற்கு மழை நீர்சேமிப்பு முறை என்று மழை நீரை இங்கே இறக்கிவிடுவதற்கான வழிவகைகளை பொதுப் பணித் துறை மூலமாக கண்டறிந்து ஏற்பாடு செய்து அதில் எந்த நேரமும் தண்ணீர் இருப்பதற்கும், படகு சவாரி விடுவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஆலயங்களில் தீண்டாமை இல்லாத நிலைமையைக் கண்காணித்து உரியது செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பெரும்பாலும் நகரங்களில் இல்லை. கிராமப்புறங்களில்தான் ஒன்று இரண்டு இடங்களில் இந்தப் பிரச்சினைகள் வருகின்றன. இதன் மீதும் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் எந்த இடத்திலும், எந்த ஆலயத்திலும் தீண்டாமை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி ஆட்சியிலே இருக்கிறது என்று அவர் சொல்லவில்லை. நான் ஒரு தாழ்த்தப்பட்டவன். சென்னையிலே 30 வருடங்களாக இருக்கிறேன். எந்தக் கோயிலுக்கு வேண்டுமானாலும் போய்விட்டு வரலாம். ஆனால் என்னுடைய சொந்தக் கிராமத்திலே இருக்கிற கோயிலுக்கு நான் போக முடியாது. கிராமப்புறங்களில் இன்றைய நிலையிலேயும் தாழ்த்தப்பட்டவர்கள் எந்தக் கோவிலுக்கும் போகிற நிலை இந்த நாட்டிலே வரவில்லை.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் எந்தக் கோயில் என்று சொன்னால், அது உடனடியாக ஆராயப்படும்.



**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் ஊரைச் சொல்லுகிறேன். நான் பிறந்த கிராமத்தைச் சொல்லுகிறேன். பொதுவாக எல்லா கிராமங்களிலேயும் தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொன்னால், கோயிலுக்கு வெளியிலேயிருந்துதான் கும்பிட முடியுமே தவிர—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்து அறநிலையத் துறையின் மூலமாக ஆலயத்திற்கு அறங்காவலர்களை நியமிக்கின்றபோது எல்லா ஆலயங்களிலேயும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்கள் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். தாங்கள் எந்த ஆலயம் என்று சொன்னால் அதற்கு உரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்று அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலயங்களுக்கு அறங்காவலர்களை நியமிக்கின்ற கோயில்கள் என்பது நகர்ப்புறங்களிலே இருக்கின்றன. கிராமங்களிலே இருக்கின்ற சின்னச் சின்ன கோயில்கள் என்று வருகின்றபோது—

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து ஆலயங்களுக்கும் ஒரே சட்டம்தானே தவிர, மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல, ஒரு ஆலயத்திற்கு ஒரு சட்டம், இன்னோர் ஆலயத்திற்கு இன்னொரு சட்டம் இல்லை என்பதை இந்த அரசு சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. போளூர் வரதன் அவர்கள், ஏதாவது இருந்தால் எழுதிக் கொடுங்கள். அமைச்சர் அவர்கள் கடைசியில் பதில் சொல்வார்கள்.

*பிற்பகல் 5-25*

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறை சொல்ல வேண்டும் என்பதற்காக நான் சொல்லவில்லை. சென்ற மாதம்கூட தென்னாற்காடு மாவட்டத்திலே ஒரு கோயிலுக்குள்ளே போகமுடியவில்லை என்று பெரிய போராட்டம் நடந்தது. சேலத்திலே ஒரு கோயிலுக்குள்ளே போகமுடியவில்லை என்று போராட்டம் நடந்திருக்கிறது. இப்படிப்பட்ட கோயில்களை கண்காணித்து, தாழ்த்தப்பட்ட மக்களும் தெய்வங்களை வணங்குவதற்கு வாய்ப்பை புரட்சித் தலைவி அரசு உருவாக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேண்டுமென்று வாதத்திற்காகக் கூறலாம். எந்த ஆலயங்கள் என்று சொன்னால் உடனடியாக புரட்சித் தலைவி அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நன்மாறன், 2 நிமிடங்களில் உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகர்ப் பகுதியை நான் சொல்லவில்லை. கிராமப்புறங்களிலே இப்படி பொதுவான நிலைமை என்பது இருக்கிறது. சென்ற காலத்திலே இருந்தது; இந்த ஆட்சி வந்தவுடனே என்று நான் சொல்ல வரவில்லை. கிராமங்களிலே இப்படி இருக்கிறது. ஆதிதிராவிடர் மானியக் கோரிக்கை பின்னர் வருகிறது. அதிலேகூட விரிவாக இதுகுறித்து பேசிக்கொள்ளலாம் என சொல்லிக்கொள்கிறேன். அதன்மீது கண்காணிப்பு வேண்டும் என்பதற்காகத்தான் கவனத்திற்கு இப்போது கொண்டு வருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அர்ச்சனை. தமிழில் அர்ச்சனை என்பது உறுதி செய்யப்பட வேண்டும். இப்போது நாம் கொண்டு வருகிறோம். இந்தியா விடுதலை பெற்றாகிவிட்டது, தமிழ்நாடு விடுதலை அடைந்துவிட்டது. தமிழ்மொழி என்பது இன்னும் ஆலயங்களுக்குள் நுழைய முடியாத ஒரு நிலை இருக்கிறது. எனவே, அதற்கும் இந்த அரசு ஒரு கடுமையான எச்சரிக்கை விட வேண்டும். தேவைப்பட்டால், ஏதோ ஆகமம், அது, இது என்று சொல்லி மத்திய அரசு மிரட்டினால், ஏற்கெனவே சொன்னதுபோல, தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒரு தனிச் சட்டம் இயற்றப்பட வேண்டும். இங்கே அண்ணாவை சொல்லிக்கொண்டு இருக்கிறோம். பெரியாரைச் சொல்லுகிறோம். தமிழுக்காகவே வாழ்ந்து உயிரைவிட்டு, மீதும் உயிரோடு இருக்கக்கூடியவர்களைச் சொல்கிறோம். இருக்கிறவர்கள் தமிழைக் காப்பதற்கு ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது இந்தக் காலத்தில்தான் என்பதற்கான முறையில் இந்தச் சட்டமன்றத்தில் ஒருமித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆலயங்களில் தமிழில் அர்ச்சனை என்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டு, நேரத்தை அதிகமாக்க விரும்பாமல் விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலயங்களில் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று சொன்னால், அந்த அர்ச்சகர்கள் தமிழிலே செய்கிறார்கள். சமஸ்கிருதத்தில் செய்ய வேண்டும் என்று சொன்னால், சமஸ்கிருதத்தில் செய்கிறார்கள். நீங்கள் எந்த அடிப்படையில் வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அந்த அடிப்படையில் தமிழகத்திலே இருக்கின்ற அறநிலையத் துறையினுடைய ஆலயங்களிலே அர்ச்சனை செய்வார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. எஸ்.எம். சீனிவேல்.

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** அம்மாவை வணங்குகின்றேன். மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பியாம், சென்னை மாநகரிலே, வங்கக் கடலின் அருகிலே, உறங்கியும் உறங்காததுபோல, உறங்கிக் கொண்டிருக்கின்ற எங்கள் தங்கத் தலைவன், முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசியல் வாரிசு, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மாவை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்களே, இந்த மன்றத்தில் பேரறிஞர்கள், அறிஞர்கள், சான்றோர்கள் பேசிய இந்த மன்றத்தில், சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, ஒரு கடைக்கோடியில் இருந்த இந்த சாதாரண குடிமகனை தொலைபேசியில் "அழைத்து, 'சீனிவேல், சென்னைக்கு வா, குன்றாக நின்றாய் திருப்பரங்குன்றத்தில் நின்று வென்று வா' என்று ஆசி வழங்கிய அம்மாவை வணங்குகின்றேன்.

'திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால் முருகா, திருத்தணி மலைமீது எதிரொலிக்கும்' என்பார்கள். ஆனால் அம்மாவிற்கோ திருப்பரங்குன்றத்திலிருந்து திருத்தணி மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் மிகப் பெரிய ஆதரவைத் தந்து அம்மாவை முதலமைச்சராக்கிய தமிழக மக்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தையும், நன்றியையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாயே, தமிழே, உலகம் போற்றும் உத்தம தலைவியே, தமிழகம் போற்றும் தங்கத் தலைவியே, காஞ்சி காமாட்சியே, மதுரை மீனாட்சியே, ஆதிபராசக்தியே, இந்தச் சிறிய தொண்டன் உங்கள் பொற்பாதங்களைத் தொட்டு கோடானுகோடி வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்

[திரு. எஸ். எம். சீனிவேல்] [2001 ஆகஸ்ட் 28

கொண்டு, உங்களுடைய பொற்பாதங்களிலே என்னுடைய உரையை காணிக்கையாக்கித் தொடங்குகிறேன். தாயே! தமிழே

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

*பிற்பகல் 5–30*

எனது தொகுதி திருப்பரங்குன்றம் தொகுதி. தமிழகத்திலே மிகப் பெரிய தொகுதிகளிலே ஒன்றாகும். 3,80,000 வாக்காளர்களைக் கொண்ட தொகுதி. கிட்டத்தட்ட 31 ஊராட்சிகளும், அந்த ஊராட்சிகளுக்கு உட்பட்ட கிராமங்கள், 110 கிராமங்களும் அடங்கும். அதற்குள்ளே 4 பேரூராட்சிகளும் அடங்கும். இந்த 4 பேரூராட்சிகளில் 1,10,000 வாக்காளர்கள் உள்ளனர். மேலும் மதுரை மாநகரத்திக்குள்ளே 14 வார்டுகள் இருக்கின்றன. அதிலேயும் 1,00,000 வாக்காளர்கள் உள்ளடங்கிய தொகுதி. ஆனால், முந்தைய ஆட்சியாளர்கள் செய்த பாவமோ என்னவோ 70,000 வாக்காளர்கள், கம்ப்யூட்டரிலே கொடுத்து, I.. D. Card எல்லாம் இருக்கும்போது அடித்துவிட்டார்கள். அவை இருந்திருந்தால் அம்மாவுக்கு இன்னும் பல ஆயிரக்கணக்கான வாக்குகளை அம்மாவுக்கு அளித்திருப்பார்கள் இந்த நாட்டு மக்கள். ஆனால், இன்றைக்கு அதையெல்லாம் மீறி, எவ்வளவு எதிர்ப்பு சக்திகள், கோடானுகோடி எதிர்ப்புகள் வந்தாலும், இந்தத் தாய்க்கு முன்னால் இருப்பதற்கு எந்தக் கொம்பனுக்கும் அருகதை கிடையாது; நிகரில்லை, நேரில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்று எடுத்துக்காட்டுகின்ற வகையிலேதான் நடந்து முடிந்த இந்தச் சட்டமன்றத் தேர்தலிலே அதை எடுத்துக்காட்டக்கூடிய வகையில் மிகப் பெரிய வெற்றியை மக்கள் அம்மாவுக்கு அளித்திருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திலே நான் பெருமகிழ்ச்சியோடு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பெருமதிப்பிற்குரிய மன்றத்தினுடைய உறுப்பினர்களே, நான் கன்னிப் பேச்சு பேசுகின்றேன். இருந்தாலும் என்னுடைய தாய், என்னைப் பெறாத தாய், அன்புத் தாய், தமிழகத்திலே இருக்கக்கூடிய 6 கோடி மக்களுடைய உள்ளங்களிலே குடிகொண்டிருக்கிற அந்த அன்புத் தெய்வம் இங்கே இருக்கக்கூடிய அண்ணா தி.மு.க. சிப்பாய்களுடைய கைகளை எல்லாம் கட்டிப்போட்டு, மறைந்த மாமேதை அண்ணாவினுடைய வழி வந்தவர்கள் நாம்; புரட்சித் தலைவர் ஆசியில் வழி வந்தவர்கள் நாம்; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்கின்ற தாரக மந்திரத்தைக் கடைப்பிடித்து நீங்கள் மன்றத்திலே உரையாற்ற வேண்டும், உரை நிகழ்த்த வேண்டும் என்று எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள்.



2001 ஆகஸ்ட் 28] [திரு. எஸ். எம். சீனிவேல்]

இங்கு நமது பழைய பங்காளிகள், முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இருந்த உறுப்பினர்கள் இன்றைக்கும் காலையிலே பேசினார்கள். திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் சீனிவேல் எதற்கெடுத்தாலும் எழுந்து நின்று சலம்புகின்றார் என்று குறிப்பிட்டார்கள். இந்த மன்றத்திலே மூத்த உறுப்பினர்களான திரு. அப்துல் லத்தீப் போன்றவர்கள், திரு. சந்தானம் போன்றவர்கள், அண்ணன் திரு. மணி போன்றவர்கள் எல்லாம் இருக்கின்றார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, நான் 5 ஆம் வகுப்பு படிக்கின்றபோது, அரைக்கால் சட்டை போட்டிருக்கின்றபோது, பசுமலை உயர்நிலைப் பள்ளியிலே நான் 1 அணா, 1.1/2 அணா, மஞ்சள் நிற ஒரு அணா துட்டு. அதை தினமும் செலவழிப்பேன். நான் கூட்டத்தைச் சேர்ப்பேன். அப்படிப்பட்ட திராவிட பாரம்பரியத்தில் வந்தவன். 1962–லே மன்றத்திலே செயலாளராக இருந்தேன். இரண்டு ஆண்டு காலம் அண்ணாவினுடைய, 'அன்புத் தெய்வத்தினுடைய ஆசியால் தொடர்ந்து ஒன்றிய கழகச் செயலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தவனை அழைத்து, இந்த மாமன்றத்திலே பேசுகிற வாய்ப்பினை வழங்கிய இந்த அன்புத் தெய்வத்திற்கு என் குடும்பம் மட்டுமல்ல, என் பேரன், பேத்தி, பிள்ளை குட்டிகள் அனைவரும் வாழ்நாள் முழுவதற்கும் நாங்கள் உயிரைக் கொடுக்கவும் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த மன்றத்தின் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காலையிலே இந்த மன்றத்திலே இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சொல்கிறார்கள், இங்கே ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள், சலசலப்புக் காட்டுகிறார்கள் என்று குறிப்பிடுகிறார்கள். நான் இந்த மன்றத்திலே உள்ள மூத்த உறுப்பினர்களைக் கேட்கிறேன், இங்கே அண்ணன் சுந்தரம் அவர்களும், சங்கரன்கோவில் உறுப்பினர் கருப்பசாமி அவர்களும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள். மொத்தம் 4 பேர்கள்தான் இருந்தார்கள். நீங்கள் என்ன பாடு படுத்தினீர்கள்? அப்பா! நான் டிவி. செய்தியில் பார்ப்பேன். சங்கரன்கோவில் அண்ணனை அம்மா அவர்கள் அழைத்து பொதுக் கூட்டம் போடுங்கள் என்றார்கள். அவர்கள் செய்த அட்டகாசம் தாங்க முடியவில்லை. அதையும் நிமிர்ந்து, அம்மா அவர்களுடைய தைரியத்தோடு, அவர்கள் ஆசியோடு இந்த மன்றத்திலே 4 பேர்கள் பேசினார்கள். இன்றைக்கு நீங்கள் 28 பேர்கள் இருக்கிறீர்கள். நாங்கள் ஒன்றும் பண்ணவில்லையே? ஏனென்றால், அம்மா தான் எங்கள் கைகளைக் கட்டிப் போட்டிருக்கிறார்களே! மூச்சு விடக்கூடாது. அப்படியே உட்கார்ந்து இருக்கிறோம். திரும்பக்கூடாது. அசைந்தால் போச்சு. என் தெய்வம், அந்தத் தாயினுடைய அருள் காட்சியிலேதான் இந்த வெள்ளைச் சட்டையைப் போட்டுக்கொண்டு,

[திரு. எஸ்.எம். சீனிவேல்] [2001 ஆகஸ்ட் 28

கண்ணாடியைப் போட்டுக்கொண்டு, இங்கு நின்று பேசுகின்றேன். நான் மட்டுமல்ல, இங்கே இருக்கக்கூடிய தோழர்கள் எல்லாரும் பேசுகிறோம் என்றால் அது அம்மாவின் அருள் காட்சிதான். அந்த தெய்வத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தால் போதும். கோடானு கோடி மக்கள், இந்த நாட்டிலே அந்த அம்மாவை ஏற்றுக் கொண்டார்கள். அதுமட்டுமல்ல, மனித உரிமை மீறல். மனித உரிமை மீறல், என்று இங்கே திமுக. நண்பர்கள் பேசுகிறார்கள். வேடிக்கையாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சீனிவேல், நம் ஊர் முருகன் கோயிலுக்கு ஏதேனும் வேண்டுமென்றால் கேளுங்கள்.

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** மனித உரிமை மீறல், மனித உரிமை மீறல் என்று திமுக. நண்பர்கள் குறிப்பிடுகிறார்கள். 6 கோடி மக்களுடைய உள்ளங்களில் குடிகொண்டிருக்கிற என்னுடைய தெய்வத்தை 1989 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதி இதே சட்டமன்றத்திலே நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் அறிந்திருக்கிறார்கள், தெரிந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் போய் மனித உரிமை மீறல் என்கிறீர்கள். இன்னும் என்னென்னமோ சொல்ல வேண்டியிருக்கிறது.

அதுமட்டுமல்ல, என்னுடைய தெய்வம் பாண்டிச்சேரிக்குச் சென்று தேர்தல் பிரச்சாரத்தை முடித்துவிட்டு வருகின்றபோது லாரியை வைத்துக் கொலை செய்ய முயற்சித்தார்கள் ** பாவிகள். இதை இந்த நாடு ஏற்குமா? இல்லை. இந்த நாடு தாங்குமா? நீங்கள் பேசுகிறீர்கள். நாங்கள் 'ஓ' என்று சத்தம் போட்டதற்கு, கீச்சு, கீச்சு என்கிறீர்கள். என்னையா நாங்கள் சத்தம் போட்டுவிட்டோம்?

அதுமட்டுமல்ல, அந்த லாரி டிரைவருக்கு 1500 ரூபாய் கொடுத்து செக்ஷன் 75-ல் கேஸ் போட்டு, வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டார்கள். எவ்வளவு பெரிய தலைவர்! இந்த நாடு போற்றக்கூடிய நல்ல தங்கம், உலகம் போற்றும் உத்தமத் தலைவியை வெறும் ஆயிரத்து—

*பிற்பகல் 5—35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சீனிவேல், கன்னிப் பேச்சிலே ரொம்ப நான்—வெஜிடேரியன் எல்லாம் வேண்டாம். அதனாலே ** என்பதெல்லாம் வேண்டாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. பாவிகள் என்பதும் வேண்டாம். இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2001 ஆகஸ்ட் 28]

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெய்வம் இருக்கிறது. நான் அதற்குமேல் பேசவில்லை. தெய்வம் அங்கே ஜாடை காட்டிவிட்டது போலிருக்கிறது. நான் அதோடு முடித்துக்கொள்கிறேன். திருப்பரங்குன்றம் பகுதியில்—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சீனிவேல் அவர்களுடைய பேச்சில் ** என்ற அந்தப் பதம் நீக்கப்படுகிறது. பாவிகள் என்பது இருக்கட்டும்.

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** திருப்பரங்குன்றம் முருகன், அப்பன் ஆறுபடை முருகன், திருப்பரங்குன்றம் முருகனாக என் தெய்வம் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. கருணையுள்ளம் கொண்ட தெய்வம்; அந்த திருப்பரங்குன்றம் கோயிலுக்கு முன்பாக 2000 ஏக்கர் பரப்பளவில் ஒரு பெரிய தென்கால் கண்மாய் என்ற ஏரி இருக்கிறது. அந்த ஏரிக்கு அருகாமையிலேதான் மதுரை மாநகராட்சி 7 கிலோமீட்டரிலே இருக்கிறது. அதை ஆறு அடி ஆழப்படுத்தி, தண்ணீரை நீர்த்தேக்கமாக்கினால் சுற்றுலாவுக்கு வரக்கூடிய பல லட்சக்கணக்கான பேர் அந்த முருகன் கோயிலுக்கு பக்தர்கள் வர இருக்கிறார்கள். அதை ஆழப்படுத்தினால், குடிதண்ணீரும் கிடைக்கும், நிலத்தடி நீரும் கிடைக்கும். ஆகவே கருணையுள்ளம் கொண்ட தாயே, தமிழே, அந்த ஆறுபடை அப்பன் முருகனுடைய அருள்காட்சி உங்களுக்கு எப்போதும் நிரந்தரமாகக் கிடைக்கும் அவர் உங்களுடைய அருகிலேயே இருந்து கொண்டிருக்கிறார் என்பதைக் கூறி, நீங்கள் அதை ஒரு சுற்றுலாத் தலமாக, படகு சவாரி விடக்கூடிய அளவுக்கு அதை ஆழப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று சபையோரைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து திருப்பரங்குன்றம் கோயில் அப்பன் முருகனுக்கு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சபையோர் எப்படி அதை ஆழப்படுத்திக் கொடுப்பார்கள்?

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் முருகன் கோயிலுக்கு, அப்பன் முருகனுக்கு தினந்தோறும் நீர் எடுத்துக் கொடுப்பார்கள். அந்த நீர் குளத்துக்கு அருகிலே கிட்டத்தட்ட 20 ஏக்கர் பரப்பளவிலே இருக்கிறது. அந்த சரவணப் பொய்கை என்ற இடத்திற்கு, அங்கிருந்துதான் நீர் செல்கிறது. 30 ஆண்டு காலமாக அந்த நீர் சுத்தப்படுத்தப்படாமல், வெளியேற்றப்படாமல்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

துர்நாற்றம் எடுத்துக் கொண்டிருக்கிறது. இது மக்களுடைய கோரிக்கை. உங்கள் தெய்வத்திடம் சொல்லுங்கள், உடனே செய்து கொடுத்து விடுவார்கள் என்று சொன்னார்கள். ஆகையினால் நிச்சயம் செய்து கொடுத்து விடுவார்கள். தெய்வம், அதை எல்லாம் மறக்காது. ஆகையினால் தெய்வம் அவர்களே, அந்த துர்நாற்றம் எடுக்கிற அந்த சரவணப்பொய்கையிலே இருக்கக்கூடிய நீரை அப்புறப்படுத்தி, சேர் வாரி அந்தக் குளத்தை சுத்தப்படுத்தி, முருகனுடைய சந்நிதானத்துக்கு தினம் நல்ல நீர் பயன்படக்கூடிய அளவுக்கு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சான்றோர்களும், பெரிய அறிஞர்களும் பேசிய இந்த மன்றத்தில் இந்தச் சிறியவனை, இந்தப் பொடியனை, இந்தச் சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்தவனை பேச வாய்ப்பு வழங்கிய தாயே, தமிழே, வாழ்த்தி வணங்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு திரு. கே.சி. கருணாகரன்.*

**திரு. கே.சி. கருணாகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா பற்றிய மானியக் கோரிக்கை விவாதம் நடக்கிறதாலே தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பிலே அருமையான இனிப்பும், காரமும் கொடுத்திருக்கிறார்கள். இந்து சமய அறக் கட்டளையின் சார்பிலே அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலுடைய அருள்பிரசாதம் கொடுத்து பரவசப்படுத்தியிருக்கிறீர்கள். மகிழ்ச்சி. நன்றி. வீட்டு வசதித் துறை மானியம் விவாதிக்கிறபோது ஆளுக்கு ஒரு–(சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுப் பணித் துறை மானியம் வரும்போது ஆளுக்கு ஒரு பாலம் கேட்பீர்கள் போலிருக்கிறது! (சிரிப்பு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியக் கோரிக்கை வருகிறபோது ஆளுக்கு ஒரு தொழிற்சாலைகூட கேட்பார்கள் போலிருக்கிறது! (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.*

***திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்து அறநிலையத் துறை மற்றும் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகிற வாய்ப்பைக் கொடுத்தமைக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அரூர் தொகுதியிலிருந்து இந்திய



கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் போட்டியிட்ட என்னை ஏராளமான வாக்கு வித்தியாசத்திலே வெற்றிபெறச் செய்த எனது தொகுதி மக்களுக்கு முதலிலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என் வெற்றிக்காகப் பாடுபட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இங்கு ஒன்றைக் கூறுவது சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்தியாவினுடைய இதிகாச நூல்களில் ஒன்றான மகாபாரதக் கதையிலே வருகிற ஒரு அலாதியான பாத்திரத்திற்குச் சொந்தக்காரரான பீஷ்மர் அவர்கள், ஒரு புதிய ஆட்சி அமைவதைப் பார்த்தே தீருவேன் என்ற வைராக்கியத்தோடு இருந்து அதற்காக நடைபெற்ற போரிலே உடல் முழுவதும் அம்புகளால் தைக்கப்பட்டபோதும், புதிய ஆட்சியைக் கண்டாராம். அப்படி, தமிழகத்தில் ஒரு மதச்சார்பற்ற கூட்டணியை வெற்றிபெறச் செய்தே தீருவேன், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை அமைத்தே தீருவேன் என்று புறப்பட்டு அப்படி ஒரு ஆட்சியும் அமைத்து, இன்றைக்கு தமிழகத்தினுடைய முதல்வராக அமர்ந்திருக்கிற தமிழ்நாட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 5–40*

இந்து அறநிலையத் துறை என்று வருகின்றபோது, கோயில் நிலங்கள் ஏராளமாக தமிழகத்திலே குவிக்கப்பட்டிருக்கின்றன. இவை அனைத்தும் ஏராளமான வருமானத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில் இவற்றினுடைய வரவு–செலவுகள் முறையாகச் செயல்படுகின்றனவா என்பதைப்பற்றி இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கடந்த காலத்தில் இவற்றில் ஏராளமான முறைகேடுகள் நடந்ததாகச் சொல்லப்படுகிறது. அதேநேரத்தில் இந்த நிலங்களை உழுது சாகுபடி செய்கின்ற சிறு, குறு விவசாயிகள்மீது மரியாதைக்குரிய தமிழகத்தினுடைய மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டுவரப்பட்ட குத்தகை வாரப் பதிவுச் சட்டத்தின்கீழ் அந்தச் சிறு விவசாயிகளைப் பாதுகாக்கின்ற முறையில் அவர்களைப் பதிவு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சுற்றுலா என்று வரும்போது, மனிதன் புதுமையான விஷயங்களை விரும்புகிற விருப்பப்பூர்வமான நிகழ்ச்சிகளில் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது. இது நீண்ட நெடிய காலம் நடைமுறையில் இருப்பதாகும். இதை தமிழ்நாடு அரசு ஊக்குவிக்கின்ற முறையிலும், சிறப்பிக்கின்ற முறையிலும் திட்டமிடப்பட்டிருப்பது வரவேற்க வேண்டிய

ஒன்றாகும். தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தற்போது 7 முதல் 9 வரையிலான விழுக்காட்டிலிருந்து 10 முதல் 12 வரையிலான விழுக்காடுகள் வரை வளர்ந்திருப்பது என்பது வரவேற்க வேண்டிய சிறப்பு அம்சமாகும். அதே நேரத்தில், அது மேலும் விரிவுபடுத்தப்பட்டு, மேலும் அதிகரிக்கப்படுகின்ற முறையில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுலாவில், ஆன்மீகச் சுற்றுலா, பண்பாடு சுற்றுலா, தேவ ஆலயங்கள், பள்ளிவாசல்கள், புராதனச் சின்னங்கள், மாநாட்டுக் கூடங்கள் ஆகியவை மேலும் பாதுகாக்கப்படுகின்ற வகையில் இவையெல்லாம் புதுப்பிக்கப்பட வேண்டும், பழுதுபார்க்கப்பட வேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோடைகால சிறப்புப் பயணத் திட்டம் என்ற முறையில் ஊட்டி மற்றும் கொடைக்கானலுக்கு இன்பச் சுற்றுலா செல்ல விரும்புவோருக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தொடங்கியுள்ள திட்டம் வரவேற்க வேண்டிய சிறப்பு அம்சமாகும். இதில் கண்டறியப்படாத, சற்றே தெரிந்துள்ள சுற்றுலாத் தலங்களையும் இணைத்து புதிய சுற்றுலாப் பயணத் திட்டம் வெளியிடுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதில் எனது தொகுதியிலுள்ள தீர்த்தமலை என்கிற ஒரு சிறப்பு இடம் - எனது தொகுதி முழுவதும் நாங்கள் சென்று பார்க்கிறபோது, அநேகமாக 3, 4 கிராமங்கள் மட்டும்தான் குடிதண்ணீர் கேட்காத கிராமங்கள். மற்ற அனைத்துக் கிராமங்களிலும் குடிநீர் கேட்டு கோரிக்கை வைத்திருக்கும் சூழ்நிலையில், எங்கள் தீர்த்தமலையில் மட்டும் உயரமான உச்சியிலிருந்து நீர்வீழ்ச்சி வழிந்து கொண்டிருக்கிறது. அதைச் சுற்றுலாத் தலத்தோடு இணைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, வெளிநாட்டிலிருந்து வரும் கலை ஆர்வமிக்கவர்கள், ஆன்மீகச் சுற்றுலாப் பயணிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கென சிறப்பு வான்வழிச் சுற்றுலாத் திட்டமும், வான் ஊர்தி நிறுவனங்களும் தொடங்க அரசு திட்டமிட்டிருப்பது வரவேற்க வேண்டிய சிறப்பு அம்சமாகும். சுற்றுலாப் பயணம் செய்வோருக்கு பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்படும். அதே நேரத்தில், அவர்கள் தங்கி ஓய்வெடுக்க போதுமான அளவிலான பயணியர் மாளிகைகள் கூடுதலாக ஆக்கப்பட வேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். சுற்றுலாப் பயணிகள் தங்கி ஓய்வெடுக்கும் பயணியர் மாளிகைகள் சிறப்பான முறையிலேயும் தண்ணீர் வசதியுடன்கூடிய முறையிலேயும் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



காஞ்சிபுரம் மற்றும் தஞ்சை பெரிய கோவிலில், மதுரை திருமலை மன்னர் அரண்மனையில் நடைபெற்று வந்த ஒலி, ஒளிக் கண்காட்சி மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்படுவதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம். இல்லத்தரசிகளுக்கு ஓய்வு நேரங்களில் பேக்கரி மற்றும் சமையல் கலை சொல்லிக்கொடுக்க அரசு தீர்மானித்துள்ள அதே நேரத்தில் அவர்களுக்கு சுற்றுலா சம்பந்தமாக ஒரு பாடத்தை நடத்துகிற முறையில் அவர்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டுமென இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு தமிழில் அர்ச்சனை செய்யும் முறையைக் கொண்டு வருகிற சட்டத்தை இயற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, தமிழிலே, தமிழைப் பற்றி, தமிழினுடைய, தமிழுக்கு நாங்கள்தான் தலைவர்கள் என்று கூறிக்கொள்கிறவர்கள், பேச்சுக்கும், மூச்சுக்கும் தமிழைப்பற்றிச் சொல்கிறவர்கள் அல்லது எங்களால் மட்டும்தான் தமிழ் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்று சொல்லி கடந்த காலத்திலே ஆட்சியிலே இருந்தவர்கள், தமிழிலே சட்டம் இயற்றக்கூடத் தவறிவிட்டார்கள். அதாவது, 384(2) பிரிவு 2-ல் உள்ள சட்ட விதிகளின்படி ஒரு மாநிலத்தில் அம்மாநில மொழியை ஆட்சி மொழியாக ஆக்குகிற ஒரு சந்தர்ப்பத்தை ஜனாதிபதியினுடைய அனுமதியோடு பெற்றுச் செயல்படுத்தலாம். குறிப்பாக, உயர் நீதிமன்றத்தில் தாய் மொழியிலே மனுக்கள் செய்வது அல்லது அப்பீல் செய்வது போன்ற விஷயங்களைக்கூடச் சட்டங்களாக்கலாம் என்று இருக்கின்ற அந்த சந்தர்ப்பத்தைக்கூடத் தவறவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லி, இந்த அரசு அவற்றிற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கூறிக்கொண்டு, அவற்றையெல்லாம் உயர் நீதிமன்றத்திலே நடைமுறைப்படுத்துவதற்கு, அதிலே இருக்கிற சிக்கல்களைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தமிழில் சட்டம் பயில்கின்ற சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு ஊக்கத் தொகையாக 400 ரூபாய் வழங்கப்படுவதை மேலும் அதிகரிக்க வேண்டுமென்று கேட்டு, என் தொகுதியினுடைய சில கோரிக்கைகளை இங்கே முன்வைக்க விரும்புகின்றேன். (மணியடிக்கப்பெற்றது) கன்னிப் பேச்சு, தயவுசெய்து இரண்டு நிமிடம் கொடுங்கள்.

பிற்பகல் 5-45

தருமபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அதன் வளர்ச்சியில் இந்த அரசு மிகவும் கவனத்துடன் ஆய்ந்து, பரப்பளவை மனதில் கொண்டு நிருவாக ரீதியாக இரண்டாகப் பிரித்து, கிருஷ்ணகிரியை

புதிய மாவட்டமாக அறிவித்ததை, இந்த மாவட்டத்தைச் சார்ந்தவன் என்ற முறையிலும், ஏழையெளிய மக்கள் வளர்ச்சியில் எப்போதும் அக்கறை கொண்டுள்ள கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்ற முறையிலும், அதன் சார்பிலும் நான் வரவேற்கிறேன். கிருஷ்ணகிரியில் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி ஓசூர் பகுதி. ஓரளவுக்கு நீர்ப் பாசன ஆதாரமுள்ள முத்தூர் அணைப் பகுதி, எண் 66 தேசிய நெடுஞ்சாலை ஆகிய இடங்கள் புளி, மா, தென்னை ஆகிய பணப் பயிர்கள் உற்பத்தி செய்கிற பகுதிகளாக இருக்கின்றன. எஞ்சியுள்ள மீதிப் பகுதியான தருமபுரி மாவட்டம் குறைந்தபட்ச நிதி வருவாயையும் இழந்து, தொழில் வளத்தையும் இழந்து ஆதரவற்ற அனாதையாக்கப்பட்ட பகுதியாக மாறிவிடுகிறது. இதைக் கருத்தில்கொண்டு அந்தப் பகுதி மக்களின் வளர்ச்சிக்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள், தாயுள்ளத்தோடும், கருணையோடும் தொழிற்சாலைகளையும் அந்த மக்களுடைய வளர்ச்சித் திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டுமென இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள ஒரே ஒரு கூட்டுறவு நூற்பாலை மிகவும் நலிவடைந்த நிலையிலுள்ளது. அதைப் போக்க உரிய நிதியுதவி அளித்து தொழிலாளர்களின் பிடிபட்ட சம்பளத்தை உடனே வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் பாம்பாறு அணை, எட்டிப்பட்டி தூவல், அனுமன்தீர்த்தம், தீர்த்தமலை ஆகிய பகுதிகளை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளின் விளைபொருளான மஞ்சள் என் தொகுதியில் அதிகமாக விளையக்கூடியது. இதை நறுமணப் பொருளாக ஏற்றுக்கொள்ள மத்திய அரசு தவறியிருக்கிறது. இதை நறுமணப் பொருளாக மத்திய அரசு ஏற்றுக்கொள்ள தமிழக அரசு வலியுறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மரவள்ளிக் கிழங்குக்குக் கட்டுப்படியான விலை கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர். சேகோ பேக்டரி முதலாளிகளை அழைத்துப் பேசி நல்ல தீர்வு காணுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பு உற்பத்தியாளர்களுக்கு பிடிபட்ட பணத்தை உடனே வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



என் தொகுதியில் திருப்பத்தூரிலிருந்து சேலம் செல்லும் சாலையில் அனுமன்தீர்த்தம் அருகே, தென்பெண்ணையாற்றின் குறுக்கே உள்ள தாம்போகி பாலம் முற்றிலும் பழுதடைந்து, தூண்கள் ஓட்டை விழுந்து தொங்கிக் கொண்டிருக்கின்றன. எந்த நேரத்திலும் அபாயம் ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது. இதனைப் போக்குவதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையான அரசு கலைக் கல்லூரி ஒன்று அரூரிலும் (மணியடிக்கப்பெற்றது) தொழிற்கல்லூரி—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த மானியக் கோரிக்கைகளில் பேசலாம்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** அவ்வளவுதான் பேசி முடித்து விடுகிறேன். தொழிற்கல்லூரி ஒன்று ஊத்தங்கரையில் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரூரில் அனைத்து மகளிர் காவல் நிலையம் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியில் உள்ள ஜவ்வாது மலை அடிவாரத்தில் பாய்ந்தோடுகின்ற கடப்பாரை ஆற்றின் குறுக்கே அணை கட்ட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கோவிந்தபுரம் அருகேயுள்ள சுனை நீரைத் தேக்கி பாசன வசதிக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தென்பெண்ணை ஆற்றிலிருந்து மதிகெட்டான் கால்வாய் வழியாக பல்வேறு ஏரிகள் இருக்கும் பாசனப் பகுதியை விரிவுபடுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தீர்த்தமலையிலிருந்து அம்மாபேட்டை செல்லும் வழியில் உள்ள வாணியாற்றின் குறுக்கே சிறு பாலம் ஒன்று அமைத்துத்தர வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வள்ளி மதுரை அணை கட்டும் திட்டம் தொடக்க நிலையிலுள்ளதால் அணையை உயர்த்திக் கட்டி வேப்பம்பட்டி வரையிலான கால்வாயை நீட்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊத்தங்கரை மற்றும் .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கிருஷ்ணமூர்த்தி, மற்ற மானியக் கோரிக்கைகளில் பேசலாம். திருமதி சிவகாமி (குறுக்கீடு) போதும். அடுத்த மானியக் கோரிக்கையில் பேசலாம்.

**திருமதி வி. சிவகாமி:** மதிப்பிற்கும், மாண்பிற்கும் ......

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. சிவகாமி, உட்காருங்கள். கிருஷ்ணமூர்த்தி, நன்றி சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இந்த வாய்ப்பைக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

*பிற்பகல் 5–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சிவகாமி.

**திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே மற்றும் நம்முடைய நாட்டின் தலையெழுத்தை மாற்றியமைக்கும் திறமையுள்ள பத்திரிகை நண்பர்களே, நான் இப்போதுதான் முதன்முதலாக சட்டப் பேரவையில் பேசுகிறேன். எத்தனையோ மேடைகளில் பேசியிருக்கிறேன். இருந்தபோதிலும், அறிவில் திறன் உள்ளவர்கள், ஆற்றல் மிக்கவர்கள் எல்லோரும் உள்ள தாராபுரம் சட்டமன்றத் தொகுதியிலே என்னுடைய மக்கள் அதிக வாக்கு வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்தார்கள். எனக்கு அப்போது கால் உடைந்திருந்தது. அன்பு உள்ளம் கொண்டவர்கள் கால் உடைந்திருந்த அந்த நேரத்திலும்கூட இன்னும் ஒரு மணி நேரம் வோட்டுப் போட விட்டிருந்தால், என்னை எதிர்த்து நின்ற அத்தனை பேரும் ஈட்டுத் தொகையை' இழந்திருப்பார்கள். அவ்வளவுபேரும் கூட்டத்தோடு வந்து ஓட்டு போட்டார்கள். அந்த மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு மேலாக இந்த மாமன்றத்தைச் சுற்றி மாமேதைகள் படத்தைப் பார்க்கிறேன். இந்தப் படங்கள் பத்தை சேர்த்து உருட்டி ஒட்டுமொத்தமாக எடுத்து, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த என்னை மாநிலத் தலைவி ஆக்கியது மட்டுமல்ல, இன்னும் பல பதவிகளை வார்த்து, என்னை இந்த மாமன்றத்திலும் ஒரு உறுப்பினராக உருவாக்கிய, கார் வந்தால் மழைபெய்யும், களம் கண்டால் வீரன்



மகிழ்வான், தேர் வந்தால் வீதி சிறக்கும், திரு வந்தால் குளம் சிறக்கும், மனித நேயப் போராளி, நாங்கள் வணங்கும் இதய தெய்வம் டாக்டர் அய்யா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பூங்காற்றும் கூட அவர் சொன்னால் புரட்சி செய்யும், வறுமை, புதைமுகத்தில் புன்சிரிப்பை எழுதிச்செல்லும், கரம் காட்டும் திசை நோக்கி காலம் போகும், அவர் கண் பட்டால் கற்கள் கூட கனிகளாகும். யாரையாவது பார்த்து நீங்கள் முதலமைச்சர் என்றால் அவர் முதலமைச்சர், யாரையாவது பார்த்து நீங்கள் வளமாக வாழ்வீர்கள் என்றால் வாழ்வார்கள். வலதுபுறத்தில் இருக்கும் எனது சகோதரர்களுக்கும் அது தெரியும். எதிர்புறம் இருக்கும் நம் அன்பு அம்மாவுக்கும் தெரியும். அன்புத் தோழர்களே, நாம் எல்லோரும் சட்டமன்றத்திலே நியாயம், நீதி, சத்தியம் இவை நிலைப்பதற்காக இங்கே வந்து உத்தமர்களில் ஒருவராக இந்த சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறோம். அதற்கு மேலாக, என்னுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புச் சகோதரர் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மறுபடியும் ஒரு வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயில் இல்லாத ஊர்களில் குடியிருக்க வேண்டாமென்று பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால், தமிழகத்திலே நிறைய கோயில்கள் உண்டு. ஆனால், அந்தக் கோயில்களிலே ஏழைக்கோயில், பணக்காரக் கோயில் என்றும் உண்டு. அந்த ஏழைக் கோயில்களில் ஏழைகள் சாமி கும்பிடுவார்கள். எந்தக் கோயில்களிலேயும் தாழ்த்தப்பட்டவர்கள் உள்ளே செல்லக்கூடாது என்ற நிலை இல்லை என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அவர் சொல்லும்போதே சில குறிப்புகளை நான் எடுத்துவைத்தேன். பழைய ஆயக்குடியிலே, தாழ்த்தப்பட்ட ஒரு மகள் அங்கேயுள்ள காளியம்மன் கோயிலுக்குள் சென்றதற்காக, அந்தக் கோயில் 45 வருடங்கள் மூடியே கிடக்கிறது. இன்னும் திறக்கப்படவில்லை. அதேபோல–

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னேன், அதிமுக–வினுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதவி ஏற்றதற்குப் பின்பு எந்த ஆலயங்களிலாவது தாழ்த்தப்பட்டவர்கள் செல்லக்கூடாதென்று சொன்னால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு தாராபுரம் சட்டமன்ற உறுப்பினருக்கும் நான் இதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி வி. சிவகாமி:** அதேபோல, கொங்கூர் காளியம்மன் கோயில் பிரசித்தி வாய்ந்தது. இன்று வரையிலும், அந்தக் கோயிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளே நுழைய முடியாது. அதேபோல, தாராபுரம் தொகுதி, நாரணாபுரம் கோயில், அங்கேயும் தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளே நுழைய முடியாது. குண்டடம் என்ற ஊர் இருக்கிறது, பக்கத்தில் பொங்கலூரைச் சார்ந்தது. அங்கு விசுவநாதர் கோயில் என்று ஒன்று இருக்கிறது. அங்கேயும் உள்ளே செல்ல முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்று, இன்னும் தமிழகத்தில் நூற்றுக்கணக்கான கோயில்கள் உண்டு. மறுபடியும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு பட்டியல் போட்டுத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் தனியாருக்காக ஒவ்வொரு சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் வைத்திருக்கின்ற கோயில்களில் வேண்டுமென்றால் அப்படி இருக்குமா என்பது அரசுக்குத் தெரியாது. அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஆலயங்களில் எங்கேயாவது அப்படி இருக்குமானால் மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார் என்று அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5–55*

**திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் என்னுடைய உரையைத் தொடர்கிறேன். ஏராளமான சொத்துக்கள் கோயிலுக்கு இருந்தும்கூட பராமரிப்பு இல்லாமல் கிடப்பது அரசுக்கு நன்கு தெரியும். அத்தகைய கோயில்களை அரசு ஆராய்ந்து அந்தக் கோயில்களுக்குத் திருப்பணி சரிவர நடைபெற நடவடிக்கை எடுக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு அறங்காவலர்களை நியமனம் செய்யும்போது தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அறங்காவலர் குழுவை அமைக்கும்போதும் அந்தப் பகுதியிலே உள்ள சட்டமன்ற உறுப்பினருக்கு அந்த வாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கோயில்களில் திருப்பணி செய்ய குழு அமைக்கும் போது அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினருடைய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுதவிர,



ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழே நடைபெறும் கோயில்களின் நிருவாகத்திற்குத் துணையாக ஆலோசனைகளை வழங்க அனைத்துக் கட்சியினருக்கும் வாய்ப்பு கொடுத்தால், அப்போதுதான் அந்த நிருவாகத்தைத் திறமையாக நடத்த முடியும். ஏனென்றால், அங்கே நல்லது நடந்தாலும் சரி, மற்ற வேறுபாடு நடந்தாலும் சரி எடுத்துச் சொல்வதற்கும், சுட்டிக்காட்டுவதற்கும் ஓர் ஆதாரமாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே பல்லாயிரக்கணக்கான எதிர்பார்ப்புகளைக் கொண்ட என்னுடைய தொகுதி மக்கள் என்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அவர்களுக்காக எல்லாவற்றையும் இதிலே பேச முடியாது. எனவே, மாண்புமிகு அன்னை அவர்களிடம் நான் இந்தத் திட்டங்களையெல்லாம், தொகுதிப் பிரச்சினைகளை எல்லாம் வைக்கின்றேன். அவர் சரியாகப் பரிசீலனை செய்து என்னுடைய தொகுதிவாழ் மக்களுக்கு நீதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப்பற்றி சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். இது பன்னிரண்டாவது சட்டப் பேரவை—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சிவகாமி அவர்களே, மற்றவற்றை மற்ற மானியக் கோரிக்கைகளிலே பேச உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும்.

**திருமதி வி. சிவகாமி:** ஒரு நிமிடம். இது கோயில்களைப் பற்றிய மானியக் கோரிக்கை, ஆதலால் பேசிவிடுகிறேன். என்னுடைய தொகுதியிலே தாராபுரம் என்பது முன்பு ஒரு காலத்திலே விராடபுரம் என்று பெயர். விராடபுரம் மன்னன் ஈவு, இரக்கம், தானம், தர்மத்திலே சிறந்தவனாக இருந்தவன். நல்லவன், வல்லவன், நம்பிக்கை உள்ளவன். அவனுக்காக அந்த விராட மண்ணிலே அந்தக் காலத்திலே பஞ்சபாண்டவர்கள்கூட 12 வருடம் வனவாசம் சென்று, ஒரு வருடம் அஞ்ஞானவாசம் இருந்தார்கள். அந்த ஊரைத்தான், தாராபுரத்தைத்தான் அதற்குத் தேர்வு செய்திருக்கிறார்கள். அந்த தாராபுரம் மன்னன் நல்லவன், யாரையும் அவன் காட்டிக்கொடுக்க மாட்டான். ஏனென்றால், அஞ்ஞானவாசம் என்றால் ஒருவன் இருப்பது மற்றவர்களுக்குத் தெரியக்கூடாது என்று அந்த ஒரு வருடக் காலம் எங்களுடைய ஊரிலே, தாராபுரத்திலே அதைச் செய்திருக்கிறார்கள் முன்பு ஒரு காலத்திலே. இதற்குண்டான எல்லா ஆதாரங்களும் இருக்கின்றன. அதுவும் முன்பு ஒரு காலத்திலே தாராபுரம் விஜயபுரி மன்னன் ஆட்சிக்கு உட்பட்ட இடமாக இருந்தது. நீங்கள் அதை ஒரு சுற்றுலாத் தலமாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கு ஈஸ்வரன் கோயில் இருக்கிறது. கிழக்கு திசையிலே பார்த்த ஈஸ்வரன் கோயிலாகும். வடக்கு திசை பார்த்தபடி அமராவதி நதி ஓடுகிறது. அங்கு 18 படிகள் இருக்கின்றன. ஆற்றிலே குளித்துவிட்டு, அந்த 18 படிகளிலே மேலே ஏறிவந்தால் சொர்க்க பூமியைத் தொட்டதற்கு அர்த்தம் ஆகும். அதேபோல், ஆஞ்சநேயர் கோயில், மிகப் பிரசித்தி பெற்ற கோயில் இருக்கிறது. அதேபோல், தில்லாபுரி அம்மன் ஒரு காவல் தெய்வம். அந்த தில்லாபுரி அம்மான் கோயிலில் ஏழை, தாழ்த்தப்பட்ட தாய்மார்கள் நூற்றுக்கணக்கான குழந்தைகளைக் கொண்டுவந்து தொட்டில்களிலே கட்டிவிட்டு, பாடுபட, புல் அறுக்கச் சென்று விடுவார்கள். அந்தக் குழந்தைகளையெல்லாம் அந்த அம்மன் தாலாட்டி தூங்க வைப்பாள் என்று வரலாற்றிலே இருக்கிறது.

அதேபோல், இன்னும் 36 கோயில்களைக் கொண்டது எங்களது ஊர். நல்ல சீரும் சிறப்புமாக உள்ள அந்த ஊரை அம்மையார் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி சுற்றுலாத் தலமாக ஆக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எங்களுடைய மன்னனுடைய வரலாற்றைச் சொல்ல வேண்டுமென்றால் ஒரு நாள் முழுவதும் ஆகும். எனது கால் ஒடிந்துவிட்ட நிலையில் என்னால் நிற்க இயலாது என்று கூறிக்கொண்டு, மீண்டும் மீண்டும் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், எங்களைப் போன்ற புதியவர்களுக்கு, கன்னிப் பேச்சு பேசுகின்றவர்களுக்கு வாய்ப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது பக்கத்திலுள்ள மகளிர்கூட எனக்கு ரொம்ப உதவியாக இருந்தார்கள். நான் வணங்கும் அன்னை, மதுரை மீனாட்சியை வணங்கி விடைபெறுகின்றேன். உங்களுக்கு எல்லாம் நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. லா. சந்தானம்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனத்திலே திக்குத் தெரியாமல் இருந்தவர்களை, டெல்லி செங்கோட்டைக்கு வழிகாட்டியாக அழைத்துப் போனவர் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.



(மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் புரட்சித் தலைவி அவர்களை முதலமைச்சராக ஆக்கியதே நாங்கள்தான்; எங்களால்தான் உருவாக்க முடியும் என்று சொன்னால், 'கேழ்வரகிலே நெய் வடிகிறது என்றால் கேட்பவனுக்கு புத்தி கெட்டுப்போய் விடாது' என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் உட்காருங்கள், உங்கள் கட்சித் தலைவர் பேசுகிறார்.

பிற்பகல் 6-00

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே, எங்களுடைய நிறுவனத் தலைவர், சமூக நீதிக் காவலர் டாக்டர் அய்யா அவர்கள் பிரச்சாரம் செய்கிற நேரத்திலே, மதச்சார்பற்ற வெற்றிக் கூட்டணிக்குத் தலைமையேற்று இருக்கக்கூடிய எங்களுடைய அன்புச் சகோதரி முதலமைச்சராவதை எந்தக் கொம்பனாலும் தடுக்க முடியாது என்ற வாசகத்தைப் பயன்படுத்தி எல்லா இடங்களிலும் பிரச்சாரம் செய்தார்கள். ஆகவே, முதலமைச்சர் ஆவதற்கு டாக்டர் அய்யா அவர்களும் உழைத்தார்கள் என்ற அந்தக் கருத்தைச் சொன்னார்களே தவிர, வேறெதுவும் இல்லை என்பதை இங்கே பணிவன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஈரோடு மாவட்டம் என்ற காரணத்தினாலே, தாராபுரம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் பேசுகின்ற நேரத்தில் பல்லாயிரக்கணக்கான வாக்குகளை அந்தப் பகுதி மக்கள் அளித்தார்கள் என்று சொன்னாகள். நான் இங்கே ஓர் உண்மையைச் சொல்லியாக வேண்டும். மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் அந்த வாக்குகளை அளித்தார்கள். பெரியார் மாவட்டம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒரு கோட்டை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மறந்துவிடக் கூடாது. அன்புக்குரிய கணேசன் அவர்கள்,

நான் ஒன்றைச் சொல்வதால் தவறாகக் கருதக் கூடாது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் திருச்செங்கோடு நாடாளுமன்றத் தொகுதியில் திரு. பழனிசாமி அவர்கள் நின்ற நேரத்தில் தனியாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சிகளெல்லாமாக இருந்த நேரத்தில் அவருடைய எடப்பாடி தொகுதியிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 1000 வாக்குகளை அதிகம் பெற்றிருந்தது என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையினுடைய வாதம் வேறு எங்கெங்கோ சென்று கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனாலேதான் இந்த வாதத்தை இத்தோடு முடித்துவிடலாம்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை, இல்லை, நானும் பொறுமையோடு இருந்து கொண்டுதான் இருக்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனக்குப் புதிது அல்ல. அதை உருவாக்கிய காலத்திலிருந்து நான் அதிலே பணியாற்றியவன் என்று உங்களுக்குத் தெரியும். இந்த அவையிலே இருக்கக்கூடிய முக்கியமானவர்கள் அத்தனை பேருக்கும் தெரியும். இருப்பினும், 1996-லே தனித்துப் போட்டியிட்டு 9,750 வாக்குகளுக்கும் மேலே பெற்றவன் என்பதனை தயவுசெய்து அமைச்சர் அவர்கள் மனதிலே பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நடந்து முடிந்த உண்மையைத்தான் நான் சொன்னேனே தவிர, வேறொன்றையும் மறைத்துச் சொல்லவில்லை. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் எடப்பாடி தொகுதியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் ஆயிரம் வாக்குகளுக்கும் அதிகமாகப் பெற்றிருந்தார் என்ற உண்மையைத்தான் சொன்னேனேதவிர, நீங்கள் வாங்கிய வாக்குகளை நான் தவறாகச் சொல்லவில்லை.

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வாங்கியதை அவர் தவறாகச் சொல்லவில்லை. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலிலே நடந்ததைத்தான் சொன்னார்.



**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, அதை மறுப்பதற்குத்தான் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்தந்தத் தொகுதியிலே, அந்தந்தக் கட்சிக்கு என்று ஒரு தனிப்பட்ட வாக்கும், அங்கே நிற்கக்கூடிய வேட்பாளர்களுடைய தகுதியை உணர்ந்து பொதுமக்கள் அளிக்கக்கூடிய ஒரு தனிப்பட்ட வாக்கும் இருக்கும் என்பதனை இங்கேயிருக்கக்கூடிய அமைச்சர்களிலேயிருந்து நாட்டிலே இருக்கக்கூடிய அத்தனை அரசியல்வாதிகளும் தெரிந்துகொள்ள வேண்டும். வேட்பாளராக நல்லவரை, வல்லவரை எந்தக் கட்சியிலேயிருந்து போட்டாலும் அவர்கள் வெற்றியடையக்கூடிய ஒரு சிறப்பான வாய்ப்பு இருக்கும். ஆனால் ஒரு மோசமான வேட்பாளரை தலைமை அறிவித்தால், ஜெயித்தால்கூட மிகக் குறைந்த வாக்குகளில்தான் வெற்றியடைய முடியும் என்பதனை உங்களுக்கு நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஆகவே, என்னுடைய எடப்பாடி தொகுதி, திரு. பழனிச்சாமி அவர்களுடைய சொந்தத் தொகுதி; நாடாளுமன்ற உறுப்பினருடைய சொந்தத் தொகுதி. அந்தத் தொகுதியிலே ஆயிரம் ஓட்டு அதிகமாக வாங்குவது ஒன்றும் பெரிதல்ல என்பதனையும், அதேபோல நான் தனித்து நின்று வாங்கிய வாக்குகள்தான் என்பதனைச் சொன்னேன் என்பதையும் உங்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் சொல்லும்போது, தேர்தலிலே வேட்பாளர்களுக்கென்று தனியாக வாக்கு இருப்பதாகச் சொன்னார்கள். அதெல்லாம் இப்போது கிடையாது. இப்போதெல்லாம் தேர்தலிலே போட்டியிடுகின்ற கட்சிக்கும் அதன் தலைமைக்கும்தான் மக்கள் வாக்களிக்கின்றார்களேயொழிய (மேசையைத் தட்டும் ஒலி) தனிப்பட்டவர்களுக்காக வாக்களிப்பதாக நான் கருதவில்லை. ஏனென்றால், பெரும் பெரும் தலைவர்களெல்லாம் சென்னையிலே போட்டி போட்டிருக்கிறார்கள். அவர்கள் தனியாகப் போட்டி போட்டபோதுகூட என்ன வாக்குகள் பெற்றார்கள் என்பது அவர்களுக்கே தெரியும். ஆகவே, இப்போதைய ஜனநாயக முறையிலே ஒரு கட்சிக்கும், அதன் தலைமைக்கும் அளிக்கும் வாக்குகள்தானே தவிர வேறொன்றும் கிடையாது. அது தனிப்பட்ட மனிதருக்காக வருகிற ஓட்டு என்று யாராவது பேசினால் அது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்கிறோம்

என்றுதான் பொருள். அதைத்தான் நான் சொல்ல முடியும். ஆகவே, இந்த ஜனநாயக அமைப்பில் இந்தியா முழுவதும் இப்போது அப்படித்தான் இருந்து கொண்டிருக்கிறது. சுயேட்சைகள் வெற்றி பெறுவது ஏதாவது ஒன்றில்தான். இதுகூட சில குழப்பத்தின் காரணமாக வெற்றி பெறுகிறார்களேயொழிய, முன்புபோல யாரும் சுயேட்சைகள் வெற்றி பெறுவது இல்லையே. ஆகவே, இப்போது அரசியலிலே, தேர்தலிலே தலைமைக்குத்தான் வெற்றியே தவிர, வேறு ஒன்றுக்கும் கிடையாது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

*பிற்பகல் 6-05*

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே சுயேட்சையாக திரு அப்பாவு அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அதேபோலத்தான், சென்ற முறை 1996—லே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைவிட, தனித்து நின்று நாங்கள், அதுவும், நான் ஒன்பது ஆயிரத்து சில்லறை வாக்குகளை அதிகமாக வாங்கி வெற்றிப் பெற்றேன் என்று சொல்லும்போது எந்த அர்த்தத்தில் அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்டார்கள்? சுயேட்சை வேட்பாளர்கள் வெற்றிபெற முடியாது என்பது நிச்சயமாக இல்லை. அந்தப் பகுதி மக்களையும், அந்தத் தொகுதி மக்களையும் யார் நேசிக்கிறார்களோ யார் உழைக்கிறார்களோ, அவர்களுக்கு பொது மக்களிடத்திலிருந்து நிச்சயமாக வாக்குகள் கிடைக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** அவர்கள் வணங்குவதாகச் சொல்லிக்கொள்கின்றார்களே, அவர்களுடைய டாக்டர் அய்யாவிற்குத்தான் கிடைக்காது என்று அவர்கள்தான் ஏதோ சொல்கிறார்கள் போல் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் சொல்வதைப் பார்த்தால், ஏதோ தனிப்பட்ட முறையிலே உங்களுக்குக் கிடைத்தது என்பதற்காக உங்கள் தலைவருக்குக்கூட ஓட்டு இல்லையா? நீங்கள் சொல்வது அப்படித்தானே அர்த்தம் ஆகிறது?

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு சொல்லிக் கொள்கின்றேன். தலைமைக்கு ஓட்டு இல்லை என்று நான் ஒருபோதும் சொல்லவில்லை. நிற்கக்கூடிய வேட்பாளருடைய தகுதிக்கு ஓரளவிற்கு ஓட்டு இருக்கிறது என்பதைத்தான் சொன்னேன். அப்படியென்றால், 1991—லே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி அடைந்தது. 1996—லே



அந்த இடத்திலே தோல்வி கண்டது. அப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்கு கிடைக்கவில்லை என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. அந்தந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக நிற்கக்கூடிய ஒருவரை நல்லவராகத் தேர்ந்தெடுக்கக் கூடியது பொது மக்களுடைய கடமையாக நினைத்து, உண்மையாக வேலை செய்யக்கூடிய, தொகுதியினுடைய நன்மையைக் கருதக் கூடியவர்களுக்கு ஒரு தனிப்பட்ட வாக்கு இருக்கிறது என்பதனை ஒத்துக்கொள்ள வேண்டும். ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், நீங்கள் விதிவிலக்கைச் சொல்கிறீர்கள், அமைச்சர் விதியைச் சொல்கிறார். ஆக, விதி என்பது அவர்கள் குறிப்பிடுவது. நீங்கள் சொல்வது எப்போதாவது நடைபெறக்கூடிய சில விதிவிலக்கு. மூன்று உறுப்பினர்களுக்கு மேல் பேச வேண்டும். இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். நிலைமை சந்தானம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். சுருக்கமாகப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை, சுற்றுலாத் துறை ஆகிய மானியங்களிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழிலே இருக்கின்ற அத்தனை நூல்களைக் காட்டிலும் திருக்குறளுக்கு ஏன் மரியாதை இருக்கிறது என்று சொன்னால், அது குறைந்த ஏழு சீர்களிலே அத்தனை உண்மைகளையும் அடக்குகின்ற ஒரு நூலாக இருக்கின்ற காரணத்தினால்தான் அதற்கு ஒரு மரியாதை இருக்கிறது. அதுபோல், அந்தக் குறள் குறைந்த அடிகளிலே நிறைந்த பொருளை தருவதுபோல் ஒவ்வொருவரும் பேசுகின்ற நிலையில்கூட சுருக்கமாகப் பேசி அதிலே நிறைந்த கருத்தைச் சொன்னால்தான் அது உபயோகமாக இருக்கும் என்ற கருத்தைக் கொண்டவன் நான் என்கின்ற முறையில் நான் மிகச் சுருக்கமாகவே இங்கே என்னுடைய கருத்துகளை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இந்த அவையிலே இப்போது ஏறத்தாழ 15 நிமிட நேரம் நீங்கள் பெரியவர்களா, நாங்கள் பெரியவர்களா என்கின்ற வாதம்கூட எழுந்தது. ஆனால்.. ஒட்டுமொத்தமாக அருமைக்குரிய மணி அவர்கள் சொன்னதுபோல, அவர்களுடைய தலைவரும், அத்தனை மதச்சார்பற்ற கூட்டணியைச் சார்ந்த தலைவர்களும்கூட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி அமைய வேண்டுமென்றுதான் வாக்குகளைக்

கேட்டோம். அதற்குத்தான் ஒட்டுமொத்தமாக தமிழக மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே யாரை முன்வைத்தோம்? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக வேண்டுமென்கின்ற நிலையைத் தேர்தலிலே எடுத்து வைத்தோம். அதற்கு வாக்களித்திருக்கிறார்கள். இதிலே யாருக்காக வாக்களித்தார்கள் என்பதை நாமே புரிந்துகொள்ள வேண்டுமென்ற நிலையை எடுத்துச்சொல்லி இன்றைக்கு அறநிலையத் துறை என்பது, அன்றைக்கிருந்த முன்னோர்கள் எல்லாம் அங்கு இந்த—(குறுக்கீடு)

*பிற்பகல் 6–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் சொல்கின்ற நேரத்திலே நல்ல உதாரணத்தை நடைமுறையிலே இருந்த உண்மையைச் சொன்னார்கள். நாங்களும் சொல்கிறோம். மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணி என்பதை வெற்றிக் கூட்டணி என்று சொன்னவர் எங்களுடைய டாக்டர் அய்யா அவர்கள். ஆனால், கூட்டணியிலே இருந்து நாங்கள் விலகிச் சென்றாலும்கூட ஓர் உண்மையைச் சொல்கிறேன், மனந்திறந்து சொல்கிறேன். கூட்டணியிலே இருந்து விலகியபோதும்கூட, இன்றையதினம் வரையிலே, இந்த மாமன்றத்திலே அண்ணா தி.மு.க.வைப்பற்றி ஒரு வார்த்தைகூட அல்லது அண்ணா தி.மு.க.-வினுடைய தலைமையாக இருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பற்றி இங்கே எந்த ஒரு வார்த்தையையும் நாங்கள் பேசியது கிடையாது. அதே நேரத்திலே, உண்மைகளை, நடுநிலையோடு சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய இந்த வேளையில், இந்த மாமன்றத்திலே மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள், டாக்டர் அய்யா அவர்களைப்பற்றி பேசுகின்ற நேரத்திலே, கேழ்வரகிலே நெய் வடியும் என்ற கதையெல்லாம் சொன்னார்கள். அது அவ்வளவு நல்லதாக இருக்காது. அப்படிப்பட்ட உதாரணங்கள் எல்லாம் தேவையில்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு சொல்லி, நடந்தது நடந்ததாக இருக்கட்டும். இனி நடப்பது நல்லதாக இருக்கட்டும் என்று அந்த அளவிலே கூட்டணியைப்பற்றி பேசுகின்ற நேரத்திலே எல்லா கட்சிகளுக்கும் அந்தந்தக் கட்சிகளுக்கு தகுந்தமாதிரி சக்தி இருக்கிறது. அண்ணா தி.மு.க. பெரிய கட்சி. அதை மறுக்கவில்லை. அண்ணா திமுகவினுடைய தலைமையிலே கூட்டு சேர்ந்தோம். நாங்கள் கூட்டணி



சேர்வதற்கு முன்பும் சரி, சேர்ந்த நேரத்திலும் சரி, பிரச்சார நேரத்திலேகூட, டாக்டர் அய்யா அவர்களும், நாங்களும் சொன்னதெல்லாம், அண்ணா தி.மு.க. தனிப் பெரும்பான்மையோடு வெற்றி பெற்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தனிப்பட்ட முறையிலே முதலமைச்சராக வேண்டும்; அந்தக் கூட்டணியிலே. நாங்கள் மந்திரி சபையிலே பங்கு கோரவும் மாட்டோம், சேரவும் மாட்டோம் என்று சொல்லி வெளியிலே மாத்திரமல்ல, முதலமைச்சரிடத்திலேயே அன்றைய தினத்திலே எடுத்துச் சொன்னோம். ஆகவே, நடுநிலையோடு, உணர்வுபூர்வமாக கூட்டணியிலே நேர்மையோடு நடந்துகொண்ட எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் அய்யா அவர்களைக் கொச்சைப்படுத்துவது நல்லதல்ல என்பதை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களெல்லாம் இந்த அவைக்கு வருகிறபோதே தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் எங்களையெல்லாம் அழைத்து கண்ணியத்தோடுதான் பிற கட்சித் தலைவர்களிடத்திலே நடந்துகொள்ள வேண்டுமென்று பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறார். ஆனால், பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த பெண் உறுப்பினர் பேசுகிறபோது, நாங்கள் நினைத்தால்தான் முதலமைச்சராக வர முடியும், நாங்கள் சொல்லித்தான் புரட்சித் தலைவி முதலமைச்சராக வந்தார் என்கிற தொனியிலே பேசுகிறபோது, எங்களுடைய தலைவிக்கு இருக்கிற மரியாதையை பாட்டாளி மக்கள் கட்சிக்கு சொல்லித் தெரிய வைக்க வேண்டுமென்கிற அவசியமில்லை. உலக நாடுகளே ஒப்புக் கொண்டிருக்கின்ற ஒரு மனிதப் புனிதவதியாக உட்கார்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவியை (மேசையைத் தட்டும் ஒலி) பாட்டாளி மக்கள் கட்சி, நாங்கள் நினைத்துத்தான் முதலமைச்சராக உருவாக்கியிருக்கிறோம் என்று சொன்னால், உங்களுடைய தலைவரின் ** நாங்கள் ஒரு வாரமாக பத்திரிகையில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எங்கே போனாலும் கதவு சாத்தப்பட்டு, கடைசியாக இப்போது கோபாலபுரத்திற்கு போக மாட்டோம் என்று உங்களுடைய தலைவர் கதவைச் சாத்தியதற்குப் பிறகு அறிக்கை விட்டிருக்கிறார். நாங்களா கண்ணியக் குறைவாக நடந்து கொண்டிருக்கிறோம்? உங்களுடைய தலைவர் நடந்தார். நீங்கள் முதலமைச்சர் புரட்சித் தலைவி என்று முன்னிறுத்திச் சொன்ன காரணத்தால் இத்தனை உறுப்பினர்கள் இங்கே வந்து உட்கார்ந்து இருக்கிறீர்கள். ஒரே ஒரு நாள் உங்களுடைய தலைவர்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

எங்களுடைய புரட்சித் தலைவியின் பெயரை உச்சரிக்காமல், அவர் முதலமைச்சர் இல்லை, எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்தான் முதலமைச்சர் என்று அவர் சொல்லிப் பார்த்திருக்கட்டும், இங்கே மாண்புமிகு உறுப்பினர் மணி வந்திருப்பாரா? இல்லை, இங்கே உட்கார்ந்திருக்கிற பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் வெற்றி பெற்றிருக்க முடியுமா? எங்களின் தலைவர், எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியை முன்னிறுத்திய காரணத்தால்தான், இந்தக் கூட்டணி வெற்றி பெற முடிந்தது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தைச் சொன்னார்கள். கூட்டணி சேருகிற நேரத்திலும் சரி, கூட்டணி தொடருகின்ற நேரத்திலேயும் சரி, தேர்தல் நேரத்திலே இங்கே எல்லா கட்சிகளுக்கும், அவரவர் கட்சிக்குத் தகுந்த சக்திக்குத் தகுந்த, வாக்கு வங்கிகள் இருக்கின்றன. அதைத்தான் நான் முன்பேகூடச் சொன்னேன். அண்ணா தி.மு.க. தமிழகத்திலே பெரிய கட்சி, நாங்கள் மறுக்கவில்லை. அதன் தலைமையிலே நாங்கள் கூட்டணி சேர்ந்தோம். இருந்தாலும்கூட, ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு தொகுதியிலேயும் ஒரு வாக்கு வங்கி இருக்கிறது. நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன், அமைச்சர் பேசியதற்குப் பிறகு நான் சொல்லியாக வேண்டும். கடந்த 1996-ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலே பாட்டாளி மக்கள் கட்சி தனித்துப் போட்டியிட்டது. அப்படி தனித்துப் போட்டியிடுகின்ற நேரத்திலே 42 தொகுதிகளிலே அதிகமான வாக்குகளை நாங்கள் பெற்றிருக்கிறோம். ஒரு தொகுதியிலே 31,000, 30,000, 28,000, 25,000, 20,000 என்று நிறைய வாக்குகளைப் பெற்றிருக்கிறோம். 1996-ல் தனித்து நின்று பெற்றோம். ஆக, 1996-க்குப் பிறகு தொகுதிவாரியாக மாநாடுகள், கிராம மாநாடுகள், மகளிர் சங்க மாநாடுகள் எல்லாம் நடத்தி கட்சி வளர்ந்திருக்கிறது. இப்போது நடந்து முடிந்த தேர்தலிலே, பாட்டாளி மக்கள் கட்சி தனித்துப் போட்டியிட்டுப் பெற்ற அந்த வாக்குகளைக் கூட்டிப் பார்க்கின்ற நேரத்திலே அண்ணா தி.மு.க. வினுடைய வாக்கு கூடியிருக்கிறது. ஆகவே, நாங்கள் தனித்துப் பெற்ற அந்த வாக்குகளைக் கழித்துவிட்டோம் என்று சொன்னால், அண்ணா தி.மு.க. வெற்றி பெற்ற தொகுதிகளிலே வாக்குகள் குறையத்தானே செய்யும். நான் உண்மையைச் சொல்கிறேன், ஆதாரத்தோடு சொல்கிறேன். ஆகவே, கூட்டணியில் பெற்ற வாக்கு என்பது, அண்ணா தி.மு.க. பெரிய கட்சி அவர்கள் ஓட்டும் எங்களுக்குக் கிடைத்தது.



நாங்கள் வெற்றி பெறுவதற்குப் பயன்பட்டது என்பதை மறுக்கவே இல்லை. அதே நேரத்தில், சிறிய கட்சியாக இருந்தாலும்கூட, எங்களுடைய வாக்குகளும் அண்ணா தி.மு.க. வெற்றி பெறுவதற்கு உறுதுணையாக இருந்தது என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே, இதுதான் கூட்டணி தர்மம், இதைக் கொச்சைப்படுத்துவது என்பது சரியாக இருக்காது என்று சொல்லி அமர்கிறேன்.

*பிற்பகல் 6-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பிலே கிராமப்புறங்களிலே இருக்கின்ற கோயில்களுக்கெல்லாம் ஒருகால பூஜை அவசியம் நடத்தியே ஆகவேண்டுமென்று குறிப்பிட்டிருப்பது பாராட்டத் தகுந்த அம்சமாக இருக்கிறது. அதைப்போல இன்றைக்கு தமிழ்நாட்டிலே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, பிரச்சினை முடிந்துவிட்டது. அவை அடக்கத்தோடு சொன்னீர்கள். திரு. சந்தானம் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பிரச்சினையை வளர்க்க வேண்டாம்.

**திரு. ஐ. கணேசன்:** பாட்டாளி மக்கள் கட்சித் தலைவருக்கு என்ன ** இருக்கிறது என்று சொன்ன அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும்.

*(திரு. ஐ. கணேசன், திரு. ஜி.கே. மணி ஆகியோர் நின்று கொண்டிருந்தனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன் அமருங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கி விடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று குறிப்பிடப்பட்ட அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. லா. சந்தானம்:** நமது தமிழ்நாட்டில் இருக்கின்ற ஆலயங்களிலே பழனி முருகன் ஆலயம்தான் மிகச் சிறந்த வருமானத்தை ஈட்டுகின்ற ஆலயமாக இப்போது இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அந்த ஆலயத்திற்கு மீண்டும் வலுச் சேர்க்கின்ற வகையிலே ஏற்கெனவே மின்சார இரயில்கள் எல்லாம் ஓடிக்கொண்டிருந்தாலும்கூட, கூடுதலாக கேபிள் கார் அமைத்து அந்தப் பழனி முருகன் கோயிலுக்கு இந்த அரசு பெருமை சேர்த்திருக்கிறது.

அதேபோல, அதைத் திருப்பதி கோயிலுக்கு இணையாக ஆக்குகின்ற முறையிலே அந்தக் கோயிலுக்கு இணை ஆணையர் அந்தஸ்திலே ஓர் அதிகாரியை அமர்த்தி, அதனுடைய வருமானத்தைப் பெருக்கி—திருப்பதி கோயிலில் எப்படி கல்வி நிலையங்கள் அமைந்திருக்கின்றனவோ அதைப் போல மகளிர் கல்லூரி, ஆண்கள் கல்லூரி, பாலிடெக்னிக் போன்றவை எல்லாம் பழனி முருகன் கோயில் மூலமாக நடைபெறுகின்றன. எனவே இந்தக் கோயிலுக்கு இணை ஆணையர் அந்தஸ்தில் ஓர் அதிகாரியைப் போட்டு—அதைத் திருப்பதி கோயிலுக்கு இணையான கோயிலாக ஆக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு சுற்றுலாத் துறையைப் பொறுத்தளவில், நான் ஒரு நேரத்திலே சீன தேசத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு கும்மின் என்ற மாவட்டத்திலே ஒரு சுற்றுலாத் தலம் இருக்கிறது. இங்கே எல்லாம் நாம் சுற்றுலாத் தலங்களுக்கு மினி பஸ் விட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால், அந்தச் சுற்றுலாத் தலத்திற்கு ஒரு மினி விமானத்தையே ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நாளைக்கு பல தடவை சுற்றுலாத் துறையின் மூலமாக அந்த மினி விமானத்தை இயக்கி, ஏறக்குறைய ஒரு மாதத்திற்கு 100 கோடி ரூபாய் அளவுக்கு அங்கே சுற்றுலாத் துறையின் மூலமாக வருமானத்தை ஈட்டிக்கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே நிறைய சுற்றுலா இடங்கள் இருக்கின்றன. மதுரையைப் பொறுத்தவரையிலே, அதை கூடல் நகரம் என்று சொல்வார்கள், கோயில் நகரம் என்று சொல்வார்கள். ஆங்கில சுற்றுலாப் பயணிகள் எல்லாம் Temple City Madurai என்றுதான் சொல்வார்கள். அப்படிப்பட்ட ஒரு சுற்றுலாத் தலமாக இருக்கின்ற மதுரைக்கு வந்துதான் இராமேஸ்வரம் போன்ற கோயில்களுக்குக்கூட செல்கிறார்கள். அருகே திருப்பரங்குன்றத்திலே முருகன் கோயில் இருக்கிறது, அழகர் கோயில் போன்றவை எல்லாம் அங்கே இருக்கின்ற காரணத்தால், மதுரையில் ஒரு சுற்றுலா மையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லி, கடந்த காலங்களிலேகூட அதை எப்படியும் நிறைவேற்றுவோம் என்றெல்லாம் வாக்குறுதி கொடுத்தார்கள்.



வண்டியூர் கண்மாயை ஆழப்படுத்தி, அதிலே படகு விட்டு அதை ஒரு சுற்றுலா மையமாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் செயல்படுத்தவில்லை. எனவே, இந்த அரசானது மதுரையில் இருக்கின்ற வண்டியூர் கண்மாயை ஆழப்படுத்தி அதிலே படகு விட்டு, அதை ஒரு சுற்றுலா மையமாக அமைத்தால் மதுரை நகருக்கு மீண்டும் பெருமை சேரும் என்று சொல்லி, இவை இரண்டையும் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அண்ணன் லத்தீப் அவர்கள் 5 நிமிடங்கள் பேசி வரலாறு படைக்கக் கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர் திரு. ம. அப்துல் லத்தீப் உரையாற்றவில்லையா? (குறுக்கீடு) சரி, அடுத்து, திரு. கே.என். இலட்சுமணன்.

பிற்பகல் 6-20

***திரு. கே.என். இலட்சுமணன்:** வணக்கத்திற்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில்களின் நிருவாகத்தை தெய்வீக நம்பிக்கையுள்ள ஆன்றோர்களும், சான்றோர்களும் கொண்ட சுய அதிகாரம் உள்ள திருக்கோயில் நிருவாக வாரியத்திடம் கொடுக்க வேண்டுமெனவும், குத்தகை பாக்கித் தொகையை வசூலிக்கும் வழக்குகளில் வருவாய் நீதிமன்றங்கள் துரிதமாகச் செயல்பட வழிவகைகள் வகுத்திடவும், திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெறும் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் மாதம் ரூபாய் 2000 ஆக உயர்த்தக் கோரியும், கிராமப் பூசாரிகளுக்கு ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1000 ஆக உயர்த்தக் கோரியும் திருக்குளங்களில் தூர்வாரி, கரைகளைச் சீர்படுத்தி நீர் நிரப்பும் பணிகளுக்கு முன்னுரிமை தரவும் வேண்டி என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாரதிய ஜனதா கட்சியினுடைய தலைவர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்கிறபோது, மிகச் சுருக்கமாக அவருடைய உரையை நிகழ்த்தினார்கள். அதிலே மிகவும் ஆபத்தான ஒரு செய்தியைச் சொல்லிவிட்டு அமர்ந்திருக்கிறார். குத்தகை பாக்கிக்காக விவசாயிகளை வெளியேற்றுகிற அந்த Revenue Court நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்கிறார். இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்பட்ட காரணத்தாலே, அந்த விவசாயிகள் குத்தகை செலுத்த முடியாத நிலையில்

இருக்கிறார்களே தவிர, செலுத்த வேண்டாம் என்ற நிலையில் அவர்கள் இல்லை. ஆகவே, Revenue Court மூலமாக விவசாயிகளை வெளியேற்றுகிற நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்த நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தாமல் இருக்க வேண்டுமென்பது ஒரு பிரச்சினை.

அடுத்து, கோவில் மனைகளிலே குடியிருப்பவர்களுக்கு பெயர் மாற்றம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லட்சுமணன் அவர்களுடைய பேச்சே மிகவும் சுருக்கமாக இருந்தது. நீங்கள் அதிலே விளக்கம் கொடுப்பது ரொம்ப அதிகமாக இருக்கிறது. அவருடைய கட்சியினுடைய கருத்தை அவர் சொல்லியிருக்கிறார். உங்களுடைய கட்சியினுடைய கருத்து என்ன என்று நீங்கள் தெரிவியுங்கள். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** இன்னும் ஒரேயொரு நிமிடம் கொடுங்கள், இது முக்கியமான விஷயம். நேரத்தின் அருமையை நான் உணர்கிறேன். இருந்தாலும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவருடைய கட்சியினுடைய கருத்து. நீங்கள் உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திருமதி இரா. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா சுதந்திரம் அடைந்து எத்தனையோ அரசுகள் தமிழகத்தை ஆண்டுவிட்டன. ஆனால், பழங்குடி மலைவாழ் மக்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு முன்னுரிமை தந்து, எந்த அரசியல் கட்சியும் அமைச்சரவையில் இடம் தந்து பெருமைப்படுத்தியதில்லை. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வராக இருந்து மறைந்த மாமேதை டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் என்னை சட்டமன்ற உறுப்பினராக்கினார். அவருக்கு என்னுடைய கண்ணீரை முதலிலே காணிக்கையாக்குகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தச் சமுதாயம் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு மலைவாழ் இனத்தில் பிறந்த என்னை மீண்டும் சட்டமன்ற உறுப்பினராக்கியதோடு மட்டுமல்லாமல், வெளிநாட்டினரும் பங்கேற்றுச் சிறப்பிக்கும் சுற்றுலாத் துறை அமைச்சராக்கிப் பெருமைப்படுத்திய டாக்டர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், என்னுடைய குடும்பத்தார் சார்பிலும், உப்பிலியாபுரம் தொகுதி மக்கள் சார்பிலும் எனது மனமார்ந்த நன்றியை அவர்களது



பொற்பாதங்களில் சமர்ப்பித்து என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். ** என்கிற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டாம் என்று நீங்கள் சொன்னீர்கள். ஆனால், பாராளுமன்ற மரபுப்படி அது ஒன்றும் பயன்படுத்தக் கூடாத வார்த்தையில்லை. இருந்தாலும், உங்களுடைய மனம் புண்படக் கூடாது என்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டு அதை நீக்கச் சொல்லியிருக்கிறார்கள். அது நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி இரா. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை ஆண்டான 2001–2002–ல் சுற்றுலாத் துறை ஒரு சிறப்பான இடத்தைப் பெற புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்துள்ளார்கள். தமிழக சுற்றுலாத் துறை 1971 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, கடந்த 30 ஆண்டுகள் ஆகியும் இதை யாரும் கவனிப்பார் இல்லாத நிலையிலேதான் இருந்து வந்துள்ளது. சென்ற ஆட்சியில், கடந்த நிதிநிலை ஆண்டில் ரூபாய் 5.50 கோடிதான் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஆண்டில்தான் முதன் முதலாக கடந்த 30 ஆண்டு கால வரலாற்றில் இல்லாத அளவிற்கு சுற்றுலாத் துறைக்கு ரூபாய் 17.00 கோடியை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கித் தந்துள்ளார்கள் என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6–25

தமிழக சுற்றுலா வரும் ஆண்டுகளில் சிறப்பானதொரு இடத்தைப் பெற்று, இந்தியாவிலேயே தமிழ்நாடு சுற்றுலாதான் முன்னிலையில் உள்ளது என்று கூறத்தக்க அளவில் வளர்ச்சி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். உள்ளபடியே நான் மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். சுற்றுலாத் துறை வரலாற்றில் முதன் முதலாக இந்த அளவிற்கு அதிகத் தொகை ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் உங்கள் முன் பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்காக மிகவும் மன நிறைவு கொள்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையில் இங்கே பேசிய உறுப்பினர்கள் அனைவரும் தமிழ்நாடு சுற்றுலா எவ்வாறு வளர்ச்சி பெற வேண்டும் என்பதற்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கியுள்ளீர்கள். அவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டு, ஒரு சிறப்பான துறையாக மாற்ற அனைத்து நடவடிக்கைகளும் அரசால் எடுக்கப்படும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். பல ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு சுற்றலா சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. சுற்றுலாப் பயணிகள் வருகையும் சிறப்பாக இருந்தது. ஆனால், கடந்த சில ஆண்டுகளில் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்துவிட்டது. இதற்கு, முந்தைய அரசின் அணுகுமுறையே காரணம் என்பதை இந்த நேரத்திலே, இம்மாமன்றத்திலே கூறக் கடமைப்பட்டுள்ளேன். இத்தகைய நிலை தொடராமல், தமிழகம் இந்தியாவின் முதன்மையான மாநிலமாக ஆக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அம்மாவின் ஆணைப்படி பல உரிய முறையான சிறப்பு நடவடிக்கைகள் அரசால் எடுக்கப்பட்டுள்ளன. இங்கிலாந்து, இலங்கை, கனடா, மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், ஃபிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஐக்கிய நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வருகை தருகின்றனர். மேலும் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க முடிவெடுக்கப்பட்டு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்:

பிற மாநிலங்களில் இல்லாத சில சிறப்பு இயல்புகள் தமிழகத்தில் உள்ளன. அவற்றை உரிய முறையில் வெளிக்கொணர்ந்து சுற்றுலாத் தொழிலில் தனியார் முதலீட்டை ஊக்குவிக்கத் தேவையான ஊக்கத் தொகையும், பிற சலுகைகளையும் அளிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் தரமான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி நிலை உயர்த்துதல், தொன்மைமிக்க வளமான பண்பாட்டுப் பாரம்பரியத்தை விளம்பரப்படுத்துதல், சூழலியல், தோழமையான சுற்றுலாச் சூழலைப் பேணிக் காத்தல், நமது பாரம்பரியமிக்க பண்பாட்டைப் பாதுகாப்பதோடு அல்லாமல், இத்தலைமுறையினருக்கு ஏற்றாற்போல், சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளை மாற்றியமைத்தல், உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க புதிய யுக்திகளை நவீன தொழில்நுட்பங்களைக் கையாண்டு, உலகளவில் விளம்பரப் பணிகளை மேற்கொள்ளுதல், புகழ்பெற்ற தொழில்நுட்ப வல்லுநர்களைக்கொண்டு இயற்கை வளத்துடன்கூடிய புதிய சுற்றுலாத் தலங்களைக் கண்டறிந்து அவற்றை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல், துல்லியமான தகவல்களையும், சிறப்பான சேவைகளையும் சுற்றுலாப்



பயணிகளுக்கு வழங்க மனித வள மேம்பாடு மற்றும் உரிய பயிற்சியும் அளித்தல், தனியார் தொழில் முனைவோரைச் சுற்றுலாத் தொழிலில் முதலீடு செய்ய ஊக்குவித்தல், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு சுற்றுலாக் காவலர் பிரிவினை ஏற்படுத்துதல், மண்டல பொருளாதார வளர்ச்சியில் உள்ள ஏற்றத்தாழ்வைச் சரி செய்தல், தோழமை, தேசிய ஒருமைப்பாடு, உலக சகோதரத்துவம் ஆகியவற்றை சுற்றுலா மூலம் வளர்த்தல் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க மிகப் பெரிய விளம்பர மேம்பாட்டுப் பணிகள் கீழ்க்காணும் வகையில் செயல்படுத்தப்படும். பிற மாநிலங்களில் சுற்றுலா அலுவலகங்கள் தொடங்குதல், சந்தைப்படுத்த முகவர்களை பிற மாநிலங்களிலும் வெளிநாடுகளிலும் நியமித்தல், பிற மாநிலங்களிலும் வெளிநாடுகளிலும் விற்பனை முகவர்களை நியமித்தல், ஒலி, ஒளி காட்சிக்குரியவைற்றில் நவீன டிஜிட்டல் தொழில்நுட்ப முறைகளை உருவாக்குதல், நவீன அச்சுத் தொழில்நுட்பத்தை மேற்கொண்டு பல வண்ண சுவரொட்டி, விளம்பரப் பலகை மடிப்பேடுகள் முதலியவை தயாரித்தல் போன்றவை ஆகும். நவீன ஒலி, ஒளி வசதியுடன்கூடிய கலை விழாக்கள் நடத்தப்படும்.

பிற்பகல் 6–30

உலகளவிலும் நம் நாட்டிலும் தினசரி சுற்றுலா வழிகாட்டுப் புத்தகங்கள், செய்தி ஏடுகளிலும் விளம்பரம் செய்யப்படும். சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக பல வண்ணக் கையேடுகள், வண்ணப்பட அட்டைகள் ஆகியவை தொழில்நுட்ப வல்லுநர்களைக்கொண்டு தயாரிக்கப்படும். உலகிலுள்ள கீழ்க்காணும் சுற்றுலாக் கண்காட்சிகளிலும் சுற்றுலாச் சந்தைகளிலும் பங்கேற்க உள்ளது:

உலக சுற்றுலாச் சந்தை (ஐ.டி.பி.) – பெர்லின்

உலக சுற்றுலாச் சந்தை (டபில்யு.டி.எம்) – லண்டன்

பசிபிக் ஆசிய சுற்றுலாச் சங்கம் (பி.எ.டி.ஏ) – சிங்கப்பூர்

மொரிசியஸ் சுற்றுலாச் சந்தை – மொரிசியஸ்

தென் ஆப்பிரிக்க சுற்றுலாச் சந்தை – தென் ஆப்பிரிக்கா

மலேசிய சுற்றுலாச் சந்தை ஜப்பான் சுற்றுலா முகவர்களின் கூட்டமைப்பு – மலேசியா

[திருமதி இரா. சரோஜா] [2001 ஆகஸ்ட் 28

குவைத் சுற்றுலாச் சந்தை – குவைத்

அமெரிக்க முகவர்களின் கூட்டமைப்பு – அமெரிக்கா

சுவிட்சர்லாந்து சுற்றுலாச் சந்தை – சுவிட்சர்லாந்து

சென்னை நகரம், கிழக்கு மேற்கு நாடுகளுக்கு மத்தியில் அமைந்துள்ளதால் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் சென்னைக்கு வருகை தந்து செல்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்தியாவில் பிற மாநிலங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பயண எழுத்தாளர்கள், இதழியலாளர்கள், செய்தியாளர்கள், தொலைக்காட்சி நிபுணர்கள் ஆகியோரை வரவழைத்து சுற்றுலாப் பயணத் திட்டம் நடத்தி, அவர்கள் இங்கே காணுகின்ற சிறப்புகளை தங்களது வெளியீடுகள் மூலம் விளம்பரப்படுத்தி அதன்மூலம் அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க முடியும் என நம்புகிறோம். இந்த முயற்சி குறைந்த செலவில் நிறைந்த பலன் என்ற வகையில், இது சிறப்பான திட்டமாகும்.

உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க தீவிர விளம்பர முகாம்கள் இந்தியா முழுவதும் நடத்தப்படும். நாட்டில் பல மாநிலங்களில் நடத்தப்படும் சுற்றுலாக் கருத்தரங்குகள் மற்றும் பொருட்காட்சிகளில் கலந்துகொள்ளுதல் போன்ற இதர பணிகள் நடைபெற உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் சுற்றுலா தகவல்களை உலகில் எப்பகுதியிலிருந்தும் அறிந்துகொள்ளும் வகையில் உடனடி முன்பதிவு செய்யவும் வாய்ப்பு ஏற்படுகின்ற வகையில் வேன் மூலம் இணைப்பும், புதிய வலைத்தளம்–வெப்சைட்– ஒன்றும் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் பயணத் திட்டங்களுடன், புதிய பயணத் திட்டங்களும் ஏற்படுத்தப்பட உள்ளன.

மைய தொல்லியல் துறை, மாநில தொல்லியல் துறை, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை மற்றும் மாவட்ட ஆட்சியாளர்களுடன் கலந்தாலோசித்து புதிய பயணத் திட்டங்கள் முழுமையாக்கப்படும். வெளிநாடுகளிலிருந்து வரும் கலை ஆர்வமிக்கவர்கள், ஆன்மீகச் சுற்றுலாப் பயணிகள் மற்றும் உல்லாசச் சுற்றுலாப் பயணிகளுக்கென சிறப்பு வான்வெளி சுற்றுலாத் திட்டம் வானூர்தி நிறுவனம் மற்றும் வெளிநாட்டு



2001 ஆகஸ்ட் 28] [திருமதி இரா. சரோஜா]

சுற்றுலாச் சந்தை முகவர்களுடன் கலந்தாலோசித்து தொடங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொளளக் கடமைப்பட்டுள்ளேன்.

சுற்றுலாத் துறையின் பொறுப்பு, சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதோடு நின்றுவிடுவதில்லை. சுற்றுலாத் தலங்களில் சிறந்த கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதும் சுற்றுலாத் துறையின் தலையாய கடமையாகும். இதற்காக மைய அரசின் உதவித் திட்டங்கள் மூலம் நடப்பு நிதியாண்டில் 801 இலட்சங்களுக்கு 30 திட்டங்கள் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளன. மாநில அரசின் பகுதி–2 திட்டத்தில் ரூபாய் 50 இலட்சத்திற்கு 8 திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பினைக் கருத்திலே கொண்டு தனியாக சுற்றுலா காவலர் திட்டம் தொடங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விமான நிலையம், இரயில் நிலையம் ஆகிய இடங்களில் இடைத்தரகர்கள் இல்லாமல் இருக்க வகை செய்வதும், பாரம்பரியமிக்க இடங்களிலும் மற்றும் ஆலையங்களிலும் பிச்சைக்காரர்கள் தொல்லையில்லாமல் செய்வதும், தமிழ்நாட்டிற்கு வந்து செல்கின்ற சுற்றுலாப் பயணிகளின் மனதில் இனிய நினைவுகள் நீங்கா இடம் பெற்றிருக்க வேண்டுமென்ற உயர்ந்த நோக்கங்களும் இந்தத் திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்படும் என்பதை இங்கே தெரிவித்தக்கொள்கிறேன். சரியான சுற்றுலாத் தகவல்களை சுற்றுறலாப் பயணிகளுக்கு, அவரவர்களுக்குத் தெரிந்த மொழியில் அளிப்பது மிகவும் அவசியமானதாகும். சுற்றுலாப் பயணிகள் ஆலயங்களுக்குச் செல்லும்போதும், பண்பாட்டு மையங்களுக்கும் நுண்கலை மையங்களுக்கும், தொல்பொருள் நினைவிடங்களுக்கும், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்கும் செல்லும்போதும் வழிகாட்டிகளின் உதவி தேவை. வழிகாட்டிகள் மிகச் சரளமாகப் பேசும் திறமை படைத்தவர்களாகவும், மொழிபெயர்த்துக் கூறும் திறமை உடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

பிற்பகல் 6–35

வெளிநாடு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் சுற்றுலாப் பகுதிகளில் பயிற்சி பெற்ற வழிகாட்டிகளின் அவசியத்தை உணர்ந்து தொடக்கத்தில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய நான்கு

இடங்களில் சுற்றுலா வழிகாட்டிகளுக்கான பயிற்சியை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை சென்னையில் உள்ள ஐ.நா. மேலாண்மை நிறுவனம் மற்றும் சென்னை, மதுரை, திருச்சியில் உள்ள பல்கலைக்கழகங்கள் மூலம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2001–2002–ல் தற்போதுள்ள வழிகாட்டிகளுக்குப் பயிற்சி அளிக்கவும், புதிய வழிகாட்டிகளை உருவாக்கவும் பயிற்சிகள் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரிச் சீரமைப்பு மற்றும் சுற்றுலாவில் வேலைவாய்ப்பு அதிகப்படுத்துதல். மனித வள மேம்பாடு, உணவகம் மற்றும் தொழில் நுட்பம் போன்ற பல்வேறு திட்டங்களில் வரிச் சீரமைப்புப் பணிகள் நடைபெற உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்குப் புதிய கீழ்க்கண்ட திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டு வருகின்றன:

**கடற்கரைப் பகுதி மேம்பாடு:** ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரைப் பகுதியைக் கொண்டுள்ளது தமிழகம். இப்பகுதியை மேம்படுத்த இதுவரை பெருந்திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவுரையின்படி, கிழக்குக் கடற்கரைப் பகுதியை மேம்படுத்தும் திட்டங்கள் செயல்படுத்தப்படும். சென்னைக்கும் புதுவைக்கும் இடையில் சிறப்பு சுற்றுலாப் பகுதியில் சுற்றுலாவை மேம்படுத்த தனியார் துறைகள் ஊக்குவிக்கப்படும். அரசு அளவில் பரிசீலிக்க ஒற்றைச் சாளர முறை திட்டம் வகுக்கப்படும். இதற்கான குழு ஒன்று அமைக்கப்பட்டு அதில் சுற்றுலாத் துறை, வனத் துறை, மாசுக் கட்டுப்பாட்டுத் துறை, வருவாய்த் துறை மற்றும் நிதித் துறையிலுள்ள அலுவலர்கள் இடம் பெறுவார்கள்.

**ஊக்கத் தொகையை வழங்க தனியார் முதலீடுகளை ஈர்த்தல்.** சுற்றுலாத் திட்டங்கள் மத்திய அரசு, மாநில அரசு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், நிதி நிறுவனம், நகர்ப்புறத் திட்டத் துறை, மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஆகிய துறைகளிடமிருந்து நிதி பெற்று செயல்படுத்தப்படுகின்றன. சுற்றுலா மையங்களைச் சுத்தமாகவும், மாசுபடாமலும் பாதுகாத்தல் உள்ளாட்சி மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் கடமையாகும். நாம் அனைவரும் விழிப்போடு இருந்து சுற்றுலாத் துறையைத் தூய்மையாகப் பாதுகாக்க திட்டமிட்டு நடவடிக்கை எடுத்து ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். அதனால் நமது சுற்றுலா மையங்களுக்கு எதிராகக் கூறப்படும் புகார்களைத் தவிர்க்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**ஒலி—ஒளிக் காட்சி:** ஒலி–ஒளிக் காட்சி, மாமல்லபுரம், காஞ்சிபுரம் மற்றும் தஞ்சைப் பெரிய கோயில்களில் ஆரம்பிக்கப்படும். மதுரையில் திருமலை மன்னர் அரங்கில் நடைபெற்று வந்த ஒலி–ஒளிக் காட்சி மீண்டும் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழ்நாட்டின் கலாச்சாரத்தை நன்குணர்ந்துகொள்ளும் வகையில் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு காலங்களில் விழாக்கள் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகின்றன. 2001–2002–ல் விழாக்கள் பிரபலமடையாத சுற்றுலா மையங்களில் நடத்தப்பட்டு. அந்த இடங்கள் பிரபலமாக்கப்படும். மேலும், ஆண்டுதோறும் நடத்தப்படும் விழாக்கள் குறித்த விரைங்கள் பல வண்ண விவரங்களின் மூலம் உலகமெங்கும் விளம்பரப்படுத்தப்படும். அதனால், சுற்றுலாப் பயணிகள் தங்கள் பயணத்திற்கான திட்டத்தில் இவ்விழாக்களைச் சேர்த்துக்கொள்ள வாய்ப்பாகும்.

**ஹெலிகாப்டர் சுற்றுலா:** அதிக அளவில் செலவு செய்யக்கூடிய உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ஹெலி டாக்சி சேவையை தனியார் மூலம் அறிமுகப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான உதவியை அரசு அவ்வப்போது செய்து கொடுக்கும்.

**புதிய படகு குழாம்:** கீழ்க்காணும் இடங்களில் புதிய படகுக் குழாம்கள் அமைப்படும். சென்னை, அடையாறு, கோட்டூர்புரம் அருகில், பழவேற்காடு, ஆலம்பரக் கோட்டை, நயினார்குளம்.

**சாகசச் சுற்றுலா:** இளைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் மத்திய அரசு நிதி உதவி மற்றும் வனத் துறையின் ஒத்துழைப்புடன் மலை ஏறுதல், மலைப் பாதையில் நடத்தல், பாறையில் ஏறுதல் போன்ற சாகச விளையாட்டுகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

*பிற்பகல் 6–40*

**கிராமியச் சுற்றுலா:** இது ஒரு புதிய சுற்றுலாத் திட்டம். நமது நாட்டில் உயர்ந்த கலாச்சாரம், கலை, வீர விளையாட்டுகள். கடவுள் வழிபாடு, கைவினைப் பொருட்கள், மூலிகை மருத்துவம் ஆகியவை கிராமங்களில்தான் பாதுகாத்துப் போற்றப்படுகின்றன. இதை ஊக்குவிக்கும் வகையில் பல புதிய கீழ்க்கண்ட கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த ஆண்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன. திருவாதவூர்–மதுரை

மாவட்டம், சிறுங்குன்றம்–காஞ்சிபுரம் மாவட்டம், புரிசை–திருவண்ணாமலை மாவட்டம், சுத்தமல்லி – திருநெல்வேலி மாவட்டம். இதுபோன்று புதிய திட்டங்களான சுற்றுச் சூழல் சுற்றுலா, ஆன்மீகச் சுற்றுலா, பண்பாட்டுச் சுற்றுலா, வரலாற்றுச் சிறப்புமிக்க புராதனச் சின்னங்கள் சுற்றுலா போன்ற பல்வேறு புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

மாநாட்டு அரங்கம்: மாநாட்டுச் சுற்றுலாவை தமிழகம் இதுவரை ஈர்க்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலோசனைக்கிணங்க சுமார் 500 ஏக்கர் பரப்பில் சென்னை–மாமல்லபுரத்திற்கிடையில் 1500 இருக்கைகள் கொண்ட பல்வேறு வசதிகள் அமையும் வகையில் ஒரு மாநாட்டுக் கூடம் ரூபாய் ஆயிரம் கோடி மதிப்பீட்டில் தனியார் துறை மூலம் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் ஓட்டல்களில் வழங்கப்படும் உணவு வகைகள் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். ஓட்டல்களுக்கு வரும் சுற்றுலா பயணிகளை நல்லமுறையில் உபசரிக்க பணியாளர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சுற்றுலாக்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி பழைய பேருந்துகள் நீக்கப்பட்டு அதிநவீன சொகுசுப் பேருந்துகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்படும். சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கும் வகையில் சுற்றுலா பயணத் திட்டங்கள் மாற்றியமைக்கப்படும். மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனைக்கிணங்க நட்சத்திரத் தரமுள்ள ஓட்டல்கள் திருவண்ணாமலை, வேளாங்கன்னி, நாகூர் மற்றும் பழனியில் விரைவில் கட்டப்படவுள்ளன. மற்ற இடங்களில் தேவைக்கு ஏற்றாற்போல் கட்டப்படும் என்பதை மகிழ்வுடன் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் சக்ரபாணி அவர்கள், ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிப் பகுதியில் ஒரு தொங்குபாலம் கட்டப்பட்டது. அதை எங்களுடைய தலைவர் கருணாநிதிதான் கட்டினார் என்று கூறினார். ஒகேனக்கல் நீர்வீழ்ச்சித் திட்டம் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்தில்தான் ஏற்படுத்தப்பட்டது என்று இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) திருப்பரங்குன்றம் நீர்வீழ்ச்சிப் பகுதியில் கட்டப்பட்டுள்ள சிறுவிடுதியை மேலும் விரிவாக்க நடவடிக்கை



எடுக்கப்படும். திருமலைநாயக்கர் மன்னர் மஹால் விரைவில் புதுப்பிக்கப்பட்டு ஒலி–ஒளிக் காட்சி மீண்டும் தொடங்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் நன்மாறன் அவர்கள் பேசுகையில் எஸ்.சி., எஸ்.டி. பிரிவினரைச் சேர்ந்த எவருக்கும் சுற்றுலாத் துறையில் பதவியே வழங்கப்படவில்லை என்று கூறினார். தற்பொழுது காலியாக உள்ள–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன், எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்குப் பதவி வழங்கப்படவில்லை என்று சொன்னீர்கள். அமைச்சரே அந்தப் பிரிவைச் சேர்ந்தவர்தான். (குறுக்கீடு) அமைச்சரே எஸ்.டி. பிரிவைச் சேர்ந்தவர்தான்.

பிற்பகல் 6–45

**மாண்புமிகு திருமதி இரா. சரோஜா:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எஸ்.சி., எஸ்.டி.–க்கு சுற்றுலாத் துறையில் பதவி வழங்கப்படவில்லை என்றுதான் கூறினார்கள். தற்போது காலியாக உள்ள சுற்றுலா அலுவலர்கள் பணியிடங்களில் இப்பிரிவினரைச் சேர்ந்தவர்களைக் கொண்டு நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

ஊட்டி ஏரியில் வளர்ந்துவரும் ஆகாயத்தாமரை என்ற செடிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் மலை வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மத்திய அரசிடமிருந்து பெறும் நிதியைக் கொண்டு நீக்கப்பட்டு வருகிறது. இப்பணி தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு, தூய்மைப்படுத்தப்படும் என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு திரு. தாமோதரன் அவர்களுக்கு மாவட்ட உலாத்தலத் திட்டத்தின்கீழ் பிளவக்கல் அணைப் பகுதியில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன என்பதை கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். தற்போது மேலும் தேவையான வசதிகளை ஏற்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கருத்துரு கேட்கப்பட்டுள்ளது.

அடுத்து, அறிவிப்புகள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி திருமுருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றான பழனிப்பதியிலும் மற்றும் திருவண்ணாமலை, நாகூர், வேளாங்கன்னி ஆகிய திருத்தலங்களிலும் சுற்றுலாப் பயணிகள் தங்கும் வகையில் உயர்தர ஸ்டார் ஓட்டல்கள் தனியார் மூலம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கோவை மாவட்டம் அழகிய ஆனைமலைச் சாரல் பகுதியை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதியுடன் சிறப்புச் சுற்றுலா மலைவாசஸ்தலமாக அறிவிப்பதில் பெருமை அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் தொடக்கமாக இந்த ஆண்டு ரூ.30 இலட்சம் செலவில் சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக கட்டமைப்புப் பணிகள் தொடங்கியுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னைக்கு அருகில் உள்ள முட்டுக்காடு கடல்நீர்ப் பகுதியில் ஏற்கெனவே உள்ள படகுத் துறை மேம்படுத்தப்பட்டு, நீர் விளையாட்டு சுற்றுலா மையமாக இவ்வாண்டு அமைக்கப்படும்.

இராமேஸ்வரம், குருசடை தீவுகள் பகுதியில் கடல்வாழ் அழகிய தாவர வகைகள், மீன் வகைகள் மற்றும் இயற்கை வளங்கள் போன்றவற்றை சுற்றுலாப் பயணிகள் கண்டு மகிழும்படியாக கண்ணாடி அடித்தளம் கொண்ட சிறப்புப் படகு ரூ.19 இலட்சம் செலவில் இந்த ஆண்டிலேயே வாங்கி தமிழ்நாடு வனத் துறையின் அன்பான ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படும் என்று இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

கோடியக்கரை அழகிய வனப் பகுதியில் உள்ள தங்கும் விடுதியை மேம்படுத்தி, சுற்றுலாப் பயணிகள் தங்கும் வன விடுதியாக மாற்றி அமைக்கப்படும். இதே இடத்தில் புதியதொரு வன விடுதி நிறுவவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சென்னைக்கு அருகில் பழவேற்காடு ஏரிப் பகுதி 60 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு சிறந்ததொரு சுற்றுலா மையமாக உருவாக்கப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஏற்கெனவே கிழக்குக் கடற்கரை தேசிய நெடுஞ்சாலையில் முட்டுக்காட்டுக்கும் பாண்டிச்சேரிக்கும் இடைப்பட்ட பகுதியை சிறப்புச் சுற்றுலாப் பகுதியாக 1992 ஆம் ஆண்டு அறிவித்துள்ளார்கள். ஆனால், முந்தைய அரசு அந்தப் பகுதியில் சுற்றுலா வளர்ச்சிக்கு எந்த முயற்சியையுமே மேற்கொள்ளவில்லை. தற்போது சென்னைக்கும் மாமல்லபுரத்திற்கும் இடைப் பகுதியில் பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வண்ணம் ஐந்து நட்சத்திரத் தரம் கொண்ட தங்கும் விடுதி, கலைக்கூடம், மாநாட்டுக் கூடம், எழில் பூங்கா, படிப்பகம், நீச்சல்குளம், உணவகம் மற்றும் பல பொழுதுபோக்குச் சிறப்பு அம்சங்களும் விளங்கும் வகையில் பெரிய



அளவில் பாரம்பரியமிக்க தனியார் நிறுவனங்கள், கூட்டமைப்புகள் மூலம் Convention Centre அமைக்கப்படும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

கங்கைகொண்ட சோழபுரம் சிறந்த சுற்றுலா மையமாக உருவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. Town and Country Planning துறை மூலம் தங்கும் விடுதி, உணவு விடுதி மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

தெய்வீக முனிவர்களும், மாமன்னர்களும் தெய்வங்களுடன் ஒட்டி உறவாடி மகிழ்ந்த மிகச் சிறந்த தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியம் நிறைந்து விளங்கும் நகரங்களான காஞ்சிபுரம், மகாபலிபுரம், தஞ்சை பெரியகோவில் ஆகிய திருத்தலங்களில் சிறப்பான முறையில் ஒலி–ஒளிக் காட்சிகள் புதிதாகத் தொடங்கப்படும். மதுரையில் கடந்த காலத்தில் நின்றுபோன ஒலி–ஒளிக் காட்சி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் விருப்பப்படி மீண்டும் விரைவில் தொடங்கப்படும்.

பிற்பகல் 6–50

அனைத்துத் திட்டங்களுமே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களே உருவாக்கிக் கொடுத்த திட்டங்களாகும். அவை அனைத்தையும் கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் அறிவித்துள்ளேன். மாண்புமிகு புரட்சித் தலைவி, தமிழகத்து முதலமைச்சர் அம்மா அவர்களே, தாங்கள் தேர்தலின்போது சுற்றுலாத் துறைக்குப் புத்துயிரூட்டி, பேரொளி விளங்கும்படிச் செய்வோம் என்று மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வண்ணமாகவும், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிட்டுள்ளபடியும் தாங்கள் பேருள்ளம் கொண்டு, சுற்றுலாத் துறையின் வரலாற்றிலேயே இதுவரையில் இல்லாத அளவிற்கு இத்துறைக்கு 5 கோடி ரூபாயிலிருந்து சுமார் 16 கோடியே 93 இலட்சம் ரூபாய் உயர்த்தி நிதி வழங்கியிருப்பதற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) தாங்கள் கூறிய அனைத்து ஆலோசனைகளின்படி, இத்துறையை மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப் பாடுபடுவேன் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு நிதி வழங்க அனுமதி தரும்படிக் கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்துசமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையை சிரமேற்கொண்டு, கடைகோடியில் கழகப் பணி ஆற்றி வந்த ஏழைத் தொண்டன் நான். 20 ஆண்டு காலமாக ஒன்றியச் செயலாளராகப் பணியாற்றிய என்னை, மாவட்டக் கழகச் செயலாளராக்கி, அமைச்சராக்கி அழகு பார்க்கும் என் அன்புத் தாயின் கருணையை எண்ணிப் பார்க்கிறேன்.

கூழாங்கல்லையும் வைரமாக மாற்றும் அற்புத ஆற்றல், படைத்து இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு மட்டுமே சாத்தியமாகும். வல்லவர்களைக் காட்டிலும் நல்லவர்களை மக்கள் பணிக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்பதே மாண்புமிகு அம்மா அவர்களின் விருப்பமாக இருக்கிறது. ஏழையெளிய மக்களோடு இரண்டறக் கலந்து, கிராமப்புறங்களில் ஒன்றிய அளவில் கழகப் பணியாற்றிய என்னை அறநிலையத் துறை அமைச்சராக்கி, பெருமைப்படுத்தும் என் அன்புத் தாயின் திருவடிகளில் என் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

“அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அற்று விடுவதும் இல்லை” என்ற அப்பர் பெருமானின் வாக்கு நமது இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு மிகவும் பிடித்த வாக்கு. அச்சம் என்பது நமது இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு வரலாற்றில் ஒருபோதும் கிடையாது. இடர்பாடுகளைக் கண்டு இடிந்துபோவோர் உண்டு. தொல்லைகளைக் கண்டு துவண்டுபோவோர் உண்டு. ஆனால், இடர்பாடுகளையும், தொல்லைகளையும் இடுப்பிலே அடிவைத்து நொறுக்கி, இமயமாய் நிற்பவர் இதய தெய்வம் அம்மா அவர்கள்தான். இன்று தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சராய், மக்கள் பணியாற்றும் இதய தெய்வம் அம்மா அவர்களை, இந்தியத் துணைக் கண்டமே வியந்து பார்க்கிறது. இன்று ஏழையெளிய மக்கள் வாழ்க்கை மேம்பாட்டிற்கு வழிகாட்டும் தெய்வமாக அம்மா அவர்கள், இந்தியத் துணைக் கண்டத்திற்கு முன்னோடி மாநிலமாக தமிழகத்தை உயர்த்தி எடுத்துக்கொண்டு உழைத்து வருகிறார்கள். மக்கள் மீது தனி அன்பு காட்டும் தாயின் அமைச்சரவையில் இடம் பெற்றிருப்பது என் வாழ்நாளில் நான் பெற்ற பெரும் பாக்கியம் என்று கருதுகிறேன்.

தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்



ஆசியோடு என்னை மொடக்குறிச்சி தொகுதியிலே சட்டமன்ற வேட்பாளராக நிறுத்தினார்கள். ஐயாயிரம் வாக்குகள்கூட சொந்தமாக வாங்க முடியாத என்னை, சட்டமன்ற வேட்பாளராக நிறுத்தி, அந்தத் தொகுதியில் 32,200 வாக்குகள் அதிகமாகப் பெற்று, தமிழகத்திலே எட்டாவது இடத்தில் அதிகமான வாக்குகளைப் பெற்றவன் என்ற முறையில், பெரியார் மாவட்டத்திலேயே அதிகமான வாக்குகளைப் பெற்றுத் தந்த நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மொடக்குறிச்சி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், என்னுடைய வெற்றிக்காக உழைத்த தோழமைக் கட்சி நண்பர்களுக்கும், கழகத்தினுடைய பல்வேறு பொறுப்புகளிலே உழைத்து என்னை வெற்றிபெறச் செய்த அத்தனை நண்பர்களுக்கும், அம்மா அவர்களின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 முதல் 1996 வரையிலான காலத்தில், இந்து சமய அறநிலையத் துறை, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நேரடிக் கண்காணிப்பில் இருந்து வந்தது. அக்காலகட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால், முதலமைச்சர் திருக்கோயில் மற்றும் பராமரிப்பு நிதி என்னும் நிதி ஏற்படுத்தப்பட்டு, பொதுமக்களிடமிருந்து சுமார் நான்கரை கோடி ரூபாய் பெறப்பட்டு, அதிலிருந்து பெறப்பட்ட வட்டியிலிருந்து கோயில்களுக்குத் திருப்பணி செய்ய நிதி வழங்கப்பட்டது. 1996 முதல் 2001 வரையிலான காலக்கட்டத்தில், இத்துறையின் பணிகளில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. எடுத்துக்காட்டாக, சில நிகழ்வுகளைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 6–55

திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையா சொத்துக்களிலிருந்து போதுமான வருவாய் கிடைக்க இருந்ததைக் கருத்திலே கொண்டு, சொத்துக்களுக்கான வாடகை நிர்ணயிப்பது தொடர்பான நெறிமுறைகளை மாற்றியமைக்க முடிவு செய்யப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டது. அந்த அரசாணையை எதிர்த்து சில வாடகைதாரர்கள், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள். உயர் நீதிமன்றம் மேற்படி வழக்குகளைத் தள்ளுபடி செய்தது. இந்தத் தீர்ப்பிற்கு எதிராக வாடகைதாரர்கள் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்கள் உயர் நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால், அப்போதைய முதலமைச்சர் 24–4–2000 அன்று

[திரு. பி.சி. இராமசாமி] [2001 ஆகஸ்ட் 28

நடந்த இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, சட்டமன்றத்தில் உள்நோக்கத்தோடு மேற்படி அரசாணையின் செயல்பாட்டினை நிறுத்தி வைப்பதாகத் திடீரென அறிவிப்பு வெளியிட்டார்கள். இதனால், சுமார் 20 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு, இந்து சமய அறநிலையத் துறைக்கு இழப்பு ஏற்பட்டது. இவ்வரசு பதவி ஏற்ற பின்னர், மேற்படி அரசாணையைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருகிறது. கடந்த தி.மு.க. ஆட்சியில் சட்டத்திற்குப் புறம்பாக சுமார் 244 புதிய நியமனங்களை திருக்கோவில்களில் செய்துள்ளார்கள். தி.மு.க. பிரமுகர்கள் தலையீட்டாலும், முறைகேடான நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன் காரணமாக திருக்கோவில்களுக்குத் தொடர் செலவினமாக பெரும்தொகை இழப்பை ஏற்படுத்தியுள்ளன. கடந்த தி.மு.க. ஆட்சியின்போது, திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், தீவம்பால்பட்டிணம் கிராமத்திலுள்ள அருள்மிகு அழகியநாதர்சுவாமி திருக்கோவிலுக்கு அருகில் 22–12–1998 அன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் குழாய் போடுவதற்காக குழி தோண்டும்போது, 17 உலோகத் திருமேனிகளும், 13 இதர இனங்களும் கண்டெடுக்கப்பட்டன. இதனை அறிந்த கிராம மக்கள் அவ்விக்கிரகங்களை அந்த அழகியநாதர்சுவாமி திருக்கோவிலிலேயே வைத்து வழிபட ஏதுவாக வழங்கக் கோரி வட்டாட்சியரிடம் மனு கொடுத்தார்கள். அறநிலையத் துறையும் அதைப் பரிந்துரை செய்தது. 4–1–1999 அன்று வருவாய்த் துறையினர், மேற்கண்ட உலோகத் திருமேனிகள் உட்பட அனைத்து இனங்களையும் காவல் துறையினர் பாதுகாப்புடன் திருத்துறைப்பூண்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லும்போது, கிராம மக்கள் தங்களுடைய கோரிக்கையைப் பரிசீலிக்காமல் எடுத்துச் செல்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அப்போது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அந்தப் பகுதியிலே இருந்த 3 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தார்கள்.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், 5–8–2001 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் இதே மாதிரி நிகழ்ச்சி நடந்தது. இந்த நிகழ்ச்சி பற்றி செய்தி கிடைத்ததும், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தஞ்சையிலே ஏற்பட்ட நிலை இங்கே ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி, எங்களிடத்திலே, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே உத்தரவு போட்டார்கள். அதற்கிணங்க கடந்த 5–8–2001–ல் சேலம் மாவட்டம் எடப்பாடி வட்டம், புதுப்பாளையம் கிராமம், அருள்மிகு லட்சுமி நாராயணப் பெருமாள் திருக்கோவில் வளாகத்திற்குள் தென்னங்கன்றுகள்



2001 ஆகஸ்ட் 28] [திரு. பி.சி. இராமசாமி]

நடுவதற்குக் குழி தோண்டும்போது 17 உலோக விக்கிரகங்கள், 18 பூசைப் பொருட்கள் கிடைத்தன. இதனை அறிந்ததும், 5–8–2001 அன்றே நான் சேலம் மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் துறைத் துணைத் தலைவர் ஆகியோருடன் களத்திற்குச் சென்று பார்வையிட்டேன். அப்போது, அங்குள்ள மக்கள் அந்த விக்கிரகங்களை அங்கேயே வைத்து வழிபட ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். அக்கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் தெரிவித்து நல்ல முடிவு அறிவிக்கப்படும் என்று அந்த மக்களிடத்திலே தெரிவித்து, அந்த விக்கிரகங்களை அந்தக் கோவிலிலேயே வைத்துப் பாதுகாக்க அறிவுறுத்தியுள்ளோம். அதன்படி காவல் துறையினர் மூலம் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதை நான் ஏன் தெரிவிக்கிறேன் என்று சொன்னால், தீவம்பால்பட்டிணம் கிராம மக்கள் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாது, தி.மு.க. ஆட்சி நடவடிக்கை எடுத்ததால், அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழக்கும் துர்பாக்கிய நிலை ஏற்பட்டது. ஆனால், மாண்புமிகு இதயதெய்வம், முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொதுமக்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு, அவர்களுடைய கோரிக்கைகளைக் கனிவுடன் அணுகவேண்டுமென்ற வழிகாட்டுதலின்படி நாங்கள் பொதுமக்களைச் சந்தித்து அவர்கள் கோரிக்கை மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதற்கு உதாரணமாகவே இதைத் தெரிவிக்கிறேன். இதிலிருந்து யார் சிறந்த நிருவாகி; புரட்சித் தலைவியா, மற்றவர்களா என்பதை நீங்களே புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வரசு பதவியேற்றபின் அனைத்துத் துறைகளின் பணிகளையும் சீராய்வு செய்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இத்துறை குறித்து இரு முறை சீராய்வு செய்து மேற்கொண்டு எங்களுக்குப் பல அறிவுரைகளை வழங்கினார்கள். அருகில் இருக்கின்ற கேரள மாநிலத்திற்குச் சென்று, அந்த மாநிலத்தில் இருக்கின்ற அறநிலையத் துறை அமைச்சரைச் சந்தித்து, அந்த மாநிலத்தில் அறநிலையத் துறை, அந்த ஆலயங்கள் எல்லாம் எப்படிச் செயல்படுகின்றன என்பதை, சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர், சம்பந்தப்பட்ட துறையினுடைய ஆணையர் மற்றும் அதிகாரி பெருமக்களை அழைத்துச் சென்று பார்த்து வாருங்கள் என்று சொன்னார்கள். அதற்கிணங்க நாங்கள் கேரள மாநிலத்திற்குச் சென்று, கேரள மாநிலத்திலே மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு. கார்த்திகேயன் அவர்களையும், அரசு அலுவலர்களையும் சந்தித்து அங்கே பல்வேறு கருத்துகளை அறிந்து வந்து முதலமைச்சரிடத்திலே

சொல்லியிருக்கிறோம். அவர்கள் பல அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்தநேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வரசு பதவியெற்றபின் அனைத்துத் துறைப் பணிகளையும் சீராய்வு செய்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இத்துறை குறித்து இரு முறை சீராய்வு மேற்கொண்டு எங்களுக்கு மிகச் சிறந்த வழிகாட்டுதலைத் தந்தார்கள். அவர்களின் வழிகாட்டுதலின்படி நானும் மிகக் குறுகிய காலத்தில் அதாவது 100 நாட்களுக்குள் இவ்வரசால் செய்யப்பட்ட சாதனையை பெருமிதத்துடன் உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 7—00

68 திருக்கோயில்களின் 140 திருப்பணிகளுக்கு சுமார் ரூ. 5 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்துறை ஆளுகையின்கீழ் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளிலே இருக்கும் திருக்கோயில்களின் திருப்பணிகளுக்காக தலா ரூ. 25,000 வீதம் 50 திருக்கோயில்களுக்கு 12 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 151 திருக்கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் மற்றும் பண்ணாரி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களிடத்திலே அந்தப் பகுதி மக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க 7–3/4 கிலோ தங்கம் உட்பட 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தங்க ரதம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடத்திலே, கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய மக்கள் விண்ணப்பமாகக் கொடுத்த நேரத்தில் அவர்கள் இட்ட ஆணையின்படி கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலையர் திருக்கோயில் நீண்ட காலமாக பழுதடைந்து இருந்ததால் மூலவர் தங்கக் கலசத்தினைப் புதிதாகச் செய்தும், பழுதடைந்த கொண்டையடி மும்மூர்த்திகள் வெள்ளிக் கலசம் மற்றும் உற்சவத் திருமேனி கலசம் ஆகியவற்றைப் பழுதுநீக்கியும் கலசங்கள் இன்றைக்கு அணிவிக்கப்பட்டு இருக்கின்றன. (மேசையைத தட்டும் ஒலி)

சமயக் குறவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தர் இசை விழா, திருக்கழுக்குன்றம் திருக்கோயிலில் இத்துறை மூலம் இவ்வாண்டு தொடங்கி சிறப்பாக நடத்தப்பட்டது.



திருக்கோயில்களில் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு 1999 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதல் முன்தேதியிட்டு 30 சதவிகித ஊதிய உயர்வு வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள்.

திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு விழாக்கால சிறப்பூதியமாக ஒரு மாத அடிப்படை ஊதியத்தை வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சுசீந்திரம் ஆலயத்தோடு இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத திருக்கோயில்கள் 490 உள்ளன. அத்திருக்கோயில்களில் பணிபுரியும் 771 சில்லறைச் செலவினப் பணியாளர்கள் மிகவும் குறைவாக ஊதியம் பெற்று வந்தனர். இவர்களது நிலை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவின்படி பணியாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் அவர்களது ஊதியம் 1–8–2001 முதல் கணிசமாக உயர்த்திட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு உள்ளன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயில்களில் பணிபுரியும்போது மரணமடையும் திருக்கோயில் பணியாளர்களின் 39 வாரிசுதாரர்களுக்கு குடும்ப நல நிதியாக 19.50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெறும் 35 பணியாளர்களுக்கு 27,500 ரூபாய் பணிக்கொடை வழங்கப்பட்டுள்ளது. அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் திருக்கோயில்களிலேயும் பணிபுரிந்து ஓய்வு பெற்ற 79 பூசாரிகளுக்கு 1–7–2001 முதல் நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500 வீதம் ஓய்வூதியம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) திருக்கோயில் பணியில் இருக்கும்போது மரணமடைந்த 10 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்ட 850 நபர்களுக்கும் கூடுதலாக அர்ச்சகர்கள், ஓதுவார், இசைக் கலைஞர், வேதபாராயணம் செய்வோர், அரையர்கள் போன்ற 149 நபர்களுக்கு ஓய்வூதியம் வழங்க இவ்வரசு அனுமதித்துள்ளது.

திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்குக் குடிநீர் வழங்கவும் தேவையான இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கவும், நவீன

கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்கவும், குறிப்பாக பெண்களுக்குத் தனி வசதிகள் செய்தளிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 25 இலட்சம் செலவில் கடல்நீரை சுத்திகரித்து குடிநீராக மாற்றி வழங்க இவ்வரசு அனுமதித்துள்ளது. திருக்கோயில்களில் உபரியாக பயன்பாடின்றி உள்ள தங்கம் அங்கீகரிக்கப்பட்ட தேசிய வங்கிகளில் பாதுகாப்புக் கருதியும், வட்டி வருமானம் பெறவும் முதலீடு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இந்த அரசு பொறுப்பேற்றபின் 35–1/2 கிலோ தங்கம் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இம்மானியக் கோரிக்கை தொடர்பாக சில சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இவற்றிற்கு சில விளக்கங்களை இந்த மன்றத்தில் சமர்ப்பிக்க விரும்புகிறேன். நான் முன்பே குறிப்பிட்டிருந்ததுபோல், திருக்கோயில் சொத்துக்கான வாடகை நிர்ணயம் செய்ய அரசால் வகுக்கப்பட்ட நெறிமுறைகள் முந்தைய அரசால் கிடப்பில் போடப்பட்டது. அந்த அரசாணையை செயல்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒரேயொரு விஷயத்தைச் சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** நான் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், அமைச்சர் பேசி முடிக்கட்டும். அமைச்சர் பேசி முடித்துவிடட்டும். அதற்குப் பிறகு விளக்கம் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** குத்தகைத் தொகைகளை வசூலிக்க வருவாய் நீதிமன்றம் முடுக்கி விடப்பட்டுள்ளது. அடுத்து, ஆக்கிரமிப்புகள்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களில் இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு இந்து சமய அறநிலையக் கொடைகள் சட்டத்தில் போதுமான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தபோதிலும் அவற்றைச் செயல்படுத்துவதில் கடந்த கால தி.மு.க அரசால் மெத்தனப் போக்கு கையாளப்பட்டது. தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர்



டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் மேற்படி சட்டத்தை விரைந்து அமலாக்கம் செய்ய போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருக்கோயில் நிலங்கள் விற்பனை. திருக்கோயில்களுக்குச் சொந்தமான பயன்படாமல், போதிய வருமானத்தைப் பெற்றுத் தர இயலாத நிலையிலே உள்ள நிலங்கள் அரசுத் துறை, அரசு சார்பு நிறுவனங்களின் பொதுநலத் திட்டங்களுக்கு மட்டுமே, திருக்கோயிலுக்கு இலாபகரமாக இருந்தால் மட்டுமே விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

திருப்பணிகள். வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பாக சில திருக்கோயில்களைக் குறிப்பிட்டு, அந்தக் கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்கள். இந்தக் கோரிக்கை அந்தந்த திருக்கோயில்களின் நிதி நிலைமைக்கேற்பவும், அரசு வழங்கும் மானியத் தொகையின் அளவைப் பொறுத்தும், திருப்பணியின் அவசியத்தைக் கருதியும், கவனத்தில் கொள்ளப்படும் என மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 7–05*

திருக்கோயில்களுக்குச் சொந்தமான பல திருக்குளங்கள் போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தினால் சரியாகப் பராமரிக்கப்படாத நிலையில் உள்ளன. இவற்றை உடனடியாகச் சீர்செய்ய வேண்டுமென்ற உயரிய நோக்கத்துடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் சீராய்வு செய்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ள ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பழுதடைந்துள்ள தேர்களை விரைவாகச் செப்பனிடவும், புதிய தேர்களைச் செய்ய வாய்ப்பும் வசதியும் உள்ள திருக்கோயில்களில் நிதியாதாரங்கள் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். அண்மையில் சேலம் மாவட்டம், தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் தேர் சில விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டபோது, பத்திரிகைகளில் வந்த செய்திகளின் அடிப்படையில், அன்றைக்கே நம்முடைய முதலமைச்சர் அவர்களைத் தொடர்பு கொண்டு தகவல்

தெரிவித்ததற்குப் பின்னாலே 25 இலட்சம் ரூபாய் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த அவையில் நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விலையுயர்ந்த பொருட்கள் பாதுகாப்பு. சிலைகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்கள் பாதுகாப்புக்கென திருக்கோயில் பாதுகாப்புப் படை ஒன்று 1000 காவல் துறைக் காவலர்கள் மற்றும் 3000 முன்னாள் இராணுவ வீரர்களைக் கொண்டு 1993–ல் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அமைக்கப்பட்டது. இதனைக் கொண்டு பாதுகாப்பு ஏற்பாடுகளை மேலும் பலப்படுத்தவும், திருக்கோயில் களவுகளைத் தடுக்கவும், உள் துறைச் செயலாளர் அவர்களுடனும் மற்றும் உயர் காவல் துறை அதிகாரிகளுடனும் ஒரு சீராய்வுக் கூட்டம் விரைவில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு வசதிகள். இப்பொருள் குறித்து மிக அதிகமான அளவிலான வெட்டுத் தீர்மானங்கள் பெறப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்பொருள்மீது அதிகக் கவனம் செலுத்துகிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகிறேன். அண்மையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமைச் செயலகத்திற்கு வரும்போது பொதுமக்கள் மயிலை அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் போதுமான குடிநீர் வசதி இல்லை என்று குறிப்பிட்டதன் அடிப்படையில் அதுகுறித்து விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற ஆணையைப் பிறப்பித்தார்கள். உடனடியாகத் திருக்கோயிலில் குடிநீர் வடிகால் வாரியத்தின் உதவியுடன் தண்ணீர்த் தொட்டிகள் வைக்கப்பட்டு, குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், அன்றைக்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியோடு தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து ஆலயங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்கப்பட வேண்டுமென்று தமிழக அரசு இந்து சமய அறநிலையத் துறை மூலமாக அறிவித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, புரட்சித் தலைவி அவர்கள் பெண்களுக்காக நவீன கழிப்பிட வசதியைக் கட்டித் தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் போலவே, இங்கே, தமிழகத்தில் இருக்கின்ற வசதியுள்ள அனைத்து ஆலயங்களிலும் உடனடியாக நவீன கழிப்பிட வசதியைக் கட்டித் தரவேண்டுமென்று மாண்புமிகு



முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திருக்கோயில்கள் சுத்தமாகப் பராமரிக்கப்பட வேண்டுமென்றும், தேவையான இடங்களில் தங்கும் வசதி செய்து தரப்பட வேண்டுமென்றும் அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருக்கோயில் பணியாளர்கள். இவ்வரசு பொறுப்பேற்ற 100 நாட்களுக்குள் பணியாளர்களின் பல முக்கியக் கோரிக்கைகளை ஏற்று, ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதை நான் முன்பே குறிப்பிட்டுள்ளேன். மேலும் கோரிக்கைகள் வரப்பெற்றால், திருக்கோயில் நிதியாதாரங்நீ அடிப்படையில், கோரிக்கைகளின் நியாயத்தின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரூபாய் ஆயிரத்திற்கும் குறைவாக ஆண்டு வருவாய் பெறக்கூடிய நலிவடைந்த 1000 திருக்கோயில்களுக்குக் கடந்த அரசு இலவச மின்சாரம் வழங்க அறிவிக்கப்பட்டு, திருக்கோயில் ஒன்றுக்கு 1200 ரூபாய் வைப்பு நிதி செலுத்தியும் பெரும்பாலான கோயில்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை. இவ்வரசு அப்படி மின் இணைப்பு வழங்கப்படாத கோயில்களுக்கு மின் இணைப்பு வழங்குவதுடன், இந்த நிதி ஆண்டில் மேலும் 1000 கோயில்களுக்கு இத்திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விரிவாக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில் தங்க ரதம் திருக்கோயிலின் கிழக்குப் பிரகாரத்தில் ஓட்டப்பட்டு வந்தது. அந்தப் பிரகாரம் சிமென்ட் கான்கிரீட் தளத்தில் அமைக்கப்பட்டு இருந்தது. அதை மாற்றி கருங்கல் தளமாக அமைக்க தி.மு.க ஆட்சியில் அமைக்கப்பட்ட அறங்காவலர்கள் குழு நடவடிக்கை எடுத்து உபயதாரர்களிடம் பணம் பெற்று சுமார் 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணி தொடங்கப்பட்டது. மேற்கண்ட திருக்கோயில் கும்பாபிஷேகத்தின்போது, கருங்கல் தளப் பணி முடிவு பெறாததைக் கண்டு, பக்தர்களும், உபயதாரர்களும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். 4–4–1991 இல் பாலாலயம் செய்யப்பட்டது முதல் தங்க ரதம் ஓட்டப்படவில்லை. அக்டோபர் 2000–ல் தொடங்கப் பட்ட பணி, ஒப்பந்தப்படி டிசம்பர் 2000–ல் முடிக்கப்பட்டிருக்க வேண்டும். நன்றாக இருந்த சிமென்ட் கான்கிரீட் தளத்தை தேவையின்றி உடைத்து, கருங்கல் தளமாக மாற்ற தேவையற்ற நடவடிக்கை எடுத்ததோடு, உரிய

காலத்தில் பணிகள் எதுவும் செய்யப்படவில்லை. இதனால் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தங்க ரதம் ஓடாது பக்தர்கள் பிரார்த்தனை செலுத்த முடியாத நிலையோடு, திருக்கோயிலுக்குச் சுமார் 6 இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது இவ்வரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய கருங்கல் தள வரிசை அமைக்கும் பணிகளைப் பூர்த்தி செய்து, விரைவில் தங்க ரதம் ஓட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டம் மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் இராஜகோபுரத்திற்கு படிக்கட்டுகள், வணிக வளாகம் மற்றும் அலுவலகங்கள் கட்டும் பணி ரூ.1.09 கோடியில் 1995 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு நடைபெற்றது. கடந்த ஆட்சியில் திருப்பணிகளில் அக்கறை காட்டாததால் பணி நிறுத்தப்பட்டு எவ்வித நடவடிக்கையுமின்றி பாதியிலே நின்றது. இதனால் பல இலட்சம் ரூபாய் கோயிலுக்கு நஷ்டம் ஏற்பட்டதுடன் பக்தர்கள் பெரும் அதிருப்தி கொண்டுள்ளனர். ராஜகோபுர திருப்பணி மற்றும் இதர பணிகள் விரைவில் தொடங்கி செய்து முடிக்கப்படும் என இப்பேரவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 7–10*

சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான சென்னை, சேமியர்ஸ் சாலையில் கட்டப்பட்டுள்ள கட்டடம் மாத வாடகை ரூபாய் 2.40 இலட்சத்திற்கு பொது ஏலம் மூலம் ஒரு தனியார் ஓட்டல் உரிமையாளருக்கு வாடகைக்கு விடப்பட்டது. கட்டடத்தில் சில மராமத்துப் பணிகளை மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டு, அதற்கிடையே கடந்த தி.மு.க. அரசின் அறநிலையத் துறை சுயநலத்தோடு மராமத்துப் பணிகளை நிறுத்தியதாலும், சட்டப்படி நடவடிக்கை எடுக்கத் தவறியதாலும் 1997 ஆம் ஆண்டு முதல் இன்று வரை சுமார் 2 கோடி ரூபாய் கோயிலுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். கடந்த ஆட்சியில் முறையான நடவடிக்கை எடுக்கப்படாததால் இதுபோன்ற பல நிகழ்வுகளில் கோயிலுக்குப் பேரிழப்பு ஏற்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டத்தான் இவற்றையெல்லாம் தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவ்வரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். இவற்றைத் தவிர, பல சட்டமன்ற



உறுப்பினர்கள் கேட்ட திருக்கோயில்கள் குறித்து வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை நான் கவனத்தில் கொண்டுள்ளேன் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் தொகுதிக்கு உட்பட்ட திருக்கோயில்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து கட்சி பாகுபாடின்றி எந்த நேரமும் கவனத்துக்குக் கொண்டு வரலாம் என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதியோடு நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறுவிதமான கருத்துகளைப் பற்றியும், திருப்பணிகள் செய்வது பற்றியும், இந்த மாமன்றத்தில் எடுத்துரைத்தார்கள். அவர்கள் கூறிய கருத்துகள் அனைத்துக்கும் பதில் கூறுவது என்னுடைய கடமை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களையெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாக்கி பல்வேறு ஆக்கப்பூர்வமான கருத்துகளைச் சொன்னார்கள். அதில் அம்மா அவர்கள் கூறிய ஒரு கருத்தை தினம் தினம் நான் எண்ணிப் பார்க்கிறேன். அம்மா சொன்னார்கள், 'நீங்கள் இன்று சட்டமன்ற உறுப்பினர்களாகிவிட்டோம், அமைச்சர்களாகிவிட்டோம் என்று தொகுதி மக்களைச் சென்று பார்க்காமல் இருந்துவிடாதீர்கள். பதவி வரும்போது பல வசதி படைத்தவர்கள் வருவார்கள், போவார்கள். பதவி போதையில் மயங்காமல் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆவதற்கு முன்பு நீங்கள் எப்படியிருந்தீர்களோ அதை எண்ணிப் பார்த்து, நமக்கு வாக்களித்த மக்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளசுத்தியோடு பணியாற்ற வேண்டும்' என்று கூறிய அந்தக் காட்சி என் மனதில் பதிந்து எந்த நேரமும் என் கண் முன்னால் நின்றுகொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்துக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே முன்பு ஆட்சிப் பொறுப்பிலிருந்தவர்கள் செய்துள்ள சில தவறுகளை இந்த மாமன்றத்தில் கூறவில்லை என்றால் முன்பு அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபோது பதவி சுகம் அனுபவித்துவிட்டு, கோடி கோடியாக சொத்துகளைச் சேர்த்துக் கொண்ட பலர் துரோகம் செய்துவிட்டு ஓடியதைப் போல ஆகிவிடும். நாங்கள் அம்மா அவர்கள் கூறியதை எண்ணிப் பார்க்கிறோம். எங்களுடைய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பார்க்க வேண்டுமென்று இங்கே இந்த மாமன்றத்தின் பார்வையாளர்கள் மாடத்தில் வந்து பல நாட்கள் பார்த்துக்

கொண்டிருந்த இந்தச் சாதாரணத் தொண்டனை அம்மா அவர்கள் அமைச்சரவையில் அமர்த்தி அழகு பாரப்பதை எண்ணிப் பார்க்கிறேன். முன்பு ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்களின் அலட்சியப் போக்கு காரணமாக இந்து சமய அறநிலையத் துறை புறக்கணிக்கப்பட்டதையும், அதற்குச் சொந்தமான சொத்துகள் சேதப்பட்டுள்ளதையும், கேட்பாரற்றுக் கிடக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆலய சொத்துக்களை மிட்டா மிராசுதார்கள், ஆலை அதிபர்கள், வட்டிக் கடைக்காரர்கள், சுயநலம் உள்ள அரசியல்வாதிகள், கோடீஸ்வரர்கள் பல்வேறு இடங்களிலே ஆண்டு அனுபவித்துக் கொண்டுள்ளார்கள். இந்தச் சொத்துகளை அம்மாவின் அரசு பொறுப்பேற்றவுடன் யார் யார் அனுபவித்துக் கொண்டுள்ளார்கள் என்பதைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். வசதி படைத்தவர்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் வைத்துக் கொண்டிருக்கும் சொத்துக்கள் எவை, ஒரு நேரம்கூட குடிப்பதற்குக் கஞ்சி இல்லாமல் இருப்பவர்கள் வைத்திருக்கிற சொத்து எது என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். சென்னை, கிரீன்வேஸ் சாலையில் மாண்புமிகு துணை சபாநாயகர் வீட்டுக்கு அருகில் அரசுக்குச் சொந்தமான இடத்தில் சவரக் கடைகளில் இருக்கும் முடிகளை எடுத்து வந்து, அதைத் தொழிலாக நடத்திக் கொண்டு அங்கே குடியிருப்பவர்களும் பலபேர் இருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்துள்ளவர்களிடமிருந்து நிலங்களை மீட்பதற்கு எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் முந்தைய தி.மு.க அரசு மெத்தனப் போக்கைக் கடைபிடித்ததை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான சென்னை, பூந்தமல்லி நெடுஞ்சாலையிலுள்ள இலக்கம் 768–ல் 48 கிரவுண்ட் நிலம் – 48 கிரவுண்ட் 1600 சதுர அடி நிலம் – 99 ஆண்டு காலத்துக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. 17–8–1999 ஆம் ஆண்டோடு அந்த 99 ஆண்டுகள் முடிவுற்றன. ஆனால் அந்த இடத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏனோ கையகப்படுத்தவில்லை. அவர்கள் கொடுத்த வாடகை மாதம் ஒன்றுக்கு 240 ரூபாய்தான் என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். 248 ரூபாய்தான். இதை மீட்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்தச் சொத்தைக் கைப்பற்றாமல் நியாய வாடகைக்கு மாதம் ஒன்றுக்கு 2,65,000 ரூபாய் செலுத்த வேண்டுமென்று அரசாணை வெளியிடப்பட்டும் வசூல்



செய்யாமல் வருவாய் இழப்பு ஏற்படுத்தியது முன்னாள் திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 7–15

அதேபோல இதே சாலையில் கதவிலக்கம் 2/772–ல் 58 கிரவுண்ட் நிலமும் 1650 சதுர அடி நிலம் 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. அந்த இடமும் 20–11–1999 ஆம் ஆண்டு முடிவுற்று திரும்பப்பெற நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனையும் அந்தக் குத்தகைதாரர் மத்திய அரசின் அஞ்சல் துறைக்கு வாடகைக்காக 90,000 ரூபாய்க்கு விட்டு மாத வாடகை பெற்று வருகிறார் என்பதையும், இந்தத் திருக்கோயிலுக்கு நியாய வாடகைகூட செலுத்தவில்லை என்பதையும் இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே சாலையில் கதவிலக்கம் 769/1–ல் 31 கிரவுண்ட் நிலமும் 600 சதுர அடி நீளமுள்ள நிலம் 99 ஆண்டுகள் முடிந்து 17–11–1997 ஆம் ஆண்டு குத்தகை முடிந்துவிட்டது. இதனையும் மீட்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த நிலத்தின் குத்தகைதாரர் 17–11–1991 ஆம் ஆண்டிலிருந்து திரு. தெய்வசிகாமணிப்பிள்ளை என்பவருக்கு அவர் வாடகைக்கு விட்டுள்ளார் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல சென்னை இராயபுரம் கதவிலக்கம் 1052/2–ல் 19531 சதுர அடி நிலத்தை 5 உள்வாடகைதாரர்கள் ஆக்கிரமித்து அனுபவித்து வருகிறார்கள். இந்த ஆக்கிரமிப்பினை அகற்ற ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை முன்னால் ஆண்டு கொண்டிருந்தவர்கள் என்று கேட்கிறேன். அவர்களை ஏன் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவில்லை? நாங்கள் கேட்கக் கூடாதா என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, கோவை மாவட்டம் பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரன் திருக்கோயிலுக்குச் சொந்தமான 357 ஏக்கர் நிலத்தில் 247 ஏக்கர் நிலத்தினை குத்தகைதாரர்களிடமிருந்து மீட்டு திருக்கோயிலுக்குச் சேர்த்திட வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் 1995 ஆம் ஆண்டு தனது தீர்ப்பில் கூறியுள்ளது. இதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மதிக்கவில்லை என்பதற்கு இது ஒரு சான்று போதாதா? இதிலுள்ள 30 நபர்களை ஏன் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவில்லை? ஆலயத் திருப்பணியில்கூட முந்தைய தி.மு.க. அரசு அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் நடந்துகொண்டது

என்பதற்கு உதாரணத்திற்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். கோவை மருதமலை ஆலயத்தில் ஒரு கோபுரமும், கற்பக்கிரகமும், முகமண்டபம், மகாமண்டபம் மற்றும் மறுகட்டுமானம் செய்யும் பணி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா முதலமைச்சராக இருந்த காலத்தில் 25–10–1993–ல் தொடங்கப்பட்டது. இதை முடித்து திருப்பணி செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பு 115 இலட்ச ரூபாய். ஆனால் ராஜகோபுரம் படிக்கட்டுகள், அடித்தளம் மற்றும் அலுவலக, வணிக வளாகம் கட்டும் பணி 27–5–1995 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் முதலமைச்சராக இருந்த நேரத்தில் முதலமைச்சர் திருக்கோவில் திருப்பணி நிதி உதவி ரூபாய் 31.62 இலட்சம் கொடுத்து 120 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து பணிகள் தொடங்கப்பட்டன. ஆனால் என்ன காரணத்தினாலேயோ புரட்சித் தலைவி அவர்கள் தொடங்கிய காரணமாகவோ என்னவோ இதைக் கருத்தில் கொண்டு அந்தப் பணிக்கு 25 இலட்சம் ரூபாய் செலவிட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் 10 இலட்சம் ரூபாய் பெறுமான பணிகள்தான் நடைபெற்றிருப்பதாக நாங்கள் பார்த்தோம். வெளியில் நடைபெற்றுள்ள மீதமுள்ள பணிகள் தொடங்காமல் உள்ளன. அது அம்மா அவர்கள் காலத்தில் தொடங்கச் சொன்னதற்காக நிறுத்திவிட்டார்களோ என்னவோ தெரியவில்லை. ஏன், என்ன காரணம் கேட்கக் கூடாதா? மேலும் மருதமலை மலைச்சாலை தார் போட்டு சிறப்புப் பராமரிப்புப் பணி செய்ய 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு மதிப்பீடு செய்து 24.5 இலட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதில் தவறுகள் நடைபெற்றுள்ளன என்பதைக் கண்டுபிடித்துள்ளோம். அதற்கு முறையாக டெண்டர் விடப்படவில்லை. நானும் மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சரும் கோவை மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவரை அழைத்துச் சென்று அந்த ஆலயங்கள் சார்பாக பல்வேறு மக்கள் கொடுத்த புகார்களை விசாரிக்கச் சென்ற நேரத்தில் இப்படிப்பட்ட தவறுகள் நடந்ததைக் கண்டுபிடித்தோம். கோவை மாவட்ட ஆட்சித் தலைவரோடு சென்று பார்வையிட்டோம். அங்கே டெண்டர், 24.5 இலட்சம் ரூபாய்க்கு ரோடுகள் டெண்டர் விடப்பட்டதா என்று கேட்டால் நாங்கள் பேப்பரில் விளம்பரம் கொடுத்தோம், யாரும் டெண்டர் எடுப்பதற்கு வரவில்லை என்று அந்த அலுவலர் சொல்கிறார். தனியாக நெடுஞ்சாலைத் துறை மூலமாக பணத்தைக் கொடுத்து ரோடு போட்டதாகச் சொல்கிறார்கள். எனவே அதில் பல ஊழல்கள் நடந்திருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறோம். இவர்கள் மீது நடவடிக்கை இந்த அரசு, இந்து சமய அறநிலையத் துறை எடுக்கும் என்பதை அன்போடு



இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேப்பரில் போட்டோம், யாரும் எடுக்க முன்வரவில்லை என்கிறார்கள். ஆனால் அங்குள்ள நண்பர்கள் கூறினார்கள். முன்பு ஆட்சிப் பொறுப்பில் உள்ள ஒருவர்தான் இதை இப்படி, இப்படிச் செய்ய வேண்டும் என்றும் டெண்டர் விடாமலேயே டெண்டர் விட்டதுபோல செய்தார்கள் என்றும் நெடுஞ்சாலைத் துறை மூலமாக ரோடு போடப்பட்டுள்ளது என்று கூறுகிறார்கள். இதில் எல்லாம் தவறுகள் நடந்துள்ளன என்று தெரிய வந்துள்ளது. கோவை மாவட்டம் திருப்பூர் அருள்மிகு விஸ்வேஸ்வர சுவாமி திருக்கோவில் மற்றும் வீரநாராயண பெருமாள் திருக்கோவிலைச் சுற்றியிருந்த பல கடைகளை அன்றைக்கு கோவை மாவட்டத்தினுடைய இந்து சமய அறநிலையத் துறையினுடைய மாவட்ட குழுத் தலைவராக இருந்தவரும், அந்த ஆலயத்தினுடைய அறங்காவல் குழுத் தலைவராக இருந்தவரும், அந்த நகரமன்றத்தினுடைய தலைவராக இருந்தவரும் புல்டோசர் வைத்து இடித்து நொறுக்கி எடுத்திருக்கிறார்கள். ஏன்? எதற்காக? தமிழகத்திலே ஏறக்குறைய பல இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அங்கே மட்டும் ஆலயத்திற்குச் சொந்தமான இடங்களை இடித்திருக்கிறார்கள். அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியினுடைய பொறுப்பிலே அதிகார பலத்திலே இருந்த காரணத்திற்காக மட்டுமா ஏன் தெரியவில்லை. ஆனால் அதை இடித்ததற்கு என்ன காரணம்? 6–5–2000, 7–5–2000, 14–5–2000 ஆகிய தேதிகளில் இடித்துள்ளார்கள். அன்று நடைபெற்ற சட்டப் பேரவையின் கூட்டத்தில்கூட சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்ததன் காரணமாக முன்னாள் முதலமைச்சர் இதுகுறித்து விசாரிக்க ஒரு நபர் விசாரணைக் கமிஷன்கூட அன்றைக்கு அமைத்திருக்கிறார்கள். எதற்காக அந்த ஆலயத்தை மட்டும் இடிக்க வேண்டும்? தமிழகத்திலே பல்வேறு ஆலயங்களுடைய சொத்துக்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. என்ன அரசியல் ஆதாயத்திற்காக இடித்தார்கள் என்பது புரியவில்லை என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 7–20

இந்த நிதியாண்டில் இத்துறையினரால் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்களுடைய அனுமதியோடு இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். தமிழகத்தில் தொன்மை வாய்ந்ததும், நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் பாடல் பெற்றதுமான பழமையான திருக்கோயில்கள் பல உள்ளன. அத்திருக்கோயில்களின் திருப்பணிகளை

மூன்று ஆண்டு காலத்திற்குள் செய்து கும்பாபிஷேகம் செய்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதற்கட்டமாக இவ்வாண்டில் திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், கும்பகோணம் வட்டம், சிவபுரம் அருள்மிகு சிவகுருநாத சுவாமி திருக்கோயில், கொல்லிமலை அருள்மிகு அறப்பாலீஸ்வரர் திருக்கோயில், திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம், திருராமேஸ்வரம் திருக்கோயில், சின்னசேலம், அருள்மிகு சுவர்ணபுரீஸ்வரர் திருக்கோயில், ஈரோடு மாவட்டம், வெங்கம்பூர் அருள்மிகு வரதராஜபெருமாள் திருக்கோயில், கரூர் மாவட்டம், நொய்யல், அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோயில் ஆகியவை உட்பட 700 பழமையான திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து குடமுழுக்கு செய்யப்படும் என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதியோடு சொல்கிறேன்.

1993–96 ஆண்டுகளில், அதாவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது 6260 திருக்கோயில்களுக்கு ஒரு கால பூசை தடையின்றி தொடர்ந்து நடந்துவர ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் தலா ரூ.25 ஆயிரம் வைப்பு நிதி முதலீடு செய்யப்பட்டது. கடந்த ஆட்சி காலத்தில் 5 ஆண்டுகளில் 1982 திருக்கோயில்களுக்கு மட்டும்தான் இத்திட்டத்தைச் செய்திருக்கிறார்கள். இன்றைய நிலையில் ஒரு கால பூசை இல்லாத திருக்கோயில்கள் அனைத்திற்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைப்படி ஒரு கால பூசை செய்யும் திட்டம் ஓராண்டுக்குள் நிறைவு செய்யப்படும் என்பதை மகிழ்வோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள முக்கிய வழிபாட்டுத் தலங்களில் ஒன்றான அருள்மிகு பழனி முருகன் திருக்கோயிலின் பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவு செய்யும்விதமாக பழனி மலை உச்சி வரை நடந்து செல்ல இயலாத பக்தர்களுக்கு கேபிள் கார் வசதி செய்யப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள். அதற்கு 4 கோடி மதிப்பில் கேபிள் கார் வசதி செய்திட மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பக்தர்கள் மலைச் சாலையைச் சுற்றி வந்து தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றுவதற்கு



வசதியாக திருவண்ணாமலை கோவிலில் உள்ளது போல கிரிவலப் பாதை ஒன்று பழனியிலும் அமைக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளார். கிரிவலம் பாதை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிராமப்புறத்தில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில்களின் திருப்பணிக்கு இவ்வாண்டு 100 திருக்கோயில்களுக்கு தலா 25 ஆயிரம் வீதம் 25 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதிகளில் உள்ள திருக்கோயில்களில் சிறிய சிறிய திருப்பணிகளைச் செய்திட, 100 திருக்கோயில்களில் தலா 25 ஆயிரம் வீதம் 25 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு செலவழிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் அருள்மிகு லட்சுமி நாராயண பெருமாள் திருக்கோயில் தேர் உட்பட இவ்வாண்டில் 20 தேர்கள் செப்பனிடப்படும். இவ்வாண்டு 100 திருக்கோயில்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்படும். இவ்வாண்டில் 30 திருக்கோயில்களுக்கு நவீன கழிப்பிட வசதிகள் செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும். திருக்குளங்களைப் பாதுகாக்க, திருக்குளங்களைச் சுற்றியும் உள்ளேயும் உள்ள ஆக்கிரமிப்புகளை வெளியேற்றவும், தூர்வாரி ஆழப்படுத்தவும், மழைநீரைச் சேமிக்கவும், சுற்றுச்சுவர் அல்லது வேலி அமைக்கவும் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இச்செப்பனிடும் பணி நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் திருக்குளங்களை அத்திருக்கோயில் நிதியின் மூலமும், எஞ்சிய திருக்குளங்களை உள்ளாட்சி அமைப்புத் திட்டங்கள் மூலமும் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமும் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூறியுள்ளார்கள். 1991 ஆம் ஆண்டு முதல் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள் மற்றும் ஓதுவார்களுக்கு புத்தொளிப் பயிற்சி அளிக்கப்பட்டது. கடந்த ஆட்சியில் இத்திட்டத்தில் தொய்வு ஏற்பட்டது. எனவே, புத்தொளிப் பயிற்சிக்கு புத்துயிர் அளித்து, முதல்கட்டமாக 25 திருக்கோயில்களில் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள் மற்றும் ஓதுவார்கள் மொத்தம் 703 நபர்களுக்கு புத்தொளிப் பயிற்சி நடத்தப்பட்டு வருகின்றது. இப்பயிற்சி மூன்று மாதங்களில் நிறைவடைந்ததும் மேலும் 25 திருக்கோயில்களில் தொடங்கப்படும்.

இந்து சமயத்தைச் சார்ந்த ஏழை எளியோருக்கு இவ்வாண்டு ஆயிரம் இணைகளுக்கு, நிதிவசதி மிக்க திருக்கோயில்களின் மூலம் இணை ஒன்றுக்கு ரூபாய் 3 ஆயிரம் செலவில் திருமணம் செய்து வைக்கப்படும். இதற்கு ரூபாய் 30 இலட்சம் செலவிடப்படும்.

*பிற்பகல் 7–25*

பன்னாட்டு மக்களும் எளிதில் தமிழ்நாட்டு திருக்கோயில்களைப் பற்றி அறிந்துகொள்ளவும், தங்களுடைய பிரார்த்தனைகளை இருக்கும் இடத்தில் இருந்தே நிறைவேற்றவும் ஏதுவாக திருக்கோயில்கள் பற்றிய முழுமையான விவரங்களுடன் பூசா கால விவரங்கள், பிரார்த்தனை செலுத்தும் விவரங்கள், விழாக்கள் போன்ற விவரங்கள் போன்ற அனைத்து விவரங்களையும் தொகுத்து இணைய தளம் ஏற்படுத்தி இணையத்தில் இணைந்து பன்னாட்டு மக்களும் பயன்பெறும் பணியினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்துள்ளார்கள். முதல்கட்டமாக, பழனி, திருவரங்கம், திருச்செந்தூர், திருவண்ணாமலை போன்ற 50 திருக்கோயில்களை இணையத்தில் இணைத்திட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டபடி 7493 அர்ச்சகர்களுக்கு குடியிருக்க குடியிருப்பு தேவை உள்ளது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்படவுள்ள வீடுகளை ஒதுக்கிடு செய்யவும் மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கவும், தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணையின்படி படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும். நிலுவையில் உள்ள அர்ச்சகர்களின் ஓய்வூதிய விண்ணப்பங்கள் அனைத்தும் விதிப்படி பரிசீலித்து ஒப்பளிப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்கள் 1996–ல் முதன்முதலாக 'பூசாரி ஓய்வூதியத் திட்டத்தை' அறிமுகப்படுத்தினார். 1500 பூசாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்கி அறிவித்தார்கள். பின்பு அது செயல்படுத்தப்பட்டது. 2500 கிராம கோயில் பூசாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்குவதில் தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் .இந்த ஆண்டு முதற்கட்டமாக 1000 பூசாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்க அனுமதித்துள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு சீராயும்போது தாழ்த்தப்பட்ட, வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கின்ற



கிராம மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற பகுதியில் இருக்கிற ஆலயங்களுக்கு ஒரு விளக்கு இந்த ஓர் ஆண்டிற்குள் எரிய வேண்டுமென்று சொல்லி, மின்விளக்கைப் போட்டுத்தர வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார். அந்த ஆலயங்களுக்கு இலவசமாக மின்சாரத்தைக் கொடுக்க வேண்டுமென்றும் ஆணையிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் திரு. சீனிவேல் பேசும்போது திருப்பரங்குன்றம் ஏரியைத் தூர்வார வேண்டுமென்றும் தூர் எடுத்து நல்ல குடிநீராக ஆக்க வேண்டுமென்றும் அங்கே வருகின்ற பக்தர்களுக்கு நீராடுவதற்கு வசதியாக இருக்க வேண்டுமென்றும் கூறினார். சரவணப் பொய்கையில் தூர் எடுத்து சுத்தம் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நிச்சயமாக அதைச் செய்யும் என்பதை இந்த நேரத்தில் அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சக்ரபாணி அவர்கள் பேசும்போது பழனியில் பொறியியல் கல்லூரியோ, மருத்துவக் கல்லூரியோ பழனி திருக்கோயில் மூலமாக புதிதாக இந்து சமய அறநிலையத் துறை மூலம் தொடங்க வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் பழனி திருக்கோயில் மூலமாக புதிதாகத் தொடங்க இந்து சமய அறநிலைய சட்டத்தில் வழியில்லை. இந்து சமயம் தொடர்பான கல்லூரிகளிலோ பள்ளிகளிலோ தொடங்க சட்டத்தில் இடமுள்ளது. ஏற்கெனவே, திருக்கோயில்களில் நடைபெறும் கல்லூரிகள் பண்பாட்டுக் கல்லூரிகளாகத்தான் தொடங்கப்பட்டு நாளடைவில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றப்பட்டு மாறுதல் அடைந்துள்ளன என்பதை மாமன்ற உறுப்பினர் சக்ரபாணி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு இங்கே மாண்புமிகு தாராபுரம் சட்டமன்ற உறுப்பினர் பேசும்போது குண்டடம் வடுகநாத சாமி கோயிலில் அனைத்து சமுதாயத்தினரும் உள்ளே சென்றுதான் தரிசனம் செய்துவிட்டு வருகிறார்கள். அவர்கள் வேண்டுமென்றே இப்படிப்பட்ட ** தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அந்த மாவட்டத்தைச் சார்ந்தவன், வேண்டுமென்றால் நாளைக்கே விசாரணை வைத்துக் கொள்ளலாம். இங்கேகூட குண்டடத்தினுடைய கோயிலைப் பற்றிச் சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படவில்லை. நான் சொல்கிறேன், சில கிராமங்களில் தனியாக அவர்களுக்குள்ளே சிற்சில கோயில்களை வைத்திருப்பார்கள். அந்தக் கோயில்களுக்கு இவர்கள் செல்லாமலும் இருப்பார்கள். அப்படிப்பட்ட ஆலயத்தைத் தவிர எந்தப் பகுதியிலும் அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை, இனியும் ஏற்பட இந்த அரசாங்கம்

விடாது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பதிலுரையில் நான் அளித்த விளக்கங்களை ஏற்று மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாமல் திரும்பப்பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும், நான் மானியக் கோரிக்கையில் கேட்டுக்கொண்ட தொகையை அரசுக்கு அளிக்க வேண்டுமெனவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வி. சிவகாமி.

**திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடுகநாதர் சுவாமி கோயிலில் தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளே செல்கிறார்கள் என்று அங்கேயிருக்கிற அரசு அதிகாரிகளுக்கே தெரியும். நான் சொன்ன மற்ற கோயில்களைப் பற்றி விசாரித்துவிட்டு நல்ல நியாயம் வழங்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய தலைவர்களுக்கும் சொல்கிறேன். தவறாகக் கருதக் கூடாது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினராவதற்கு முன்பே அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் தினமும் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய வேட்பாளராக அவரை நிறுத்துகிறார்கள், அவர்கள் தினந்தோறும் காவல் துறைக்குச் சென்று பல புகார்களை நம்முடைய கட்சி நண்பர்கள் மீது கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை வேட்பாளர்களாக நிறுத்துகிறார்களே என்று சொல்லி அன்றைக்கே ஆதங்கப்பட்டார்கள் என்பதை அன்பிற்குரிய அவர்களுடைய தலைவருக்கு நான் அன்போடு சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

*பிற்பகல் 7–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சிவகாமி அவர்கள் கோவில்களைப் பற்றி ஏதாவது பிரச்சினையிருந்தால் மாண்புமிகு அமைச்சரிடம் எழுதிக் கொடுங்கள். அவர் அதை விசாரிப்பார்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில் மானியத்திற்கும் போலீஸ் ஸ்டேஷனுக்கும் என்ன சம்பந்தம்? இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? தவறான தகவல். சம்பந்தா சம்பந்தமே இல்லாமல் மானியத்தை நடத்துகிறீர்கள். இது முறையல்ல.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், உட்காருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** உட்கார முடியாது, சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் மீது நான் குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. அவர்களுக்கு அப்படிப்பட்ட அந்த நிலைமை அந்தப் பகுதியில் இல்லையென்று சொன்னேன். வேண்டுமென்றே சொல்கிறார்கள் என்பதற்காக நான் விளக்கம் சொன்னேன். இதை நான் வாதிடுவதற்காகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கோவிலுக்குள் போக முடியவில்லை என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால் அமைச்சரிடத்திலே எழுதிக் கொடுத்தால் அதற்கான நடவடிக்கைகளை நிச்சயமாக எடுப்பேன் என்பதைத்தான் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தாராபுரம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்கள் வழக்கத்திற்குப் புறம்பான புகார்களைச் சொல்லிக் கொண்டிருப்பார் என்பதற்காக நான் உதாரணத்திற்குச் சொன்னேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், உட்காருங்கள். நான் சொல்கிறேன். என்னவென்று நான் சொல்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் (குறுக்கீடு) திரு. கணேசன், உட்காருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** காவல் நிலையத்திற்கும் கோவிலுக்கும் என்ன சம்பந்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமருங்கள். என்ன என்ற விவரத்தைச் சொல்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்கு உட்பட்ட பல பகுதிகளிலே தாழ்த்தப்பட்ட பெருமக்கள் சில ஆலயங்களுக்குள்ளே செல்ல முடியவில்லை என்பதை அவருடைய பேச்சிலே புகாராகக் குறிப்பிட்டார்கள். அதுபற்றி ஏதாவது அவரிடம் ஆதாரம் இருந்தால் விளக்கமாக அமைச்சரிடத்திலே

எழுதிக்கொடுத்தால் அல்லது முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்தால் உரிய நடவடிக்கையை நிச்சயமாக எடுப்பார்கள் (குறுக்கீடு) என்பதை நான் இப்போது தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மற்ற பிரச்சினைகள் இப்போது வேண்டாம். (குறுக்கீடு)

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ** என்று சொன்னார். என்ன ** அந்த அம்மா பேசியதிலே என்ன **

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** உண்மைக்கு மாறான தகவல் என்றார்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுவது போல் அந்தப் பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் இந்துக் கோவில்களில் அனுமதிக்கப்படுவதில்லை என்ற நிலை இல்லை என்று திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறார். ஆனால் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரும்பத் திரும்ப அதையே வலியுறுத்தி புகாராகக் கூறிக்கொண்டிருக்கிறார். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு உதாரணத்திற்காக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தேர்தலுக்கு முன்பாகவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள்மீது காவல் துறையில் உண்மைக்குப் புறம்பான புகார்களைக் கொடுத்திருக்கிறார் என்பதைச் சொன்னார். அதன் அர்த்தம் என்னவென்றால் வழக்கமாக, உண்மைக்குப் புறம்பான புகார்களைக் கூறுவது சட்டமன்ற உறுப்பினரின் வழக்கம் என்று மாண்புமிகு அமைச்சர் கூறுகிறார். அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அந்தக் கருத்திலே தெரிவித்தார். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வது, உங்களுடைய தொகுதிக்கு உட்பட்ட பகுதியிலே ஆலயங்களிலே தாழ்த்தப்பட்டவர்கள் உள்ளே செல்ல முடியவில்லை என்கிற நிலை இருக்கிறது என்பதை நீங்கள் ஆதாரப்பூர்வமாக முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்தால் உரிய நடவடிக்கையை நிச்சயமாக எடுப்பார்கள். எல்லா ஆலயங்களிலேயும் தாழ்த்தப்பட்டவர்கள் உள்ளே செல்லக்கூடிய அளவிற்கு நிலைமைகள் உருவாக வேண்டும் என்கிற வகையிலேதான் முதலமைச்சர் அவர்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



முயற்சிகளை செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமை தமிழ்நாட்டில் எந்தக் கோவில்களிலும் நிச்சயமாக வராது என்பதை நானும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கை, இது எல்லோருக்கும் அறம் வழங்கப்பட வேண்டுமென்கிற அடிப்படையிலே, இங்கே நாங்கள் எல்லாம் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறோம். இந்த மாமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பித்த காலத்திலேயிருந்து அறநெறி தவறாமல் நடக்க வேண்டும் என்று சொல்லி நாங்கள் எல்லாம் பேசிக்கொண்டிருக்கிறோம். எங்களுடைய சட்டப் பேரவை உறுப்பினர் மாண்புமிகு சிவகாமி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே தொகுதியிலே இருக்கக்கூடிய நிலைமைகளை எடுத்துச் சொன்னார்கள். அதே நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் குறிப்பிட்டுச் சொன்னார்கள், அப்படியில்லை என்று சொன்னார்கள். இருந்தாலும் இனி வரக்கூடிய காலங்களிலே அவையெல்லாம் நிவர்த்தி செய்யப்படும் என்ற நிலைமைகளை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள், அதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். இருந்தாலும்கூட,

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு."

என்ற வள்ளுவருடைய கூற்றிற்கேற்ப ஏதோ நம்முடைய சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக இது திட்டமிட்டுச் சொல்லப் பட்டதாகவே நான் கருதுகிறேன். என்னவென்று சொன்னால்–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, மணி அவர்களே,

*பிற்பகல் 7–35*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிந்துபோன விஷயத்தை மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் மீண்டும் கிளப்ப வேண்டிய அவசியமில்லை.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி அவர்களே, நான் சொல்கிறேன். அதாவது உங்களுடைய சட்டமன்ற உறுப்பினருடைய பேச்சிலே குறிப்பிட்ட சில வாசகங்களைக் குறிப்பிட்டுத்தான் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் சொன்னார்கள். அரசியல் ரீதியாக ஒரு விளக்கம் சொன்னார்கள். அது அப்போதே பேசி முடிவு செய்யப்பட்டுவிட்டது. அது முடிந்துவிட்டது. அதிலே குறிப்பிட்ட சில வார்த்தைகள்கூட நீங்கள் சொன்னீர்கள் என்பதற்காக முதலமைச்சர் அவர்கள் நீக்கச் சொல்லிவிட்டார்கள். இவ்வளவு பிரச்சினைகளும் முடிந்ததற்குப் பிறகும் மறுபடியும் அதைக் கிளறுவது சரியல்ல. ஆகவே, அந்தப் பிரச்சினையை விடுங்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், விவரம் தெரிந்தவர்கள் என்கிற காரணத்தினால்தான் இந்தப் பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே, அவருடைய தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலே ஏதாவது இப்படி ஆலயங்களிலே குறைபாடுகள் இருந்தால் முதலமைச்சருக்குத் தெரிவித்தால் உரிய நடவடிக்கை நிச்சயமாக எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** அமைச்சர் ** என்று கூறுகிறார்களே அதற்கு என்ன அர்த்தம்? அமைச்சர் அவர்கள் "தவறான தகவல் கொடுக்கிறார்கள்" என்றுகூடச் சொல்லலாம். ஆனால் ** என்பதற்கு என்ன விளக்கம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். இல்லை, இல்லை, உட்காருங்கள். "தவறான" என்பதைத்தான் அவர் ** என்கிற வகையிலே சொன்னார். ** என்பதற்குப் பதிலாக "தவறான தகவல்" என்று அதைத் திருத்திக்கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் பேசுகின்ற நேரத்திலேகூட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினையோ அதன் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையோ குறைவாகச் சொல்லவில்லை. கூட்டணி பற்றி எந்த வார்த்தையும் அவர் குறைவாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி அவர்களே, உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஏதோ முன்பு சொன்னது, அதற்குப் பிறகும் இப்போது சட்டமன்ற உறுப்பினரைச் சுட்டிக்காட்டுவது மனதைப் புண்படுத்தும்படியாக இருக்கிறது. அரசியல் அனாதைகள் என்று சொல்வது (குறுக்கீடுகள்) நாங்கள் எந்தக் காலத்திலும் அரசியல் அனாதைகள் அல்ல. நீங்கள் பெரிய கட்சியாக இருந்தாலும்கூட...(கூச்சல் – குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி அவர்களே, உட்காருங்கள், உட்காருங்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பேசுகிறபோது...

**திரு. ஜி.கே. மணி:** நீங்கள் பெரிய கட்சியாக இருந்தாலும் எங்கள் கட்சியைப் பார்த்து அனாதைத் தலைவர் என்று சொல்வது எந்த விதத்திலும் நல்ல உதாரணமாக இருக்காது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த...

**திரு. ஜி.கே. மணி:** எங்கள் கட்சி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி அவர்களே, அமருங்கள். அவை முன்னவர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் உட்காருங்கள். அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள். (குறுக்கீடு) இல்லை, அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு

உறுப்பினர் அவர்கள்தான் இன்றைக்கு இந்தப் பேச்சுக்கே இந்தப் பிரச்சினைக்கே வித்திட்டார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் உணர வேண்டும். அவர்கள் பேசிய பேச்சு மறைமுகமாகக் குத்தலான பேச்சாக இருந்த காரணத்தினால்தான் இத்தனை பிரச்சினைகளும் உருவாகின. அதற்குத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைத் தொடங்கியது உங்களது உறுப்பினர்தான் என்பதனைக் கருத்தில் கொண்டு இதை இத்தோடு விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, பிரச்சினையை முடித்து விடுகிறேன். வேறொன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி அவர்களே, பிரச்சினையைக் கிளப்ப வேண்டாம்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, பிரச்சினையை முடித்துவிடுகிறேன். வேறொன்றும் இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இது ** என்று சொல்கின்றார்கள். அதற்கு விளக்கம் தாங்கள் சொன்னீர்கள். அதற்கான மாற்று வார்த்தையை நீங்களே மாற்றிச் சொன்னீர்கள். அதைப்போலவே, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் தவறாகச் சொல்லவில்லை. தவறாக அவர்கள் எதுவும் சொல்லவில்லை. தவறாகச் சொல்லாத வார்த்தையை, ஒரு புது உறுப்பினர் தன் கன்னிப் பேச்சிலே தட்டுத்தடுமாறிப் பேசுகிறார். அப்படிப் பேசுகின்றபோது என்ன உள்ளர்த்தத்தோடு சொன்னார்கள் என்றால் எங்களுடைய டாக்டர் அய்யா அவர்கள் பேசிய நேரத்திலே எங்களுடைய கூட்டணிக்குத் தலைவராக அன்புச் சகோதரி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி அவர்களே, பிரச்சினையை வளர்க்க வேண்டாம். (குறுக்கீடு) பிரச்சினையை வளர்க்க வேண்டாம். முடிந்துவிட்ட பிரச்சினை அது. அமருங்கள். (குறுக்கீடு) அதைத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடு)

**திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு நிமிஷம் பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** அன்புச் சகோதரி முதலமைச்சராவதை எந்தக் கொம்பனாலும் தடுக்க முடியாது என்று இந்தக் கூட்டணிக்குப் பெருமை



சேர்க்கக்கூடிய வகையிலே பேசினார் என்பதைத்தான் சொன்னாரே தவிர, அது நல்ல வார்த்தைதானே தவிர தவறான வார்த்தையல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் என்ன பேசினார் என்பது எனக்கும் தெரியும். அவர் பேசியது...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடு) இல்லை, இல்லை. மன்னிக்க வேண்டும்...

**திரு. ஜி.கே. மணி:** அது தவறான வார்த்தையல்ல.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது எங்கள் தலைவர் யாரைப் பார்த்து முதலமைச்சர் என்று சொல்கிறாரோ அவர்தான் முதலமைச்சராக வர முடியும் என்ற தொனியிலே சொன்னதுதான் இத்தனை பிரச்சினைகளுக்கும் வித்திட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த ஒரு வாக்கியம்தான் காரணம். அந்த வாக்கியம்தான் காரணம். அதற்குத்தான் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். அது முடிந்துவிட்ட பிரச்சினை.

**திரு. ஜி.கே. மணி:** புதிய உறுப்பினர். தட்டுத்தடுமாறி அந்த அர்த்தத்திலே பேசினார்.. அல்லாமல் அது வேறொன்றுமில்லை. (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சட்டமன்றத்திற்குப் புது உறுப்பினரே தவிர, அவர் பல மேடைகளிலே பேசியவர் என்பதை அவரே ஒத்துக்கொண்டார்கள். பொதுக் கூட்டங்களிலே நான் பலமுறை பேசியிருக்கிறேன் என்றும், சட்டமன்றத்திலேதான் இது கன்னிப் பேச்சு என்றும் ஒத்துக்கொண்டார்கள். அவர் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையில் எங்கள் அய்யா நினைத்தால்தான் முதலமைச்சராக யாரும் வர முடியும் என்று சொன்னதற்கு மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் விளக்கம் சொன்னார்கள். அய்யா நினைத்தாலும் சரி, வேறு எவர் நினைத்தாலும் சரி புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சர் ஆவதை யாராலும் தடுக்க முடியாது என்கிற அந்தக் கருத்திலேதான் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்களே தவிர, அதில் வேறொன்றும் பிரச்சினை இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** தலைவர் அவர்களே, பாண்டிச்சேரியிலே என்ன நடந்தது?

**திரு. ஜி.கே. மணி:** முதலமைச்சர் அவர்களை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது முடிந்துவிட்ட பிரச்சினை. நீங்கள் கேட்டது ** என்று சொன்னால் அந்த வார்த்தைக்கு என்ன விளக்கம் என்று கேட்டீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அவர் சொன்ன வார்த்தையிலே எந்த உள்நோக்கமும் இல்லை. கடுமையான வார்த்தையும் இல்லை. ஆனால் சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் பேசிய வார்த்தை இருக்கிறதே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் பேசியதிலேயும் உள்நோக்கம் இல்லை.

**திரு. ஐ. கணேசன்:** எவ்வளவு கடுமையான வார்த்தைகள்? எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்? அரசியல் அனாதையாகத் திரிகின்றார் என்று சொன்னால் அதற்கு என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் சொன்ன பிரச்சினைக்கு சமூக நலத் துறை அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார்கள். அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. (குறுக்கீடு) அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது.

**திரு. ஜி.கே. மணி:** அவர் பேசியது சாதாரண வார்த்தை...(குறுக்கீடு)

**திரு. ஐ. கணேசன்:** அனாதைகள் என்பது...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாராவது ஒருவர் பேசுங்கள். (குறுக்கீடு) யாராவது ஒருவர் பேசுங்கள். (குறுக்கீடு) மணி, நீங்கள் விளக்கம் சொல்லுங்கள். என்ன விளக்கம்?

*பிற்பகல் 7–10*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்லிய வார்த்தை கடுமையான வார்த்தை. ஆனால் நல்ல நோக்கத்தோடு, நல்ல எண்ணத்திலே சொன்னார். அவர் புது உறுப்பினர். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய கட்சியை, எங்களுடைய கட்சி நிறுவனத் தலைவரை அனாதையாகச் செல்வது, நடுத்தெருவிலே நிற்பதுபோல, இன்னும் கொச்சைப்படுத்தி எத்தனை வார்த்தைகளைப் பேசினார்? இங்கு எல்லோரும் பார்த்தோமே, அது கடுமையான வாரத்தையில்லையா? ஆனால் இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி அவர்களே, நீங்கள் ஒவ்வொரு நாளும் பார்க்கிறீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. சக்ரபாணி, நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லி முடித்தாகிவிட்டது. உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சாமிநாதன், நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர், அவர்களின் பதிலுரையிலே தவறுதலான ஒரு வாத்தையைக் கூறிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். திருப்பூரிலே...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி அவர்கள் சொன்னார்கள், அது முடிந்துவிட்டது.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** திருப்பூரிலே அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்திலே கட்டப்பட்டிருந்த ஆக்கிரமிப்புக் கட்டடங்கள் தி.மு.க. ஆட்சிக் காலத்திலே இடிக்கப்பட்டன என்பதற்குப் பதிலாக, தி.மு.க. ஆட்சிக் காலத்திலே கோவில் இடிக்கப்பட்டது என்று தவறாகக் கூறிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். அதை அவைக் குறிப்பிலிருந்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியிருந்தால் மாற்றிக் கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்டிருந்த கடைகள் இடிக்கப்பட்டன என்ற தகவலை நான் அறநிலையத் துறை மூலமாகத்தான் சொல்கிறேன். அறநிலையத் துறைக்குச் சொந்தமாக இருந்த இடங்கள் எல்லாம் கோயிலுக்குச் சொந்தமான இடங்கள்தான். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பில்...

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கொஞ்சம் கவனியுங்கள். திரு. வை. சிவபுண்ணியம் சொல்கிறார், அதைக் கேளுங்கள். திரு. வை. சிவபுண்ணியம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், இதைக் கேளுங்கள். சிவபுண்ணியம் அவர்கள் விளக்கம் கேட்கிறார்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஓர் அரசாணையைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அரசாணை எண் 353 சென்ற ஆட்சிக் காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது. இப்பொழுது நடைமுறைக்கு வரும் என்று சொன்னார்கள். இதை நான் சொல்ல வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன். காரணம், சென்ற ஆண்டு இந்த அரசாணையை நிறுத்தி வைப்பதற்கான காரண கர்த்தாவாக இருந்தவன் நான். சட்டமன்றத்திலே பேசி அதை நிறுத்துவதற்கான முயற்சியை எடுத்தேன். அதற்கு என்ன காரணம் என்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கம் எல்லாம் சொல்லாதீர்கள். ஏதாவது சந்தேகம் இருந்தால் மட்டும் கேளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை. அது ஏதோ தவறான தகவலின் அடிப்படையிலே அல்லது அதிகாரிகளோ, வேறுவிதமாகவோ கொடுத்து அது தவறாகிவிடக் கூடாது என்ற காரணத்தினாலே சொல்கிறேன். நான் அதைக் குற்றம் சுமத்துவதற்காகச் சொல்லவில்லை. திரும்பவும் பரிசீலிக்க வேண்டுமென்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட வேண்டுமென்பதற்காகவும் சொல்கின்றேன். பலபேர் மனைகளை வைத்துக்கொண்டு வெளியே வாடகை கொடுக்காமல் ஏமாற்றுகிறார்கள் என்பதில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் சில ஏழை எளியவர்கள், சாதாரணமானவர்கள் குடியிருப்பிலே இருந்துகொண்டிருப்பவர்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலமாக ஒரு மடங்கு, 10 மடங்காக இருந்த அந்த வாடகை 150 மடங்காக உயர்த்துவதற்கான சந்தர்ப்பம் அதிலே இருக்கிறது. ஆகவே, நியாயமான வாடகையை கேட்பதிலே எனக்கு மாற்றுக் கருத்தில்லை. இந்தச் சட்டத்தின் மூலமாக இந்த வாடகை நிர்ணயிக்கப்படுமானால் 10 ரூபாய், 100 ரூபாய் என்று வாடகை செலுத்திக்கொண்டிருந்தவர்கள் கிட்டத்தட்ட 10,000 ரூபாய் செலுத்த வேண்டிய ஒரு நிர்பந்தம் ஏற்படுகிறது என்பதை நான் சட்டமன்றத்திலே பேசி, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு அதை நிறுத்தி வைக்கிறேன் என்று சட்டமன்றத்திலே அறிவித்தார்கள். ஆகவே, இது முன்னாள் ஆட்சியில்



செய்யப்பட்ட ஒரு காரியம் என்பதைக் கருத்தில்கொள்ளாமல், இருக்கின்ற நியாயத் தன்மையை உணர்ந்து, அந்தச் சட்டத்தைப் பற்றி மறுபரிசீலனை செய்து, திரும்பவும் அங்கு மனையிலே குடியிருப்பவர்களை பாதுகாக்கத்தக்க வகையிலே நியாய வாடகை நிர்ணயித்து, அவர்களுக்கு வழங்குவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும் என்பதற்காகக் கேட்கிறேன். இதை இப்பொழுது இருக்கிற சூடான நிலைமையில்-(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அதைக் கருதாமல் விட்டுவிடக் கூடாது என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் ஏதாவது விளக்கம் சொல்கிறீர்களா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு வந்ததற்குப் பிறகு புதியதாக எந்தவொரு வரியையும் உயர்த்தவில்லை, வாடகையையும் உயர்த்தவில்லை. முன்பு இருந்ததை செயல்படுத்த வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சுமூகமான நிலையில் ஆரோக்கியமாக இருக்கும் என்ற காரணத்தினாலே சொல்கின்றேன். இறுதியாக உங்களிடத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் பேசிய நேரத்திலே சொன்ன அந்த அனாதையாகத் திரிகின்ற என்ற வார்த்தை, அதைத் தொடர்ந்து கேழ்வரகிலே நெய்வடிகிறது என்ற வார்த்தைகள் எல்லாம் நிச்சயமாக அவைக்குறிப்பிலே இடம்பெறக் கூடாது, அதை நீக்குகின்ற நேரத்திலே, நிச்சயமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை முடிந்து போனதற்குப் பிறகு கிளறாதீர்கள். அது சரிப்பட்டு வராது. (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** இதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

## (இ) கோரிக்கை எண் 12 - 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 12 - 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** இல்லை,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை. திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.



**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

*பிற்பகல் 7—45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.26,48,55,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஈ) கோரிக்கை எண் 50 - சுற்றுலா

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 50 - சுற்றுலா. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை. திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை. திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.



**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"சுற்றுலா பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.16,93,10,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29–8–2001) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 7–46 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

*—ஏதுமில்லை—*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*29. மானியக் கோரிக்கை எண் 13 – நீதி நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)*

*30. மானியக் கோரிக்கை எண் 14 – தமிழ்நாட்டில் சிறைகள் நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)*

*31. மானியக் கோரிக்கை எண் 12 – தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)*

*32. மானியக் கோரிக்கை எண் 50 – சுற்றுலா பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)*



## இணைப்பு – I

*( 475 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 13

## நீதி நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 2001– 2002

### 1. முன்னுரை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ள கோட்பாடுகளுக்கிணங்க, குடிமக்கள் அனைவருக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்வதே அரசின் கொள்கையாக எப்போதும் இருந்து வந்துள்ளது. நீதியை நிருவகிப்பது நீதிமன்றங்களின் பொறுப்பாகும். அவை, அரசின் செயல் மற்றும் நிருவாகப் பணியாளரமைப்பைச் சார்ந்திராமல் செயல்படுகின்றன. நீதிமன்றங்கள் செயல்படுவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அரசு செய்து கொடுக்கின்றது. உயர் நீதிமன்றத்தின் பரிந்துரையின் அடிப்படையில் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு தேவைப்படும் இடங்களிலெல்லாம் புதிய மற்றும் கூடுதல் நீதிமன்றங்களுக்கு அரசு அனுமதி வழங்குகிறது.

### 2. நீதித் துறையின் படிநிலை அமைப்பு

புது டில்லியிலுள்ள இந்திய உச்ச நீதிமன்றம், நாட்டில் முதன்மை நீதிமன்றமாகும். மாநிலங்களில் செயல்படும் அனைத்து உயர் நீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகின்றன.

[2001 ஆகஸ்ட் 28

மாநில அளவில் நீதித் துறையின் படிநிலை அமைப்பு பின்வருமாறு—

**உயர் நீதிமன்றம், சென்னை**

| உரிமையியல் | | குற்றவியல் | |
|---|---|---|---|
| சென்னை மாநகர் | வெளியூர் | சென்னை மாநகர் | வெளியூர் |
| மாநகர உரிமையியல் நீதிமன்றம் | மாவட்ட நீதிமன்றங்கள் | பெருநகர குற்றவியல் நடுவர் நீதி மன்றங்கள் | அமர்வு நீதிமன்றங்கள் |
| சிறு வழக்குகள் நீதி மன்றங்கள் | சார்நிலை நீதிமன்றங்கள் | | மாவட்டக் கூடுதல் நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதி மன்றங்கள் |
| | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | | குற்றவியல் நடுவர் நீதி மன்றங்கள் |
| | மாவட்ட உரிமையியல் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | | |



2001 ஆகஸ்ட் 28]

இத்துடன், பல்வேறு சட்டங்களின்கீழ் பின்வரும் நீதிமன்றங்கள்/ அலுவலகங்கள் செயல்படுகின்றன:—

1) நொடித்தவர் சொத்தாட்சியர், உயர்நீதிமன்றம், சென்னை.

2) அரசு சொத்து தலைமைப் பொறுப்பாட்சியர், சென்னை.

3) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கடலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள்.

4) தொழில் நடுவர் நீதி மன்றம், சென்னை.

5) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் உள்ள குடும்ப நீதிமன்றங்கள்.

6) சிவில் உரிமைகள் பாதுகாப்பிற்கான தனி நீதிமன்றங்கள்.

7) சென்னை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள, பொருளாதாரக் குற்றங்களை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்.

8) "தடா" சட்டத்தின்கீழ் தனி நீதிமன்றங்கள்.

9) இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளையும், போதை மருந்துகள் — மனமயக்கப் பொருட்கள் (என்டிபிஎஸ்) சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளையும் விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்.

10) சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களிலுள்ள மத்திய குற்றப் புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கென்று அமைக்கப்பட்ட தனி நீதிமன்றங்கள்.

11) சென்னை மற்றும் கோயம்புத்தூரிலுள்ள, குண்டுவெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கென்று அமைக்கப்பட்ட தனி நீதிமன்றங்கள்.

12) மதுரையிலுள்ள, சாதிக் கலவரங்கள் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றம்.

**3. நீதிமன்றங்களின் எண்ணிக்கை**

நீதிமன்றங்களின் தற்போதைய எண்ணிக்கை இணைப்பு—I—ல் கொடுக்கப்பட்டுள்ளது.

[2001 ஆகஸ்ட் 28

## 4. நிதி ஒதுக்கீடு

நீதித் துறை நிருவாகத்திற்கு அரசு வழங்கிவரும் முன்னுரிமையைக் கருத்திற்கொண்டு, அடிப்படைக் கட்டமைப்பு வசதி மற்றும் செயல்பாட்டின் அடிப்படையில், நமது மாநிலத்தில் நீதித் துறை கணிசமான அளவிற்கு வளர்ச்சியையும், மேம்பாட்டையும் அடைந்துள்ளது. போதிய அளவிற்கு நிதி ஆதாரங்கள் இல்லாதபோதிலும், நீதித் துறை தங்குதடையின்றி, சுமூகமாகச் செயல்படுவதற்காக, கட்டடங்கள், பணியாளர்கள் மற்றும் தேவையான ஏனைய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தவரையில், அரசு போதிய வசதிகளை செய்து கொடுத்துள்ளது.

சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் நொடித்தவர் சொத்தாட்சியர் குறித்த செலவு "சாட்டிய செலவினம்" என்ற தலைப்பிலும், நீதி நிருவாகம் தொடர்பான பிற செலவினங்கள் "அனுமதிக்கப்பட்டவை" என்ற தலைப்பிலும் காட்டப்படுகின்றன.

நீதித் துறை குறித்த செலவு மற்றும் வருவாய் குறித்த விவரங்கள் இணைப்பு II—ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 5. உயர் நீதிமன்றம், சென்னை

மாண்புமிகு தலைமை நீதிபதி உட்பட, சென்னை உயர் நீதிமன்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 42 ஆகும். உயர் நீதிமன்றம் தற்போது 36 நீதிபதிகளைக் கொண்டு செயல்படுகின்றது.

சென்னை உயர் நீதிமன்றம், உரிமையியல் வழக்குகளில் ரிட் மனுக்களையும் அசல் மனுக்களையும் விசாரிக்கும் சட்ட அதிகாரம் கொண்டுள்ளது. உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்கும் அதிகாரத்தை உயர்நீதிமன்றம் பெற்றுள்ளது. அசல் மனுவைப் பொறுத்தவரையில், சென்னை மாநகருக்குள் எழக்கூடிய ரூ.10,00,000/—க்கும் அதிகமான மதிப்புடைய வழக்குகளை உயர் நீதிமன்றம் விசாரிக்கிறது. மாண்புமிகு நீதிபதிகளுக்கிடையே பணிகளைப் பகிர்ந்தளிக்கும் பணியை மாண்புமிகு தலைமை நீதிபதி கவனிக்கிறார்.

மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான பாண்டிச்சேரி மீதும் உயர் நீதிமன்றம் சட்ட அதிகாரம் செலுத்துகிறது. உயர் நீதிமன்றத்தில் பாண்டிச்சேரி குறித்த விவகாரங்களைக் கவனிக்கும் அதிகாரிகள்,



2001 ஆகஸ்ட் 28]

பணியாளர்கள் ஆகியோர் குறித்த செலவை முதற்கண் தமிழ்நாடு அரசு செய்கிறது. பின்னர், பாண்டிச்சேரி அரசு அத்தொகையைத் திருப்பிக் கொடுக்கிறது.

தலைமைப் பதிவாளர், உயர் நீதிமன்றத்தின் தலைமை நிருவாகி ஆவார். அவருக்குப் பல அதிகாரிகள், அதாவது, பதிவாளர்கள், மேலாளர் (Master), துணைப் பதிவாளர்கள், அலுவல் முறை நடுவர் (Official Referee), வழக்குகளை தொகுதிப்படுத்துவதற்கான தனி அலுவலர், உதவிப் பதிவாளர்கள், தலைமைக் கணக்கு அலுவலர், சார்—உதவிப் பதிவாளர்கள் ஆகியோர் நிருவாகத்தில் உதவி செய்கின்றனர்.

உயர் நீதிமன்றம் நீதி வழங்குவது மட்டுமின்றி, மாநிலத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்கள் அனைத்திலும் முழு அளவில் நிருவாகக் கட்டுப்பாட்டைச் செலுத்துகிறது.

## 6. உரிமையியல் நீதிமன்றங்களின் நிருவாக அமைப்பு

### (i) சென்னைப் பெருநகரம்

*(அ) மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை*

18 சார்நிலை நீதிபதிகள் (உதவி நீதிபதிகள்), 13 மாவட்ட நீதிபதிகள் என மொத்தம் 31 நீதிபதிகள் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்தில் பணியாற்றுகின்றனர். மாவட்ட உரிமையியல்—குற்றவியல் நடுவர் நீதிபதி பதவித் தரத்திலுள்ள பதிவாளர், நிருவாகத்திற்குப் பொறுப்பு வகிக்கிறார். மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, சென்னை மாநகரம் முழுவதும் பரவியுள்ளது.

மாநகர உரிமையியல் நீதிமன்றம் ரூ.10,00,000/— வரை மதிப்புள்ள வழக்குகளையும் ரூ.3,00,000/— வரை மதிப்புள்ள மேல்முறையீட்டு வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரம் பெற்றுள்ளது. மேலும், இந்த மாநகர உரிமையியல் நீதிமன்றம் சென்னை செஷன்ஸ் அமர்வு நீதிமன்றமாகவும் செயல்படுகின்றது. 1988 ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஊழல் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்கென்றே, மூன்று கூடுதல் மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு, 1997 ஆம் ஆண்டு வைப்பீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) நலன் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை விசாரிப்பதற்கென்றே தனி நீதிமன்றம் ஒன்றும் இயங்கி வருகின்றது.

[2001 ஆகஸ்ட் 28

2001—2002 ஆம் ஆண்டில் மாநகர் உரிமையியல் நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டில் மொத்த செலவு ரூ.5,03,42,000/— என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆ) சென்னை சிறு வழக்குகள் நீதிமன்றம்

இந்நீதிமன்றம், மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள தலைமை நீதிபதியின் கீழ் செயல்பட்டு வருகின்றது. அங்கு சார்பு நீதிபதி பதவித் தரத்தில் 8 (உரிமையியல் நீதிபதி—முதுநிலைப் பிரிவு) நீதிபதிகளும், மாவட்ட உரிமையியல் நீதிபதி பதவித் தரத்தில் 7 நீதிபதிகளும் (உரிமையியல் நீதிபதி —இளநிலைப் பிரிவு) உள்ளனர். உரிமையியல் நீதிபதி பதவித் தரத்தில் (இளநிலைப் பிரிவு) நிருவாகப் பொறுப்பில் பதிவாளர் ஒருவரும் உள்ளார். அவர் நிருவாகப் பணிகளுடன் சில நீதித் துறை நடவடிக்கைகளையும் கவனித்து வருகிறார். இதன் தலைமை நீதிபதியும் மற்றும் ஏனைய நீதிபதிகளும் 1882 ஆம் ஆண்டு மாகாண சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் செலுத்தி வருகின்றனர்.

V மற்றும் VI ஆம் நீதிபதிகள், மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை விசாரிப்பதற்கான நடுவர் மன்றங்களாகச் செயல்படுகின்றனர். தலைமை நீதிபதி மற்றும் II, III, IV ஆகிய நீதிபதிகள் மோட்டர் வாகனச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர். X முதல் XVI வரையிலுள்ள நீதிபதிகள் சென்னை மாநகரத்திற்கான வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். தலைமை நீதிபதியும் II முதல் IV, VII, VIII ஆகிய நீதிபதிகளும் வாடகைக் கட்டுப்பாடு குறித்த மேல்முறையீடுகளை விசாரிக்க அதிகாரம் பெற்றுள்ளனர். 2001—2002 ஆம் ஆண்டிற்கு சிறு வழக்குகள் நீதிமன்றம் தொடர்பான செலவு ரூ.2,18,47,000/— என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் முன்னாள் ஜமீன்தாரி எஸ்டேட்டுகள் மற்றும் திருச்சியிலுள்ள இனாம் ஒழிப்பு நடுவர் மன்றங்கள் தொடர்பாக நிதி ஒதுக்கீடு, இழப்பீட்டு தொகையை பகிர்ந்தளித்தல் ஆகியவற்றைப் பொறுத்தவரை செய்யப்படும் செலவு ரூ.1,30,000/—மும் அடங்கும்.

**(ii) வெளியூர்**

**(a) மாவட்ட நீதிமன்றங்கள்**

இம்மாநிலத்தில் 24 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. இம்மாவட்ட நீதிபதிகள் அந்தந்தப் பகுதிகளுக்கான அமர்வு



2001 ஆகஸ்ட் 28]

நீதிபதிகளாகவும் பணியாற்றுகின்றனர். மேலும் அவர்கள் சில சிறப்புச் சட்டங்களின் கீழ் சிறப்பு நடுவர்களாகவும் செயல்படுகின்றனர். தொழிலாளர் காப்புறுதிச் சட்டம், எஸ்டேட் ஒழிப்புச் சட்டம் மற்றும் மோட்டார் வாகனங்கள் சட்டம் போன்ற சில சிறப்புச் சட்டங்களின் கீழ் சிறப்பு நடுவர்களாகச் செயல்படுகின்றனர். இந்த மாவட்ட நீதிபதிகள் தங்கள் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளிலுள்ள சார்நிலை உரிமையியல் நீதிமன்றங்களையும் மேற்பார்வையிடுகின்றனர். இவர்கள் ரூ.3,00,000/— வரை மதிப்புள்ள மேல்முறையீட்டு உரிமையியல் வழக்குகளை விசாரித்து வருகின்றனர்.

**(b) சார்நிலை நீதிமன்றங்கள் (உரிமையியல் நீதிபதி — முதுநிலைப் பிரிவு)**

சார்நிலை நீதிபதிகள் தற்போது உரிமையியல் நீதிபதிகளாக (முதுநிலைப் பிரிவு) பெயர் மாற்றம் செய்யப்பட்டு வரையறை இல்லாத தொகை குறித்த அசல் வழக்குகளை விசாரித்து வருகின்றர். இவர்களுடைய அதிகார வரம்பு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. சார்நிலை நீதிபதிகள் அவரவர் அதிகார வரம்பில் பணிபுரியும் மாவட்ட உரிமையியல் நீதிபதிகள் முடிவிலிருந்தும், அந்த முடிவு தொடர்பாகவும் எழும் மேல்முறையீடுகளைப் பொறுத்தவரை, ரூ.30,000/—வரை மதிப்புள்ள வழக்குகளை அவர்கள் விசாரிக்கின்றனர். இந்த சார்நிலை நீதிபதிகள் அமர்வு நீதிமன்ற உதவி நீதிபதிகளாகவும் செயல்படுகின்றனர். மேலும் சார்நிலை நீதிமன்றங்கள் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரும் நடுவர் மன்றங்களாகவும் செயல்படுகின்றன. இம்மாநிலத்தில் 107 சார்நிலை நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

**(c) மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் (உரிமையியல் நீதிபதி —இளநிலைப் பிரிவு)**

மாவட்ட முன்சீப் பதவிகள் தற்போது உரிமையியல் நீதிபதி பதவிகளாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு (இளநிலைப் பிரிவு) ரூ.30,000/— வரையிலான மதிப்புடைய சொத்து வழக்குகளை விசாரித்து வருகின்றனர். மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ஒவ்வொன்றும் அவற்றிற்கென்று அதிகாரவரம்பைப் பெற்றுள்ளன. அவை ரூ.20,000/ — வரையிலான சிறு வழக்குகளை விசாரித்து வருகின்றன. மாவட்ட உரிமையியல் நடுவர்கள், தங்கள் வரம்புக்கு உட்பட்ட பகுதிகளுக்கு வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயலாற்றுகின்றனர். இம்மாநிலத்தில் 158 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

[2001 ஆகஸ்ட் 28

**(d) மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்**

இம்மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் உள்ள வழக்காடும் பொதுமக்கள் தங்கள் உரிமையியல் தொடர்பான குறைகளைத் தீர்த்துக் கொள்வதில் மிகுந்த இடர்பாடுகளை சந்தித்து வருகின்றனர். அவர்கள் வசிக்கும் பகுதியில் உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லாத காரணத்தால் அதற்காக அவர்கள் வெளியே உள்ள நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, அவர்களுடைய இடர்பாடுகளைக் களையும் பொருட்டு உரிமையியல் நீதிமன்றங்கள் செயல்படாத இடங்களில் 43 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மாவட்ட உரிமையியல்—குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களாக மாற்றப்பட்டுள்ளன. இத்தகைய நீதிமன்றங்கள் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை தீர்த்து வைக்கின்றன. மாவட்ட உரிமையியல் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மொத்தம் 62 உள்ளன.

அனைத்து உரிமையியல் நீதிமன்றங்களும் மூன்று வகையான பணியாளரமைப்புகளை, அதாவது, வழக்கமான பணியாளரமைப்பு, நகல் எடுக்கும் பணியாளரமைப்பு மற்றும் செயல்முறை பணியாளரமைப்பு ஆகிய மூன்று பணியாளர் அமைப்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

வெளியூரிலுள்ள மாவட்ட நீதிமன்றங்கள், சார்நிலை நீதிமன்றங்கள், மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் தொடர்பாக 2001—2002ஆம் ஆண்டிற்கு செலவு ரூபாய் 74,57,33,000/— என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

**(e) தொழிலாளர் நல நீதிமன்றங்கள்**

இம்மாநிலத்தில் சென்னையில் மூன்று மற்றும் மதுரை, கோயம்புத்தூர், வேலூர் , சேலம், திருச்சிராப்பள்ளி கடலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக மொத்தம் 10 தொழிலாளர் நல நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

சென்னையில் தொழில் நடுவர்மன்றம் ஒன்றும் உள்ளது. இது மாநிலம் முழுவதும் அதிகார வரம்பு கொண்டது.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர்மன்றங்கள் ஆகியவற்றிற்கு தலைமை தாங்குபவர்கள் மாவட்ட நீதிபதிகள் பதவித் தரத்தில் செயல்படுவர். தொழிலாளர் நல நீதிமன்றங்கள், அரசு



2001 ஆகஸ்ட் 28]

இந்நீதிமன்றத்திற்கு அனுப்பும் தொழிலாளர் குறித்த தகராறுகளைத் தீர்த்து வைக்கும். பாதிக்கப்பட்ட தரப்பினரின் கோரிக்கை மனுக்களை தீர்த்து வைக்கவும், கோரிக்கை மனுக்கள் குறித்து விசாரிக்கவும், நீதிமன்ற முகாம்கள் நடத்தப்படுகின்றன.

சென்னை தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர்மன்றம் ஆகியவற்றை பொறுத்தமட்டில் 2001—2002ஆம் ஆண்டிற்கான செலவு ரூ.1,59,61,000/— என மதிப்பிடப்பட்டுள்ளது.

## 7. குற்றவியல் நீதிமன்றங்களின் அமைப்பு முறை

**(i) சென்னை மாநகரம்**

தலைமை பெருநகர குற்றவியல் நீதிமன்றம், கூடுதல் தலைமைப் பெருநகர குற்றவியல் நீதிமன்றம் உட்பட சென்னை மாநகரில் 26 பெருநகரக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

XXI மற்றும் XXII ஆகியவற்றின் பெருநகர குற்றவியல் நடுவர்கள், இரு நடமாடும் நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளாக இருக்கின்றனர். தலைமை பெருநகர குற்றவியல் நீதிபதி மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ளார். கூடுதல் தலைமை பெருநகர குற்றவியல் நடுவர் சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் உள்ளார். இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, பத்தாவது, பதினொன்றாவது பெருநகர குற்றவியல் நடுவர்கள், சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் உள்ளனர்.

ஏனைய அனைத்து பெருநகர குற்றவியல் நடுவர்களும் மாவட்ட உரிமையியல் நீதிபதி பதவித் தரத்தில் உள்ளனர். பெருநகரக் குற்றவியல் நடுவர்கள் சென்னை மாநகரிலுள்ள காவல் நிலையங்கள் தொடர்பாக அதிகார வரம்பைச் செலுத்துகின்றனர்.

மாநகரிலுள்ள பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களைப் பொறுத்தமட்டில், 2001—2002ஆம் ஆண்டிற்கான செலவு ரூ.3,33,89,000/— என மதிப்பிடப்பட்டுள்ளது.

**(ii) வெளியூர்**

***(அ) மாவட்ட கூடுதல் நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்***

கூடுதல் மாவட்ட நீதிபதி—தலைமைக் குற்றவியல் நடுவர்கள் 24 பேர்கள் உள்ளனர். அவர்களுடைய நிருவாகப் பணியுடன், 1973ஆம்

ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் விதித்துறைகளின் கீழ் மேல்முறையீடுகள் மாவட்ட அமர்வு நீதிபதிகளுக்குத் தாக்கல் செய்யப்படுகின்றன. இவர்கள் மாவட்டக் கூடுதல் நீதிபதி நீதித் துறை தலைமை குற்றவியல் நடுவருக்கு அனுப்புகின்ற சில மேல்முறையீடுகளை மேற்படி சட்டக்கோவையின் கீழ் விசாரிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் கூடுதல் அமர்வு நீதிபதிகளாகவும் செயல்படுகின்றனர்.

*(ஆ) நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்*

ஏறக்குறைய அனைத்து வட்டங்களிலும் நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. இம்மாநிலத்தில் 179 நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் உள்ளன. வெளியூர்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்களுக்கு 2001—2002ஆம் ஆண்டிற்கான செலவினம் ரூ.33,75,92,000/— என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## 8. தமிழ்நாட்டில் தனி நீதிமன்றங்களின் செயல்பாடு

**(அ) ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகள் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்கள்**

1989ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இழைக்கப்படும் வன்கொடுமைகள் (தடுத்தல்) சட்டம் மற்றும் குடிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரணை செய்ய பின்வரும் மாவட்டங்களை அதிகார வரம்பாகக் கொண்ட நான்கு கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் உள்ளன.



| தொடர் எண் | நீதிமன்றத்தின் பெயர் | நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு |
|---|---|---|
| 1 | நான்காவது கூடுதல் அமர்வு நீதிமன்றம், மதுரை | (i) மதுரை<br>(ii) திண்டுக்கல்<br>(iii) தேனி<br>(iv) இராமநாதபுரம்<br>(v) சிவகங்கை<br>(vi) விருதுநகர் |
| 2 | இரண்டாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம். தஞ்சாவூர் | (i) தஞ்சாவூர்<br>(ii) நாகப்பட்டினம்<br>(iii) திருவாரூர் |
| 3 | மூன்றாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம், திருநெல்வேலி | (i) திருநெல்வேலி<br>(ii) தூத்துக்குடி<br>(iii)கன்னியாகுமரி |
| 4 | நான்காவது கூடுதல் அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி | (i) திருச்சிராப்பள்ளி<br>(ii) கரூர்<br>(iii) பெரம்பலூர்<br>(iv) புதுக்கோட்டை |

எஞ்சிய மாவட்டங்களைப் பொறுத்த மட்டில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இழைக்கப்படும் வன்கொடுமைகள் (தடுத்தல்) சட்டத்தின் கீழ்வரும் வழக்குகளை சம்பந்தப்பட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் விசாரணை செய்யும். மேற்கூறப்பட்ட தனி நீதிமன்றங்களுக்கு 2001—2002ஆம் ஆண்டிற்கான செலவு ரூ.55,51,000/— என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**(b) பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்கள்**

பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்ய சென்னையில் இரண்டு தனி நீதிமன்றங்களும் அதாவது கூடுதல் தலைமை பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் (பொ.கு.I மற்றும் பொ.கு.II) மற்றும் மதுரையில் ஒரு நீதிமன்றமும் ஆக மூன்று தனி நீதிமன்றங்கள் உள்ளன. கூடுதல் தலைமை பெருநகர குற்றவியல் நடுவர் பொ.கு.I, பொ.கு.II

மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ளனர். மதுரையிலுள்ள தலைமைக் குற்றவியல் நடுவர், சார்பு நீதிபதி (முதுநிலை கோட்டம்) பதவித் தரத்தில் உள்ளார். 2001—2002ஆம் ஆண்டிற்கு இந்நீதிமன்றங்களுக்கு ஆகும் செலவு ரூ.40,46,000/— என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**(c) சந்தனக் கட்டை கடத்தல் தொடர்பான குற்றங்களுக்கான தனி நீதிமன்றங்கள்**

சந்தனக் கட்டை கடத்தல் தொடர்பான குற்றங்களை விசாரிக்க குற்றவியல் நடுவர் பதவித்தரத்தில் வேலூர் மாவட்டத்தில் திருப்பத்தூரில் ஒன்றும், சேலம் மாவட்டத்தில் சேலத்தில் மற்றொன்றுமாக இரண்டு தனி நீதிமன்றங்கள் உள்ளன.

**(d) இரயில்வே நீதிமன்றங்கள்**

இந்திய இரயில்வே சட்டத்தின்கீழ், பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்தல் முதலிய குற்றங்களை விசாரணை செய்வதற்காக எழும்பூர் இரயில் நிலையம் மற்றும் மத்திய இரயில் நிலையம் ஆகியவற்றில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் அல்லாமல், வேலூர், கடலூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் இரயில்வே குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் உள்ளன. இரயில்வே குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கு ஆகும் செலவை மாநில அரசு ஏற்கிறது. இந்நீதிமன்றங்கள் வசூலிக்கும் அபராதத்தொகை மாநில அரசின் வரவுக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

**(e) நடமாடும் நீதிமன்றங்கள்**

போக்குவரத்து தொடர்பான குற்றங்களை விசாரிக்க நான்கு நடமாடும் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னையில் இரண்டும், கோயம்புத்தூரில் ஒன்றும் மதுரையில் ஒன்றுமாக மொத்தம் நான்கு நடமாடும் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. சென்னை மாநகருக்காக மேலும் நான்கு நடமாடும் நீதிமன்றங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அவை விரைவில் செயல்படத் தொடங்கும்.

**(f) குடும்ப நீதிமன்றங்கள்**

சென்னையில் மூன்றும் மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் தலா ஒன்றுமாக ஆறு குடும்ப நீதிமன்றங்கள் உள்ளன. குடும்ப நீதிமன்றங்களில், ஆலோசகர்களுக்கு ஓர் அமர்வுக்கு ரூ.100/—



வழங்கப்படுகிறது. குடும்ப நீதிமன்றங்கள் குறித்த செலவு 2001—2002ஆம் ஆண்டிற்கு ரூ.1,22,76,000/— என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**(g) 1987ஆம் ஆண்டு "தடா" சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட தனி (Designated) நீதிமன்றங்கள்**

நம் நாட்டிலுள்ள பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலை கட்டுப்படுத்துவதற்காக, 1987ஆம் ஆண்டு "தடா" சட்டம் இயற்றப்பட்டது. அரசு, உயர்நீதிமன்றத்தின் இசைவுடன், சென்னையில் இரண்டு தனி நீதிமன்றங்களையும் திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் தலா ஒரு தனி நீதிமன்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

**(h) மத்திய குற்றப் புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்**

இம்மாநிலத்தில்: மத்தியக் குற்றப் புலனாய்வுத் துறையின் வழக்குகளை விசாரிப்பதற்கென்றே சென்னையில் இரண்டும், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றுமாக 4 தனி நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. மத்தியக் குற்றப் புலனாய்வுத் துறையின் வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்களுக்காகும் செலவு 2001—2002ஆம் ஆண்டிற்கு ரூ.78,16,000/— என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**(i) இன்றியமையாப் பொருட்கள் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்கள்**

இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வருகின்ற வழக்குகளை விசாரணை செய்வதற்காக மாவட்ட அமர்வு நீதிபதி பதவித் தரத்தில் உள்ள நீதிபதி, சென்னை, மதுரை, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர் ஆகிய ஒவ்வோர் இடத்திலும் ஒரு தனி நீதிமன்றம் வீதம் மொத்தம் ஆறு தனி நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**(j) போதை மருந்துகள் மற்றும் மயக்கப் பொருட்கள் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்கள்**

போதைப் பொருட்கள் மற்றும் மயக்கப் பொருட்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கென்று சென்னையில் கூடுதல் தனி நீதிமன்றம் ஒன்று இயங்கி வருகிறது.

இந்நீதிமன்றத்திற்கு 2001—2002 ஆம் ஆண்டுக்கான செலவு ரூ.12,54,000 என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**(k) குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரணை செய்வதற்கான கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள்**

குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரணை செய்வதற்காக சென்னை, கோயம்புத்தூர் ஆகிய ஒவ்வோர் இடத்திலும் ஒரு கூடுதல் அமர்வு நீதிமன்றம் வீதம் இரண்டு கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

**(l) இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்காகவென்றே மதுரையில் உள்ள அமர்வு நீதிமன்றம்**

இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்காக, மதுரையில் அமர்வு நீதிமன்றம் ஒன்று இயங்கி வருகிறது.

**(m) 1908 ஆம் ஆண்டு குற்றவியல் திருத்தச் சட்டத்தின் கீழ் நடுவர் மன்றம்**

1908ஆம் ஆண்டு இந்தியக் குற்றவியல் திருத்தச் சட்டத்தின்கீழ் (மத்திய சட்டம் 14/1908) சென்னை, உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியின் தலைமையில், நடுவர் மன்றம் ஒன்று, 1999 ஜனவரி திங்களிலிருந்து இயங்கி வருகிறது. இந்த நடுவர் மன்றத்தைப் பொறுத்தவரையில், 2001—2002 ஆம் ஆண்டுக்கான செலவு, ரூபாய் 15,67,000/— என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**(n) மனித உரிமைகள் நீதிமன்றம்**

மனித உரிமைகள் மீறப்படுவதால் எழும் வழக்குகளை விரைவில் விசாரணை செய்வதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அமர்வு நீதிமன்றத்தை மனித உரிமைகள் நீதிமன்றமாக மாநில அரசு குறிப்பிடவும், மனித உரிமைகள் நீதிமன்றங்களுக்கு தனி அரசு வழக்கு நடத்துநர்களை (குற்றவியல்) நியமிக்கவும், 1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் (மத்தியச் சட்டம் 10/1994) வகை செய்கிறது.

மேற்சொன்ன விதிகளுக்கிணங்க, சென்னை உயர் நீதிமன்றத்தின் இசைவுடன், இம்மாநிலத்திலுள்ள அனைத்து கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், சென்னையிலுள்ள இரண்டாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம் மற்றும்



உதகமண்டலம் அமர்வு நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களை மனித உரிமைகள் நீதிமன்றங்களாக அரசு குறிப்பிட்டுள்ளது. அவை, 29.1.1996ஆம் நாளிலிருந்து இயங்கி வருகின்றன. மாவட்ட நீதிமன்றங்களின் அரசு வழக்கு நடத்துநர்கள் (குற்றவியல்), மனித உரிமைகள் நீதிமன்றத்தில் அரசு வழக்கு நடத்துநர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இருப்பினும், சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய அறிவுரையின் அடிப்படையில், மனித உரிமைகள் மீறப்படுவது குறித்த வழக்குகளை நடத்துவதற்கென்றே மனித உரிமைகள் நீதிமன்றத்தில் தனி அரசு வழக்கு நடத்துநர்களை நியமிப்பதற்காக அண்மையில் அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

**(o) தமிழ்நாடு வைப்பீட்டாளர்கள் நலன் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றம்**

தமிழ்நாடு 1997ஆம் ஆண்டு வைப்பீட்டாளர்களின் (நிதி நிறுவனங்களில்) நலன் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கென்றே தனி நீதிமன்றம் ஒன்று சென்னையில் இயங்கி வருகிறது.

**9. சென்னை, அரசு சொத்தாட்சியர் (Administrator General) மற்றும் பொறுப்புச் சொத்தாட்சியர்**

சென்னை, பேராட்சியர் மற்றும் பொறுப்புச் சொத்தாட்சியர், மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரி ஆவார். உரிமையியல் நீதிபதி (இளநிலைப் பிரிவு) பதவித் தரத்தைச் சேர்ந்த துணை பேராட்சியர் மற்றும் பொறுப்புச் சொத்தாட்சியர் ஆகியோர் அவருக்கு உதவுகின்றனர். உரிய வயதடையாத வாரிசுகளின் சொத்துக்கள், மரணமடைந்த நபர்களின் எஸ்டேட்டுகள் ஆகியவற்றிற்கு பொறுப்பு வகிக்க இவ்விரு அதிகாரிகளும் பொறுப்பு வாய்ந்தவர்கள் ஆவர். அவர்கள் பேராட்சியர் சட்டம், பொறுப்புச் சொத்தாட்சியர் சட்டம் ஆகியவற்றில் கண்டுள்ள விதித்துறைகளுக்கிணங்க, அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கடமைகளை ஆற்றுகின்றனர். பேராட்சியர், பொறுப்பு சொத்தாட்சியர் ஆகியோர் வகையில் 2001—2002 ஆம் ஆண்டுக்கான செலவு ரூபாய் 36,86,000/— என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. தமிழ் சட்ட இதழ்

மாதாந்திர தமிழ் சட்ட இதழான தீர்ப்பு திரட்டினை, உயர் நீதிமன்றம் வெளியிட்டு வருகிறது. 2001—2002ஆம் ஆண்டுக்கான உத்தேச செலவு ரூபாய் 18,49,000/— என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மாதமிருமுறை வெளியாகின்ற இச்சட்ட இதழ், ரூபாய் 32 என்ற விலையில் (ஒரு இதழின் விலை) வழக்குரைஞர்களுக்கும் பொதுமக்களுக்கும் கிடைக்கும்படி செய்யப்பட்டுள்ளது.

## 11. நீதிமன்ற நடைமுறைகளை கணினிமயமாக்குதல்

பல்வேறு நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை விரைந்து முடிப்பதற்காகவும், தீர்ப்பின் நகல்களை, வழக்கு தொடுத்தவர்களுக்கு உடனடியாக வழங்குவதற்காகவும், நீதித் துறையில் அனைத்து நடைமுறைகளையும் முற்றிலும் கணினிமயமாக்குவதென்று அரசும், சென்னை உயர் நீதிமன்றமும் கருதியுள்ளன. விசாரணை செய்யப்படவிருக்கிற வழக்குகளின் பட்டியலும், தீர்ப்புகள் குறித்த தகவல் ஏற்பாடும் ஏற்கெனவே உருவாக்கப்பட்டு பிணை விடுவிப்பு உத்தரவு மற்றும் "நீதிமன்ற அவசர உத்தரவு", "முன் விடுதல்" (Auto Orders) ஆகியவற்றின் நகல்கள் வழங்கப்படுகின்றன. நீதிபதிகளின் தனி அலுவலகங்களில் கணினியுடன் கூடிய இணையதள வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இதற்காக, ரூபாய் 1.09 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

## 12. சார்நிலை நீதிமன்றங்களைப் பரவலாக்குதல்

ஒரே இடத்தில் அதிக எண்ணிக்கையிலான நீதிமன்றங்கள் இருப்பதைத் தவிர்ப்பதற்காக, வெளியூர்களிலுள்ள சார்நிலை நீதிமன்றங்கள் பரவலாக்கப்பட்டுள்ளன.

வெளியூர்களிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, தற்போது, தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றச் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. அதைப்போன்றே மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பினை, சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றச் சட்டமும், சிறு வழக்குகள் நீதிமன்றத்தின் அதிகார வரம்பினை, மாகாண சிறு வழக்குகள் நீதிமன்றச் சட்டமும் வரையறுத்துள்ளன.



மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களிலும், துணை நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உரிமையியல் நீதிமன்றங்களிலும் விரிந்துள்ளது. மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் நேர்வில், அதன் அதிகார வரம்பு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் மாவட்டங்களில் பரந்திருக்கும் குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில், அதன் அதிகார வரம்பு, குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களின் அதிகாரவரம்பு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காவல் நிலையங்கள் வரை விரிந்துள்ளது.

## 13. நீதித் துறை பயிற்சிக் கழகம்

நீதித் துறை அதிகாரிகளுக்கும், பணியாளர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்காக, இந்திய உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் நீதித் துறை பயிற்சிக் கழகம் ஒன்று அமைக்கப்பட்டு, 23.4.2001 ஆம் நாளிலிருந்து செயல்படத் தொடங்கியது. 2001—2002 ஆம் ஆண்டில் இதற்கான உத்தேசச் செலவு ரூபாய் 11,35,000 ஆகும். 2001—2002 ஆம் ஆண்டில், நீதித் துறை பயிற்சிக் கழகக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதியளிக்கக் கருதப்பட்டுள்ளது.

## 14. முன்னோடித் திட்டம்

மாவட்டங்களில் நிலுவையாக உள்ள நீதிமன்ற வழக்குகளைக் குறைக்கும் நடவடிக்கையாக முன்னோடித் திட்டம் ஒன்று மாவட்டங்களில் படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் அரசு 60 நீதிமன்றங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. அனுமதி வழங்கப்பட்ட நீதிமன்றங்களில், 48 நீதிமன்றங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன.

## 15. மதுரையில் உயர் நீதிமன்ற ஆயம் அமைத்தல்

சென்னை உயர் நீதிமன்றத்தின் நிரந்தரக் கிளை ஒன்றை மதுரையில் ஏற்படுத்த இந்த அரசும், உயர் நீதிமன்றமும் அவற்றின் ஒப்புதல்களை அண்மையில் மத்திய அரசிடம் தெரிவித்துள்ளன. இந்நீதிமன்றத்திற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2001 ஆகஸ்ட் 28

மதுரையில் உயர் நீதிமன்றத்தின் நிரந்தரக் கிளையை ஏற்படுத்தியவுடன், சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ள அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் குறையக்கூடும்.

## 16. நீதித் துறை அதிகாரிகளுக்கான விருந்தினர் இல்லம்

நீதித் துறை அதிகாரிகளுக்காக ஒரு விருந்தினர் இல்லம் கட்டுவது என்பது நீதித் துறையின் நீண்ட கால கோரிக்கையாகும். ரூ.1. 67 கோடி மதிப்பீட்டுச் செலவில், சென்னை எழும்பூர் பெருநகர முதன்மை குற்றவியல் நடுவர் மாளிகை வளாகத்திற்குள், நீதித் துறை அதிகாரிகளுக்காக விருந்தினர் இல்லம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஒன்றை பரிசீலனைக்காக, உயர்நீதிமன்ற தலைமைப் பதிவாளர் அனுப்பியுள்ளார். இச்செயற்குறிப்பு கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் இதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்படும்.

## 17. விரைவு நீதிமன்றங்கள் (Fast Track Courts)

நிலுவையாக உள்ள வழக்குகளை விரைந்து தீர்க்க, மாவட்டத் தலைமையிடங்களில் 5 நீதிமன்றங்கள் என்ற வகையில், நாடு முழுவதிலும் பதினோராவது நிதிக் குழுவின் உதவியின்கீழ், விரைவு நீதிமன்றங்களை அமைக்குமாறு மத்திய அரசு, மாநில அரசுகளுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளது. அதற்கேற்ப 30 விரைவு நீதிமன்றங்களை ஏற்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேலும், 19 விரைவு நீதிமன்றங்களை ஏற்படுத்துவது குறித்து அரசு உயர் நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்து வருகிறது.

## 18. தமிழ்நாடு மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக்குழு

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்குத் தேவைப்படும் சட்ட உதவிகளை இலவசமாக அளிக்க, 1987 ஆம் ஆண்டு, சட்டப் பணிகள் ஆணைக்குழு சட்டம் (59/1994 ஆம் சட்டத்தின் படி திருத்தப்பட்டது) இயற்றப்பட்டது. மேற்சொன்ன அலுவல்களை ஆற்றுவதற்காக இச்சட்டம், மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு வட்ட சட்டப்பணிகள் குழுக்கள் மற்றும் உயர் நீதிமன்ற சட்டப்பணிகள் குழு ஆகியவற்றைச் செயற்படுத்த வகை செய்கிறது.



2001 ஆகஸ்ட் 28]

**மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் அலுவல்கள்**

மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் அலுவல்கள் பின்வருமாறு:—

(i) மத்திய ஆணைக்குழுவின் கொள்கைகள் மற்றும் உத்தரவுக்குச் செயல்வடிவம் கொடுத்தல்.

(ii) இச்சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்டுள்ள அளவுகோல்களை நிறைவு செய்பவர்களுக்குச் சட்டப்பணிகள் அளித்தல்.

(iii) மக்கள் நீதிமன்றங்களை (லோக் அதாலத்) நடத்துதல். (உயர் நீதிமன்ற வழக்குகளுக்கான மக்கள் நீதிமன்றங்கள் உட்பட).

(iv) தடுப்பு வகையான மற்றும் உத்திகளுடன் கூடிய சட்ட உதவித் திட்டங்களை மேற்கொள்ளுதல்

(v) மாநில ஆணைக்குழு, மத்திய அதிகார ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்து, விதிமுறைகள் மூலம் நிர்ணயிக்கக்கூடிய பிற அலுவல்களை ஆற்றுதல்

**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுக்கள் மற்றும் வட்ட சட்டப் பணிகள் குழுக்கள் ஆகியவற்றின் அலுவல்கள்**

ஒவ்வொரு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் அலுவல்கள் வருமாறு:—

(i) மாநிலச் சட்டப் பணிகள் ஆணைக்குழு அவ்வப்போது ஒதுக்கக்கூடிய மாவட்டத்தில் உள்ள மாநில ஆணைக்குழுவின் அத்தகைய அலுவல்களை ஆற்றுதல்

(ii) வட்டச் சட்டப் பணிகள் குழுக்கள் மற்றும் மாவட்டத்திலுள்ள ஏனைய சட்டப்பணிகள் ஆணைக் குழுக்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்

(iii) மாவட்டங்களுக்குள் மக்கள் நீதிமன்றங்களை அமைக்க ஏற்பாடு செய்தல்

(iv) விதிமுறைகள் மூலம் மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு நிர்ணயிக்கக்கூடிய பிற அலுவல்களை ஆற்றுதல்

[2001 ஆகஸ்ட் 28

**உயர் நீதிமன்ற சட்டப் பணிக் குழுவின் அலுவல்கள்**

(i) உயர் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைகளில் உள்ளவர்களுக்கு சட்டப் பணிகளை அளித்தல்

(ii) விதிமுறைகள் மூலம் மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு நிர்ணயிக்கக் கூடிய பிற அலுவல்களை ஆற்றுதல்.

மாநில மற்றும் மாவட்ட சட்டப் பணிகள், ஆணைக் குழுக்கள் மற்றும் வட்ட சட்டப்பணிகள் குழுக்கள் ஆகியவை மக்கள் மன்றங்களை ஏற்படுத்த அதிகாரம் பெற்றுள்ளன.

பின்வருவனவற்றை பொறுத்தமட்டிலான தகராறுகளில், அத்தகைய தகராறுகளை தீர்மானிக்க இரு தரப்பினரிடையே சமரசம் செய்து வைக்க அல்லது தீர்வுகாண மக்கள் நீ தி மன்றங்கள் அதிகாரம் பெற்றிருக்கின்றன.

(அ) யாதொரு நீதிமன்றத்திலும் நிலுவையாக உள்ள யாதொரு வழக்கு, அல்லது

(ஆ) எந்தப் பகுதிக்கான மக்கள் நீதிமன்றம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறதோ அந்தப் பகுதியின், யாதொரு நீதிமன்றத்தின் அதிகார வாம்பிற்குள் வந்து ஆணைக்கென நீதிமன்றத்தின் முன் கொண்டு செல்லப்படாத யாதொரு பிற பிரச்சினைகள்.

31—12—2000 ஆம் நாள் வரை நடத்தப்பட்ட மக்கள் நீதிமன்றங்களின் மொத்த எண்ணிக்கை 4871 ஆகும்.

31—12—2000 ஆம் நாள் வரை தீர்வு காணப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 102,159 ஆகும்.

இவற்றில் 91,178 வழக்குகள் விபத்து சம்பந்தப்பட்டவை ஆகும்.

ஊரகப் பகுதிகளில் கால முறைப்படி சட்ட உதவி — சட்ட அறிவு விளக்க முகாம்கள் நடத்தப்படுகின்றன.

**சிறைவாசிகள் தீர்வு மன்றங்கள்**

இந்திய தலைமை நீதிபதி அவர்களின் கருத்தை ஏற்று சிறைச்சாலைகளில் நீதிமன்றங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்ற நிர்வாகக் குழு தீர்மானித்தது. அதற்கேற்ப சிறைவாசிகள் தீர்வு மன்றங்கள் தொடங்கப்பட்டன. இவை தற்போது



2001 ஆகஸ்ட் 28]

சென்னை, மதுரை, திருச்சி, வேலூர் மத்திய சிறைகளிலும் மற்றும் வேலூர் மகளிர் தனி சிறைச்சாலையிலும் செயல்படுகின்றன. சிறைவாசிகள் தீர்வு நீதிமன்றங்கள் சிறு குற்றங்களைப் பொறுத்தமட்டில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை ஒப்புக் கொள்கிற வழக்குகளையும், விசாரணைக் கைதிகளை பொறுத்தமட்டில், காவல் நீட்டிக்கப்படவேண்டியிருக்கும் வழக்குகளையும் விசாரிக்கின்றன. சிறைவாசிகள் தீர்வு நீதிமன்றங்கள் விரைவில் இம்மாநிலத்தில் உள்ள ஏனைய மத்திய சிறைகளுக்கும் நீட்டிக்கப்படும்.

## 19. சட்டக் கல்வித் துறை

சட்டக் கல்வியின் தரத்தை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இம்மாநிலத்தில் 1953 ஆம் ஆண்டில் சட்டக் கல்வித் துறை ஏற்படுத்தப்பட்டது.

2. இந்த மாநிலத்தில், 5 சட்டக் கல்லூரிகள், கீழே அவை ஒவ்வொன்றுக்கும் எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டுகளிலிருந்து செயல்பட்டு வருகின்றன. அவையாவன:—

| | |
|---|---|
| சென்னை அரசு சட்டக் கல்லூரி | 1891 |
| மதுரை அரசு சட்டக் கல்லூரி | 1974 |
| திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரி | 1979—80 |
| கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரி | 1979—80 |
| திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரி | 1996—97 |

மேற்சொன்ன 5 அரசு சட்டக் கல்லூரிகளிலும் 3 ஆண்டு (முறையான) மற்றும் 5 ஆண்டு சட்டப்படிப்பு பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

3. சட்டக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் வகையில் இந்திய வழக்குரைஞர் குழு 1983–84 ஆம் ஆண்டில் புதிய பாடப் பிரிவை உருவாக்கக் கருதி, சட்டப்படிப்பின் கால அளவை 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக அதிகரித்து, மாணவர்கள் 12ஆம் வகுப்பு முடித்து நேரடியாக சேர்ந்து படிக்க அனுமதித்தது. இத்துறை நடத்தும் நுழைவுத் தேர்வில் மாணவர்கள் பெறும் மதிப்பெண்களைக் கவனத்திற்கொண்டே மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். விடைத் தாள்களை மதிப்பீடு செய்தல், தேர்வுப் பட்டியலை அச்சிடுதல் ஆகியவை கணினி

மயமாக்கப்பட்டு, இப்பணி அரசு தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

4. பல்வேறு அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள், வழக்கு பயிற்சிக் கான விவாதப் போட்டிகளில் கலந்து கொள்ள இயலும் வகையில் அவர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

5. மாநிலத்தின் அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சி மொழியாக ஆக்க வேண்டுமென்ற அரசின் கொள்கைக்கு ஏற்ப, தமிழ் மொழியில் சட்டக் கல்வி பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. மாணவர்கள் அவர்களின் விருப்பத்திற்கேற்ப தமிழில் அல்லது ஆங்கிலத்தில் சட்டம் படிக்கலாம். தமிழில் சட்டம் பயிலும் மாணவர்களுக்கு 1999—2000 ஆம் கல்வி ஆண்டிலிருந்து ஆண்டிற்கு ரூ.400/— பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. மாணவர்கள் பயனடைவதற்காக சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள சட்டக் கல்லூரிகளில் புத்தக வங்கித் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக சட்டக் கல்லூரிகளில் இலவச சட்ட உதவி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

6. அரசு சட்டக் கல்லூரிகளிலும் 2000—2001 ஆம் கல்வி ஆண்டிலிருந்து கணினிக் கல்வி கொண்டுவரப்பட்டுள்ளது. 2000—2001 ஆம் ஆண்டு முதல் அடுத்த 5 ஆண்டுகளுக்கு இத்திட்டத்திற்காக ரூ.155 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## 20. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் 3—10—1997 அன்று தொடங்கப்பட்டு, செயல்பட்டுவருகிறது. சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்ற 5 அரசு சட்டக் கல்லூரிகளும், சேலத்திலுள்ள தனியார் சட்டக் கல்லூரி ஒன்றும், இந்த சட்டப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இப்பல்கலைக்கழகம், பொதுவான சட்ட அறிவை அளிப்பதற்கும், சட்டக் கல்வியை மேம்படுத்தி உயர்த்துவதற்கும், ஏற்படுத்தப்பட்ட இந்தியாவின் முதல் சட்டப் பல்கலைக்கழகமாகும். சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியை பெங்களூரில் உள்ள இந்திய தேசிய சட்டப் பள்ளியின்





தரத்தின் அளவிற்கு உயர்த்துவதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இந்தச் சட்டப் பல்கலைக்கழகம், மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டும், ஒரே சீரான தன்மையை உறுதிப்படுத்தும் வகையிலும், இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள கல்லூரிகளின் முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் அனைவரின் தேர்வுகளும், ஒரே சமயத்தில் 1999, ஜூன் மாதத்தில் நடத்தப்பட்டு, தேர்வு முடிவுகள் கணினியின் மூலம் விரைவாக வெளியிடப்பட்டன.

3. சட்டப் பல்கலைக் கழகத்தில் நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்நூலகத்தில் 2180 புத்தகங்கள் உள்ளன. தேசிய மற்றும் பன்னாட்டு சட்ட இதழ்கள் 64—க்கு சந்தா தொகை செலுத்தப்பட்டுள்ளது. புத்தகங்கள் மற்றும் சட்ட இதழ்களுக்கான அடிப்படை தகவல் தொகுப்பு விவரங்களை உருவாக்குவதற்காக கணினி பயன்படுத்தப்படுகிறது. இப்பல்கலைக்கழகம் நூலகத்தையும், தகவல் ஏற்பாட்டையும் நவீனப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட 14385 புத்தகங்கள், தமிழ்நாடு ஆவண காப்பகத்திலிருந்து பெறப்பட்டன. இப்பல்கலைக்கழகம் குறித்து தேவைப்படும் அனைத்து விவரங்களுக்கும் AMLAWS.99 C.D.ROM—ல் சிறந்த முறையில் கணினி குறுந்தகடு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்திய அரசியல் சட்ட உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்தவரும் ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்கென உழைத்தவருமான டாக்டர் அம்பேத்கரின் பெயரில் இப்பல்கலைக்கழகம் அமைந்துள்ளமையால், இக்குறுந்தகடு அவரைப் பற்றிய பல விவரங்களைக் கொண்டுள்ளது.

4. சட்டக் கல்வியில் ஆராய்ச்சிப் பணிக்காக தங்களின் பெயரைப் பதிவு செய்து கொள்ளும் வகையில் இப்பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும். இப்பல்கலைக்கழகம் முதுகலை சட்டப்பிரிவு ஒன்றைத் தொடங்கக் கருதியுள்ளது. மேலும், இப்பல்கலைக்கழகம் 2001—2002 ஆம் கல்வியாண்டிலிருந்து புதுடில்லியிலுள்ள இந்திய வழக்குரைஞர் பொறுப்புக் கழகத்துடன் இணைந்து அகில இந்திய அளவில் வழக்கு பயிற்சிக்கான விவாதப் போட்டியை நடத்தவும் கருதியுள்ளது. இப்பல்கலைக்கழகம் தென் மண்டல மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டி மற்றும் பேச்சுப் போட்டிகளையும் நடத்தும். இத்தகைய போட்டிகள் மாணவர்களின் வாதத் திறமையை மேம்படுத்த உதவும்.

## 21. சட்டத் துறையில் உள்ள (சட்ட) ஆட்சிமொழி சட்ட ஆணையம்

மாநில ஆட்சி மொழி (சட்ட) ஆணையம் முதலில் 1965 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. சட்ட சொற்களுக்கான ஆட்சிச் சொல் அகராதியை இறுதியாக்கி வெளியிடுதல், மத்திய மாநில சட்டங்கள், அவசர சட்டங்கள், அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகள், அறிக்கைகள் ஆகியவற்றை தமிழில் மொழிபெயர்த்தல் ஆகியவை இவ்வாணையத்தின் பணிகளாகும். மேலும், அரசு அவ்வப்போது இவ்வாணையத்திடம் ஒப்படைக்கும் ஏனைய பணிகளையும் இவ்வாணையம் மேற்கொள்ளும். இவ்வாணையம் கடைசியாக 1989 ஆம் ஆண்டில் மாற்றியமைக்கப்பட்டது.

2. மாநில ஆட்சி மொழி ( சட்ட) ஆணையம், சட்டத் துறை அரசு செயலாளரின் முழு நிர்வாகக் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையின்கீழ் சட்டத் துறையின் அரசு கூடுதல் செயலாளர் ஒருவர் தலைமையில், சட்டத் துறையின்கீழ் 1992 ஆம் ஆண்டில் ஒரு துறையாக மாற்றப்பட்டது.

3. இந்த ஆட்சி மொழி ஆணையம், மத்திய சட்டங்களையும், மாநில சட்டங்களையும் தமிழாக்கம் செய்து வருகிறது. இதுவரையில் 104 மத்திய சட்டங்களை தமிழாக்கம் செய்துள்ளது. மேலும், இப்பிரிவு மத்திய மற்றும் மாநில அரசுகளின் துறைகளிடமிருந்து அவ்வப்போது வரப்பெறும் மத்திய மாநில சட்டங்களையும் தமிழாக்கப் பணிக்காக எடுத்துக் கொள்கிறது.

## 22. தமிழ்நாடு மாநில சட்ட ஆணையம்

சட்டத் திருத்தத்தின் முக்கியத்துவத்தையும், சட்ட விதிகளையும் பிற சட்டங்களையும் காலத்திற்கேற்ற வகையில் புதுப்பிக்க வேண்டிய சமுதாயத் தேவையையும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 246 ஆம் பிரிவின் விதிமுறைகளின் பொருட்செறிவிற்கு குறை ஏதும் ஏற்படாமல், மாநிலத்தின் பல்வேறு அங்கங்களுக்கு இடையேயான தொடர்பினையும், செயல்முறையினையும் மேம்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் உணர்ந்து, தமிழ்நாடு அரசு, மாநில சட்ட ஆணையத்தை 1994 ஆம் ஆண்டில் அமைத்தது. 1997 ஆம் ஆண்டில் நீதி அரசர் எம்.எம்.இஸ்மாயில் அவர்களின் தலைமையில் இவ்வாணையம் மாற்றியமைக்கப்பட்டது.





### சட்ட ஆணையத்தின் பணி வரம்பு

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இயற்றப்பட்ட ஒவ்வொரு சட்டத்தையும் அதற்கு பின்பு இயற்றப்பட்ட சட்டங்களையும் பரிசீலனை செய்வதும், அவை இன்றைய கால சூழ்நிலைக்கு ஏற்றவையா, இல்லையா என்பது குறித்து கருத்துத் தெரிவிப்பதும், தேவையானால் அந்தச் சட்டங்களில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் குறித்து அரசுக்கு பரிந்துரைப்பதும் சட்ட ஆணையத்தின் பணிகளாகும். சட்ட ஆணையம் மாநிலச் சட்டங்கள், உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் பல்வேறு தீர்ப்புகளுக்கு இணங்க உளளனவா என்பது குறித்து ஆராய்ந்து, அந்தச் சட்டங்களில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து அரசுக்கு ஆலோசனை நல்கும்.

2. சட்ட ஆணையத்தின் பணிக்காலத்தை, அரசு, 29.1.2001ஆம் நாளிலிருந்து ஓராண்டிற்கு நீட்டித்துள்ளது. தமிழ்நாடு 1867 மற்றும் 1891ஆம் ஆண்டுகள் பொதுப் பகுதிகள் சட்டம், தமிழ்நாடு 1998—ஆம் ஆண்டு பெண்கள் கேலி செய்யப்படுவதை தடை செய்யும் சட்டம் ஆகிய சட்டங்களை ஆணையம் ஆய்விற்கு எடுத்துக் கொண்டு, இது தொடர்பான அறிக்கைகளை 2001ஆம் ஆண்டு ஜனவரியில் அரசுக்கு அனுப்பியுள்ளது.

## 23. குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்

குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம் குற்றவியல் வழக்குகளை திறம்பட நடத்தி நிர்வகிக்கவும், மாநிலம் முழுவதிலுமுள்ள பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், குற்றவியல் நீதிமன்றங்கள் மற்றும் தலைமை நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் சட்ட அலுவலர்கள் மற்றும் குற்றவியல் வழக்குரைஞர்கள் ஆகியோரின் பணிகளைக் கண்காணித்து கட்டுப்பாட்டிற்குள் வைக்க வேண்டுமென்ற முக்கிய நோக்கத்தோடும் தொடங்கப்பட்டது.

2. சட்ட ஆணையம் செய்துள்ள பரிந்துரைகளைத் தொடர்ந்து, இந்த இயக்ககம், சென்னையில் தன்னிடமுள்ள பணியாளர்களைக் கொண்டும், வட்டார அளவிலான குற்ற வழக்குத் தொடர்வு உதவி இயக்குநர்கள் 8 பேரைக் கொண்டு 1986—ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. பின்னர், இது புதுப்பிக்கப்பட்டு, காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் பதவித் தரத்திலான குற்ற வழக்கு தொடரும் இயக்குநர் பதவி, முறையான நிருவாகம் அளிக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டது. கூடுதல் மாவட்ட

நீதிபதி—தலைமை நீதித் துறை குற்றவியல் நீதிமன்றத்துடன் இணைக்கப்பட்டுள்ள குற்றவியல் வழக்குத் தொடர்வு துணை இயக்குநர்கள், குற்றவியல் வழக்குத் தொடரும் உதவி இயக்குநர்கள், அரசு குற்றவியல் கூடுதல் வழக்குரைஞர்கள் மற்றும் நிலை1, நிலை2 அரசு குற்றவியல் உதவி வழக்குரைஞர்கள் ஆகியோரின் நிருவாகப் பணிகள் அனைத்தையும் கட்டுப்படுத்தும் அதிகாரியாக குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் உள்ளார்.

3. தலைமையிடங்களில் குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநருக்கு, குற்றவியல் வழக்குத் தொடர்வு இணை இயக்குநர் உதவியாக பணிபுரிகிறார். இவர், குற்ற வழக்குத் தொடரும் துறையின் நிருவாகத்தை மேற்பார்வையிடுகிறார். வட்டாரங்களில் மொத்தம் 11 குற்ற வழக்குத் தொடர்வு துணை இயக்குநர்களும், 14 குற்ற வழக்குத் தொடர்வு உதவி இயக்குநர்களும் இருக்கின்றனர். இவர்கள் மாவட்டப் பிரிவுகளின் நிருவாகத் தலைவர்கள் ஆவர்.

4. 2000ஆம் ஆண்டில் மொத்தம் 1,02,203 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. 2000ஆம் ஆண்டில் மொத்தம் 2,42,400 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

5. கணினிகள் வாங்கப்பட்டு இணையதள இணைப்புடன் தலைமையிடத்தில் நிறுவப்பட்டுள்ளன. C.D.Rom கணினி மென்பொருள் சுப்ரீம், கேஸ் ஃபைண்டர் மற்றும் ஏ.ஐ.ஆர் ஆகியவை வாங்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளன. நிகரி செய்திப்பொறிகள் (FAX Machines) வாங்கப்பட்டு குற்ற வழக்கு தொடரும் அனைத்து துணை இயக்குநர் அலுவலகங்களிலும் நிறுவப்பட்டுள்ளன.

## 24. தமிழ்நாட்டில் சட்ட அலுவலர்களின் அமைப்பு முறை

அரசு சம்பந்தப்பட்ட வழக்குகளை நீதிமன்றத்தில் திறம்பட வாதிடும் நோக்கத்துடன், குறிப்பிட்ட கால அடிப்படையிலும், கால ஏற்ற முறைச் சம்பள வீத அடிப்படையிலும் சட்ட அலுவலர்கள் அரசால் நியமிக்கப்படுகின்றனர். அரசால் பணியமர்த்தப்பட்டுள்ள இது போன்ற சட்ட அலுவலர்களின் பதவித்தர விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—





### சட்ட அலுவலர்கள்

மாநில அரசு தலைமை வழக்குரைஞர்
கூடுதல் அரசு தலைமை வழக்குரைஞர்

| | சென்னை உரிமையியல் | வெளியூர் உரிமையியல் |
|---|---|---|
| 1. | அரசு உரிமையியல் வழக்குரைஞர் | அரசு உரிமையியல் வழக்குரைஞர் |
| 2. | அரசு உரிமையியல் கூடுதல் வழக்குரைஞர் | அரசு உரிமையியல் கூடுதல் வழக்குரைஞர் |
| 3. | அரசு உரிமையியல் தனி வழக்குரைஞர் | அரசுப் பணிகளை ஆற்றும் அரசு உரிமையியல் வழக்குரைஞர்கள் |
| 4. | அரசு வழக்குரைஞர்கள் | |

| | குற்றவியல் | குற்றவியல் |
|---|---|---|
| 1. | அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள் | அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள் |
| 2. | அரசு குற்றவியல் கூடுதல் வழக்குரைஞர்கள் | அரசு குற்றவியல் கூடுதல் வழக்குரைஞர்கள் |
| 3. | அரசு வழக்குரைஞர்கள் | அரசு வழக்குரைஞர்கள் |
| 4. | குற்றவியல் வழக்குரைஞர்கள் | அரசு குற்றவியல் உதவி வழக்குரைஞர்கள் |
| 5. | அரசு குற்றவியல் சிறப்பு வழக்குரைஞர்கள் | |
| 6. | அரசு குற்றவியல் உதவி வழக்குரைஞர்கள் நிலை.1/நிலை.2 | |

[2001 ஆகஸ்ட் 28

நீதிமன்றத் தீர்ப்பு வழங்கும் நடைமுறைகளில் சட்ட அலுவலர்களின் பணிகள் எவ்வளவு இன்றியமையாதவை என்பதும், அவை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதும் எல்லோரும் அறிந்த உண்மையாகும்.

சட்ட அலுவலர்களில், மாவட்டங்களிலுள்ள தலைமை நீதித் துறை குற்றவியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை பெருநகர் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகியவற்றிலுள்ள அரசு கூடுதல் வழக்குரைஞர்கள் மற்றும் அரசு உதவி வழக்குரைஞர்கள் மட்டுமே நிரந்தர அடிப்படையிலான அரசுப் பணியாளர்கள் ஆவர். எஞ்சியுள்ள சட்ட அலுவலர்கள் ஒரு குறிப்பிட்ட பணிக்கால அடிப்படையில் (Tenure) நியமிக்கப்படுகின்றனர்.

புதுடில்லி, உச்ச நீதிமன்றத்தின் முன்னர் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளைப் பொறுத்தமட்டில், அரசு தரப்பில் வாதிட 2 வழக்குரைஞர்கள் இருக்கின்றனர்.

## 25. 2001-2002ஆம் ஆண்டுக்கான பகுதி-II திட்டங்களின் பட்டியல்



2001 ஆகஸ்ட் 28]

| தொடர் எண் | திட்டத்தின் பெயர் | தொடர் இனச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) | தொடரா இனச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) | மொத்தம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | கிருஷ்ணகிரியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பரமக்குடியில் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் மாவட்ட உரிமையியல் குடியிருப்புகள் ஆகியவற்றிலுள்ள நீதிமன்றக் கட்டடங்களுக்கும், குடியிருப்புகளுக்கும் துளைக் கிணறுகளுக்கும், பம்பு செட்டுகளுக்கும் வகை செய்தல் | — | 4.27 | 4.27 |
| 2. | உயர்நீதிமன்றத்தின் இணைப்புக் கட்டடத்தில் அமைக்க கருதப்பட்டுள்ள கணினி மையத்திற்கு மின் சக்தி முக்கிய இணைப்புகளும் சீர்வளி வசதிகளும் வழங்குதல் மற்றும் உயர்நீதி மன்றத்திலுள்ள ஜெராக்ஸ் இயந்திர அறையிலும் (Xerox Machine Room) தொலைபேசி இணைப்பு பலகை அமைக்கப்பட்டுள்ள அறையிலும் சீர்வளி வசதி செய்தல். | — | 5.36 | 5.36 |
| 3. | பெருந்துறை மற்றும் வேலூரில் உள்ள மாவட்ட நீதிபதிகள்/ மாவட்ட உரிமையியல் நீதிபதிகள் குடியிருப்புகள் பழுதுபார்ப்பு பணிகள். | — | 4.50 | 4.50 |
| 4. | மாவட்டங்கள் சிலவற்றில் நீதித்துறை அலுவலர்கள் குடியிருப்புகளுக்கு ஏற்கெனவேயுள்ள ஒருகட்ட மின்இணைப்பை மூன்றுகட்ட மின்இணைப்பாக மாற்றுதல். | — | 7.45 | 7.45 |
| 5. | எழும்பூர் பெருநகர தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், கோயம்புத்தூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள நீதிபதி மன்றங்கள் ஆகியவற்றில் பயன்படுத்தும் நிலையில் இல்லாத அறைகலன்களுக்கு பதிலாக புதிய அறைகலன்கள் வாங்குதல். | — | 5.00 | 5.00 |
| 6. | சென்னை உயர்நீதி மன்றம் பூங்காவை மேம்படுத்துதல் | — | 3.20 | 3.20 |
| 7. | சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நூலகம் மற்றும் கணினி கட்டடத்தில் மேம்பாடுகள் செய்தல் | — | 20.00 | 20.00 |
| 8. | சென்னை, உயர் நீதிமன்ற கூட்டரங்கு கூடத்தில் முன்னொலிபெருக்கி (Micro Phone) பொருத்துதல் | — | 0.71 | 0.71 |
| 9. | குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும் குற்றவியல் வழக்கு நடத்தும் அதிகாரிகளின் பயனுக்காக அறைகலன்கள் வழங்குதல் | — | 4.00 | 4.00 |

[2001 ஆகஸ்ட் 28

## 26. மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படும் திட்டங்கள்

நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கும், உயர் நீதிமன்றங்கள் அதன்கீழ் வரும் சார்புநிலை நீதிமன்றங்கள் ஆகியவற்றின் நீதிபதிகள்/ நீதித் துறை அதிகாரிகள் ஆகியோருக்கு குடியிருப்புகள் கட்டுவதற்குமான மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படும் திட்டம், 1993ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. திட்ட ஆணையத்தால் ஏற்பளிக்கப்பட்ட இத்திட்டம், இது தொடர்பாக இந்த ஆணையம் ஏற்பளித்த அளவுகோலின் அடிப்படையில், மாநிலங்களுக்கு மத்திய அரசு தன்னுடைய பங்குத் தொகையை ஒதுக்கீடு செய்கிறது. மத்திய அரசு வழங்கும் பங்குத் தொகைக்கு சமமாக, மாநில அரசுகளும் தங்களுடைய பங்குத் தொகைகளை வழங்குமாறு கோரப்படுகின்றன. 31—3—2001ஆம் நாள் நிலவரப்படி இத்திட்டத்தின்கீழ் ரூ.136.17 கோடி செலவிலான திட்டங்களுக்கு நிருவாக ஒப்புதல்கள் அளிக்கப்பட்டுள்ளன. இத்தொகையில், மாநில அரசு ரூ.61.21 கோடி செலவு செய்துள்ளது. மத்திய அரசு நிதி உதவியாக ரூ.27.29 கோடி வழங்கியுள்ளது.

நீதிமன்றங்களில், தகவல் தொழில் நுட்ப வசதியை மேம்படுத்தும் நோக்குடன் சட்ட உதவி மையங்கள்/ விசாரணை மையங்கள் அமைப்பது உட்பட, கணினி மயமாக்குவதற்கென மத்திய அரசு 2000—2001ஆம் ஆண்டில் ரூ.14.33 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கு தகுதிவாய்ந்த செயற்குறிப்புகளைத் தயாரித்து, அரசின் ஒப்புதலுக்கு அனுப்புமாறு தேசிய தகவல் மையம் (NIC) கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## 27. புதிய முயற்சிகள்

சுதந்திரமான, தன்னாட்சி உரிமை பெற்ற நீதித் துறை, மக்களாட்சி அமைப்பு முறைக்கு ஒரு முக்கிய ஆதாரமாகும். நிதித் தட்டுப்பாடு இருந்தபோதிலும், நீதித் துறையில் நிர்வாகம் மற்றும் ஏனைய தேவைகளை நிறைவு செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. நீதித் துறை திறம்பட செயல்பட தடை ஏதும் இல்லாமல் இருப்பதை உறுதிசெய்யவும், அடிப்படை வசதிகளை வலுப்படுத்தவும், குறைபாடுகளை நீக்கவும், தேவையான நிதி உதவி வழங்கவும், தமிழ்நாடு அரசு மிகுந்த அக்கறையுடன் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க உள்ளது.



2001 ஆகஸ்ட் 28]

### இணைப்பு—1 (அ)

சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள், நடுவர் மன்றங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்

| தொடர் எண் | நீதிமன்றங்கள்/நடுவர் மன்றங்களின் பெயர் | மாவட்ட நீதிபதி பதவித் தரம் | சார்நிலை நீதிபதி பதவித் தரம் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் பதவித்தரம் |
|---|---|---|---|---|
| 1. | மாநகர் உரிமையியல் நீதிமன்றம் | 13 | 18 | 1 |
| 2. | சிறு வழக்குகள் நீதிமன்றம் | 1 | 8 | 8 |
| 3 | பெருநகர் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | 3 | 6 | 17 |
| 4 | தொழிலாளர் நீதிமன்றங்கள் | 3 | — | — |
| 5 | தொழில் நடுவர் மன்றம் | 1 | 1 | 1 |
| 6 | இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் கீழ் தனி நீதிமன்றம் | 1 | — | 1 |
| 7 | தனியார் கல்லூரி மேல்முறையீட்டு நடுவர் மன்றம் | 1 | — | — |
| 8 | விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றம் | 1 | 1 | — |
| 9 | அரசு போக்குவரத்து மேல்முறையீட்டு நடுவர் மன்றம் | 1 | — | — |
| 10 | பேராட்சியர் —பொறுப்பு சொத்தாட்சியர் | 1 | — | 1 |
| 11 | என்டிபிஎஸ் சட்டத்தின் கீழ் கூடுதல் தனி நீதிமன்றம் | 1 | — | — |
| 12. | தமிழ்நாடு 1997—ஆம் ஆண்டு வைப்பீட்டுதாரர்களின் நலன் பாதுகாப்பு (நிதி நிறுவனங்கள்) சட்டத்தின் கீழ் தனி நீதிமன்றம் | 1 | — | — |
| 13. | குண்டுவெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கான அமர்வு நீதிமன்றம் | 1 | — | — |
| 14 | குடும்பநல நீதிமன்றங்கள் | 3 | — | — |
| | மொத்தம் | 32 | 33 | 27 |

## இணைப்பு – I ஆ

### தமிழ்நாட்டின் மாவட்டங்களில் இயங்கிவரும் நீதிமன்றங்கள் மற்றும் நடுவர் மன்றங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்

| மாவட்டங்கள் | மாவட்ட நீதிமன்றங்கள் | குடியுரிமை பாதுகாப்புச் சட்ட தனி நீதிமன்றங்கள் | கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதிவர் நீதிமன்றங்கள் | தொழிலாளர் நீதிமன்றங்கள் | இன்றியமையாப் பொருட்கள் சட்ட வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் | மகளிர் வன்கொடுமை வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் | குடும்ப நல நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிவர் நீதிமன்றங்கள் | குற்றவியல் நீதிவர் நீதிமன்றங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| செங்கல்பட்டு | 1 | - | 1 | - | - | - | - | 7 | 11 | 4 | 13 |
| கோயம்புத்தூர் | 2 | 1**** | 1 | 1 | 1 | 1 | 1 | 9** | 7 | 4 | 14 |
| கடலூர் | 1 | - | 1 | 1 | - | - | - | 6 | 6 | 4 | 8 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| தருமபுரி | 2 | - | 2 | - | - | - | - | 4 | 3 | 6 | 5 |
| திண்டுக்கல் | 1 | - | 1 | - | - | - | - | 3 | 5 | 2 | 5 |
| ஈரோடு | 2 | - | 1 | - | - | - | - | 8 | 10 | 2 | 9 |
| கன்னியாகுமரி | 1 | - | 1 | - | - | - | - | 5 | 9 | 1 | 7 |
| கரூர் | 1 | - | 1 | - | - | - | - | 2 | 3 | - | 4 |
| மதுரை | 2 | 2*** | 1 | 1 | 1 | 1 | 1 | 9** | 7 | 3 | 12 |
| நாகப்பட்டினம் | 1 | - | 1 | - | - | - | - | 5 | 8 | - | 9 |
| நீலகிரி | 1 | - | - | - | - | - | - | 1 | 1 | 3 | 1 |
| பெரம்பலூர் | 1 | - | 1 | - | - | - | - | 1 | 4 | - | 3 |
| புதுக்கோட்டை | 1 | - | 1 | - | 1 | - | - | 1 | 3 | 2 | 3 |
| இராமநாதபுரம் | 1 | - | 1 | - | - | - | - | 2 | 3 | 4 | 3 |
| சேலம் | 3 | - | 1 | 1 | 1 | - | 1 | 7* | 10 | 2 | 16 |
| சிவகங்கை | 1 | - | 1 | - | - | - | - | 2 | 4 | 4 | 3 |
| தஞ்சாவூர் | 1 | 1 | 1 | - | 1 | - | - | 6 | 7 | 2 | 6 |
| தூத்துக்குடி | 1 | - | 1 | - | - | - | - | 2 | 6 | 2 | 6 |
| திருச்சிராப்பள்ளி | 1 | 1 | 1 | 1 | - | - | - | 5* | 7 | 1 | 9 |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| திருநெல்வேலி | 2 | 1 | 1 | 1 | - | - | - | 8* | 11 | 4 | 9 |
| திருவண்ணாமலை | 1 | - | 1 | - | - | - | - | 4 | 7 | 3 | 5 |
| வேலூர் | 1 | - | 1 | 1 | - | - | - | 4 | 8 | 4 | 14 |
| விழுப்புரம் | 1 | - | 1 | - | - | - | - | 6 | 15 | 2 | 9 |
| விருதுநகர் | 1 | - | 1 | - | - | - | - | 4 | 3 | 3 | 6 |
| மொத்தம் | 31 | 6 | 24 | 7 | 5 | 2 | 3 | 111 | 158 | 62 | 179 |

* மாநகராட்சி வரி விதிப்பு மேல் முறையீட்டு நடுவர் மன்ற தலைவர் பதவி ஒன்று உட்பட

** மாநகராட்சி வரி வதிப்பு மேல்முறையீட்டு நடுவர் மன்றத் தலைவர் பதவி ஒன்று விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் நீதித் துறை உறுப்பினர் பதவி ஒன்று ஆகியவை உட்பட

*** இனக் கலவரங்கள் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்குரிய அமர்வு நீதிமன்றம் ஒன்று உட்பட

**** குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரணை செய்வதற்குரிய அமர்வு நீதிமன்றம்



## இணைப்பு – II

"மானியக் கோரிக்கை எண் 13 — 2014 நீதி நிருவாகம்" என்பதன்கீழ், 1999—2000 ஆம் ஆண்டில் ஏற்பட்ட செலவு மற்றும் கிடைத்த வருவாய், 2000—2001 ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகள், 2001—2002 ஆம் ஆண்டிற்குரிய வரவு—செலவுத் திட்ட மதிப்பீடுகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

### செலவு

| ஆண்டு | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1999-2000 | 13,876.39 |
| 2000-2001 | 14,664.29 |
| 2001-2002 (வரவு—செலவுத் திட்ட மதிப்பீடுகள்) | 15,451.13 |

### வரவுகள்

*0070 ஏனைய நிருவாகப் பணி — 01*

### நீதி நிருவாகம்

| ஆண்டு | தொகை (ரூபாய் இலட்சத்தில்) | 0030 முத்திரைத் தாள் நீதித் துறை |
|---|---|---|
| 1999-2000 | 2,160.26 | 4,168.47 |
| 2000-2001 | 2,661.97 | 5,137.17 |
| 2001-2002 (வரவு—செலவுத் திட்ட மதிப்பீடுகள்) | 2,542.52 | 5,395.46 |

# இணைப்பு II

*(475 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## தமிழ்நாட்டில் சிறைகள் நிருவாகம்

## கொள்கை விளக்கக் குறிப்பு

## கோரிக்கை எண் 14 — சிறைகள்

## 2001-2002

### 1. முன்னுரை

*குற்றவியல் நீதி நிருவாக முறையில் சிறை நிருவாகம் மிக முக்கிய பங்கினை வகிக்கிறது. சிறைவாசிகளை நடத்தும் முறையில் அக்கறையும் மனிதாபிமான அணுகுமுறையும் இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை அரசு நன்கு அறிந்துள்ளது. தற்போதைய சிறைவாசிகளின் நலன் மற்றும் சிறைவாசிகளின் மறுவாழ்வுத் திட்டம் ஆகியவற்றின் தேவைக்கேற்ப சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்ந்தாற்போல் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. தனி மனிதனின் தேவைகள், சமூகக் கட்டுப்பாடுகள், குடும்பப் பொறுப்புகள் ஆகியவற்றை நிறைவேற்ற சிறைவாசிகளுக்கு உதவி செய்யும்பொருட்டு வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பல்வேறு வாழ்க்கைத் தொழில் கல்வி வகுப்புகளும் யோகாசனம் மற்றும் தியான வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.*

*2. சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிகள் பாதுகாப்புத் தேவைகள் சிறைவாசிகளின் வாழ்க்கை நிலைமைகள் ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் கணிசமான அளவிற்கு அரசு முதலீடு செய்துள்ளது.*

### II நிறுவன அமைப்பு முறை

*3. சிறைத் துறையின் அமைப்பு முறை பற்றிய விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. சிறை நிருவாகத்தின்கீழ் மொத்தம் 131 சிறைகள் உள்ளன. இவற்றில், 9 மத்திய சிறைகள், 111 கிளைச் சிறைகள், 6 தனிக் கிளைச் சிறைகள், மகளிர் தனிச் சிறைகள் 2, திறந்தவெளிச் சிறை 1, சேலம்*

[2001 ஆகஸ்ட் 28

மத்திய சிறையுடன் இணைந்த பண்ணைச் சிறை I, புதுக்கோட்டையில் உள்ள இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப்பள்ளி ஒன்று ஆகியவை அடங்கும். இவை சிறைத் துறைத் தலைவரால் நிருவகிக்கப்படுகின்றன. இவருக்கு உதவியாக, தலைமை அலுவலகத்தில் சிறைத் துறைத் துணைத் தலைவர் (தலைமையிடம்) ஒருவரும், சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நான்கு இடங்களில் உள்ள நான்கு சரக சிறைத் துறைத் துணைத் தலைவர்களும் பணியாற்றுகின்றனர். மத்திய சிறைகள், சிறைக் கண்காணிப்பாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றன. சிறைத் துறையில் உள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை 4396 ஆகும். அனைத்து சிறைகளிலும் அடைக்கத்தக்க அனுமதிக்கப்பட்ட சிறைவாசிகளின் எண்ணிக்கை 19,226 ஆகும்.

**மத்திய சிறை, புழல்**

4. புழலிலுள்ள மத்திய சிறை, முதற்கட்டமாக 200 சிறைவாசிகளுடன் செயல்பட்டு வருகிறது. பாதுகாப்பு மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்குரிய சில கூடுதல் பணிகள் முடிக்கப்பட்டவுடன் இது முழு வசதிகளுடன் கூடிய சிறையாக விரைவில் செயல்படும்.

**மகளிருக்கான தனிச் சிறை**

5. முறையே தென் மாவட்டங்கள் மற்றும் வட மாவட்டங்களைச் சேர்ந்த பெண் சிறைவாசிகளை மட்டும் அடைத்து வைப்பதற்காக, திருச்சிராப்பள்ளியிலும், வேலூரிலும் மகளிருக்கான இரு தனிச்சிறைகள் அமைந்துள்ளன. இவ்விரு சிறைகளும் முற்றிலும் மகளிராலேயே நிருவகிக்கப்படுகின்றன.

**தனிக் கிளைச் சிறை, பூவிருந்தவல்லி**

6. கோயம்புத்தூர் தொடர் குண்டுவெடிப்பு வழக்கு தவிர ஏனைய பல்வேறு குண்டு வெடிப்பு வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை விசாரணை செய்வதற்காக, சிறப்பு நீதிமன்றம் ஒன்று, பூவிருந்தவல்லி தனிக் கிளைச் சிறை வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், இந்தச் சிறையில் அடைக்கப்படுகின்றனர்.

**திறந்த வெளிச் சிறை**

7. 100 சிறைவாசிகளை அடைத்து வைக்கும் இடவசதியுள்ள திறந்த வெளிச் சிறை ஒன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள சிங்காநல்லூரில் செயல்பட்டு வருகிறது. இச்சிறையில், வேளாண்மை அதிகாரி ஒருவரின்



2001 ஆகஸ்ட் 28]

உதவியுடன் நவீன வேளாண்மை முறைகளில் சிறைவாசிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை**

8. இப்பள்ளியில் 16—21 வயதுத் தொகுதியைச் சேர்ந்த வளரிளம்பருவத்திலுள்ள இளங் குற்றவாளிகள் அடைத்து வைக்கப்படுகின்றனர். இங்குள்ளவர்கள், விடுதலை பெற்றுச் சென்ற பின்னர், அவர்களுக்கு உதவியாக இருக்கும் வகையில் பல தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**நன்னடத்தைப் பிரிவு**

9. நன்னடத்தைப் பிரிவு, தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் தலைமையில், நன்னடத்தை அலுவலர்களையும், வட்டார நன்னடத்தை அலுவலர்களையும் கொண்டுள்ளது. நன்னடத்தை அலுவலர்கள், குற்றவாளிகளின் நடத்தை, அவர்களின் வாழ்க்கை நிலைமைகள் ஆகியவை தொடர்பாக விசாரிக்கின்றனர். விடுவிக்கப்பட்ட சிறைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிக்க, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நிதியுதவி பெறுவதற்கு நன்னடத்தை அலுவலர்கள் ஏற்பாடு செய்கின்றனர்.

நன்னடத்தை அலுவலர்களால் 2000 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| 1. | நன்னடத்தை அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை | முதற்கட்டம்<br>1,679 | பல்வகை<br>9,018 |
| 2. | பார்வையிடப்பட்டவர்களின் எண்ணிக்கை | நன்னடத்தையாளர்கள்<br>35,584 | மற்றவர்கள்<br>6,651 |
| 3. | சமர்ப்பிக்கப்பட்ட விடுதலைக்குப் பிந்தைய பராமரிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை | 2,696 | 304 |
| 4. | நீதிமன்றங்களில் ஆஜரானவர்களின் எண்ணிக்கை | -- | 8,529 |

மேலும், 2000ஆம் ஆண்டில் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தனியார் நிதி நிறுவனங்கள் மூலமாக ரூ.2,15,515/— வரையில் நிதியுதவிக்கு ஏற்பாடு செய்ததன் வாயிலாக மொத்தம் 59 சிறைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டது.

## நன்னடத்தை அலுவலர் பதவி நியமனத்திற்கு விகிதாச்சாரம் நிர்ணயித்தல்

10. நன்னடத்தைப் பிரிவினை வலுப்படுத்தும் வகையில், நன்னடத்தை அலுவலர் பதவிக்கு நேரடி நியமனம் மற்றும் பணி மாற்றம் மூலம் நியமனம் ஆகியவற்றிக்கு 1 : 2 என்ற விகிதாச்சார முறையை நிர்ணயம் செய்து, பணி விதிகளைத் திருத்தி அரசு ஆணையிட்டுள்ளது. இது, இப்பிரிவில் தற்போதுள்ள காலியிடங்களை திறமையானவர்களைக் கொண்டு நிரப்புவதற்கு வழிவகுக்கும்.

## III. சிறை நிருவாகத்தை நிலை உயர்த்துதல், மத்திய சிறைகளில் அதிக பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு வகைசெய்தல் மற்றும் புதிய திட்டங்கள்

11. சிறைச்சாலைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேம்படுத்துவதற்காக மத்தியஅரசின் நிதியுதவி மற்றும் மாநில அரசின் இணை மானியம் ஆகியவற்றைக் கொண்டு சிறைகளை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. உயர் அலை தகவல் தொடர்புச் சாதனங்கள், சிறைவாசிகளைக் கண்காணிக்க வரையறுக்கப்பட்ட பகுதியில் மட்டும் பயன்படுத்தத்தக்க தொலைக்காட்சிப் பெட்டிகள் (CCTV), மின்கம்பி வேலி அமைத்தல், மின்விளக்கு வசதிகள் வெடிகுண்டு கண்டுபிடிப்புச் சாதனங்கள், வாக்கி—டாக்கிகள் (walkie-Talkies), நவீன ஆயுதங்கள் ஆகியவற்றை வழங்குதல், பதிவு செய்யும் வசதிகள் செய்துகொடுத்தல் முதலியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள மூன்று மத்திய சிறைகளில் கூடுதல் பாதுகாப்பு வேலிகள் கட்டப்பட்டுள்ளன. சிறைகளின் பாதுகாப்புப் பணிகளைக் கவனிப்பதற்காக சிறைப் பணியாளர்களுக்கு ரூ.38.85 இலட்சம் மதிப்புள்ள நவீன ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன. சிறைகளைப் பழுதுபார்த்தல், புதுப்பித்தல், சிறைவாசிகளுக்கு மருத்துவ வசதிகள், சுகாதார வசதிகள் செய்து கொடுத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப் படுவதற்காக பத்தாவது நிதி ஆணையம் ஒதுக்கீடு செய்த ரூ.746.46 இலட்சம் நிதி முழுமையாகச் செலவிடப்பட்டுவிட்டது.





சிறைகளில் தண்ணீர் வழங்குதல், சுகாதார வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காகவும் ஒவ்வொரு மத்திய சிறையிலும் கணினி பயிற்சி மையம் ஏற்படுத்துவதற்காகவும், ரூ.800 இலட்சம் அளவிற்கான திட்டப் பணிகளை 2000—2004ஆம் ஆண்டுகளில் செயற்படுத்த பதினோராவது நிதிஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

## IV. மனித வள மேம்பாடு

### சிறைக் காவலர்கள் பயிற்சி மையம், வேலூர்

12. இந்தப் பயிற்சி மையத்தில் இரண்டாம்நிலை சிறைக் காவலர்களுக்கு ஆறு மாத கால அளவிற்கு உடற்பயிற்சி, ஒழுங்குமுறை, நிருவாகம் மற்றும் சீர்திருத்த முறைகள் குறித்த பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சிறைவாசிகளின் மனித உரிமைகள் குறித்த பயிற்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நவீன ஆயுதங்களை கையாளும் முறை குறித்தும் கற்றுத் தரப்படுகிறது. இவற்றைத் தவிர தலைமை சிறைக் காவலர்கள் மற்றும் முதல்நிலை சிறைக்காவலர்களுக்கு புத்தாக்கம் நினைவுகூர் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### கோவை மற்றும் திருச்சியில் தற்காலிக சிறைக்காவலர் பயிற்சி நிலையங்கள் தொடங்குதல்

13. புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள பயிற்சி பெறாத 400 சிறைக் காவலர்களுக்கும், தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வாணையம் மூலம் விரைவில் நியமனம் செய்யப்பட உள்ள 396 சிறைக் காவலர்களுக்கும் ஆறுமாத கால அடிப்படைப் பயிற்சி அளிக்கும் பொருட்டு கோவை மற்றும் திருச்சியில் தற்காலிக சிறைக்காவலர் பயிற்சி மையங்கள் தொடங்கும் செயற்குறிப்பு ஒன்று அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

### குற்றவாளிகள் சீர்திருத்த மண்டல பயிற்சி நிலையம், வேலூர்

14. இந்த நிறுவனம் 1979ஆம் ஆண்டிலிருந்து ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், கேரளம் மற்றும் தமிழ்நாடு ஆகிய நான்கு தென் மாநிலங்களைச் சேர்ந்த சிறை அதிகாரிகளுக்கு குற்றங்களைத் தடுத்தல், குற்றவாளிகளை நடத்துதல் ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்கிறது. இந்தப் பயிற்சியின் பாடத்திட்டத்தில் மனித உரிமைகள் மற்றும் சீர்திருத்த முறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனத்தின் செலவினத்தை நான்கு தென் மாநிலங்களும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.

[2001 ஆகஸ்ட் 28

**செயல் ஊக்கமளித்தல்—பதக்கங்கள்**

15. தமிழ்நாடு முதலமைச்சரின் சிறைப் பணிப் பதக்கம் ஒவ்வோராண்டும் செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் சிறைத் துறையைச் சேர்ந்த 10 சிறைப் பணியாளர்களுக்கு அவர்களின் மெச்சத்தகுந்த பணிக்காக வழங்கப்படுகிறது. இந்தப் பதக்கத்துடன் வழங்கப்படும் ஒரு மொத்த மானியம் பற்றி கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| (1) முதல் மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் மற்றும் அவற்றிற்கு சமமான பதவிநிலையில் உள்ளவர்கள் (மொத்தம் 5 பதக்கங்கள்) | — தலா ரூ. 2,000 |
| (2) உதவி சிறை அலுவலர்/துணை சிறை அலுவலர் மற்றும் அவற்றிற்கு சமமான பதவி நிலையில் உள்ளவர்கள் (மொத்தம் 3 பதக்கங்கள்) | — தலா ரூ. 3,000 |
| (3) தமிழ்நாடு சிறைப் பணியில் சிறைக் கண்காணிப்பாளர்வரையிலான பதவி நிலையில் உள்ள அதிகாரிகள் (1 பதக்கம்) | — ரூ. 5,000 |
| (4) வீர தீர செயல்களுக்காக (எந்த பதவி நிலையில் இருந்தாலும்) (1 பதக்கம்) | — மாதாந்திர பணப்படி ரூ. 100 |

தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் ஒவ்வோராண்டும் பொங்கல் திருநாளன்று தேர்ந்தெடுக்கப்பட்ட 120 சிறைக் காவலர்களுக்கு அவர்களின் கடமை உணர்வு மற்றும் தியாக உணர்வுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படுகிறது. இப்பதக்கம் பெற்ற முதல்நிலை சிறைக் காவலர்களுக்கு மாதமொன்றிற்கு ரூ.50/— என்ற வீதத்திலும், இரண்டாம்நிலை சிறைக் காவலர்களுக்கு மாதமொன்றிற்கு ரூ.40/— என்ற வீதத்திலும் படி வழங்கப்படுகிறது.

மைய அரசு, சீர்திருத்தப் பணிகளில் உள்ள பணியாளர்களுக்கு, அவர்கள் ஆற்றிய சிறப்பு மிக்க சேவையை அறிந்து பாராட்டும் வகையில் கீழ்க்கண்ட பதக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.



2001 ஆகஸ்ட் 28]

**நற்பணிப் பதக்கங்கள்**

(1) மெச்சத்தகுந்த சேவைக்கான குடியரசுத் தலைவரின் சீர்திருத்தப் பணிப் பதக்கம்

(2) பாராட்டத்தகுந்த சேவைக்கான சீர்திருத்தப் பணிப் பதக்கம்

**வீரதீரப் பதக்கங்கள்—நன்னடத்தைப் பிரிவு**

(1) வீரதீரச் செயல்களுக்கான குடியரசுத் தலைவரின் சீர்திருத்தப் பணிப் பதக்கம்

(2) வீரதீரச் செயல்களுக்கான சீர்திருத்தப் பணிப் பதக்கம்

இந்தப் பதக்கங்கள் ஆண்டொன்றுக்கு இருமுறை, அதாவது, குடியரசு தினம் மற்றும் சுதந்திர தின நிகழ்ச்சிகளின்போது வழங்கப்படுகிறது. வீரதீரச் செயல்களுக்கான குடியரசுத் தலைவரின் சீர்திருத்தப் பதக்கம் பெறுபவர்களுக்கு மாதாந்திரப்படி ரூ.100/—ம், வீரதீரச் செயல்களுக்கான சீர்திருத்தப் பணிப்பதக்கம் பெறுவோருக்கு மாதாந்திரப்படி ரூ.60/—ம் அனைத்து நிலை பணியாளர்களுக்கும் வழங்கப்படுகிறது.

**கருணைத் தொகை வழங்கல்**

16. பணியில் இருக்கும்பொழுது இறந்துவிடும் பணியாளர்களின் குடும்பங்களுக்கும், நிரந்தரமாக ஏலாமை உற்றவர்கள் மற்றும் செயல் திறனற்ற சிறைத் துறை பணியாளர்கள் ஆகியோருக்கும் கருணைத் தொகை வழங்கப்படுகிறது. சிறைப் பணியாளர்கள் பணியில் இருக்கும்போது வீரதீரச் செயல்களில் ஈடுபட்டு இறக்க நேரிட்டால் அவர்களின் சட்டப்படிக்கான வாரிசுதாரர்களுக்கு பணியாளர் இறுதியாக பெற்ற ஊதியம், அவர் பணி மூப்பில் ஓய்வு பெறும் நாள் வரை குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. அதற்குப் பின்னர், தகுதியான குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. சென்னை, மத்தியச் சிறை இரண்டாம்நிலை சிறைக் காவலர் திரு.தேவராத்தினத்திற்கு 2000ஆம் ஆண்டில் கருணைத் தொகையாக ரூ.50,000/— அரசால் வழங்கப்பட்டது.

17.புழல், மத்திய சிறையில் பணியாற்றும் சிறைப் பணியாளர்களுக்காக 100 குடியிருப்புகள் கட்ட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மத்தியச் சிறைகளில் இரவு நேர பணியில் இருக்கும் காவலர்களுக்கு இரவு நேர உணவு மற்றும் காலை தேநீர் வழங்கப்படுகிறது.

**பெண் களப் பணியாளர்களின் சீருடை மாற்றம்**

18. இத்துறையின் பெண் களப்பணியாளர்களுக்கு வழங்கப்படும் சீருடைக்கும் ஆண் களப்பணியாளர்களின் சீருடைக்கும் வேறுபாடுகள் உள்ளன. இந்த வேறுபாட்டினைக் களையவும், கடமையின்போது நேர்த்தியான தோற்றம் மற்றும் பணி ஆகியவற்றைக் கருத்திற்கொண்டும், அதே சமயம் அவர்களது பணியின் தரத்தை மேம்படுத்தவும், பெண் களப்பணியாளர்களுக்கும் ஆண் களப்பணியாளர்களுக்கு நிகரான சீருடை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தமிழ்நாடு சிறை நடைமுறை நூலில் உள்ள தொடர்புடைய விதிகளில் காலப்போக்கில் திருத்தம் செய்யப்படும்.

**தமிழ்நாடு சிறை நடைமுறை நூலில் திருத்தம் செய்தல்**

19. தமிழ்நாடு சிறை நடைமுறை நூல், கடைசியாக 1983ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அப்போதிருந்து சீர்திருத்தப் பணிகளுக்கான நிருவாகத்தில் பல்வேறு மாற்றங்களும் வளர்ச்சிகளும் ஏற்பட்டுள்ளன. எனவே மாறிவருகின்ற தேவைகளுக்கேற்ப சிறை நடைமுறை நூலில் திருத்தம் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**V - சிறைவாசிகளின் நலத் திட்டங்கள்**

20. நல்ல சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்ட சிறந்த உணவு, நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளின்படி சிறைவாசிகளுக்கு அளிக்கப்படுகிறது. தகுதியான நேர்வில் மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில் சிறைவாசிகளுக்கு பால், ரொட்டி, முட்டை ஆகியவை வழங்கப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட அளவின்படி உடைகளும் படுக்கை வசதியும் அளிக்கப்படுகிறது. சிறைவாசிகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகள் செய்து தரப்படுகின்றன. சுகாதார முகாம்கள் முறையாக நடத்தப்படுகின்றன. பற்களுக்கான சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. தொழுநோயால் பாதிக்கப்பட்ட சிறைவாசிகள் தனிப்பட்ட சிகிச்சை அளிப்பதன் மூலம் கவனித்துக் கொள்ளப்படுகின்றனர். மனவளர்ச்சி குன்றிய சிறைவாசிகளுக்கு தேவையான சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிறைவாசிகளிடையே காசநோயை ஒழிப்பதற்காக "DOTS" முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து மத்திய சிறைகளுக்கும் நோயாளர் அவசர ஊர்தி வழங்கப்பட்டுள்ளது. மேலும், எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய எக்ஸ்—கதிர் படமெடுக்கும் சாதனங்கள் மற்றும் இதயத் துடிப்பை அறிய உதவும் சாதனங்களுடன் கூடிய மருத்துவ ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. துப்புரவு வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.



**சிறைவாசிகளின் உடைகள் மற்றும் படுக்கை வசதியை மாற்றியமைத்தல்**

21. சிறைவாசிகள் மனிதநேய அணுகுமுறையுடன் நடத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில், இன்றைய போக்கிற்கு ஏற்பவும், சிறைவாசிகளின் வாழ்க்கை முறையை மேம்படுத்தவும் ரூ.17.20 இலட்சம் செலவில் அவர்களுக்குத் தற்போது வழங்கப்படுகின்ற பருத்தியினாலான சட்டை மற்றும் அரைக்கால் சட்டைக்குப் பதிலாக டெரிகாட்டன் சட்டை, அரைக்கால் சட்டை வழங்கவும் அவர்களுக்கு வழங்கப்படும் படுக்கை விரிப்பின் அளவினை அதிகரிக்கவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

22. சிறைவாசிகளுக்கு நேர்காணல் வசதிகள் உள்ளன. செய்தித்தாள்களும் குறித்த கால வெளியீடுகளும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. கல்வி மற்றும் இலக்கியத் தரம் வாய்ந்த நூல்கள் சிறைவாசிகளின் பயனுக்காக சிறை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

23. சிறைவாசிகளுக்குக் கல்வி வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. கல்வி மற்றும் பயிற்சிக்கான பொருட்கள் சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகின்றன. தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. சிறைவாசிகளுக்கு முதியோர் கல்வி கற்பிப்பதற்காக படிப்பறிவு மற்றும் எழுத்தறிவு கற்பிக்கும் அமைப்புகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. சில சிறைவாசிகள் பல்வேறு பல்கலைக்கழகங்கள் நடத்தும் முதுகலை பட்டப் படிப்பு மற்றும் தொழில் சார்ந்த படிப்புகளை அஞ்சல் வழிக் கல்வி மூலம் கற்று வருகின்றனர். இந்தக் கல்விக்கான செலவினை அரசே ஏற்றுக் கொள்கிறது. இந்திரா காந்தி திறந்தவெளி பல்கலைக்கழகம், கீழ்க்கண்ட பாட வகுப்புகளைத் தொடங்கியுள்ளது:—

1. உணவு மற்றும் ஊட்டச் சத்து சான்றிதழ் படிப்பு

2. இளங்கலை ஆயத்தப் பயிற்சி

3. கணினி பயன்பாட்டுப் பயிற்சியில் சான்றிதழ் படிப்பு

4. கணினி பயன்பாடு குறித்த முதுகலை படிப்பு

நடப்பாண்டில், மொத்தம் 141 சிறைவாசிகள். மேற்காணும் பல்கலைக்கழகத்தில் பல்வேறு படிப்புகள் பயில அனுமதிக்கப் பட்டுள்ளனர். அதற்குரிய செலவுத் தொகையான ரூ.1.78 இலட்சத்தை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

24. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், மத்திய சிறையிலுள்ள சிறைவாசிகளுக்கென்றே பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பிற்கான கல்வியை அளித்து வருகிறது. நாட்டில் முதல் முறையாகத் தொடங்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ் பாடவகுப்புகள், திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தின் பாடத் திட்டங்களைப் பின்பற்றும். இத்திட்டத்தின் கீழ் பல்வேறு சிறைகளிலிருந்தும் 265 சிறைவாசிகள் பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பில் சேர்ந்துள்ளனர்.

இப்பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் சேர்ந்துள்ள சிறைவாசிகளின் கல்விக்காக அரசு ரூ. 5.95 இலட்சம் செலவு செய்துள்ளது.

**சிறைச்சாலைத் தொழில்கள்**

25. சிறைகளில் சிறைவாசிகளுக்கு வேலை கலாச்சாரம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதற்காக, பல்வேறு வாழ்க்கைத் தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன. கருமார் தொழில், செங்கல் தயாரிப்புத் தொழில், குழாய் இணைப்புப் பணி, மின் கம்பித் தொழில், நெசவுத் தொழில், புத்தகம் கட்டுதல் தையல் வேலை, சாயம் தோய்த்தல், கூர்நாடா தயாரித்தல், மெழுகு, ஷூக்கள், பினைல், நாடாக்கள், சோப்பு, கம்பளம், கோப்பு அட்டைகள் ஆகியவற்றைத் தயாரித்தல் போன்ற தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகின்றது. எளிய தொழில்களான குழாய்ப் பணி, எளிய மின் கம்பித் தொழில், செங்கல் தயாரித்தல், வர்ணம் பூசுதல் ஆகியவற்றில் சிறைவாசிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சி முடிவடைவதன் பேரில் மாநில வாழ்க்கைத் தொழில் கல்வி மற்றும் பயிற்சிக் குழுவினால் பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இவற்றுடன் அரசு சாரா அமைப்புகளின் உதவியுடன் ஸ்கிரீன் பிரின்டிங், எளிய இரசாயனப் பொருட்கள் தயாரித்தல், உணவுப் பொருட்களைப் பதப்படுத்துதல், பிளாஸ்டிக் பூக்கள் தயாரித்தல் போன்ற தொழில்களிலும் பயிற்சியளிக்கப்படுகிறது.

முந்தைய ஆண்டில் 761 சிறைவாசிகளைக் கொண்டு ரூ.2.48 கோடி மதிப்புள்ள சிறை தயாரிப்புப் பொருட்கள் தயாரிக்கப்பட்டன. இத்துறை



மேற்கொண்டுள்ள பல்வேறு நடவடிக்கைகளினால் நடப்பாண்டில் உற்பத்தி மேலும் அதிகரிக்கக்கூடும்.

26. சிறைத் துறை 'பணித் துறையாக' அறிவிக்கப்பட்டுள்ளது. இத்துறை, பொருட்களைச் சிறையில் தயாரித்து அரசுத் துறைகளுக்கு இலவசமாக வழங்குகிறது. சிறைத் தொழிற் பிரிவுகளின் ஆண்டு சராசரி உற்பத்தி மதிப்பு சுமார் நான்கு கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

27. அனைத்து மத்திய சிறைகள், புதுக்கோட்டையிலுள்ள இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, வேலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள மகளிருக்கான தனிச் சிறைச்சாலைகள் ஆகியவற்றில் சிறைவாசிகள் ஊதியம் ஈட்டும் திட்டம் செயலில் உள்ளது.

28. இந்திய உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், அரசு, சிறைவாசிகளின் ஊதிய நிர்ணயக் குழு ஒன்றினை அமைத்து, அக்குழுவின் பரிந்துரையின் பேரில், சிறைவாசிகளின் ஊதியத்தை கீழ்க்கண்டவாறு மாற்றி அமைத்துள்ளது:—

| | |
|---|---|
| பணித் திறன் பெற்றவர்கள் | — நாளொன்றுக்கு ரூ.60/— |
| ஓரளவு பணித் திறன் பெற்றவர்கள் | — நாளொன்றுக்கு ரூ.50/— |
| பணித் திறன் பெறாதவர்கள் | — நாளொன்றுக்கு ரூ.45/— |

பாதிக்கப்பட்டவருக்கான இழப்பீடு மற்றும் சிறைவாசிகளின் பராமரிப்பு ஆகியவற்றுக்கான தொகையைக் கழித்த பின்னர் சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் ஊதியம் பின்வருமாறு:—

| | |
|---|---|
| பணித்திறன் பெற்றவர்கள் | — ரூ.18/— |
| ஓரளவு பணித்திறன் பெற்றவர்கள் | — ரூ.15/— |
| பணித்திறன் பெறாதவர்கள் | — ரூ.13.50 |

29. சிறைவாசிகள் தங்கள் குறைகளைத் தெரிவிக்கும்பொருட்டு, சிறைகளில் மூடி முத்திரையிடப்பட்ட புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் முதல் பணி நாளன்று மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, இந்தப் புகார் பெட்டிகளை திறந்து, புகார்களை உரிய நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்புகிறார்.

[2001 ஆகஸ்ட் 28

*30.* சிறைவாசிகளுக்கு இலவச சட்ட உதவிகள் அளிக்கப்படுகின்றன. சென்னையில் உள்ள தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் அதிகார மன்றம், சென்னை, வேலூர், திருச்சி, மதுரை ஆகிய இடங்களிலுள்ள மத்திய சிறைகள் மற்றும் வேலூர் மகளிர் சிறை ஆகியவற்றில் இலவச சட்ட உதவித் தனிப் பிரிவைத் தொடங்கியுள்ளது. சிறைவாசிகள் தங்களுடைய தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு செய்யவும் ஜாமின் கோரவும் அல்லது வழக்குகளை நடத்தவும் இந்த இலவச சட்டப் பிரிவினை அணுகலாம்.

**அலுவல் மற்றும் அலுவல்சாரா சிறைப் பார்வையாளர்கள்**

*31.* நல்ல நிருவாகத்தினை உறுதி செய்துகொள்ளும்பொருட்டு அலுவல் சார்ந்த பார்வையாளர்கள் அவ்வப்போது சிறைகளுக்கு வருகை புரிகின்றனர். மேலும், தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்கள், மாண்புமிகு நீதிபதிகள் மற்றும் இதர முக்கிய பிரமுகர்கள் சிறைக்கு வருகை தந்து சிறைவாசிகளுக்கான அடிப்படைத் தேவைகள் மற்றும் சிறைவாசிகளை ஒழுங்காக நடத்துதல் ஆகியவற்றினை உறுதிசெய்து கொள்கின்றனர்.

*32.* பொதுமக்களில் முக்கியமாக சமூகப் பணியாளர்கள், உளநோய் மருத்துவர்கள், உளநூல் வல்லுநர்கள் மற்றும் சமூகவியலாளர்கள் ஆகியோர் அலுவல்சாரா பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். சிறைகளை ஒழுங்காக நிருவகிப்பதில் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைச் செயல்படுத்துவது ஆகியன குறித்து அறிவதற்காக இவர்கள் சிறைவாசிகளைச் சந்திக்கின்றனர். இந்த அலுவல்சாரா சிறைப் பணியாளர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் ஆகும்.

**யோகாசனம் மற்றும் தியானப் பயிற்சிகள்**

*33.* சிறைவாசிகளின் உடல் நலம் மற்றும் மன நலத்தினை மேம்படுத்துவதற்காக யோகாசனம் மற்றும் தியானப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன. மருத்துவம்சாரா போதைப்பொருள் அடிமைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சி வகுப்புகளை சிறைவாசிகள் சிறப்புற வரவேற்கின்றனர். மக்கள் தொடர்பு சாதனங்கள் இதனைப் பெரிதும் பாராட்டுகின்றன. இவற்றின் பலன்கள் ஊக்கம் அளிப்பவையாக உள்ளன.

கடந்த ஆண்டில் 3,222 சிறைவாசிகள் யோகாசனம் மற்றும் தியான வகுப்புகளில் பயிற்சி பெற்றுள்ளனர்.



2001 ஆகஸ்ட் 28]

**தமிழ்நாடு விடுதலை பெற்ற சிறைவாசிகள் உதவிச் சங்கம்**

*34.* விடுதலையாகும் சிறைவாசிகள் புதுவாழ்வைத் தொடங்க உதவுவதே இச்சங்கத்தின் நோக்கமாகும். சிறுதொழில்கள் தொடங்குவதற்கு நிதி உதவி வழங்குவதன் மூலம் இச்சங்கம் உதவி அளிக்கிறது. இச்சங்கம் சட்ட உதவி அளிப்பதுடன் தேவைப்படுபவர்கள் முதியோர் உதவித் தொகை பெறுவதற்கும், ஆடைகள், மூக்கு கண்ணாடிகள் முதலியவற்றை பெறுவதற்கும் உதவுகிறது.

**விடுதலை பெற்ற ஆயுட் கைதிகளுக்கு நிதி உதவி**

*35.* ஆயுள் தண்டனை சிறைவாசிகள் மற்றும் நீண்ட கால சிறைவாசிகள் விடுதலை அடையும் போது அவர்களுக்கு, இயந்திரங்கள் மற்றும் கால்நடைகள் வாங்குவதற்காக வழங்கப்படும் நிதி உதவிக்கான தொகையை ஆண்டொன்றிற்கு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தி அரசு ஆணை எண் (2டி)49, உள் (சிறை-3) துறை, நாள் 11.4.1994 மூலம் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தனிநபர் நேர்விலும் ரூ.15,000/— நிதி உதவி வழங்கும் அதிகாரத்தினை சிறைத் துறைத் தலைவருக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மனித உரிமைகள்**

*36.* சிறந்த வாழ்க்கைத்தரத்தை உறுதி செய்வதற்காக அனைத்து சிறைகளிலும் அடிப்படை வசதிகளும் அவசியமாகத் தேவைப்படும் பொருள்களும் வழங்கப்படுகின்றன. சிறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்களிடையே அதிக விழிப்புணர்வை உருவாக்க திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புதுதில்லி என்ஐசிஜிஎஸ் (NICGS) / பிபிஆர்அண்டு டி (BPR&D) நிறுவனத்தால் நடத்தப்படும் மனித உரிமைகள் குறித்த பயிற்சி வகுப்புகளுக்கு சிறை அதிகாரிகள் அனுப்பப்படுகின்றனர். சிறைவாசிகளின் அடிப்படைத் தேவைகள் நியாயமான குறைகள் ஆகியவற்றைக் கேட்டு செயல்படவேண்டுமென்பதை அவர்கள் போதிய அளவிற்கு உணர வேண்டும் என்பதே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

**சிறை நீதிமன்றங்கள்**

*37.* சிறு வழக்குகளில் சம்பந்தப்பட்ட சிறைவாசிகள் தங்களின் குற்றத்திற்காக மன்னிப்புக் கோரும் நிலையில் அந்த வழக்குகளை துரிதப்படுத்தவும் விசாரணை சிறைவாசிகளின் விசாரணை காலத்தினை

[2001 ஆகஸ்ட் 28

நீட்டிப்பு செய்வதற்காக சிறைவாசிகளை பல்வேறு நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லும்போது ஏற்படும் இன்னல்களைத் தவிர்க்கும்பொருட்டும், சிறைவாசிகள் சம்பந்தப்பட்ட நீதிமன்ற நடுவர்களை எளிதில் அணுகி தங்களின் பிரச்சினைகளை தீர்க்கும்பொருட்டும் இந்தியாவிலேயே முதன் முதலாக சிறை நீதிமன்றம் சென்னை, வேலூர், திருச்சி, மதுரை ஆகிய மத்திய சிறைகளிலும் மற்றும் வேலூர் மகளிர் தனிச் சிறையிலும் தொடங்கப்பட்டுள்ளது.

சிறைவாசிகள் நீதிமன்றத்தின் முன்பு ஆஜர்படுத்தப்பட்டு 1338 சிறைவாசிகளில் இதுவரை 302 சிறைவாசிகளின் வழக்குகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. 545 வழக்குகளில் சிறைவாசிகள் விசாரணைக் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது. 1067 வழக்குகளில் குற்றத்தை ஒப்புக்கொண்ட மனுக்கள் பெறப்பட்டு உரிய நீதிமன்றங்களுக்குத் தீர்வுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

**சென்னையிலுள்ள மத்திய சிறையினை தண்டையார் பேட்டையிலுள்ள இரயில்வே துறைக்குச் சொந்தமான நிலத்திற்கு மாற்றுதல்**

38. சென்னை சென்ட்ரல் மற்றும் எழும்பூர் இரயில் நிலையங்களை இணைப்பதற்கு வசதியாக மேம்பால இரயில் பாதை அமைக்கும்பொருட்டு, சென்னை மத்திய சிறையின் அருகிலுள்ள நிலத்தினை இரயில்வே துறைக்கு மாற்றம் செய்திட தென்னக இரயில்வே பொது மேலாளர், அரசின் போக்குவரத்துத் துறைக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். இது தற்போதைய சென்னை மத்திய சிறையின் பாதுகாப்பிற்கு இடையூறு ஏற்படுத்தக்கூடும் என்பதால், எல்லா அடிப்படை வசதிகளுடன் கூடிய புதிய மத்திய சிறையினை தென்னக இரயில்வே துறையின் செலவில் மாற்று இடத்தில், இத்துறையின் ஏனைய நிபந்தனைகளுக்குட்பட்டு கட்டிக் கொடுக்கும்பட்சத்தில் இச்செயற்குறிப்பினை ஏற்றுக்கொள்ளலாம் என அரசுக்குக் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. தண்டையார்பேட்டையில் உள்ள இரயில்வே துறைக்குச் சொந்தமான இடம் புதிய மத்திய சிறை கட்டுவதற்கு ஏதுவாக இருக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்த செயற்குறிப்பை சமீபத்தில் இரயில்வே வாரியத் தலைவர் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டுள்ளார்.



2001 ஆகஸ்ட் 28]

**VI. தகவல் தொழில்நுட்பவியல் – கணினிமயமாக்குதல்**

39. அனைத்து மத்திய சிறைகளுக்கும் கணினி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளன. தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் சிறைவாசிகளின் தகவல் அமைப்பு முறை குறித்து மென்பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் தேசிய தகவல் மையம், சிறைகளின் பதிவேடுகளை கணினிமயமாக்கும் முறை குறித்த பிற மென்பொருளையும் தயாரித்து வருகிறது. தேசிய தகவல் மையத்தினரால் தயாரிக்கப்பட்ட முதல் கட்ட மென்பொருளைக் கொண்டு தகவல் தொகுப்பு விவரங்கள் (Data base) பராமரிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மென்பொருள்கள் கணினிமயமாக்குதலை விரிவுபடுத்திய பின்னர் உபயோகிக்கப்படும். இத்துறையைச் சார்ந்த 154 பணியாளர்களுக்கு கணினியினை இயக்கும் முறை குறித்த பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. தேசிய தகவல் மையம் அளித்துள்ள சாத்திய அறிக்கையின் அடிப்படையில் சிறைத் துறையினை கணினி மயமாக்குவதற்காக சுமார் ரூ.391 இலட்சம் செலவிலான தொலைநோக்குத் திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

**இணையதளம் (Web site)**

40. ஒளிவு மறைவற்ற நிர்வாகத்தினை அமைத்திடவும் பொது மக்கள் இத்துறையின் நடவடிக்கைகளை அறிந்துகொள்ளவும், இத்துறைக்கான இணைய தளம் தேசிய தகவல் மையத்தினரால் வடிவமைக்கப்பட்டு 18—4—2001 அன்று சிறைத் துறையால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

www.tn.nic.in/prisons

www.tn.gov.in/tnprisons

**VII முடிவுரை**

41. சிறைகளின் நிருவாகத்திற்கு அரசு மிகவும் முன்னுரிமையளித்துள்ளது. சிறைவாசிகளின் அனைத்து வகை நல நடவடிக்கைகளையும், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்துவதற்காக ஒருமித்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறையின் பாதுகாப்பையும் நலனையும் வலுப்படுத்தும் பொருட்டு சிறைகளில் நிருவாக மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு நீதியரசர் மு.மு. இஸ்மாயில் அவர்கள், சிறைச்சாலைகளின் சீர்திருத்தம் குறித்து அளித்த பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும் மாண்புமிகு நீதியரசர் ஐ. டேவிட் கிறிஸ்டியன் அவர்கள் தெரிவித்த


கருத்துரைகளை நடைமுறைப்படுத்த ஒருமித்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறைத் துறையைச் சீரமைக்கவும், சீர்திருத்தவும் சீர்திருத்த நிருவாக கோட்பாடுகளை சிறைத்துறை மனதிற்கொண்டு செயல்படுவதில் தமிழ்நாடு அரசு மிகவும் ஆர்வமுடன் உள்ளது.



**இணைப்பு**

**(இனம் II-ஐக் காண்க)**

**சிறைத் துறையின் நிருவாக அமைப்பு**




1. சிறைத் துறைத் தலைவர்
2. சிறைத் துறைத் துணைத் தலைவர், (தலைமையிடம்)
3. சிறைத் துறைத் துணைத் தலைவர், சென்னை சரகம்
4. சிறைத் துறைத் துணைத் தலைவர், திருச்சிராப்பள்ளி சரகம்
5. சிறைத் துறைத் துணைத் தலைவர், கோயம்புத்தூர் சரகம்
6. சிறைத் துறைத் துணைத் தலைவர், மதுரை சரகம்

7. தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர்

8. மத்திய சிறை, சென்னை, வேலூர், மகளிர் தனிச் சிறை, வேலூர், கிளைச் சிறைகள், காஞ்சிபுரம்/திருவள்ளூர்/ வேலூர் / திருவண்ணாமலை மாவட்டங்கள், ஆண்கள் பிற்காப்பு இல்லம், புழல், சிறைக் காவலர் பயிற்சிப் பள்ளி, வேலூர்.

9. தலைமையிட அலுவலகம்

10. மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி, கடலூர் / தனி கிளைச் சிறை/ மகளிர் தனிச் சிறை, திருச்சிராப்பள்ளி / கிளைச் சிறைகள், கரூர் / பெரம்பலூர் / புதுக்கோட்டை / கடலூர் / விழுப்புரம் / தஞ்சாவூர் / நாகப்பட்டிணம் / திருவாரூர் / திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள், இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை

11. மத்திய சிறை, கோயம்புத்தூர், சேலம் / திறந்தவெளிச் சிறை, சிங்காநல்லூர் / தனி கிளைச் சிறைகள், கோயம்புத்தூர், சேலம்/ கிளைச் சிறைகள், கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, நாமக்கல், தருமபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள்.

12. மத்திய சிறை, மதுரை, பாளையங்கோட்டை/தனி கிளைச் சிறை, கொக்கிரகுளம் / கிளைச் சிறைகள், மதுரை, இராமநாதபுரம், விருதுநகர், தேனி, சிவகங்கை, திருநெல்வேலி, திண்டுக்கல், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள்.

13. வட்டார நன்னடத்தை அலுவலர்கள்

14. நிருவாகம்

15. கணக்குகள் மற்றும் தணிக்கை

16. சிறைத் துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர்கள்

17. கணக்கு அலுவலர்

18. நன்னடத்தை அலுவலர்கள்



## இணைப்பு—III

(550 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 12 — தமிழ்நாடு இந்து சமய அறநிலையங்கள் நிருவாகம்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002

### முன்னுரை

தமிழகத் திருக்கோயில்கள் தொன்மையானவை என்பது மட்டுமல்லாமல் பல வரலாற்றுச் சிறப்புக்களை உலகுக்கு எடுத்துக்காட்டும் உதாரணங்களாகத் திகழ்கின்றன. தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாகவும், சிற்ப, கட்டடக் கலைகளின் இருப்பிடமாகவும், நமது பழமையான புகழ் வாய்ந்த பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பறைசாற்றுவனவாகவும் திகழ்கின்றன. இவை, மேலும், கல்வியை வளர்க்கும் கல்விக்கூடங்களாக, ஆவணக் காப்பகங்களாக, மருத்துவச்சாலைகளாக, தம்மைச் சார்ந்து வாழும் மக்களுக்கு வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கும் ஆதாரங்களாகவும் இருக்கின்றன. சுருங்கச் சொல்லப்போனால், தமிழகத் திருக்கோயில்கள் ஆன்மீகத்தையும் அறநெறியையும் வளர்த்து மக்கள் மத்தியில் ஒழுக்க சிந்தனை மேம்படப் பணியாற்றிக் கொண்டிருப்பது நாடறிந்த உண்மை. இத்தகைய பண்பாட்டு மையங்கள் வருங்காலத் தலைமுறையினருக்கும் பயன்படும் வகையில் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். இதையறிந்துதான்

"இறைகளோடு இசைந்த இன்பம்
இன்பத்தோடு இசைந்த வாழ்வு"

என சுந்தரமூர்த்தி நாயனார் தமிழக மக்களின் வாழ்வு திருக்கோவில்களோடு பின்னிப் பிணைந்துள்ளது என அழகுபடக் கூறியுள்ளார்.

நமது சமுதாயத்தின் பண்பாட்டு நிலைக்கலன்களாக, நாகரிகத்தின் சின்னங்களாக, வரலாற்றுப் பெட்டகங்களாக, ஒழுக்கத்தின் உறைவிடமாகத் திகழ்கின்ற திருக்கோயில்களைப் பாதுகாக்க வேண்டிய மகத்தான கடமையை உணர்ந்து இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை பல்வேறு திட்டங்களைத் தீட்டிப் பணிகளை ஆற்றி வருகின்றது.

## இந்து சமய அறநிலையங்களும் சட்டமுறை மேலாண்மையும்

(i) தமிழ்நாடு வானளாவிய கோபுரங்களையும், தலைசிறந்து விளங்கும் பண்பாட்டையும், கண்களுக்கு விருந்தாக அமைந்துள்ள சிற்ப வேலைப்பாடுகளையும் கொண்ட தொன்மையான அழகிய கோயில்களையும் தன்னகத்தே கொண்டு சிறப்புற்று விளங்குகிறது. இக்கோயில்கள், இந்து சமய வழிபாட்டு முறைகளை விளக்கும் தலைமையிடமாக அமைந்துள்ளன. இக்கோயில்கள் நம் தொன்மைக் காலங்களைப் படம் பிடித்துக்காட்டும் திருத்தலங்களாகும். சோழர்கள், பாண்டியர்கள், பல்லவர்கள், விஜயநகரப் பேரரசின் மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் கோயில் கட்டும் பணி மிகவும் ஆர்வத்துடன் மேற்கொள்ளப்பட்டது. கோயில்களைப் பாதுகாத்தல், பராமரித்தல், கோயில்களின் நிர்வாகத்தை மேற்கொள்ளுதல், அவற்றிற்குச் சொந்தமான நிதிகளைப் பேணிக்காத்தல் போன்ற போற்றத்தக்க கடமைகளைச் செய்வதில் தனிப் பொறுப்புடையவர்கள் என்பதை நம் இந்து சமய மாமன்னர்கள் நிறுவிக் காட்டியுள்ளனர்.

(ii) திருக்கோயில்களின் நிருவாகத்தை முறையாகப் பராமரிப்பது. மேற்பார்வையிடுவது, திருக்கோயில்களின் அறக்கட்டளைகளைத் திறமையாக நிர்வகிப்பது ஆகியவை அரசின் தலையாய பொறுப்புகளாகக் கருதப் பெறுகின்றன. இந்து சமய, அறக் கட்டளைகள் நிர்வாகம் திறம்பட நடைபெறவும், அதன் பணிகளை மேற்பார்வையிடவும், 1925 ஆம் ஆண்டிற்கு முன்னரே பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பின்பு இந்து சமய, சமண அறக்கட்டளைகளையும், அற நிறுவனங்களையும் நிர்வகிக்கவும், மேற்பார்வையிடவும் 1927 மற்றும் 1951 ஆகிய ஆண்டுகளில் சட்டங்கள் இயற்றப்பட்டன. அதன்பின் 1959 ஆம் ஆண்டு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) இயற்றப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள இந்து சமய மற்றும் சமண சமயத் திருக்கோயில்கள் மற்றும் அறக்கட்டளைகளின் நிருவாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

(iii) இந்து சமய அறநிறுவனங்களின் நிருவாகத்தைச் சீரிய முறையில் நிருவகிக்க வேண்டும் என்ற அடிப்படையில் 1991 ஆம் ஆண்டு இந்து சமயத் திருக்கோயில்கள், சமண சமயத் திருக்கோயில்கள் மற்றும் அறக்கட்டளைகளை முறையாகப் பேணிப் பராமரிப்பதற்காக ஆன்மீக சமயத் தலைவர்களை இதில் ஈடுபடுத்த வேண்டும் என்றும், அறநிலையங்களின் நிருவாகம் தொடர்பாக அவர்களுடைய



ஆலோசனைகளையும், வழிகாட்டுதலையும் கோரிப் பெற வேண்டும் என்றும் கருதப்பட்டு 1959 ஆம் ஆண்டு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தில் பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

(iv) இதன் மூலம் 1991 ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. திருத்தச் சட்டத்தின்படி மாநில அளவில் திருக்கோயில் நிர்வாக வாரியம், மாவட்ட அளவில் மாவட்டக் குழுக்கள் என்ற இரட்டை அடுக்கு அமைப்பு முறை ஏற்படுத்தப்பட்டது. இத்திருத்தச் சட்டம் 13—12—1991 ஆம் நாள் முதல் செயலுக்கு வந்தது.

(v) திருக்கோயில் நிருவாக வாரியம் பல்வேறு தரப்பினரையும் உறுப்பினராகக் கொண்டு உருவாக்கப்பட்ட அமைப்பாகும். பிரச்சினைகளையும், நன்மை தீமைகளையும் அலசி ஆராயும் இந்த வாரியத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், சிறந்த ஆன்மீக உணர்வும் சமயப் பற்றும் தொண்டு மனப்பான்மையும் வள்ளல் தன்மையும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற பெருமக்களும், அனுபவமிக்க அதிகாரிகளும் அங்கம் வகித்தனர். இவ்வாரியம், திருக்கோயில் மற்றும் சமய நிறுவனங்களின் கொள்கைகளை வகுத்தல், திருப்பணித் திட்டங்களைக் கண்காணித்தல், பொதுவான மேற்பார்வை அதிகாரங்களைச் செலுத்துதல் போன்ற ஆலய வளர்ச்சியின் அரும்பணிகளை ஆற்றுவதற்கான சிறந்த அமைப்பாகத் திகழ்ந்தது.

(vi) ஓர் இலட்சமும் அதற்கு மேற்பட்டும் ஆண்டு வருமானம் உள்ள ஆலயங்களில் அறங்காவலர்களை நியமிப்பது உட்பட ஆலயங்களைக் கண்காணித்தல், நிருவகித்தல் ஆகியவை திருக்கோயில் நிர்வாக வாரியத்தின் பணிகளாகும். ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சத்திற்கும் குறைவான ஆண்டு வருமானம் உள்ள ஆலயங்களின் அறங்காவலர்களை நியமிக்கும் அதிகாரம் திருக்கோயில் நிர்வாக வாரியத்தால் ஏற்படுத்தப்பட்ட மாவட்டக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஓரளவு நீதித் துறை தன்மை வாய்ந்த சில குறிப்பிட்ட அதிகாரங்களைத் தவிர இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையைச் சேர்ந்த ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர் ஆகியோர் செலுத்தி வந்த ஏனைய அதிகாரங்கள் நிர்வாக வாரியத்திடமும், மாவட்டக் குழுக்களிடமும் ஒப்படைக்கப்பட்டன. அரசு செலுத்தி வந்த பல அதிகாரங்களும் திருக்கோயில் நிர்வாக வாரித்திடம் ஒப்படைக்கப்பட்டன.

(vii) மாநிலம் முழுவதும் அமைந்துள்ள சமய அறநிறுவனங்களின் நிருவாகத்தைக் கவனிக்க 17 மாவட்டக் குழுக்களை வாரியம் அமைத்தது. ஒவ்வொரு மாவட்டக் குழுவும் ஒரு தலைவரையும், அரசு அதிகாரிகள், அரசு சாரா உறுப்பினர்கள் ஆகிய 11 உறுப்பினர்களையும் சேர்த்து மொத்தம் 12 உறுப்பினர்களை உள்ளடக்கியதாயிருந்தது.

(viii) 1996 ஆம் ஆண்டு பொறுப்பேற்ற அரசு மேற்கண்ட திருக்கோயில் நிருவாக வாரியத்தையும், மாவட்டக் குழுக்களையும் கலைத்துவிட்டு இந்து சமய நிறுவனங்களின் நிருவாகத்தை அரசு அலுவலரான ஆணையர் மற்றும் சார்நிலை அலுவலர்களின் கண்காணிப்பில் 1991 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்திற்கு முன்பு இருந்ததைப் போன்ற நிருவாக அமைப்பிற்குக் கொண்டு செல்லும் வகையில் 1996 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது. (தமிழ்நாடு திருத்தச் சட்டம் 39/1996) இச்சட்டம் 9—12—1996 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு அமலில் உள்ளது. மேற்படி சட்டத்தின் பிரிவு 7—ன்கீழ் மாநில அளவில் அரசுக்கு ஆலோசனைகளைக் கூறி வழி நடத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய தலைமையிலும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைத் துணைத் தலைவராகவும், அரசின் இந்து சமய அறநிலையத் துறையின் செயலாளர் மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆணையர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் மற்றும் வேறு சில அலுவல்சாரா உறுப்பினர்களையும் கொண்ட திருக்கோயில் ஆலோசனைக் குழு அமைத்து 19—12—1996—ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அக்குழுவின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும். அக்குழுவின் பதவிக் காலம் 19—12—1999 முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

### சமய நிறுவனங்கள்

இத்துறையின் நிருவாகத்தின்கீழ் இந்து மற்றும் சமண சமய அறநிறுவனங்கள் 36,352 உள்ளன. 1959 ஆம் ஆண்டு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்ட விதிகளின்படி நியமிக்கப்பட்ட அறங்காவலர்கள், சட்டப் பிரிவு 45—ன்படி நியமிக்கப்பட்ட செயல் அலுவலர்கள் ஆகியோரால் இந்து சமய நிறுவனங்கள் நிருவகிக்கப்படுகின்றன. செயல் அலுவலர் பணியமர்த்தப்படாத திருக்கோயில்கள், அறங்காவலர்களின் முழுமையான நிருவாகத்திலிருந்து வருகின்றன. இத்துறையின் நிருவாகத்தின் கீழுள்ள இந்து மற்றும் சமண சமய அறநிறுவனங்கள் விவரம் பின்வருமாறு:



| | | |
|---|---|---|
| 1. | திருக்கோயில்கள் | 34,312 |
| 2. | திருமடங்கள் | 56 |
| 3. | திருமடத்தைச் சார்ந்த திருக்கோயில்கள் | 57 |
| 4. | குறிப்பிட்ட கட்டளைகள் | 1,721 |
| 5. | அறக்கட்டளைகள் | 189 |
| 6. | சமணத் திருக்கோயில்கள் | 17 |
| | மொத்தம் | 36,352 |

### சமய நிறுவனங்களின் பாகுபாடு

சமய நிறுவனங்கள் அவற்றின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பாகுபாடு செய்யப்பட்டுள்ளன:

| வ. எண் | சட்டப் பிரிவு | ஆண்டு வருவாய் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பட்டியலைச் சாரா நிறுவனங்கள் 49(i) | ரூ.10,000/-க்குக் குறைவு | 33,263 |
| 2. | பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள் 46(i) | ரூ.10,000/-க்கு மேல் ரூ.2,00,000/- வரை | 2,674 |
| 3. | 46(ii) | ரூ.2,00,000/-க்கு மேல் ரூ.10,00,000/- வரை | 307 |
| 4. | 46(iii) | ரூ.10,00,000/-க்கு மேல் | 108 |
| | | மொத்தம் | 36,352 |

### அறநிலையத் துறையின் நிருவாக அமைப்பு

இத்துறையின் தலைவர் ஆணையர் ஆவார். இத்துறையின் நிருவாகம் நன்கு செயல்பட ஆணையரின்கீழ் 10 இணை ஆணையர் மண்டலங்களாகவும், 22 உதவி ஆணையர் சரகங்களாகவும் பிரிக்கப்பட்டு பணிகள் கவனிக்கப்பட்டு வருகின்றன. ஆணையர் அலுவலகத்தில் நிருவாகத்தில் உதவி புரியும் பொருட்டு, ஒரு கூடுதல் ஆணையரும், ஓர் இணை ஆணையரும், உதவி ஆணையர் நிலையில் இரண்டு நேர்முக

உதவியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். திருக்கோயில் சார்பான வழக்குகள் மற்றும் துறைத் தொடர்புடைய வழக்குகள் ஆகியவற்றில் நடவடிக்கை எடுத்து உதவி புரிய உதவி ஆணையர் நிலையில் ஓர் அலுவலரும் உள்ளார். இத்துறையைச் சார்ந்த திருக்கோயில்களில் உள்ள நகைகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்யும் பணிகளைக் கவனிக்கும் பொருட்டு 10 உதவி ஆணையர் (சரிபார்ப்பு) இயங்கி வருகின்றனர். திருக்கோயில் சார்பான முதலீடுகள் மற்றும் நிதி சம்பந்தமான பணிகளைக் கவனிக்கும் பொருட்டுக் கருவூலக் கணக்குத் துறையிலிருந்து மாற்றுப் பணி மூலம் ஒரு கணக்கு அலுவலரும், ஓர் உதவிக் கணக்கு அலுவலரும் பணிபுரிந்து வருகின்றனர். திருக்கோயில் சம்பந்தமான நிலங்களைக் குத்தகைக்கு விடுதல், நில விற்பனை தொடர்பான இதர பணிகளில் ஆலோசனை வழங்கும் பொருட்டு, வருவாய்த் துறையிலிருந்து மாற்றுப் பணி மூலம் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் தனி அலுவலர் ஒருவர் பணிபுரிந்து வருகிறார். திருக்கோயில் திருப்பணிகள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், கண்காணிக்கவும் கண்காணிப்புப் பொறியாளர் தலைமையின்கீழ் பொறியியல் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. திருக்கோயில்களிலுள்ள நகைகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்களைப் பாதுகாக்கவும், சிலைகள் பாதுகாப்பிற்காகவும், காவல் துறைக் கண்காணிப்பாளர் தலைமையில், திருக்கோயில் பாதுகாப்புப் பிரிவு ஒன்று, மூன்று காவல் துறை ஆய்வர்களுடன் செயல்பட்டு வருகிறது. திருக்கோயில் கணக்குகளைத் தணிக்கை செய்து, நிதி இழப்பு ஏதும் இருப்பின் ஆணையரின் கவனத்திற்குக் கொண்டு வந்து, நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, தலைமைத் தணிக்கை அலுவலர் மேற்பார்வையின்கீழ் தணிக்கைப் பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவில் தலைமைத் தணிக்கை அலுவலருக்கு உதவியாக 2 துணைத் தலைமைத் தணிக்கை அலுவலர்களும், 20 மண்டலத் தணிக்கை அலுவலர்களும், 28 உதவித் தணிக்கை அலுவலர்களும் பணிபுரிந்து Õ¼A¡ ØÙ ˜.Þ^¶¬ØJ¡ ê£˜H™ *õO J ì Šõ´ < "திருக்கோயில்" மாத இதழ் பணிகளைக் கவனிக்க உதவி ஆணையர் நிலையில் ஆசிரியர் ஒருவர் பணிபுரிந்து வருகிறார். இத்துறையின் நிருவாகத்தினைக் கவனிக்கும் பொருட்டு, அலுவலர்கள், அமைச்சுப் பணியாளர்கள், சார்நிலைப் பணியாளர்கள், பொறியியற் பணியாளர்கள், தணிக்கைப் பணியாளர்கள், காவல் துறைப் பணியாளர்கள், வருவாய்த் துறைப் பணியாளர்கள் உட்பட மொத்தம் 2465 பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.





**செயல் அலுவலர்கள்**

நிருவாகத்தைச் செம்மைப்படுத்த சட்டப் பிரிவு 45—ன்படி கீழ்க்கண்ட நிலைகளில் செயல் அலுவலர்கள் பணியமர்த்தப் பெறுகின்றனர்:

| வ. எண் | நிலை | வருமான வரம்பு | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | இணை ஆணையர் நிலை செயல் அலுவலர் | ரூபாய் ஒரு கோடிக்கு மேல் வருவாய் உள்ள திருக்கோயில்கள் | 8 |
| 2. | துணை ஆணையர் நிலை செயல் அலுவலர் | ரூபாய் ஐம்பது இலட்சத்திற்கு மேல் ஒரு கோடிக்குள் வருவாய் உள்ள திருக்கோயில்கள் | 12 |
| 3. | உதவி ஆணையர் நிலை செயல் அலுவலர் | ரூபாய் பத்து இலட்சத்திற்கு மேல் ஐம்பது இலட்சம் வரை வருவாய் உள்ள திருக்கோயில்கள் | 27 |
| 4. | செயல் அலுவலர் நிலை 1 | ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு மேல் பத்து இலட்சம் வரை வருவாய் உள்ள திருக்கோயில்கள் | 66 |
| 5. | செயல் அலுவலர் நிலை 2 | ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு மேல் ஐந்து இலட்சம் வரை வருவாய் உள்ள திருக்கோயில்கள் | 111 |
| 6. | செயல் அலுவலர் நிலை 3 | ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேல் இரண்டு இலட்சம் வரை வருவாய் உள்ள திருக்கோயில்கள் | 270 |
| 7. | செயல் அலுவலர் நிலை 4 | ரூபாய் பத்தாயிரத்திற்கு மேல் ஒரு இலட்சம் வரை வருவாய் உள்ள திருக்கோயில்கள் | 199 |
| | | மொத்தம் | 693 |

## திருமடங்கள் நிருவாகம்

திருமடங்களின் நிருவாகம் ஆதினகர்த்தர்களால் நிருவகிக்கப்படுகின்றது. தமிழகத்தில் தற்சமயம் 56 திருமடங்களும், அவற்றுடன் இணைந்த 19 குறிப்பிட்ட கட்டளைகளும் உள்ளன. திருமடங்களின் நிருவாகம் மேலும் சிறப்புற நடைபெறவும், நிருவாகத்தை மேம்படுத்தவும், மடங்களின் வரவு செலவுத் திட்டங்களைப் பரிசீலித்து ஒப்புதல் வழங்கவும், ஆணையரின் நேர்முக உதவியாளர் தலைமையில் அவருக்கு உதவியாக மண்டலத் தணிக்கை அதிகாரி மற்றும் பிற அலுவலர்கள் அடங்கிய ஆய்வுப் பிரிவு செயல்படுகின்றது. இப்பிரிவால் திருமடங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன.

## அறநிறுவனங்களின் நில நிருவாகம்

### அ) நிலங்கள், மனைகள் மற்றும் கட்டடங்கள் விவரம்

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள் தமிழ்நாடு முழுமையும் 4,79,019.97 ஏக்கர்கள் உள்ளன. அவற்றில் நன்செய், புன்செய் மற்றும் மானாவாரி நிலங்கள் கீழ்க்காணும் விவரப்படி அடங்கியுள்ளன:

| நிலத்தின் தன்மை | திருக்கோயில்களுக்குச் சொந்தமானவை | | திருமடங்களுக்குச் சொந்தமானவை | | மொத்த பரப்பளவு | |
|---|---|---|---|---|---|---|
| | ஏக்கர் | சென்ட் | ஏக்கர் | சென்ட் | ஏக்கர் | சென்ட் |
| நன்செய் | 1,83,871 | 51 | 21,282 | 05 | 2.05.153 | 56 |
| புன்செய் | 2.18,568 | 36 | 34,543 | 15 | 2,53,111 | 51 |
| மானாவாரி | 20,754 | 90 | -- | – | 20,754 | 90 |
| | | | | மொத்தம் | 4,79,019 | 97 |

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களில் 1,06,807 குத்தகைதாரர்கள் பயிர் செய்து வருகின்றனர். திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 20,046 கட்டடங்கள் உள்ளன. அவற்றில் 24,458 வாடகைத்தாரர்கள் உள்ளனர். 33,627 மனையிடங்கள் உள்ளன. அதில் 54,251 வாடகைதாரர்கள் உள்ளனர்.



### (ஆ) வருவாய் நீதிமன்றம்

நிலக் குத்தகை நிலுவைத் தொகைகள் வசூலிப்பது தொடர்பான வழக்குகளை விசாரிக்கத் தனித் துணை ஆட்சியர் தலைமையில் வருவாய் நீதிமன்றங்கள் கீழ்க்கண்ட இடங்களில் இயங்கி வருகின்றன:

1) தஞ்சாவூர் 2) திருச்சிராப்பள்ளி 3) மயிலாடுதுறை
4) திருவாரூர் 5) கடலூர் 6) மதுரை

மேலும் கீழ்க்கண்ட இடங்களில் வருவாய் அமர்வு நீதிமன்றங்கள் உள்ளன:

1) மன்னார்குடி 2) கும்பகோணம் 3) இலால்குடி
4) சேலம் 5) திருநெல்வேலி

இந்த வருவாய் நீதிமன்றங்களில் ரூ.55.60 கோடி குத்தகைத் தொகை பாக்கியை உள்ளடக்கிய மொத்தம் 30,825 வழக்குகள் 1232 திருக்கோயில்களால் தாக்கல் செய்யப்பட்டு, 18,498 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.31.37 கோடி குத்தகைதாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது. 12,327 வழக்குகள் வருவாய் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன.

## கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம், இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள்

இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் என்பது 490 திருக்கோயில்களின் கூட்டமைப்பாகும். இந்தத் திருக்கோயில்கள் முன்பு திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் திருவிதாங்கூர் மன்னரால் நிருவகிக்கப்பட்டு வந்தன. தற்போது அரசால் நியமிக்கப்படும் அறங்காவலர் குழு மற்றும் இணை ஆணையர்/செயல் அலுவலராலும் நிருவகிக்கப்பட்டு வருகின்றது. இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் நிருவாகத்தில் 5 திருக்கோயில்கள் தவிர 485 திருக்கோயில்களில் ஆண்டுக்கு ஏறத்தாழ ரூ.2000/— முதல் ரூ.10,000/— வரைதான் வருமானம் வருகின்றது. மேற்படி திருக்கோயில்களின் நிருவாகச் செலவுகளுக்கு தற்போது அரசு மானியம் ரூ.19.70 இலட்சம் வழங்கப்படுகிறது. மேலும், திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து மேற்கண்ட திருக்கோயிலின் நிருவாகத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.14 இலட்சம் வழங்கப்படுகிறது. இத்திருக்கோயில்களில் (1) அரசுப் பணியாளர்கள் (2) திருக்கோயில் பணியாளர்கள் (3) சில்லறைச் செலவினப் பணியாளர்கள் என மூன்று விதப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். சில்லறைச் செலவினப் பணியாளர்களின் ஊதியம் 1—8—2001 முதல்

[2001 ஆகஸ்ட் 28

உயர்த்தி வழங்கப்பட ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி கூடுதல் செலவினத்தை ரூ.2 கோடிக்கு ஒரு தொகுப்பு நிதி உருவாக்கி அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து மேற்கொள்ளவும் ஆணையிடப்பட்டுள்ளது.

### அறங்காவலர் குழு நியமனம்

திருக்கோயில்கள் மற்றும் ஏனைய அறநிலையங்களுக்கு அறங்காவலர்கள் விதிமுறைகளின்படி நியமிக்கப்பட்டு, நிருவாகத்தைக் கவனிக்க அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். அவற்றில் சில அறநிலையங்கள் பரம்பரை அறங்காவலர்களைக் கொண்டும். சில நிருவாகத் திட்டங்கள் அடிப்படையிலும், சில சமுதாய அடிப்படையிலும் உள்ளன. பெரும்பாலான அறநிலையங்களில் பரம்பரை முறைசாரா அறங்காவலர்கள் மாவட்டக் குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் உதவி ஆணையர், இணை ஆணையர், ஆணையர் மற்றும் அரசால் நியமிக்கப்பட்டு வருகின்றனர். பரம்பரை முறைசாரா அறங்காவலர்களை நியமனம் செய்ய இயலாத சிறு திருக்கோயில்கள் 9,347 உள்ளன. பரம்பரை அறங்காவலர்கள் உள்ள திருக்கோயில்கள் 4,306 உள்ளன. கட்டளைகள் மற்றும் மடங்கள் 1,934 உள்ளன. 2,477 திருக்கோயில்கள் குறித்து பல்வேறு வழக்குகள் நடந்து வருகின்றன. நிருவாகத் திட்டம் மற்றும் சமுதாயத் திருக்கோயில்கள் 630 உள்ளன. இவை தவிர அறங்காவலர்கள் நியமனம் செய்ய இயன்ற திருக்கோயில்கள் 27,005 உள்ளன. இத்திருக்கோயில்களின் நியமன விவரம் கீழ்க்கண்டவாறு:

| வ. எண் | நிலை | பரம்பரை முறைசாரா அறங்காவலர்கள் நியமனம் செய்ய இயன்ற மொத்தத் திருக்கோயில்களின் எண்ணிக்கை | பரம்பரை முறைசாரா அறங்காவலர் நியமனம் செய்யப்பட்டு பதவிகளில் உள்ள திருக்கோயில்களின் எண்ணிக்கை | பரம்பரை முறைசாரா அறங்காவலர்கள் பதவிக் காலம் முடிந்து நியமனம் செய்யப்பட வேண்டிய திருக்கோயில்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | 46 (i) | 1,572 | 814 | 758 |
| 2. | 46(ii) | 191 | 82 | 109 |
| 3. | 46(iii) | 68 | 3 | 65 |
| 4. | 49(i) | 25,174 | 4,460 | 20,714 |
| மொத்தம் | | 27,005 | 5,359 | 21,646 |



2001 ஆகஸ்ட் 28]

## திருக்கோயில் பணியாளர்கள் நலத் திட்டங்கள்

### ஆலய ஊழியர் நல நிதி

ஆண்டு வருமானம் ரூ.40,000/—க்கும் குறைவாக உள்ள திருக்கோயில்களில், மாத ஊதியம் ரூ.400/—க்கும் குறைவாகப் பெறும் பணியாளர்களுக்குச் சம்பள நிலுவை ஏற்படின் அப்பணியாளர்களுக்குத் துறை மூலம் சம்பள நிலுவைத் தொகை வழங்கிட ஆலய ஊழியர் நல நிதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கெனத் திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி மூலதனம் முதலீடு செய்யப்பட்டுள்ளது. அம்மூலதனத்திலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு இத்திட்டம் ஆண்டுதோறும் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

### திருக்கோயில் பணியாளர் குடும்ப நல நிதி

பணியிலிருக்கும்போது இறக்கும் திருக்கோயில் பணியாளரது குடும்பங்களுக்கு உதவும் பொருட்டு இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் பணியிலிருக்கும்போது இறக்கும் பணியாளரின் வாரிசுதாரர்களுக்கு ரூ.75,000/— உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்கென உபரி நிதி மிக்க திருக்கோயில்களிலிருந்து ரூபாய் ஐந்து கோடி மூலதனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அம்மூலதனத்திலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### திருக்கோயில் பணியாளர்கள் சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம்

ஆண்டொன்றுக்கு ரூபாய் ஓர் இலட்சமும் அதற்கு மேலும் வருமானம் பெறக்கூடிய திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கென ரூபாய் எட்டு இலட்சம், திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து வைப்பீடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பணியாளர் ஓய்வுபெறும்போது அவர் செலுத்திய உறுப்பினர் கட்டணத் தொகை திருக்கோயில் மூலம் வட்டியுடன் வழங்கப்படுவதுடன் துறை மூலம் ரூ.1000/— வழங்கப்படுகிறது.

### ஓய்வூதியத் திட்டங்கள்

திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது நிறைவடைந்து ஓய்வு பெற்ற அர்ச்சகர்கள், ஓதுவார்கள் போன்றோருக்கு அரசு நிதியிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.500/— இத்துறை மூலம் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்படி 260 நபர்களுக்கு அரசால் ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டு, அதில் 17 ஓதுவார்களும், 99 இசைக்கலைஞர்கள் மற்றும் வேதபாராயணர்களும் மற்றும் 43 அரையர்களும் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். அதேபோன்று 591 சைவம் மற்றும் வைணவ அர்ச்சகர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசால் அனுமதிக்கப்பட்டு, 433 சைவ அர்ச்சகர்களும் மற்றும் 158 வைணவ அர்ச்சகர்களும் பயன்பெறுகின்றனர்.

**கிராம பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்**

தமிழ்நாட்டில் அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயதினை அடைந்து ஓய்வு பெற்ற பூசாரிகளுக்கு நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500/— வீதம் ஓய்வூதியம் வழங்க அரசால் அனுமதிக்கப்பட்டு, 1496 நபர்கள் தற்போது பயனடைந்து வருகின்றனர்.

**திருக்கோயில் திருப்பணி**

"திருக்கோயில் பொருந்த ஓர் செங்கல் இடுவார்
உலகாள்வார்"

என்பது முதுமொழி.

தமிழ்நாட்டில் ஆழ்வார்கள், நாயன்மார்கள் மற்றும் பல அருளாளர்களால் பாடிப் போற்றப்பட்ட புகழ்மிகு புனிதத் திருத்தலங்களும், இன்னபிற பழமையான பிரார்த்தனைத் தலங்களும் பல உள்ளன. இவற்றையும் இவற்றின் வரலாற்று முக்கியத்துவம், தொல்பொருள் முக்கியத்துவம் ஆகியவற்றையும் நன்முறையில் பேணிப் பாதுகாத்துவரத் திருப்பணி செய்வது இன்றியமையாததாகும். திருப்பணிகள் கீழ்க்கண்ட நிதி ஆதாரங்களிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன:

1. பொது மக்கள் அளிக்கும் நன்கொடை
2. அந்தந்தத் திருக்கோயில்களின் நிதி
3. உபரி நிதியுடைய திருக்கோயில்களிலிருந்து நிதிப் பற்றாக்குறை உடைய திருக்கோயில்களுக்கு வழங்கப்படும் நிதி
4. அரசு கொடை
5. பொது நல நிதி
6. ஆலய மேம்பாட்டு நிதி



7. திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி
8. கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணி நிதி

**உபரி நிதியுடைய திருக்கோயில்களிலிருந்து நிதிப் பற்றாக்குறை உடைய திருக்கோயில்களுக்கு வழங்கப்படும் நிதி**

இந்து சமய அறநிலையச் சட்டப் பிரிவு 36—ன்கீழ் உபரி நிதியுடைய திருக்கோயில்களிலிருந்து நிதிப்பற்றாக்குறை உள்ள திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்திட நிதி ஒதுக்கீடு செய்து, ஆணையரின் அனுமதி பெற்று நிதி உதவி செய்யப்படுகிறது. அதனைக் கொண்டு திருப்பணிகள் செய்யப்படுகின்றன.

**அரசு கொடை**

ஆண்டுதோறும் திருக்கோயில்களில் திருப்பணி செய்திட இத்துறை உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது. அதன்படி 2000—2001 ஆம் ஆண்டுக்கு ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொகையைக் கொண்டு பல திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**பொது நல நிதி**

இந்து சமய அறநிலையச் சட்டப் பிரிவு 97ன்கீழ் தாமாக முன் வந்து திருக்கோயில்களின் திருப்பணிக்காகவும், பாதுகாப்பிற்காகவும் நிதி அளிக்கும் அறநிலையங்களின் அல்லது எந்த ஒரு நபரின் நிதி உதவியைக் கொண்டும் ஆணையரால் பொது நல நிதி ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி பெறப்படும் தொகையைப் பொது நல நிதியாக ஏற்படுத்தி அத்தொகை தேவையேற்படும் திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்திட வழங்கப்படுகிறது.

**ஆலய மேம்பாட்டு நிதி**

உபரி நிதி மிக்க திருக்கோயில்களிலிருந்து மொத்தம் ரூபாய் ஐந்து கோடி பெற்று முதலீடு செய்யப்பட்டுள்ளது. இம்மூலதனத்திலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு ஒவ்வோர் ஆண்டும் அரசின் முன் அனுமதி பெற்றுப் பாடல் பெற்ற, மங்களாசாசனம் செய்யப் பெற்ற, பழமையான மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களின் திருப்பணிகளுக்குத் திருப்பணி செய்திட நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. இந்நிதி ஆணையரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது.

[2001 ஆகஸ்ட் 28

## திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி

நமது கலாச்சார மரபுரிமையைக் கட்டிக்காக்க வேண்டும் என்னும் நோக்கில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமது சொந்த நிதியிலிருந்து ரூ.1,08,000/-ஐ அளித்து முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி என்ற நிதியை 5-08-1991-ல் உருவாக்கினார்கள். மேலும் இந்நிதிக்குத் தொண்டுள்ளம் கொண்ட நன்கொடையாளர்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் நன்கொடைகள் பெறப்பட்டன. இந்நிதி திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஆழ்வார்கள், நாயன்மார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற, பாடல் பெற்ற வரலாற்றுப் பெருமை வாய்ந்த தொன்மையான கலைச் சிறப்புகள் மிக்க திருக்கோயில்களின் திருப்பணிக்கு இந்நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது. 77 திருக்கோயில்களின் திருப்பணிக்கு சனவரி, 1992 முதல் சனவரி, 2001 வரை ரூ.366.89 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஒருகால பூஜை வைப்பு நிதி ஏற்படுத்த, திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.1300/- வீதம் இந்நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இதுவரை 8210 திருக்கோயில்களுக்கு ரூ.186.55 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் திருவிதாங்கூர் தேவஸ்தான நிருவாகத்தில் இருந்து தமிழக அறநிலையத் துறை நிருவாகத்திற்கு மாற்றப்பட்ட கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டை வட்டம் ஆகியவற்றில் உள்ள திருக்கோயில்களைப் பேணிப் பாதுகாப்பதற்காக இந்நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதி ஏற்படுத்தி, அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ.14 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

மேலும் இத்துறை ஆளுகையின்கீழ் இல்லாத ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்காகத் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/— வீதம் நிதியுதவி இந்நிதியிலிருந்தும், அரசு மானியத்திலிருந்தும் வழங்கப்படுகிறது. இதன்படி ஆண்டுதோறும் 100 திருக்கோயில்களுக்குத் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/— வீதம் திருப்பணிக்கென நிதியுதவு செய்யப்படுகிறது. இந்நிதி, அரசுக் கொடை மூலம் 50 திருக்கோயில்களுக்கு ரூ.12.50 இலட்சமும், திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி மூலம் 50 திருக்கோயில்களுக்கு ரூ.12.50 இலட்சமும் வழங்கப்பட்டு வருகிறது.



2001 ஆகஸ்ட் 28]

## கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணி நிதி

இத்திட்டம் பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் உபரி நிதியிலிருந்து ரூபாய் இரண்டு கோடி மூலதனமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது. இம்மூலதனம் மேற்கண்ட திருக்கோயில் நிர்வாகத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அம்மூலதனத்திலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு ஒவ்வோர் ஆண்டும் கிராமப்புறங்களில் உள்ள சிறிய திருக்கோயில்களின் திருப்பணிக்குத் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/— வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்தொகையைக் கொண்டு சிறுசிறு திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## பழமையான திருக்கோயில்களில் குடமுழுக்கு

தமிழகத்தில் நாயன்மார்களால் பாடல் பெற்ற திருக்கோயில்களும், ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருக்கோயில்களும் பெருமளவில் உள்ளன. இது தவிர, பழமையான பெரிய திருக்கோயில்களுக்கும் தமிழகம் அமைவிடமாக விளங்குகிறது. தமிழ்நாட்டில் கலை மற்றும் கலாச்சாரப்பெட்டகமாக விளங்கும் மேற்கண்ட பழமையான திருக்கோயில்களில் திருப்பணி செய்ய வேண்டிய அனைத்தையும் வருகின்ற மூன்றாண்டுகளுக்குள் செய்து குடமுழுக்கு நடத்திடும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## திருக்குளங்கள் திருப்பணி

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான மொத்தத் திருக்குளங்களில் 596 திருக்குளங்கள் புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளன. மேற்படி திருக்குளங்களில் தெப்பத் திருவிழா நடத்துவதற்கும், வறட்சிக் காலத்தில் ஏற்படும் தேவைகளுக்காகவும் இவற்றைப் புதுப்பிக்க வேண்டியது அவசியமாகும். இத்திருக்குளங்களைப் புதுப்பித்தல் மற்றும் பாதுகாத்தலைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்திச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(i) திருக்குளங்களில் உள்ளும் புறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

(ii) திருக்குளங்களைச் சுற்றி வேலி அல்லது சுற்றுச்சுவர் கட்டுதல்

(iii) தூர் எடுத்தல்

[2001 ஆகஸ்ட் 28

(iv) திருக்குளங்களுக்கு மழை நீர் வருவதற்கு வழி ஏற்படுத்துதல்

(v) திருக்குளங்களில் உள்ள படிகளைப் பழுதுபார்த்தல்

**திருத்தேர்களைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்**

திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 515 மரத்தேர்கள் உள்ளன. அவற்றில் 120 திருத்தேர்கள் பழுதுபார்க்கப்பட வேண்டியுள்ளன. அவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமீபத்தில் சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான மிகப் பழமையான திருத்தேர், விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டது. இதற்கு மாற்றாக புதிய திருத்தேர் செய்ய ரூ.25 இலட்சம் திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இனி இது போன்ற நிகழ்வுகள் ஏற்படாமல் திருத்தேர்களைப் பாதுகாக்க தீப்பிடிக்காத தகடுகளால் கூரை மற்றும் சுற்றுப்புறம் அமைத்துப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவும், திருத்தேர்களின் மதிப்பிற்குரிய காப்பீடுகள் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திருக்கோயில்களில் அடிப்படை வசதிகள் செய்தல்**

**(அ) திருக்கோயில்களில் குடிநீர் வசதி**

திருக்கோயில்களுக்கு வரும் சேவார்த்திகள் அனைவருக்கும் திருக்கோயில்களில் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேவையான இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**(ஆ) கழிப்பிட வசதி**

திருக்கோயில்களுக்கு வரும் சேவார்த்திகள் பயன்படுத்தும்வண்ணம் நவீன கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்கவும், ஆண்கள், பெண்களுக்கெனத் தனித்தனியாக மேற்படி வசதிகளைச் செய்து கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**ஒருகால பூசைத் திட்டம்**

"விளக்கிட்டார் பேறு சொல்லின்
மெய்ஞ்ஞெறி ஞானமாகும்"

என்பது அப்பர் அடிகள் அருளவாக்கு.



2001 ஆகஸ்ட் 28]

ஒருகால பூசை முறையாக நடத்திட இயலாத நிதிவசதியற்ற திருக்கோயில்களுக்கு ஒரு கால பூசையினை முறைப்படி நடத்திட இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் பொதுமக்களை ஈடுபடுத்தும் நோக்கில் பொதுமக்கள் நன்கொடையாக ரூ.2500/- ஒரு திருக்கோயிலுக்கு அளித்தால், நிதிவசதியுள்ள திருக்கோயில்களின் உபரிநிதியிலிருந்து ரூ.20,000/-மும் திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து ரூ.1,300/—ம், ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1,200/—ம் வழங்கி அத்திருக்கோயிலின் பெயரில் ரூ.25,000/— நிரந்தர முதலீடு செய்யப்படும். அம்முதலீட்டிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து நாள்தோறும் ஒருகால பூசை நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி இதுவரை மொத்தம் 8242 திருக்கோயில்கள் பயனடைந்து வருகின்றன. ஒருகால பூசைகூட நடத்த இயலாமல் உள்ள திருக்கோயில்கள் கண்டறியப்பட்டு அத்தகைய அனைத்து திருக்கோயில்களிலும் ஒருகால பூசை நடத்தப்பட வேண்டும் என இவ்வரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டம் ஒரு வருடத்திற்குள் கண்டிப்பாகச் செயல்படுத்தப்பட வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு**

**உலோகத் திருமேனிகள் விவரம்**

| | | |
|---|---|---|
| திருக்கோயில்களில் உள்ள மொத்த திருமேனிகள் எண்ணிக்கை | - | 65,786 |
| 100 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை | - | 44,934 |
| 100 ஆண்டுகளுக்குக் குறைவானவை | - | 20,852 |
| தொல்பொருள் துறையில் பதிவு செய்யப்பட்டவை | - | 31,895 |

100 ஆண்டுகளுக்கு மேல் உள்ள உலோகத் திருமேனிகளில் 31,895 உலோகத் திருமேனிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 13,039 உலோகத் திருமேனிகள் பதிவு செய்ய விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருக்கோயில்களில் திருட்டு நடைபெறாமல் தடுக்கும்வண்ணம் இயன்ற அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது. திருக்கோயில்களில் கள்வர் எச்சரிக்கை மணிகளையும், இரும்புக் கதவுகளையும், தொட்டிப் பூட்டுகளையும் நிறுவுவதன் மூலம் திருட்டைத் தடுக்கப் பல முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

[2001 ஆகஸ்ட் 28

திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள் மிகவும் அரியவையாகவும், கலை நுணுக்கங்கள் மற்றும் புராதனத் தன்மை கொண்டவையாகவும் உள்ளன. இவற்றை அந்தந்தத் திருக்கோயில்களிலேயே பாதுகாக்கப் பல திருக்கோயில்களில் பாதுகாப்பு வசதியின்றி உள்ளதைக் கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட ஐந்து இடங்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன:

1. திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையம், (அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் வளாகம்) திருவாரூர்.

2. அருள்மிகு அகிலாண்டேசுவரி உடனுறை ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி.

3. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

4. அருள்மிகு காந்திமதி உடனுறை நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.

5. அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோயில், சேலம்.

உலோகத் திருமேனிகளின் பாதுகாப்பு மையங்களில் 2961 உலோகத் திருமேனிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மேலும் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், கும்பகோணம் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் பாதுகாப்பு மையங்கள் அமைக்க பொதுப் பணித் துறை மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### திருக்கோயில் பாதுகாப்புப் படை

திருக்கோயில்களிலுள்ள உலோகத் திருமேனிகள், நகைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களின் பாதுகாப்பிற்காக 1000 இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் 3000 முன்னாள் இராணுவத்தினரை நியமனம் செய்ய அனுமதிக்கப்பட்டது. காவல் துறையினரால் 889 இரண்டாம் நிலைக் காவலர்களும், 2781 முன்னாள் இராணுவத்தினர்களும் நியமனம் செய்யப்பட்டு பணியில் உள்ளனர். மேற்கண்ட காவலர்களின் பணிகளைக் கண்காணிக்கவும், பாதுகாப்பினைத் தீவிரப்படுத்தவும் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அலுவலகத்தில் ஒரு காவல் துறை கண்காணிப்பாளரும், மூன்று காவல் துறை ஆய்வாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



2001 ஆகஸ்ட் 28]

### கருணை இல்லம்

ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு, இருப்பிடம், கல்வி முதலியன அளிக்கும் நோக்கத்துடன் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் இயங்கும் திருக்கோயில்களில் கருணை இல்லங்கள் தொடங்கப்பட்டன. இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 37 திருக்கோயில்களில் 42 கருணை இல்லங்கள் நடத்தப்படுகின்றன. அவற்றில் 894 சிறுவர்களும், 459 சிறுமியர்களும் ஆக மொத்தம் 1353 சிறார்கள் பயன்பெற்று வருகின்றனர். இக்கருணை இல்லங்களுக்கான செலவில் 50 விழுக்காடு அந்தந்தத் திருக்கோயில் நிதியிலிருந்து செலவிடப்படுகிறது. 50 விழுக்காட்டிற்குச் சமூக நலத் துறை நிதியுதவி வழங்குகின்றது.

### திருக்கோயில்களால் நடத்தப்படும் கல்வி மற்றும் பிற நிறுவனங்கள்

தெய்வ நெறிகளைக் கடைப்பிடிக்கத் தேவையான கட்டுப்பாட்டினையும், கலாச்சாரம் மற்றும் சமயக் கோட்பாடுகளையும் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் சமூக நோக்கோடு திருக்கோயில்கள், சமயம் மற்றும் பொதுக் கல்வி தொடர்பான பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களை நடத்தி வருகின்றன. அவற்றின் விவரம் கீழ் வருமாறு:

| | |
|---|---|
| 1. கல்லூரிகள் | 5 |
| 2. தொழில் நுட்பப் பயிலகங்கள் | 2 |
| 3. மேல்நிலைப் பள்ளிகள் | 12 |
| 4. உயர்நிலைப் பள்ளிகள் | 10 |
| 5. நடுநிலைப் பள்ளிகள் | 3 |
| 6. ஆரம்பப் பள்ளிகள் | 10 |
| 7. மெட்ரிகுலேஷன் பள்ளி | 1 |
| 8. நாதசுரம் மற்றும் தவில் பள்ளிகள் | 4 |
| 9. சித்த வைத்தியசாலைகள் | 9 |
| 10. கருணை இல்லங்கள் | 42 |
| 11. வேதாகம பாடசாலைகள் | 4 |
| 12. முதியோர் இல்லங்கள் | 3 |
| 13. தேவாரப் பாடசாலைகள் | 2 |
| 14. திவ்யபிரபந்த பாடசாலைகள் | 3 |
| 15. காதுகேளாதோர்—பேச இயலாதோர் பள்ளி | 1 |
| மொத்த நிறுவனங்கள் | 111 |

## இலவசத் திருமணம்

சமுதாயத்தில் நலிவுற்ற ஏழை எளிய மக்களுக்கு வசதிமிக்க திருக்கோயில்கள் சார்பாக இலவசத் திருமணங்கள் நடத்திட திட்டம் ஒன்று செயல்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தின் மூலம் திருமணம் ஒன்றுக்கு ரூ.3000/— செலவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஆண்டுதோறும் இலவசத் திருமணங்கள் நிதி வசதி மிக்க திருக்கோயில்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

## சேக்கிழார் விழா

தெய்வப் புலவர் சேக்கிழார் விழா ஆண்டுதோறும் நடைபெற ஏதுவாக ரூபாய் ஐந்து இலட்சம் திருக்கோயில் உபரி நிதியிலிருந்து மூலதனம் ஏற்படுத்தப்பட்டது. அம்முதலீட்டிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகையைக் கொண்டு சேக்கிழார் விழா ஆண்டுதோறும் சிறப்புற நடத்தப்பட்டு வருகிறது.

## திருஞானசம்பந்தர் இசை விழா

சமயக்குரவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தரின் நினைவைப் போற்றும் வகையில் "திருஞானசம்பந்தர் இசை விழா" இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் சார்பில் திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரிசுவரர் திருக்கோயிலில் இவ்வாண்டு முதல் நடைபெற்று வருகிறது. இவ்விழாவிற்கான செலவுத் தொகை "ஆணையர் பொது நல நிதியிலிருந்து" வழங்கப்பட்டு வருகிறது.

## தமிழில் வழிபாடு

திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு செய்வதை நெறிப்படுத்துவதற்குத் தக்க ஆலோசனை வழங்க சைவ, வைணவ ஆன்மீகப் பெரியோர்களையும், தமிழில் புலமை பெற்ற பெருமக்களையும் உள்ளடக்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டு தமிழில் கீழ்க்கண்ட அர்ச்சனை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன:

### 108 போற்றி நூல்கள்

1. அருள்மிகு விநாயகர் போற்றி
2. அருள்மிகு முருகவேள் போற்றி
3. அருள்மிகு சிவன் போற்றி





4. அருள்மிகு திருமால் போற்றி
5. அருள்மிகு தென்முகக் கடவுள் போற்றி
6. அருள்மிகு நடராஜர் போற்றி
7. அருள்மிகு உமையம்மை போற்றி
8. அருள்மிகு கோதண்டராமர் போற்றி
9. அருள்மிகு தாயார் போற்றி
10. அருள்மிகு துர்க்கை அம்மன் போற்றி
11. அருள்மிகு காளியம்மன் போற்றி
12. அருள்மிகு மாரியம்மன் போற்றி
13. அருள்மிகு அனுமன் போற்றி
14. அருள்மிகு நவகோள்கள் போற்றி

### 1008 போற்றி நூல்கள்

1. அருள்மிகு விநாயகர் போற்றி
2. அருள்மிகு சிவன் போற்றி அச்சில் உள்ளது.
3. அருள்மிகு முருகன் போற்றி அச்சில் உள்ளது.

## தல வரலாறு மற்றும் தல புராணம்

திருக்கோயில்களின் சிறப்புகள், பெருமைகள், வரலாற்று முக்கியத்துவங்கள், கல்வெட்டுச் செய்திகள் மற்றும் புராண வரலாறுகள் ஆகியவற்றை மக்கள் அறியும் வண்ணம் திருக்கோயில்களில் தல வரலாறுகள் மற்றும் தல புராணங்கள் வெளியிடப்படுகின்றன. இதுவரை 1711 தல வரலாறுகளும், 9 தல புராணங்களும், 2 பிள்ளைத் தமிழ் மற்றும் 2 கலம்பக நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் தல வரலாறு மற்றும் தல புராண நூல்களை வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## ஆகம மற்றும் இதர நூல்கள் தமிழில் வெளியிடுதல்

(i) வடமொழியில் உள்ள ஆகம சாஸ்திரங்களைத் தமிழில் அறியும் வண்ணம் முதற்கட்டமாக "உத்ரகாமிக ஆகம நூல்" தமிழில் மொழிபெயர்ப்பு செய்து வெள்ளியிடப்பட்டது.

(ii) "ஆலய நிர்மாண பிம்ப லட்சண சிற்பநூல்" தமிழில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(iii) கிராமப் பூசாரிகள் வழிபாட்டு முறைகளை அறிந்துகொள்ளும் வண்ணமும், தமிழில் வழிபாடு செய்வதற்கு ஏதுவாகவும் "பூசாரிகள் வழிபாட்டுப் பயிற்சி நூல்" தமிழில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## பட்டயப் பொறியாளர் அங்கீகாரம்

திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்திட மதிப்பீடுகள் தயாரித்தளிப்பதில் தொய்வு ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை ஆகியவற்றில் பணியாற்றி ஓய்வுபெற்ற பொறியாளர்களைப் பட்டயப் பொறியாளர்களாக (Chartered Engineers) அங்கீகாரம் செய்யப்படுகிறது. இத்துறை மூலம் அங்கீகாரம் அளிக்கப்படும் பட்டயப் பொறியாளர்கள் திருக்கோயிலுக்குத் தேவையான மதிப்பீடுகள் தயாரித்து அளிப்பதை அங்கீகாரம் செய்திட வழிவகுக்கப்பட்டுள்ளது. இதுவரை 65 பட்டயப் பொறியாளர்கள் அங்கீகாரம் பெற்றுள்ளனர்.

## ஸ்தபதிகள் அங்கீகாரம்

திருக்கோயில்களில் திருப்பணி செய்யப்படும்போது திருக்கோயில் அமைப்பு முறை, ஆகம சாஸ்திரங்களின்படியும், கலை நுணுக்கம் உள்ள வேலைப்பாடுகளுடனும் செய்திட ஸ்தபதிகள் உதவிபுரிகின்றனர். கண்காணிப்புப் பொறியாளர் நிலையில் ஸ்தபதி ஆலோசகர் நியமிக்கப்பட்டு மேற்கூறியவை பரிசீலிக்கப்பட்டும், கண்காணிக்கப்பட்டும் வருகின்றன. மதிப்பீடு தயாரிப்பதில் உதவி புரிய ஏதுவாகச் சிற்பக் கலையில் பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு பெற்றவர்களையும், வழிவழியாக இத்தொழிலில் ஈடுபட்டு அதன்வாயிலாக கற்றறிந்தோர்களையும் ஸ்தபதிகளாக அங்கீகாரம் செய்து திருப்பணி வேலைகளை ஊக்கப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



## சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து

வசதியுடைய திருக்கோயில்களில் சுதந்திரத் திருநாள் மற்றும் பேரறிஞர் அண்ணா நினைவு நாள் ஆகிய நாட்களில் அனைத்துச் சமுதாய மக்களும் ஏற்றத்தாழ்வு இன்றிப் பங்குபெறும் வகையில் திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன.

## புத்தொளிப் பயிற்சித் திட்டம்

திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியர்கள் மற்றும் ஓதுவார்கள் ஆகியோர் தங்கள் பணிகளைத் திறம்பட செய்ய ஏதுவாக 1991 ஆம் ஆண்டு "புத்தொளிப் பயிற்சித் திட்டம்" தொடங்கப்பட்டு செம்மையுடன் நடைபெற்று வந்தது. கடந்த ஆண்டுகளில் தொய்வு ஏற்பட்டதை நிவர்த்தி செய்து இத்திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்க முடிவு செய்யப்பட்டது. புத்தொளிப் பயிற்சித் திட்டம் ஒவ்வொரு உதவி ஆணையர் பிரிவிலும் முக்கியத் திருக்கோயில்களைத் தெரிவு செய்து நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 17—7—2001 அன்று 25 திருக்கோயில்களில் புத்தொளிப் பயிற்சி தொடங்கி வைக்கப்பட்டது.

## திருக்கோயில்களில் நாதசுர இசைப் பணியாளர்கள் நியமனம்

நிதிவசதி இல்லாத காரணத்தால் நாதசுர இசை பல பாடல்பெற்ற மற்றும் மங்களாசாசனம் செய்யப்பெற்ற வரலாற்றுப் புகழ்வாய்ந்த பழமையான திருக்கோயில்களில் கால பூஜை மற்றும் திருவிழாக்களின்போது இசைக்கப்படுவது குறைந்து வருவதைக் கருத்தில்கொண்டு நாதசுரம், தவில் மற்றும் தாள இசைக் கலைஞர்களை நியமனம் செய்து முறையே ரூ.1000/—, ரூ.750/— மற்றும் ரூ.500/— வீதம் மாத ஊதியம் துறை மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென ரூபாய் ஒரு கோடி மூலதன முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை மூலம் மாத ஊதியம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 11 நபர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

## தமிழ்ப் புலவர்கள் நியமனம்

நிதிவசதி மிக்க திருக்கோயில்களில் திருமுறை, திவ்யபிரபந்தங்கள் பாடுதல், முற்றோதல் செய்தல், சொற்பொழிவுகள் செய்தல், சமயக் கருத்துகளைப் பரப்புதல், தல வரலாறு, தல புராணம் வெளியிட

[2001 ஆகஸ்ட் 28

நடவடிக்கை எடுத்தல் மற்றும் நூல் நிலையம் பராமரித்தல் ஆகிய பணிகளுக்காக 150 தமிழ்ப் புலவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அப்புலவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1500/— ஊதியமாக திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

### திருக்கோயில் இதழ்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மூலம் "திருக்கோயில்" என்ற பெயருடைய மாத தமிழ் இதழ் 1958 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்படுகிறது. இவ்விதழில் இந்து சமயம், திருக்கோயில்கள் மற்றும் ஆன்மீகம் குறித்துக் கட்டுரைகள் சிறந்த அறிஞர் பெருமக்கள் மற்றும் கற்றறிந்தோரால் எழுதப்பட்டு அனைவரும் பயன்பெறும் வகையில் வெளியிடப்படுகிறது.

### நிறைவுரை

கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் தென்காசி விசுவநாதர் ஆலயம் அமைத்து புகழ்கொண்ட அரிகேசரி பராக்கிரம பாண்டியன், திருக்கோயில்களைப் பாதுகாத்துப் பூசைகள் சரிவர ஆற்றித் திருப்பணிகள் புரிவோர் யாவர் ஆயினும், அவருடைய திருவடிகளைத் தம் தலைமேற்கொண்டு போற்றுவதாகக் கல்வெட்டில் கீழ்க்கண்டவாறு பாடல்களைப் பொறித்துள்ளார்:

"அன்பு பூண்டிதனைத்
திரிசேர் விளக்கெனக் காப்பார்
பொற்பாதம் என் சென்னியதே"

இக்கல்வெட்டுப் பாடல் உணர்த்துகின்ற கடமையுணர்வோடும், பொறுப்புணர்வோடும் திருக்கோயில்கள் மேம்பட, அறநெறி தழைத்தோங்க, அரிய பல திட்டங்கள் தீட்டி, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை செயல்பட்டு வருகிறது.



2001 ஆகஸ்ட் 28]

## இணைப்பு–IV

(555 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 50–சுற்றுலா

### 1. சுற்றுலாக் கொள்கை 2001-2002

உலகமயமாகும் இக்காலத்தில் சுற்றுலாத் தொழில் வளர்ச்சியுற வாய்ப்புகள் பெருகியுள்ளன. ஆண்டுக்கு ஆண்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துக் கொண்டே வருகிறது. சுற்றுலாத் தொழிலில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி இத்தொழில் மூலம் நாட்டிற்கு அன்னியச் செலாவணி ஈட்டுவதில் மூன்றாம் இடத்தில் உள்ளது. விமானம் மூலம் சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதில் சென்னை மூன்றாவது இடமாகும். சமீப காலத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சுற்றுலா முக்கிய பங்கு வகிக்கிறது. இத்தொழில் அதிக வேலை வாய்ப்பினையும், கணிசமான அன்னியச் செலாவணியையும் ஈட்டித் தருகிறது.

தமிழ்நாட்டில் முதன்மையான இடத்தில் இருந்த சுற்றுலாத் தொழில் கடந்த சில ஆண்டுகளில் வளர்ச்சி குன்றி வந்தது. சுற்றுலாத் தொழில் முதன்மையான இடத்தை அடையும் வகையில் தென்னகத்தின் நுழைவு வாயிலாகவும், இந்தியத் திருநாட்டின் முக்கியமான சுற்றுலா இடமாகவும் தமிழ்நாட்டில் மீண்டும் சுற்றுலா வளர்ச்சியை ஏற்படுத்த விழைகிறோம். தமிழ்நாட்டிற்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவல்ல இயற்கை வளமிக்க சுற்றுலாச் சிறப்பியல்புகள் பல்கிப் பரவிக் கிடக்கின்றன. ஆகையால் சுற்றுலா வளர்ச்சிக்குரிய கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், அரசு மற்றும் தனியார் கூட்டு முயற்சிக்கு உகந்த சூழலை உருவாக்கவும், சந்தைப் படுத்தத் தேவையான வழிமுறைகளைக் கையாளவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தீவிரமான விளம்பரம்தான் இத்தருணத்தின் அவசரத் தேவை.

சுற்றுலாத் துறை புதுப்பொலிவுடன் விளங்க, சுற்றுலா "புத்தொளி" ஊட்டும் வளர்ச்சிக்கு வழிவகைகள் செய்யப்படும் என்று பொது மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற உரிய வினை முறைத் திறம் (Strategy) மற்றும் தொழில்நுட்பம் கண்டறியப்படும். திட்டங்களைச் செயற்படுத்த, நடைமுறைப்படுத்தத் தேவையான யுக்திகள் கருத்தில் கொள்ளப்படும்.

[2001 ஆகஸ்ட் 28

இங்கிலாந்து, இலங்கை, கனடா, மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், பிரான்சு, ஜெர்மனி, ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகிய பத்து நாடுகளிலிருந்துதான் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வருகை தருகின்றனர். இந்நாடுகளில் உரிய விளம்பர மேம்பாட்டு முகாம் மற்றும் வெளி நாட்டில் சுற்றுலாவை சந்தைப்படுத்தத் தேவையான யுக்திகளைக் கையாண்டு தமிழ்நாட்டிற்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அழகிய கடற்கரையினையும், மலைவாசஸ்தலங்களையும், புராதனச் சின்னங்கள், பாரம்பரிய கட்டடங்களையும், வியக்க வைக்கும் வானுயர்ந்த கோபுரங்களையும், வனவிலங்கு புகலிடங்களையும், பாய்ந்தோடும் அருவிகளையும், புனிதத் தலங்களையும், பாரம்பரியமிக்க விழாக்களையும், நாவிற்கினிய உணவு வகைகளையும் தன்னகத்தே கொண்டு தமிழ்நாடு இந்தியாவில் ஒப்பற்ற வசீகரமான சுற்றுலா இடமாக விளங்குகிறது. பிற மாநிலங்களை ஒப்பு நோக்கும்போது இத்தகைய சுற்றுலாச் சிறப்பியல்புகள் இருந்தும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சியில் உரிய இலக்கை அடைய முடியவில்லை.

சுற்றுலாவின் முக்கியத்துவத்தை, சமூகப் பொருளாதார மேம்பாட்டில் சுற்றுலாவின் பங்கு, உள்ளூர் கைவினைப் பொருட்களின் வளர்ச்சி, அதன் மூலம் அரசு ஈட்டக்கூடிய வருவாய் ஆகியவற்றை உணர்ந்து சுற்றுலா வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தொடர்ந்து அதிக நிதி ஒப்பளிப்பு அளிக்கவும் சுற்றுலாத் தொழில் தனியார் முதலீட்டை ஊக்குவிக்கத் தேவையான ஊக்க உதவித் தொகையும், பிற சலுகைகள் அளிக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**2. இலக்கு**

தமிழ்நாட்டிற்கு வருகை தரும் தற்போதுள்ள 7 முதல் 9 விழுக்காடு வரையிலுள்ள சுற்றுலாப் பயணிகளின் வருகையை 10 முதல் 12 விழுக்காடு வரை உயர்த்துவது என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்டுள்ள இலக்கை எட்ட உரிய வழிவகைகளைச் செய்வதே இவ்வரசின் செயல் திட்டமாகும்.

**3. வினை முறைத் திறன்கள் ( Strategies )**

**அ) பொது வினை முறைத் திறன்கள் (General Strategies)**

சுற்றுலாத் தோழமையான கொள்கை, ஆண்டுதோறும் தொடர்ச்சியாக சுற்றுலா வளர்ச்சிக்குத் தெளிவான இலக்கை அளிக்கிறது.



2001 ஆகஸ்ட் 28]

சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பது மட்டுமல்லாது, அவர்களுக்குத் தேவையான சுகமான தங்கும் வசதிகளையும், தரமான உணவு வகைகளையும், தொந்தரவற்ற பயணத் திட்டங்களையும் வழங்குவதே தமிழ்நாட்டின் நோக்கமாகும். இக்குறிக்கோளை அடைய கீழ்க்காணும் வினை முறைத் திறத்தை செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது:—

1) அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் தரமான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி நிலை உயர்த்துதல்

2) தொன்மை மிக்க வளமான பண்பாட்டுப் பாரம்பரியத்தை விளம்பரப்படுத்துதல்.

3) சூழலியல் தோழமையான சுற்றுச் சூழலைப் பேணிக் காத்தல்.

4) நமது பாரம்பரியம் மிக்க பண்பாட்டினைப் பாதுகாப்பதோடல்லாமல், இத்தலைமுறையினருக்கு ஏற்றாற்போல் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளை மாற்றியமைத்தல்.

5) உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க புதிய யுக்திகளை நவீன தொழில்நுட்பத்தினைக் கையாண்டு உலகளவில் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளுதல்.

6) புகழ்பெற்ற தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு, இயற்கை வனப்புடன் கூடிய புதிய சுற்றுலாத் தலங்களைக் கண்டறிந்து அவற்றை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

7) துல்லியமான தகவல்களையும், சிறப்பான சேவையையும், சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்க மனித வள மேம்பாடு மற்றும் உரிய பயிற்சியும் அளித்தல்.

8) தனியார் தொழில் முனைவோரை சுற்றுலாத் தொழிலில் முதலீடு செய்ய ஊக்குவித்தல்.

9) சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு "சுற்றுலாக் காவலர்" பிரிவினை ஏற்படுத்துதல்.

10) மண்டலப் பொருளாதார வளர்ச்சியிலுள்ள ஏற்றத் தாழ்வைச் சரி செய்தல்.

11) தோழமை, தேசிய ஒருமைப்பாடு, உலக சகோதரத்துவம் ஆகியவற்றை சுற்றுலா (வளர்ச்சி) மூலம் வளர்த்தல்.

[2001 ஆகஸ்ட் 28

**ஆ)சந்தைப்படுத்தும் வினை முறைத் திறன்கள்(Marketing Strategies)**

சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கவும், சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும் மிகப் பெரிய விளம்பர மேம்பாட்டுப் பணிகள் கீழ்க்காணும் வழிகளில் செயற்படுத்தப்படும்.

1) பிற மாநிலங்களில் சுற்றுலா அலுவலகம் தொடங்குதல்

2) சந்தைப்படுத்த முகவர்களை பிற மாநிலங்களிலும், வெளி நாடுகளிலும் நியமித்தல்.

3) பிற மாநிலங்களிலும், வெளி நாடுகளிலும் விற்பனை முகவர்களை நியமித்தல்.

4) ஒலி—ஒளிக் காட்சிக்குரியவைகளை நவீன டிஜிட்டல் தொழில்நுட்ப முறையில் உருவாக்கப்படும்.

5) நவீன அச்சுத் தொழில்நுட்பத்தை மேற்கொண்டு, பல வண்ண சுவரொட்டி, விளம்பரப் பலகை, மடிப்பேடுகள் முதலியன தயாரிக்கப்படும்.

6) நவீன ஒலி—ஒளி வசதியுடன் கூடிய கலை விழாக்கள் நடத்தப்படும்.

7) உலகளவிலும், நம் நாட்டிலும் தினசரி, சஞ்சிகைகள், சுற்றுலா வழிகாட்டிப் புத்தகங்கள், செய்திச் சுவடிகளிலும் விளம்பரம் செய்யப்படும். சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக பல வண்ணக் கையேடுகள், வண்ணப்பட அட்டைகள் ஆகியவை தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு தயாரிக்கப்படும்.

8) உலகளவிலுள்ள கீழ்க்காணும் சுற்றுலாக் கண்காட்சிகளிலும், சுற்றுலாச் சந்தைகளிலும் பங்கேற்கப்பட உள்ளது.

| | | |
|---|---|---|
| 1) உலக சுற்றுலாச் சந்தை (I.T.B.) | — | பெர்லின் |
| 2) உலக சுற்றுலாச் சந்தை (W.T.M.) | — | லண்டன் |
| 3) பசிபிக் ஆசிய சுற்றுலாச் சங்கம் (P.A.T.A.) | — | சிங்கப்பூர் |
| 4) மொரிசியஸ் சுற்றுலாச் சந்தை | — | மொரிசியஸ் |



2001 ஆகஸ்ட் 28]

| | | |
|---|---|---|
| 5) தென் ஆப்பிரிக்க சுற்றுலாச் சந்தை | — | தென் ஆப்பிரிக்கா |
| 6) மலேசிய சுற்றுலாச் சந்தை/ஜப்பான் மலேசிய சுற்றுலா முகவர்களின் கூட்டமைப்பு | — | மலேசியா |
| 7) குவைத் சுற்றுலாச் சந்தை | — | குவைத் |
| 8) அமெரிக்க முகவர்களின் கூட்டமைப்பு | — | அமெரிக்கா |
| 9) சுவிஸ் சுற்றுலாச் சந்தை | — | சுவிட்சர்லாந்து |

கிழக்கு — மேற்கு நாடுகளுக்கு மத்தியில் சென்னை அமைந்துள்ளது. இதனால் அப்பகுதிகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை நல்ல முறையில் வரவேற்கிறது. சுற்றுலாச் சந்தைகளில் தொடர்ந்து கலந்து கொள்வதால், சுற்றுலா முகவர்களுடன் நல்லுறவை வளர்க்க இயலும். இதனால் சுற்றுலாவை வளர்க்க முடிகிறது.

9) தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா வளங்களைப் பற்றி எழுத, புதுப்பிக்க மற்றும் விளம்பரப்படுத்த இந்தியாவில் பிற மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பயண எழுத்தாளர்கள், இதழியலாளர்கள், பத்திரிகை நிருபர்கள், தொலைக்காட்சி நிருபர்கள் ஆகியோரை வரவழைத்து சுற்றுலாப் பயணத் திட்டம் நடத்தப்படும்.

10) உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க தீவிர விளம்பர முகாம் இந்தியா முழுவதும் நடத்தப்படும்.

11) மைய அரசு, பிற நிறுவனங்கள் மற்றும் பிற மாநிலங்களால் நடத்தப்படும் சுற்றுலா கருத்தரங்குகள் மற்றும் பொருட்காட்சிகளில் கலந்து கொள்ளுதல்.

**4. சுற்றுலாத் தலங்கள் (Tourism Products)**

**1. மலை வாசஸ்தலங்கள் :** தமிழ்நாட்டில் உள்ள முக்கியமான மலை வாசஸ்தலங்கள் உதகை, கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி முதலியன ஆகும். மேற்கூறிய மலை வாசஸ்தலங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் ஆண்டுதோறும் அதிக அளவில் வருகிறார்கள். இந்தப் பகுதிகளில் கூட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**2. கடற்கரைச் சுற்றுலா :** தமிழ்நாட்டில் மாமல்லபுரம், பூம்புகார், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் அழகிய கடற்கரைகள் உள்ளன. மேலும்

[2001 ஆகஸ்ட் 28

இவை பாரம்பரிய நகரங்களும் ஆகும். மாமல்லபுர சிற்பங்களும், குடவறைக் கோயில்களும் உலகப் புகழ் பெற்றவை. இவ்விடங்களில் உரிய கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**3. ஒலி—ஒளிக் காட்சி:** ஒலி—ஒளிக் காட்சி மாமல்லபுரம், காஞ்சிபுரம் மற்றும் தஞ்சை பெரிய கோயிலில் ஆரம்பிக்கப்படும். மதுரையில் திருமலை மன்னர் அரண்மனையில் நடைபெற்று வந்த ஒலி—ஒளிக் காட்சி விரைவில் திரும்ப ஆரம்பிக்கப்படும்.

**4. கலை விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகள்:** உலகம் முழுவதிலும் சுற்றுலாவை மக்கள் நல்லதொரு பொழுதுபோக்கு மற்றும் கல்விச் சாதனமாக கருதுகிறார்கள். இந்தக் கணினி யுகத்தில் மக்கள் உலகம் எங்கிலும் சுற்றுலாப் பயணம் மேற்கொள்கிறார்கள். இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களுடன் ஒப்பிடும்பொழுது தமிழ்நாடு அதன் வரலாற்றுச் சிறப்பு மிக்க கோயில்கள், பாரம்பரியம், கலாச்சாரம், கலை, விருந்தோம்பல் முதலியவற்றால் அதிக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க வாய்ப்புள்ளது.

தமிழ்நாட்டின் கலாச்சாரத்தை சுற்றுலாப் பயணிகள் நன்கு உணர்ந்து கொள்ளும் வகையில் தமிழ்நாடு முழுவதும் பல பண்டிகைகள் ஆண்டுதோறும் கீழ்க்கண்ட இடங்களில் கொண்டாடப்பட்டு வருகின்றன.

1. உதக மண்டலம்
2. கொடைக்கானல்
3. சுருளி அருவி
4. சிறுமலை
5. ஏலகிரி
6. கொல்லிமலை
7. ஏற்காடு
8. நாகப்பட்டினம் கடற்கரை
9. வால்பாறை
10. ஜவ்வாது மலை
11. பச்சமலை
12. சில்வர்•கடற்கரை
13. பாஞ்சாலங்குறிச்சி

முதல் விடுதலைப்போர் வீரனாகிய வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவு நாளன்று பாஞ்சாலங்குறிச்சியில் ஆண்டுதோறும் ஒரு சிறப்பு விழா நடத்தப்பட்டு வருகிறது. மேலும் பின்வரும் இடங்களில் சிறப்பு ஆன்மீக விழாக்கள் நடத்தப்படுகின்றன.



2001 ஆகஸ்ட் 28]

| | | |
|---|---|---|
| 1. சித்திரை முழு நிலா விழா | மனோரா | மே |
| 2. சித்திரை முழு நிலா விழா | பூம்புகார் | மே |
| 3. தேர்த் திருவிழா | திருவாரூர் | மே |
| 4. சித்திரைத் திருவிழா | திருநெல்வேலி | மே |
| 5. வேளாங்கன்னி மாதா விழா | வேளாங்கன்னி | ஆகஸ்ட்/ செப்டம்பர் |
| 6. ஆடிப்பெருக்கு விழா | பவானி கூடுதுறை | ஜூலை / ஆகஸ்ட் |
| 7. ஆடிப்பெருக்கு விழா | ஒகேனக்கல் | ஜூலை / ஆகஸ்ட் |
| 8. ஆடிப்பூரம் விழா | மேல்மருவத்தூர் | ஜூலை |
| 9. சுந்தூரி விழா | நாகூர் | ஆகஸ்ட்/ செப்டம்பர் |
| 10. சந்தனக் கூடு விழா | ஏர்வாடி | |

**அறுவடை விழாக்கள்**

| | | |
|---|---|---|
| 1. பொங்கல் திருவிழா | அனைத்து முக்கியச் சுற்றுலாத் தலங்கள் | ஜனவரி |
| 2. தேயிலை சுற்றுலா விழா | உதகை | ஜனவரி |
| 3. மாங்கனி விழா | கிருஷ்ணகிரி | ஜூன் |

**கலைத் திருவிழா**

| | | |
|---|---|---|
| 1. நாட்டியாஞ்சலி விழா | சிதம்பரம் | பிப்ரவரி/மார்ச் |
| 2. நாட்டிய விழா | மாமல்லபுரம் | ஜனவரி/ பிப்ரவரி |

**வர்த்தக பொருட்காட்சி / கண்காட்சி**

| | | |
|---|---|---|
| 1. சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சி | சென்னை | ஜனவரி முதல் மார்ச் வரை |

[2001 ஆகஸ்ட் 28

| | | |
|---|---|---|
| 2. உலக சுற்றுலா தினம் | அனைத்து சுற்றுலா அலுவலகங்கள் (ம) சுற்றுலாத் தகவல் மையங்கள் | செப்டம்பர் |
| 3. அரசுப் பொருட்காட்சிகள் | சேலம், கோவை, மதுரை | ஏப்ரல், ஜுன் |

இது தவிர குற்றாலத்தில் சாரல் விழாவும் பாலமதியில் சாரல் விழாவும் ஆண்டுதோறும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்க ஜுலை மாதத்தில் கொண்டாடப்படுகிறது.

2001—2002—ல் இத்தகைய விழாக்கள் பிரபலமடையாத சுற்றுலாத்தலங்களில் நடத்தப்பட்டு அந்த இடங்கள் பிரபலமாக்கப்படும். மேலும் ஆண்டு தொடக்கத்தில் இத்தகைய விழாக்கள் நடைபெறும் கால விவரப் பட்டியல் ஒன்று தயாரித்து உலகமெங்கிலும் விளம்பரப்படுத்தப்படும். இதனால், சுற்றுலாப் பயணிகள் தங்கள் பயணத் திட்டத்தில் இந்த விழாக்களைச் சேர்த்துக் கொள்ள ஏதுவாக இருக்கும்.

## 5. ஆகாயச் சுற்றுலா

அதிக அளவில் செலவு செய்யக்கூடிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள வசதிக்காக ஹெலி—டாக்ஸி சேவையை அறிமுகப்படுத்தும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இத்துடன் ஹேண்—கிளைடிங், ஆகாயக் கப்பல் முதலிய சாகச விளையாட்டுக்கள் தொடங்கப்படும். இத்திட்டம் குறித்து விரிவான அறிக்கை மைய அரசு விரும்பியவாறு ஒரு முகமை மூலம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தனியார் உதவியுடன் செயலாக்கப்படும். மாநில அரசு இத்திட்டத்திற்குத் தேவையான உதவிகளை அவ்வப்போது செய்து தரும்.

## 6. படகு சவாரி

தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் படகு சவாரி செய்ய வசதிகள் உள்ளன.

1. முட்டுக்காடு
2. கொடைக்கானல் ஏரி



2001 ஆகஸ்ட் 28]

3. உதகை ஏரி
4. ஏற்காடு ஏரி
5. பிச்சாவரம் ஏரி
6. பைகாரா ஏரி
7. குற்றாலம் ஏரி

மேற்கூறிய படகு இல்லங்கள் தேவையான கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தப்படும். சுற்றுலாப் பயணிகளின் தேவையை முன்னிட்டு புதிய படகுகள் வாங்கப்படும்.

### புதிய படகுக் குழாம்

கீழ்க்கண்ட இடங்களில் புதிய படகுக் குழாம் அமைக்கப்படும்.

1) சென்னை அடையாறு கோட்டூர்புரம் பாலம் அருகில்
2) பழவேற்காடு
3) ஆலம்பரக் கோட்டை (மரக்காணம் அருகில்)
4) நயினார்குளம், திருநெல்வேலி

## 7. சாகசச் சுற்றுலா

எந்த ஒரு சுற்றுலாத் தலத்திற்கும் வருகைதரும் சுற்றுலாப் பயணிகளில் சுமார் 40%, 15 முதல் 35 வயது வரை உள்ள இளைஞர்களாக இருப்பார்கள். இந்த இளைஞர்கள் தங்கள் கல்வி நிறுவனங்கள் மூலம் சுற்றுலாப் பயணமாக வருகைதரும்பொழுது சாகசச் சுற்றுலாவில் ஈடுபட விரும்புகிறார்கள். இந்த இளைஞர்களின் ஆர்வத்தை மனதிற் கொண்டு மத்திய அரசு நிதி உதவி மற்றும் வனத் துறையின் ஒத்துழைப்புடன் மலை ஏறுதல், மலைப் பாதையில் நடத்தல், பாறையில் ஏறுதல் போன்ற சாகச விளையாட்டுக்களுக்கு பூர்வாங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான மலைப் பாதைகள் மற்றும் மலைப் பகுதிகள் கண்டறியப்பட்டு மேம்படுத்தப்படும்.

## 8. வன விடுதிகள்

வனத் துறையுடன் கலந்தாலோசித்து வன விடுதிகள் அமைக்க ஏதுவான இடங்கள் தெரிவு செய்யப்படும். இந்த விடுதிகள் அமைப்பு, நடத்துதல் மற்றும் பராமரிப்பு முழுவதும் வனத் துறை கட்டுப்பாட்டில் இருக்கும். தனியார் நிறுவனமும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்.

[2001 ஆகஸ்ட் 28

### 9. வன விலங்குச் சரணாலயங்கள்

முதுமலை, முண்டந்துறை மற்றும் களக்காடு வனவிலங்குச் சரணாலயங்களில் சுற்றுலாப் பயணிகளுக்கு அதிக வசதிகள் செய்துதரப்படும்.

### 10. பறவைகள் சரணாலயங்கள்

வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் வசதிகள் மேம்படுத்தப்பட்டு, இது குறித்து அதிக விளம்பரம் செய்யப்படும்.

### 11. கிராமியச் சுற்றுலா

இது ஒரு புதிய சுற்றுலாத் திட்டம். நமது நாட்டின் உயர்ந்த கலாச்சாரம், கலை, வீர விளையாட்டுகள், கடவுள் வழிபாடு, கைவினைப் பொருட்கள், மூலிகை மருத்துவம் ஆகியவை கிராமங்களில் தான் பாதுகாத்து போற்றப்படுகின்றன. இந்த சிறப்பம்சங்களை வெளிக்கொணர்வதும், நமது கலாச்சாரத்தின் உயரிய பண்புகளை வெளி உலகிற்கு உணர்த்துவதும் கிராமியச் சுற்றுலாவின் நோக்கமாகும். கிராமக் கோயில்கள், ஏரிகள் மற்றும் நிலச்சீரமைப்பைப் புனரமைப்பது மட்டுமல்லாது கிராமங்களில் அடிப்படை வசதிகளை கிராமியச் சுற்றுலா ஏற்படுத்துகிறது. இதனால், கிராமங்கள் பொலிவு பெறுவதோடு, வேலை வாய்ப்பையும், பொழுதுபோக்கையும் உள்ளூர் மக்களுக்கு வழங்குகின்றன. ஏற்கெனவே திருநெல்வேலி மாவட்டம்—கத்தமல்லி, மதுரை மாவட்டம் — திருவாதவூர், காஞ்சிபுரம் மாவட்டம் — சிறுங்குன்றம், திருவண்ணாமலை மாவட்டம் — புரிசை ஆகிய கிராமங்கள் சுற்றுலா வளர்ச்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணிகள் இவ்வாண்டு மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### 12. சுற்றுச்சூழல் சுற்றுலா

சுற்றுச்சூழல் போற்றும் சுற்றுலா என்பது "இயற்கை மாசுபடாத பகுதிகளில் அப்பகுதிகளைப் பற்றி படித்துணரும், இயற்கை வளங்களைக் கண்டு களித்து அங்குள்ள தாவர வளங்கள், வனவிலங்குகள், தனித்தன்மை வாய்ந்த செல்வங்கள் ஆகியவற்றை அறியும் நோக்கத்துடன் பயணம் செய்வதே" என உலக சுற்றுலா நிறுவனம் அறிவித்துள்ளது. சுற்றுச்சூழல் சுற்றுலாவிற்கு இயற்கைச் சூழல் முக்கியமானதாகும்.

சுற்றுலாப் பயணிகளில் 25 சதவிகிதத்தினர் இயற்கை வளமிக்க மலை வாழிடங்கள், கடற்கரைப் பகுதிகள், வனவிலங்குச் சரணாலயங்கள்,



2001 ஆகஸ்ட் 28]

நீர்வீழ்ச்சிகள் முதலிய இடங்களைப் பார்ப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். நாட்டிலுள்ள ஒன்பது இயற்கை வளமிக்க பகுதிகளில் இரண்டு (நீலகிரி மற்றும் மன்னார் வளைகுடா) தமிழ்நாட்டில் உள்ளன.

இப்பகுதிகளில் இயற்கை எழிலைப் பாதுகாத்து சுற்றுலா வளர்ச்சிகளை மேற்கொள்ள சுற்றுலாத் துறை விரும்புகிறது. மேலும், சுற்றுலாப் பயணிகள் வருகையால் இப்பகுதிகளில் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ள சுற்றுலாத் துறை விரும்புகிறது.

சுற்றுலாத் துறை மேற்கொள்ளவிருக்கும் சுற்றுச்சூழல் சுற்றுலா வளர்ச்சிகளில் ஒன்று சென்னையிலிருந்து 60 கி.மீ. தொலைவிலுள்ள பழவேற்காடு ஏரிப் பகுதியாகும். மற்றவை இராமேசுவரத்திற்கருகிலுள்ள குருசடை தொகுதித் தீவுகள், செங்கல்பட்டுக்கருகிலுள்ள கொளவாய் ஏரி மற்றும் சிதம்பரத்திற்கருகிலுள்ள பிச்சாவரம் ஆகியனவாகும்.

வனத் துறையுடன் கலந்தாலோசித்து மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் சுற்றுலா வளர்ச்சிகள் மேற்கொள்ள புதிய சுற்றுச்சூழல் சுற்றுலாப் பகுதிகள் கண்டறியப்படும்.

### 13. ஆன்மீகச் சுற்றுலா

தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சி ஆன்மீகத்தை மையமாகக் கொண்டுள்ளது. வானுயர்ந்த கோபுரங்களை (ராஜ கோபுரங்கள்) உலகின் வேறு எங்கும் காண இயலாது. முற்காலத்தில் அரசர்களாலும், மகரிஷிகளாலும் மாபெரும் பாங்குடன் இந்த பிரம்மாண்டமான கோபுரங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கோயில்கள் நமது மாநிலத்தின் உயரிய கலாச்சாரத்தை வெளிப்படுத்தும்முகமாக, ஆகம சாஸ்திரத்தின்படி, கோவில் கட்டடக்கலை, கலை வேலைப்பாட்டுடன் கூடிய கல்வெட்டுக்கள், மரச்சிற்பங்கள், வியக்கத்தக்க ஓவியங்கள் அகியவற்றுடன் கட்டப்பட்டுள்ளன. இக்கோபுரங்கள் சுற்றுலாப் பயணிகளுக்கு வாழ்நாள் முழுமைக்கும் மறக்க முடியாத அனுபவத்தைத் தரும் கலைப் பொக்கிஷங்களாகும். இத்தகு சிறப்பு வாய்ந்த கோயில்கள் நம் நாட்டிலிருந்தும், வெளி நாட்டிலிருந்தும் வரும் அதிகமான சுற்றுலாப் பயணிகளை பெரிதும் ஈர்க்கின்றன. வெளி மாநிலங்களிலிருந்தும், இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்சு, ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்தும் வரும் சுற்றுலாப் பயணிகள் கோயில் நகரங்களான திருச்சிராப்பள்ளி, மதுரை, தஞ்சாவூர், கும்பகோணம் மற்றும் காஞ்சிபுரம் ஆகியவற்றைப் பார்த்து மகிழ்கின்றனர். இக்கோயில்கள் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதால் சுற்றுலாத் துறை, கோயில்

[2001 ஆகஸ்ட் 28

பகுதிகளில் சுற்றுலாத் திட்டங்களைச் செயல்படுத்தும் தருணத்தில் இந்து சமய அறநிலையத் துறையுடன் இணைந்து செயல்படுகிறது. சுற்றுச்சூழலுக்கு பங்கம் விளைவிக்காமல், இந்து சமய அறநிலையத் துறையைக் கலந்தாலோசித்து, சுற்றுலாப் பயணிகள் மற்றும் யாத்திரிகர்களுக்கு அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது

**14 பண்பாட்டுச் சுற்றுலா**

மைய அரசு கீழ்க்காணும் இடங்களை சுற்றுலாத் தலங்களாகவும், புனிதத் தலங்களாகவும் அறிவித்துள்ளது.

| சுற்றுலாத் தலங்கள் | புனிதத் தலங்கள் |
|---|---|
| கன்னியாகுமரி | மதுரை |
| மதுரை | நாகப்பட்டினம் |
| மாமல்லபுரம் | நாகூர் |
| உதகமண்டலம் (ஊட்டி) | பழனி |
| இராமேசுவரம் | வேளாங்கன்னி |
| தஞ்சாவூர் | இராமேசுவரம் |
| திருச்சிராப்பள்ளி | தஞ்சாவூர் |
| தரங்கம்பாடி | திருவண்ணாமலை |

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதன்படி 38 பாரம்பரிய கோயில் நகரங்களின் தொன்மை, திட்டமிடப்படாத நகர வளர்ச்சியால், பொலிவு குன்றாத வண்ணம் நகர் (ம) ஊரமைப்புத் துறையின் ஒத்துழைப்புடன் பாதுகாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாரம்பரிய நகரங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. காஞ்சிபுரம் | 2. சிதம்பரம் | 3. இராமேசுவரம் |
| 4. ஸ்ரீரங்கம் | 5. மாமல்லபுரம் | 6. ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 7. தஞ்சாவூர் | 8. கும்பகோணம் | 9. கங்கை கொண்டசோழபுரம் |
| 10. பூம்புகார் | 11. மதுரை | 12. பழனி |



2001 ஆகஸ்ட் 28]

| | | |
|---|---|---|
| 13. திருச்செந்தூர் | 14. திருத்தணி | 15. கன்னியாகுமரி |
| 16. திருவண்ணாமலை | 17. செஞ்சி | 18. செட்டிநாடு |
| 19. வாலிநோக்கம் | 20. தரங்கம்பாடி | 21. நாகூர் |
| 22. வேளாங்கன்னி | 23. குற்றாலம் | 24. ஸ்ரீபெரும்புதூர் |
| 25. திருநெல்வேலி | 26. திருச்செங்கோடு | 27. காரைக்குடி |
| 28. பேரூர் | 29. பவானி | 30. பிச்சாவரம் |
| 31. மருதூர் | 32. குறிஞ்சிப்பாடி | 33. திருமயம் |
| 34. சித்தன்னவாசல் | 35. ஆவுடையார் கோயில் | 36. பத்மநாபபுரம் |
| 37. கொளச்சல் | 38. மரக்காணம் | |

இந்த இடங்களில் பேருந்து நிறுத்துமிடம், பேருந்து நிலையம், செய்திப் போக்குவரத்து வசதி, விளக்குகள், குடிநீர், சாக்கடை வசதி, கடைகள் போன்ற சுற்றுலா வசதிகள் மாநில அரசு மற்றும் மைய அரசு நிதியுதவித் திட்டத்தில் மேற்கொள்ள நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டு உள்ளன.

கீழ்க்கண்ட முக்கிய வழிபாட்டுத் தலங்களில் பெருமளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர் :—

**தேவாலயங்கள்**

1. வேளாங்கன்னி ஆலயம், நாகப்பட்டினம்
2. மணப்பாடு ஆலயம், தூத்துக்குடி
3. சாந்தோம் ஆலயம், சென்னை

**பள்ளிவாசல்கள்**

1. நாகூர் தர்கா, நாகப்பட்டினம்
2. ஆத்தங்கரைப் பள்ளிவாசல், திருநெல்வேலி
3. ஏர்வாடி தர்கா, இராமநாதபுரம்

மேற்கண்ட வழிபாட்டுத் தலங்களில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும், நட்சத்திர விடுதிகள் கட்டவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உடல்நலம் பேணுதல் (ஹோமியோபதி, இயற்கை மருத்துவம் முதலிய) அறிவியல் மற்றும் கல்வியோடு சுற்றுலாவும் முக்கியத்துவம் பெற பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

## 15. புராதனச் சின்னங்கள்

மைய அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை மற்றும் மாநில அரசு தொல்லியல் துறையின் பராமரிப்பில் பல புராதனச் சின்னங்கள் உள்ளன.

மைய அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் பராமரிப்பில் உள்ள மொத்த புராதனச் சின்னங்கள் : 241

மாநில அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் பராமரிப்பில் உள்ள மொத்த புராதனச் சின்னங்கள் : 83

மேலே குறிப்பிடப்பட்டுள்ள புராதனச் சின்னங்களில் கட்டிடக் கலை, ஓவியம், குடவறைக் கோயில்களுக்குப் பெயர் பெற்றவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்

தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில்

பத்மநாபபுரம் அரண்மனை

சித்தன்னவாசல் ஓவியம்

திருநெல்வேலியில் திருக்கருங்குழி கோயில்

காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில்

இவை சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கின்றன.

## 16. மாநாட்டுக் கூடம்

சென்னை—மாமல்லபுரத்திற்கிடையில் 1,500 இருக்கைகள் கொண்ட பெரிய பிரம்மாண்டமான மாநாட்டுக் கூடம் ஏற்படுத்தப்படும். இந்த மாநாட்டுக் கூடத்தில் தேசிய மற்றும் உலக அளவில் மாநாடுகள் நடத்தும் வகையில் மிகச் சிறந்த வசதிகள் செய்து தரப்படும். இந்த மாநாட்டுக் கூடம் கூட்டு முயற்சி அடிப்படையில் 500 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டு அதில் பின்வரும் வசதிகள் ஏற்படுத்தப்படும்.

1,000 அறைகள் கொண்ட ஐந்து நட்சத்திரத் தரமுடைய ஓட்டல், சிறிய மாநாட்டுக் கூடம், விற்பனைக் கூடம், டிஸ்னி லேண்ட், பண்பாட்டுக் கிராமம், கைவினைப் பொருட்கள் விற்பனைக் கூடம், குழந்தைகள் பூங்கா, கைத்தறிக் கண்காட்சி, அறிவியல் பூங்கா, நீச்சல்



குளம், வெளிநாட்டு மது அருந்துமிடம், திரையரங்கு, அதிக அளவில் வாகனங்கள் நிறுத்துமிடம், பெரிய அளவிலான கண்காட்சிக் கூடம் மற்றும் கலைக் கூடம் ஆகியன அமைக்கப்படும்.

இத்திட்டத்திற்கான மொத்த திட்ட மதிப்பீடு ரூ.1,000 கோடி ஆகும். உலகளவில் புகழ் பெற்ற திட்ட வல்லுநர்களைக் கொண்டு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்படும். இத்திட்டத்தினை மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் முடித்திட நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இத்திட்டத்திற்கான நிலங்களைத் தேர்ந்தெடுத்து, இதற்கான திட்ட மதிப்பீடுகள் தயாரித்து விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும். இம்மையத்தில் தமிழ்நாட்டில் வாழும் பழங்குடியினரின் வாழ்க்கை சித்தரிக்கப்படும். கூட்டு முயற்சிக்கு உதவ முன்வரும் நிறுவனத்திற்கு அரசு தேவையான உதவிகளைச் செய்யும்.

## 5. கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த செயல்முறைத் திட்டம்

சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான சுற்றுலாத் தகவல்களை ஒரே இடத்தில் வழங்க "தமிழ்நாடு சுற்றுலா வளாகம்" கட்டப்பட்டுள்ளது. இவ்வளாகம், மாநில அளவிலான சுற்றுலாத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும், ஒருங்கிணைந்த சுற்றுலா வளர்ச்சிக்கு மாநில நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுவதிலும் முனைப்பாக இருக்கும். மைய அரசின் மண்டலச் சுற்றுலா அலுவலகம், சென்னையிலுள்ள பிற மாநில சுற்றுலா அலுவலகங்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகம் ஆகியன தவிர சுற்றுலா இயக்ககமும் இவ்வளாகத்தில் இடம் பெற்றுள்ளன.

சுற்றுலாத் துறையின் பொறுப்பு, சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதோடு நின்று விடுவதில்லை. சுற்றுலாத் தலங்களில் சிறந்த கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது சுற்றுலாத் துறையின் தலையாய கடமையாகும். இதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு :—

### 1) மைய அரசு திட்டங்கள்

மைய அரசின் நிதியுதவித் திட்டத்திற்கு மாநில அரசும் நிதியுதவி அளிக்கிறது. மாநில அரசின் பரிந்துரையின் பேரில் மைய அரசு நிதியுதவி வழங்குகிறது. இத்துறை, மைய மற்றும் மாநில அரசின் நிதியுதவியுடன் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது.

மைய அரசின் உதவியுடன் நடைபெற்று வரும் திட்டங்களின் விவரம் இணைப்பு—I ல் உள்ளது.

[2001 ஆகஸ்ட் 28

**2) 2001–2002 ஆம் ஆண்டிற்கு மைய அரசு நிதியுதவிக்கு முன்னுரிமைப் படுத்தப்பட்டுள்ள திட்டங்கள்**

2001—2002 ஆம் ஆண்டிற்கு மைய அரசு நிதியுதவிக்கு ரூ.801 இலட்சங்கள் மதிப்பீட்டிலான திட்டங்களை முன்னுரிமைப்படுத்தியுள்ளது. திட்ட விவரங்கள் இணைப்பு—2—ல் உள்ளது.

மாநில அரசு மூலம் மைய அரசிற்கு பிரேரணை அனுப்புவதற்கு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்தும் முழுமையான திட்டப் பிரேரணை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**3)2001–2002 ஆம் ஆண்டிற்கு மாநில அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள பகுதி–2 திட்டங்கள் இணைப்பு–3 ல் உள்ளது.**

மேற்காணும் திட்டங்களை 2001—200 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்கும், மாநில அரசு நிதியுதவி அளிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் சுற்றுலாத் துறையின் மூலம் எடுக்கப்பட்டு வருகின்றன.

**4) கடற்கரைப் பகுதி**

தமிழ்நாட்டில் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரைப் பகுதி உள்ளது. ஆனால் இப்பகுதியை மேம்படுத்த இதுவரை ஒரு பெருந்திட்டம் தயாரிக்கப்படவில்லை. இப்பகுதியை மேம்படுத்த இதுவரை எடுத்துள்ள முயற்சிகள் ஓரளவு பலன் அளித்துள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கருத்தின்படி கிழக்கு கடற்கரை பகுதியை ஒரு நல்ல திட்டத்தின் அடிப்படையில் மேம்படுத்த முயற்சிகள் எடுக்கப்படும். இந்தப் பகுதியை மேம்படுத்த செயல்படுத்தவிருக்கும் திட்டங்களை அமல்படுத்தும்பொழுது அப்பகுதியில் வாழும் மக்களின் சமூகப் பொருளாதார நிலைமை மற்றும் கடற்கரைப் பகுதி வரன்முறைகளைக் கருத்திற் கொண்டு மேல்நடவடிக்கை எடுக்கப்படும். சென்னைக்கும் புதுவைக்கும் இடையே உள்ள சிறப்பு சுற்றுலாப் பகுதியில் சுற்றுலாவை மேம்படுத்துவற்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் தனியார் திட்டங்கள் ஊக்குவிக்கப்படும். இத்திட்டங்களை அரசு அளவில் பரிசீலிக்க ஒற்றைச் சாளர முறை (Single Window Clearance) ஒன்று வகுக்கப்படும். இதன் பொருட்டு அரசு அளவில் அமைக்க உத்தேசித்துள்ள குழுவில் சுற்றுலாத் துறை, வனத் துறை, மாசு கட்டுப்பாட்டுத் துறை, வருவாய்த் துறை மற்றும் நிதித் துறையில் உள்ள அலுவலர்கள் இடம் பெறுவார்கள். இத்தகைய திட்டம் மூலம் சுற்றுலாத் திட்டங்கள் விரைவில் செயல்படுத்தப்பட வாய்ப்புள்ளது.



2001 ஆகஸ்ட் 28]

**6. சேவைப் பகுதி (Service Sector)**

**1. சுற்றுலாப் பயணத் திட்டம்**

அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சிறப்புமிக்க 1/2 நாள் முதல் 14 நாட்கள் வரையிலான சுற்றுலாப் பயணத் திட்டம், பீகார், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், மகாராட்டிரம் தவிர தென் மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கோவா, பாண்டிச்சேரி மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களை உள்ளடக்கியது.

ஆ) மாநில அரசுப் பணியாளர்கள் பயன்பெறும்வகையில் விடுப்பு பயணச் சலுகைக்கென சிறப்பு பயணத் திட்டத்தை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்துகிறது.

இ) கோடைக் கால சிறப்புப் பயணத் திட்டம் ஊட்டி மற்றும் கொடைக்கானலுக்கு இன்பச் சுற்றுலா செல்ல விரும்புவோருக்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தொடங்கியுள்ளது.

ஈ) 26 வகையான நிரந்தரப் பயணத் திட்டங்களைத் தவிர மலேசியா, தென் ஆப்பிரிக்கா மற்றும் மொரிசியஸ் ஆகிய நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கென சிறப்புப் பயணத் திட்டங்களைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்துகிறது.

உ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களின் நிலையை உயர்த்துவதால், மலேசியாவிலிருந்து சமீபத்தில் வரவிருக்கும் மலேசிய சுற்றுலாப் பயணிகளின் சிறப்புப் பயணத் திட்டத் தேவை கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. மரபுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் சிறப்புச் சுற்றுலாப் பயணத் திட்டங்களை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**2. புதிய சுற்றுலாப் பயணத் திட்டம்**

மைய தொல்லியல் துறை, மாநில தொல்லியல் துறை, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து பயணத் திட்டங்கள் முழுமையாக மாற்றியமைக்கப்படும்.

இதுவரை கண்டறியப்படாத அல்லது சற்றே தெரிந்த சுற்றுலாத் தலங்களையும் இணைத்து, புதிய சுற்றுலாப் பயணத் திட்டம் ஏற்படுத்தப்படும். வெளிநாடுகளிலிருந்து வரும் கலையார்வம் மிக்கவர்கள், ஆன்மீகச் சுற்றுலாப் பயணிகள் மற்றும் உல்லாச சுற்றுலாப் பயணிகளுக்கென சிறப்பு வான்வழி சுற்றுலாத் திட்டம், வானூர்தி நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாச் சந்தை முகவர்களுடன் கலந்தாலோசித்து தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**3. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக போக்குவரத்துப் பிரிவை மேம்படுத்துதல்**

சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறந்த சேவையை வழங்கவும், அதிகமான சுற்றுலாத் தலங்களை இணைத்து சுற்றுலாப் பயணத் திட்டத்தை செயற்படுத்தவும், 2001—2002—ஆம் ஆண்டில் புதிய குளுமை வசதி கொண்ட சொகுசுப் பேருந்துகள் வாங்கவும், பழைய பேருந்துகளை மாற்றவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிய சுற்றுலாப் பயணத் திட்டங்கள் தொடங்கப்படும்.

**4. மனித வள மேம்பாடு – வழிகாட்டி மற்றும் மொழி பெயர்ப்பாளர்**

சரியான சுற்றுலாத் தகவல்களைச் சுற்றுலாப் பயணிகளுக்கு அவர்களுக்குத் தெரிந்த மொழியில் அளிப்பது மிகவும் அவசியமானதாகும். சுற்றுலாப் பயணிகள் ஆலயங்களுக்குச் செல்லும்போதும், பண்பாட்டு மையங்களுக்கும், நுண்கலை மையங்களுக்கும், தொல்பொருள் நினைவிடங்களுக்கும், வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களுக்குச் செல்லும் போதும், வழிகாட்டிகளின் உதவி தேவை. வழிகாட்டிகள் மிகச் சரளமாக பேசும் திறமை படைத்தவர்களாகவும், மொழி பெயர்த்துக் கூறும் திறமையுடையவர்களாகவும் இருக்க வேண்டும். அவர்கள் அன்புடனும் நாகரீகமாகவும் நடந்துகொள்பவராகவும் இருக்க வேண்டும்.

எனவே, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் சுற்றுலாப் பகுதிகளில் பயிற்சி பெற்ற வழிகாட்டிகள் அவசியமாக இருக்க வேண்டும். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து தொடக்கத்தில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய முக்கிய நான்கு இடங்களில் சுற்றுலா வழிகாட்டிகளுக்கான பயிற்சியை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.



இத் திட்டத்தினை சென்னையிலுள்ள அண்ணா மேலாண்மை நிறுவனம், மற்றும் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளியிலுள்ள பல்கலைக்கழகங்கள் மூலம் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2001—2002ல் தற்போதுள்ள வழிகாட்டிகளுக்குப் பயிற்சி அளிக்கவும், புதிய வழிகாட்டிகளை உருவாக்கவும் பயிற்சிகள் தொடங்கப்படும்.

**5. சுற்றுலா காவலர்கள்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சுற்றுலாப் பயணத் திட்டங்களில் பயணம் செய்யும் சுற்றுலாப் பயணிகளுக்குப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. இதேபோன்று இரயில், அரசுப் பேருந்துகள், விமானங்கள் போன்றவற்றில் பயணம் செய்யும்போது, அந்தந்த நிறுவனங்களால் சுற்றுலாப் பயணிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மேலே குறிப்பிட்டுள்ளவை மட்டுமல்லாது, பிற வழிகள் மூலமாக பயணம் செய்தாலும் பாதுகாப்பு உள்ளது. ஏனெனில், தனியார் நிறுவனங்களும் அரசின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டே செயல்படுகின்றன. இருந்தபோதிலும் பயணம் மட்டுமல்லாமல், தங்குமிட வசதி, உணவு ஆகியவற்றில் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்கு இடையூறு ஏற்படும்போது, அவர்கள் உள்ளூர்க் காவலரை உதவிக்கு நாடலாம். எனவே சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு, தனியாக சுற்றுலாக் காவலர் திட்டம் தொடங்கும் திட்டம் உள்ளது. விமான நிலையம், இரயில் நிலையம் ஆகிய இடங்களில் இடைத் தரகர்கள் இல்லாமல் இருக்கும்வகையில் செய்வதும், பாரம்பரியமிக்க இடங்கள் மற்றும் ஆலயங்களிலும் பிச்சைக்காரர்கள் தொல்லை இல்லாமல் செய்வதும் அரசின் கடமையாகும். சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிலிருந்து திரும்பச் செல்லும்போது, அவர்கள் மனதில் இனிய நினைவுகள் நீங்கா இடம் பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் தமிழ்நாட்டைப் பற்றியும், நம் நாட்டைப் பற்றியும் நல்ல தகவல்களை எடுத்துக் கூறுவர். இந்தப் பயனை அடையும் வகையில்தான் 'சுற்றுலாக் காவலர் திட்டம்' தொடங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

**6. உணவாக்க—தொழில் நுட்பம்**

அண்மைக் காலமாக ஓட்டல் நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதோடு, அங்கு வழங்கப்படும் உணவு வகைகளின் தரமும் உயர்ந்து காணப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் புதிய ஓட்டல்களும், உணவகங்களும் தொடங்கப்படுகின்றன. தொழில்

[2001 ஆகஸ்ட் 28

முன்னேற்றம், அத்துடன் கூடிய சுற்றுலா வளர்ச்சி, ஓட்டல் தொழிலுக்கு ஓர் ஊக்கத்தை அளித்து வருகிறது. ஓட்டல் தொழிலுக்குப் பல்வேறு பிரிவுகளில் தகுதி படைத்த பயிற்சி பெற்ற பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். தரம் வாய்ந்த ஓர் ஓட்டல், ஓட்டல் வரவேற்பு, உணவு ஆக்கல், உபசரிப்பு, மனைக் காப்பு ஆகியவற்றில் பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

ஓட்டல் தொழிலுக்குத் தேவையான பல பிரிவுகளில் இளைஞர்களைப் பயிற்றுவிக்கும் நோக்கோடு, மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பப் பயிலகம், 1982—ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

1986—ம் ஆண்டு வரை இந்த நிறுவனத்திற்கு, மத்திய அரசு நிதி உதவியினை அளித்து வந்தது. அதற்குப் பிறகு தமிழக அரசே இந்த நிறுவனத்திற்கு முழு நிதி உதவியினையும் அளித்து வருகிறது. இந்த நிறுவனம் தற்போது சுற்றுலாத் துறையோடு ஒருங்கிணைந்து செயல்படுகிறது. மேலும், மூன்றாண்டுப் பட்டயப் படிப்புடன் ஓராண்டு சான்றிதழ் பயிற்சி வகுப்புகளையும், பின்வரும் பிரிவுகளில் இந்நிறுவனம் நடத்தி வருகிறது:—

1) ஓட்டல் வரவேற்பு மற்றும் கணக்குப் பிரிவு

2) உணவு ஆக்கல்

3) ரொட்டி மற்றும் கேக் தயாரித்தல்

4) உணவு பரிமாறுதல்

5) மனைக் காப்பு

தமிழ்நாடு அரசு, ஆண்டுதோறும் இந்நிறுவனத்திற்கு ரூ.11.00 இலட்சம் மானியமாக வழங்கி வருகிறது.

எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் மூலம் பல்வேறு பிரிவுகளுக்கு மாணவர்கள் சேர்க்கப் படுகிறார்கள். தற்போது மொத்தம் 402 மாணவர்கள் பயின்று வருகின்றனர். பயிற்சி நிறைவுற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்கு " வளாக நேர்காணல்" வாயிலாக வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது. கடந்த ஆண்டு பயின்ற மாணவர்களில் 90 விழுக்காடு மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.



2001 ஆகஸ்ட் 28]

**இல்லத்தரசிகளுக்கு பகுதி நேரப் பயிற்சி**

வழக்கமாக நடத்தப்படும் வகுப்புகள் தவிர, இல்லத்தரசிகள் தமது ஓய்வு நேரத்தை நன்முறையில் பயன்படுத்திக் கொள்ளும்வகையில் அவர்களுக்கு பேக்கரி, சமையற் கலை முதலியவற்றில் பகுதி நேரப் பயிற்சியும் இந்நிறுவனத்தால் அளிக்கப்படுகிறது.

**7. ஊக்குதவிகள்**

சுற்றுலா. ஒரு தொழிலாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத் தொழிலில் தனியார் முதலீட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தமிழ்நாடு அரசு மூலதனம் மற்றும் மின்ஆக்கி ஊக்குதவித் தொகையை வழங்குகிறது.

**மூலதனம் ஊக்குதவித் தொகையை அதிகப்படுத்துதல்**

1. சென்னை, மதுரை, கோவை மாநகர எல்லையைத் தவிர வேறு இடங்களில் ரூ.1 கோடி செலவில் (நில மதிப்பு தவிர்த்து) கட்டப்படும் 1, 2 மற்றும் 3 நட்சத்திர தரம் உள்ள உணவகங்களுக்கு மூலதனம் ஊக்குதவித் தொகை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தகுதியுள்ள உணவகத்திற்கும் அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் ஊக்குதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மூலதன ஊக்குதவித் தொகையை அதிகப்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும்.

2. இத்தகைய மூலதனம் பொழுதுபோக்குப் பூங்கா (Amusement Park) மற்றும் கோல்ப் மைதானம் அமைக்கவும் வழங்கப்படும்.

3. சுற்றுலாத் திட்டங்களுக்கு மின் ஆக்கி வாங்க 15% மின் ஆக்கி மூலதனம் வழங்கப்படும் (அதிக பட்சம் ரூ. 5 இலட்சம்)

**8. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 1971—ம் ஆண்டு மிக எளிமையான முறையில் 2 பேருந்துகள் மற்றும் 5 ஓட்டல்களுடன் துவக்கப்பட்டது. 1971—ம் ஆண்டு முதல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மிக வேகமாக வளர்ச்சி அடைந்துள்ளது. தற்போது இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் 54 ஓட்டல்கள், தமிழகம் முழுவதும் இயங்கி வருகின்றன. இந்த 54 ஓட்டல்களில் திருநெல்வேலி, மேட்டுப்பாளையம், மண்டபம், திருப்பெரும்புதூர், குன்னூர், இராணிப்பேட்டை, கோத்தகிரி, நாமக்கல், மேட்டூர் அணை, சாத்தனூர்

அணை, விருதுநகர் மற்றும் வைகை அணையில் உள்ள 12 ஓட்டல்கள், ஏற்கெனவே தனியாருக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள உணவகங்கள் நாளடைவில் தனியாருக்குக் குத்தகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலாப் பயணிகளுக்குப் பின்வரும் வசதிகள் செய்துள்ளது:—

| | | |
|---|---|---|
| 1) உணவகங்கள் மற்றும் இளைஞர் விடுதிகள் | — | 34 |
| 2) படகு இல்லங்கள் | — | 10 |
| 3) சிற்றுண்டிகள் | — | 3 |
| 4) சிறு உணவகங்கள் | — | 4 |
| 5) தொலை நோக்கு இல்லம் | — | 4 |
| 6) பூங்கா | — | 3 |
| 7) சுற்றுலாப் பயணிகள் சேவை மையம் (பெட்ரோல் நிலையம்) மாமல்லபுரம் | — | 1 |

இளைஞர் விடுதிகள், அனைத்து பெரிய சுற்றுலா மையங்களிலும் கட்டப்பட்டுள்ளன. இதில் தங்கும் வசதி மிகக் குறைந்த கட்டணத்தில் கிடைக்கும்.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளை தனியார் மயமாக்குதல்**

சுற்றுலாப் பயணிகளின் முக்கியத் தேவைகள் சிறந்த போக்குவரத்து வசதி, தரமுள்ள உணவு மற்றும் தங்குவதற்கு வசதியான இடமாகும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது கட்டுப்பாட்டிலுள்ள 54 ஓட்டல்கள், 3 சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் 4 சிறு உணவகங்கள் மூலம் சிறந்த தங்கும் மற்றும் உணவக வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. இது தவிர சுமார் 60 நட்சத்திரத் தரம் (1 முதல் 5 வரை) உள்ள தனியார் ஓட்டல்களும் நூற்றுக்கணக்கான தரம் நிர்ணயிக்கப்படாத தனியார் ஓட்டல்களும் உள்ளன. மேலும், நட்சத்திரத் தரமுள்ள ஓட்டல்கள் திருவண்ணாமலை, வேளாங்கன்னி, நாகூர் மற்றும் பழனியில் விரைவில் கட்டப்பட உள்ளன. மற்ற இடங்களில் தேவைக்கு ஏற்றாற் போல கட்டப்படும்.





சுற்றுலாப் பயணிகள் பல சமயங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் உணவகங்கள் மிகவும் மோசமாக பராமரிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி வருகிறார்கள். உணவகங்களின் பராமரிப்பு மற்றும் சேவைத் தரம் தற்போது சிறப்பாக இல்லை. இந்த உணவகங்கள் பல ஆண்டுகளுக்கு முன்னதாகக் கட்டப்பட்டவை. இவைகளை மேம்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகள் குறிப்பிடத்தக்க அளவிற்கு பயனளிக்கவில்லை. விருந்தோம்பல் துறைக்கு மிகச் சிறந்த அளவு பராமரிப்பு, தரமுள்ள உணவு வகைகள் மற்றும் நல்ல சேவை முறைகள் அத்தியாவசியமானதாகக் கருதப்படுகிறது. இத்தகைய சேவைகள் மட்டுமே, சுற்றுலாப் பயணிகளைத் திருப்திப்படுத்த இயலும். இதனை கருத்தில்கொண்டு ஜூலை 200—ல் நடைபெற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடத்திய சுற்றுலாத் துறை ஆய்வுக் கூட்டத்தில், கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன:—

1. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள் நடைமுறையில் உள்ள விதிமுறைகளைக் கடைபிடித்து தனியார் மயமாக்குதல்.

2. தனியார் மயமாக்க இயலாத சில ஓட்டல்களை வேறு அரசு உபயோகத்திற்கு ஏற்றவாறு மாற்றுதல்.

3. நட்சத்திரத் தரம் உள்ள உணவகங்கள் புனிதத் தலம் மற்றும் பாரம்பரிய சுற்றுலாத் தலங்களில் கட்ட தனியாருக்கு ஊக்கம் அளிக்கப்படும். இத்தகைய திட்டங்களை அரசு விரைவில் பரிசீலித்து ஊக்கத் தொகைகள் தேவைக்கு ஏற்றாற்போல் வழங்கப்படும்.

**9. ஒருங்கிணைப்பின் அவசியம்**

சுற்றுலாத் திட்டங்கள் மைய அரசு, மாநில அரசு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், நிதி நிறுவனம், நகர்ப்புற திட்டத் துறை, மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறை, மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஆகிய துறைகளிடமிருந்து நிதி பெற்று செயல்படுத்தப்படுகின்றன.

சுற்றுலாத் தலங்களை சுத்தமாகவும், மாசுபடியாமலும் பாதுகாப்பது, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சம்பந்தப்பட்ட துறையின் கடமையாகும். மலை வாசஸ்தலங்கள், பாரம்பரிய நகரங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களில் தூய்மை மிக அவசியமாகிறது. நாம் அனைவரும் விழிப்புடன் சுற்றுலாத் தலங்களில் தூய்மையைப் பாதுகாக்க திட்டமிட்ட நடவடிக்கை எடுத்து, ஒருங்கிணைந்து

[2001 ஆகஸ்ட் 28

செயல்பட வேண்டும். இதனால் சுற்றுலாத் தலங்களுக்கு எதிராக கூறப்படும் புகார்களைத் தவிர்க்க இயலும்.

## 10. தகவல் தொடர்பை வலுப்படுத்துதல்

சுற்றுலாத் துறையின்கீழ் 18 சுற்றுலா அலுவலகங்களும், 17 சுற்றுலாத் தகவல் மையங்களும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தகவல் அளித்து வருகின்றன. இதில் நான்கு சுற்றுலா அலுவலகங்களும், மூன்று சுற்றுலாத் தகவல் மையங்களும், வெளி மாநிலங்களில் இயங்குகின்றன. முதற்கட்ட நவீன மயமாக்குதலில், 9 சுற்றுலா அலுவலகங்களில் கணினி அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சுற்றுலா அலுவலகங்கள், சுற்றுலாத் தகவல் மையங்கள், தமிழ்நாடு ஓட்டல்கள் மற்றும் பயணங்கள் முன்பதிவு ஆகியவற்றுடன் சுற்றுலாத் தலைமை அலுவலகங்களும் கணினி மயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் அனைத்து அலுவலகங்கள் / விடுதிகளில் எஸ்.டி.டி., ஐ.எஸ்.டி., நிகரி / ஈ—மெயில் / இன்டர்நெட் வசதிகள் இருக்கும். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில், மேற்படி இடங்களனைத்தும் ஒன்றுக்கொன்று "வேன்" (WAN) மூலம் இணைக்கப்படும். இதன் பயனாக ஒரு சுற்றுலாப் பயணி, தனது தனிக் கணினி மூலம் உலகின் எப்பகுதியிலிருந்தும் தமிழ்நாட்டின் சுற்றுலாத் தகவல்களை அறிந்து கொள்ளவும், உடனடி முன்பதிவு செய்யவும் வாய்ப்பு ஏற்படும்.

புதிய வலைத் தளம் (Web-site) ஒன்று மேம்படுத்தப்பட்டு, விரைவில் நடைமுறைப் படுத்தப்படும். இந்த வலைத் தளத்தின் மூலம் சுற்றுலா பற்றிய முழுத் தகவல்களையும், சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளையும் அறிய முடியும்.

## 7. இந்தியாவில் சுற்றுலா

வெளிநாட்டிலிருந்து 24,81,928 சுற்றுலாப் பயணிகள், 1999—ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வருகை தந்தனர். 2000—ம் ஆண்டில் இது 26,41,157 ஆக உயர்ந்தது. சென்ற ஆண்டைக் காட்டிலும் 6.4 சதவீதம் உயர்வு அடைந்துள்ளது. நாட்டின் அன்னியச் செலாவணியை ஈட்டுவதில் மூன்றாவது இடத்திலும், நிகர வருவாய் ஈட்டுவதில் இரண்டாவது இடத்திலும் சுற்றுலா உள்ளது. எடுத்துக்காட்டாக, 1999—ம் ஆண்டில் சுற்றுலாத் தொழிலில் கிடைத்த அந்நியச் செலாவணி ரூ.13,042 கோடியாகும். இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 10.5 சதவீதம் உயர்ந்து, ரூ.14,409 கோடியை எட்டியுள்ளது.



2001 ஆகஸ்ட் 28]

## 8 . தமிழ் நாட்டில் சுற்றுலா

| சுற்றுலாப் பயணிகள் விபரம் | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 |
|---|---|---|---|---|---|
| | (வருகை லட்சத்தில் ) | | | | |
| உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் | 182.08 | 189.28 | 204.13 | 211.37 | 229.82 |
| வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் | 6.14 | 6.37 | 6.36 | 7.22 | 7.86 |
| மொத்தச் சுற்றுலாப் பயணிகள் | 188.22 | 195.65 | 210.49 | 218.59 | 237.68 |
| சென்ற ஆண்டைவிட சதவீத உயர்வு | 5.7 | 4.0 | 7.6 | 3.8 | 8.7 |

தமிழ்நாட்டிற்கு, 1999—ஆம் ஆண்டில் வருகை புரிந்த சுற்றுலாப் பயணிகள், 218.59 இலட்சமாகவும், 2000—ம் ஆண்டில் 237.68 இலட்சமாகவும் இருப்பதால், அதாவது 8.7 சதவீதம் சென்ற ஆண்டைக் காட்டிலும் உயர்ந்துள்ளது.

## 9. வரி சீரமைப்பு

நட்சத்திர அந்தஸ்துள்ள ஓட்டல்களில், தற்போது சொகுசு வரி 20 சதவீதம் முதல் 25 சதவீதம் வரை வசூல் செய்யப்படுகிறது. இதர வரிகள் மூலமும் ஓரளவிற்குப் பாதிக்கப்படுகின்றனர். இந்த வரிகளை அண்டை மாநிலங்களோடு ஒப்பிட்டு குறைப்பது குறித்தும், அல்லது வரிகளைத் திருத்தியமைப்பது குறித்தும், இத்துறையின் கவனத்தில் உள்ளது.

[2001 ஆகஸ்ட் 28

ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின்னர் ஒரு முடிவு எடுக்கப்படும். அதிகமாக வரி வசூலிப்பது சில நோக்களில் எதிர்மறையான பலனை விளைவிக்கும். தமிழ்நாட்டிற்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில், வரியினைச் சீரமைக்கும் பொருட்டு, பிற துறைகளுடன் கலந்து முடிவெடுக்க இத்துறை நடவடிக்கை எடுக்கும்.

## 10. வேலைவாய்ப்பினை அதிகப்படுத்துதல்

பிற தொழில்களுடன் ஒப்பிடும்போது, சுற்றுலா ஒரு மாசற்ற தொழிலாகும். சுற்றுலா, நேர்முகம் மற்றும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை அளிக்கிறது. சுற்றுலா, அனைவரும் ஈடுபடக்கூடிய தொழில். தங்கள் வாழ்க்கையினை வளப்படுத்திக் கொள்ள விரும்பும் அனைவரும் இதில் ஈடுபடலாம். போக்குவரத்து, ஆடை உற்பத்தி, தங்குமிட வசதி, உணவு வகை தயாரித்தல், கைவினைப் பொருட்கள், கலை மற்றும் பண்பாடு ஆகியவை மூலம் சுற்றுலா அதிக அளவில் வேலைவாய்ப்பினை அளிக்கிறது. எனவே, அதிக அளவில் வேலை வாய்ப்பினை உருவாக்க, சுற்றுலா வளர்ச்சிப் பணிகளைத் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும்.

## 11. நிர்வாக அமைப்பு முறை

### அ) சுற்றுலா இயக்குநரகம்

சுற்றுலா ஆணையருக்கு நிர்வாகத்தில் உதவி புரிய ஓர் இணை இயக்குநர், ஐந்து துணை இயக்குநர்கள், ஓர் உதவி இயக்குநர், ஒரு வெளியீட்டு அலுவலர், ஒரு கணக்கு அலுவலர் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் உள்ளனர். சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு சுற்றுலா அலுவலகங்கள் தமிழ்நாட்டில் 14 இடங்களிலும், வெளி மாநிலங்களில் 4 இடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விபரம் பின்வருமாறு:—

1) சுற்றுலா அலுவலகம், கன்னியாகுமரி

2) சுற்றுலா அலுவலகம், திருநெல்வேலி

3) சுற்றுலா அலுவலகம், இராமேசுவரம்

4) சுற்றுலா அலுவலகம், தருமபுரி

5) சுற்றுலா அலுவலகம், கொடைக்கானல்



2001 ஆகஸ்ட் 28]

6) சுற்றுலா அலுவலகம், மதுரை

7) சுற்றுலா அலுவலகம், உதகமண்டலம்

8) சுற்றுலா அலுவலகம், சேலம்

9) சுற்றுலா அலுவலகம், திருச்சிராப்பள்ளி

10) சுற்றுலா அலுவலகம், தஞ்சாவூர்

11) சுற்றுலா அலுவலகம், பூம்புகார்

12) சுற்றுலா அலுவலகம், சிதம்பரம்

13) சுற்றுலா அலுவலகம், மாமல்லபுரம்

14) சுற்றுலா அலுவலகம், சென்னை

15) சுற்றுலா அலுவலகம், மும்பை

16) சுற்றுலா அலுவலகம், கொல்கத்தா

17) சுற்றுலா அலுவலகம், பனாஜி, கோவா

18) சுற்றுலா அலுவலகம், புது தில்லி

மேற்கண்ட சுற்றுலா அலுவலகங்களைத் தவிர, முக்கியமான புகை வண்டி நிலையங்கள் மற்றும் மாநிலத்திலுள்ள விமான நிலையங்கள் உள்பட 14 இடங்களில் சுற்றுலாத் தகவல் மையங்களும், வெளி மாநிலங்களில் 3 சுற்றுலாத் தகவல் மையங்களும் பின்வருமாறு செயல்பட்டு வருகின்றன:—

1) சுற்றுலாத் தகவல் மையம், திருநெல்வேலி இரயில் சந்திப்பு

2) சுற்றுலாத் தகவல் மையம், இராமேசுவரம் இரயில் சந்திப்பு

3) சுற்றுலாத் தகவல் மையம், இராமேசுவரம் பேருந்து நிலையம்

4) சுற்றுலாத் தகவல் மையம், மதுரை விமான நிலையம்

5) சுற்றுலாத் தகவல் மையம், மதுரை இரயில்வே சந்திப்பு

6) சுற்றுலாத் தகவல் மையம், கூடலூர் (நீலகிரி மாவட்டம்)

[2001 ஆகஸ்ட் 28

7) சுற்றுலாத் தகவல் மையம், கோயம்புத்தூர் இரயில் சந்திப்பு

8) சுற்றுலாத் தகவல் மையம், திருச்சிராப்பள்ளி இரயில் சந்திப்பு

9) சுற்றுலாத் தகவல் மையம், திருச்சிராப்பள்ளி விமான நிலையம்

10) சுற்றுலாத் தகவல் மையம், ஓட்டல் தமிழ்நாடு வளாகம், தஞ்சாவூர்

11) சுற்றுலாத் தகவல் மையம், மத்திய இரயில் நிலையம், சென்னை

12) சுற்றுலாத் தகவல் மையம், எழும்பூர் இரயில் நிலையம், சென்னை

13) சுற்றுலாத் தகவல் மையம், காமராசர் உள்நாட்டு விமான நிலையம், சென்னை

14) சுற்றுலாத் தகவல் மையம், அண்ணா வெளிநாட்டு விமான நிலையம், சென்னை

15) சுற்றுலாத் தகவல் மையம், பெங்களூர் இரயில் சந்திப்பு

16) சுற்றுலாத் தகவல் மையம், ஐதராபாத்

17) சுற்றுலாத் தகவல் மையம், திருவனந்தபுரம்.

**ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், அதன் தலைவரின்கீழ் இயங்கி வருகிறது. அவருக்கு நிர்வாகத்தில் உதவி புரிய இயக்குநர் குழுமம் ஒன்றுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அன்றாட நிர்வாகத்தைக் கவனிப்பதற்கு ஒரு நிர்வாக இயக்குநரும், அவருக்கு உதவி புரிவதற்கு தொழில்நுட்பம் / தொழில்நுட்பமல்லாத அதிகாரிகள் மற்றும் நிதித் துறை வல்லுனர்களும் பணிபுரிந்து வருகின்றார்கள்.



2001 ஆகஸ்ட் 28]

## இணைப்பு — I

மைய அரசு நிதி உதவித் திட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திட்டங்கள்

| வ. எண் | திட்டங்கள் | மொத்த திட்ட மதிப்பீடு | மைய அரசு பங்கு | மாநில அரசு பங்கு |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | வேலூர் கோட்டையில் ஒருங்கிணைந்த வசதிகள் | 40.00 | 26.60 | 13.40 |
| 2. | திருத்தணியில் சாலையோர வசதி விடுதியில் கூடுதல் அறைகள் கட்டுதல் | 25.00 | 20.00 | 5.00 |
| 3. | காட்சிக் கோபுரம், கன்னியாகுமரி | 35.00 | 30.00 | 5.00 |
| 4. | செங்கல்பட்டு கொளவாய் ஏரியில் புனல் விளையாட்டு மையத்திற்கு சாதனங்கள் வாங்குதல் | 20.40 | 15.00 | 5.40 |
| 5. | முக்கிய சுற்றுலாத் தலங்களில் பொதுக் கழிப்பிடங்கள் | | | |
| | அ. கன்னியாகுமரி | 16.35 | 12.00 | 4.35 |
| | ஆ. ஒகேனக்கல் | 16.35 | 12.00 | 4.35 |
| | இ. நாகூர் | 16.00 | 12.00 | 4.00 |
| | ஈ. வேளாங்கண்ணி | 16.35 | 12.00 | 4.35 |
| | காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோயிலைச் சுற்றி சுற்றுச்சூழலை மேம்படுத்துதல் | 22.50 | 15.00 | 7.50 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 7. | திருச்சிராப்பள்ளி புராதன கோயில்களைச் சுற்றி சுற்றுச் சூழலை மேம்படுத்துதல் | 21.65 | 15.00 | 6.65 |
| 8. | கலாச்சார சுற்றுலா - முக்கிய சுற்றுலாத் தலங்களில் பொருட்காட்சிகள் நடத்துதல் மற்றும் விழாக்கள் கொண்டாடுதல் | 15.00 | 15.00 | -- |
| 9. | குருசடைத் தீவில் சுற்றுச் சூழல் சுற்றுலா மேம்பாடு | 18.90 | 18.90 | -- |
| 10. | சிறப்பு கட்டமைப்பு வசதிகள் | | | |
| | அ. இராமேசுவரம் (தேசிய புனிதத்தலம்) | 57.00 | 28.50 | 28.50 |
| | ஆ. கன்னியாகுமரி (தேசிய சுற்றுலாத்தலம்) | 50.00 | 25.00 | 25.00 |
| 11. | திருச்சிராப்பள்ளியில் உயர் கம்ப மின் விளக்குகள் அமைத்தல் | 14.25 | 11.35 | 2.90 |
| 12. | தஞ்சாவூர் கோட்டையை புனரமைத்தல் | 22.50 | 15.00 | 7.50 |
| 13. | நாகப்பட்டினம் கடற்கரையில் நிலச்சீரமைப்பு, நடைப்பாதை மற்றும் விளக்கு வசதிகள் ஏற்படுத்துதல் | 15.00 | 9.00 | 6.00 |
| 14. | கொடைக்கானலில், வாகனம் நிறுத்தும் இடம் அமைத்தல் | 30.00 | 20.00 | 10.00 |
| 15. | திருச்சிராப்பள்ளி மாவட்டம் சமயபுரத்தில் கழிப்பிட வசதி | 16.00 | 12.00 | 4.00 |
| 16. | ஏலகிரி மற்றும் ஏற்காட்டில் இயற்கை வழி நடைப்பாதை மேம்பாடு | 4.00 | 4.00 | --- |
| 17. | மாமல்லபுரம், கொடைக்கானல் மற்றும் சிதம்பரம் ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்கள் மேம்படுத்துதல் | 100.00 | 28.00 | 72.00 |
| | மொத்தம் | 572.25 | 356.35 | 215.90 |





## இணைப்பு — 2

### மைய அரசு நிதியுதவித் திட்டத்தின் கீழ் 2001—2002 ஆம் ஆண்டில்முன்னுரிமைப் படுத்தப்பட்டுள்ள சுற்றுலாத் திட்டங்கள்

(ரூ. இலட்சத்தில்)

| திட்டத்தின் பெயர் | மைய அரசு பங்கு | மாநில அரசு பங்கு | இதர வகை நிதியுதவி | மொத்த திட்டத் தொகை |
|---|---|---|---|---|
| 1 பழவேற்காடு சுற்றுச் சூழல் சுற்றுலா மேம்பாடு | 30.00 | 30.00 | — | 60.00 |
| 2. மாமல்லபுரம் அர்ச்சுனன் தபசை புனரமைத்தல் | 15.00 | 7.50 | — | 22.50 |
| சாலையோர வசதிகள் | | | | |
| 3. வால்பாறை | 20.00 | 10.00 | — | 30.00 |
| 4. ஏர்வாடி | 20.00 | 10.00 | — | 30.00 |
| 5. ஆத்தங்கரை பள்ளிவாசல் - திருநெல்வேலி மாவட்டம் | 20.00 | 10.00 | — | 30.00 |
| 6. தெய்வச்செயல்புரம் - தூத்துக்குடி மாவட்டம் | 20.00 | 10.00 | — | 30.00 |
| 7. குன்றத்தூர் | 20.00 | 10.00 | — | 30.00 |
| 8. ஸ்ரீமுஷ்ணம் | 20.00 | 10.00 | — | 30.00 |
| 9. டாப் செங்காட்டுப்பட்டி - பச்சைமலை - மலைப்பாதை, மற்றும் சுற்றுலாத்தல மேம்பாடு | 25.00 | 10.00 | — | 35.00 |
| கிராமியச் சுற்றுலா | | | | |
| 10. திருவாதவூர் - மதுரை மாவட்டம் | 10.00 | 10.00 | — | 20.00 |
| 11.சிறுங்குன்றம் - காஞ்சிபுரம் மாவட்டம் | 10.00 | 10.00 | — | 20.00 |
| 12. புரிசை - திருவண்ணாமலை மாவட்டம் | 10.00 | 10.00 | — | 20.00 |
| பொருட்காட்சி மற்றும் விழாக்கள் | | | | |
| 13. நாட்டிய விழா, மாமல்லபுரம் | 5.00 | — | — | 5.00 |
| 14. நாட்டியாஞ்சலி விழா, சிதம்பரம் | 5.00 | — | — | 5.00 |
| 15. காஞ்சிபுரம் கலை விழா | 5.00 | — | — | 5.00 |

[2001 ஆகஸ்ட் 28

(ரூ. இலட்சத்தில்)

| திட்டத்தின் பெயர் | மைய அரசு பங்கு | மாநில அரசு பங்கு | இதர வகை நிதியுதவி | மொத்த திட்டத் தொகை |
|---|---|---|---|---|
| **பொதுக் கழிப்பிட வசதிகள்** | | | | |
| 16. திருப்பரங்குன்றம் | 12.00 | 4.00 | -- | 16.00 |
| 17. திருவேற்காடு | 12.00 | 4.00 | -- | 16.00 |
| 18. மாங்காடு | 12.00 | 4.00 | -- | 16.00 |
| **உயர் கம்ப மின் விளக்குகள்** | | | | |
| 19. திருவண்ணாமலை | 7.00 | 3.00 | -- | 10.00 |
| 20.திருத்தணி | 7.00 | 3.00 | -- | 10.00 |
| 21.திருக்கழுகுன்றம் | 7.00 | 3.00 | -- | 10.00 |
| 22. **கணினி மூலம் சுற்றுலா அலுவலகங்களை இணைத்தல்** | 30.00 | 30.00 | -- | 60.00 |
| **சுற்றுலா வரவேற்பு மையம்** | | | | |
| 23. கன்னியாகுமரி | 45.00 | 15.00 | -- | 60.00 |
| 24. கொடைக்கானல் | 45.00 | 15.00 | -- | 60.00 |
| **உலாத் தல மேம்பாடு** | | | | |
| 25. புளியஞ்சோலை | 25.00 | 10.00 | -- | 35.00 |
| 26.கோபி செட்டிபாளையம் | 12.00 | 12.00 | -- | 24.00 |
| 27.வீடூர் அணை | 5.00 | 5.00 | -- | 10.00 |
| **தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் திட்டங்கள்** | | | | |
| 28. முட்டுக்காடு படகுத்துறை மேம்படுத்துதல் மற்றும் படகுகள் வாங்குதல் (சிறப்பு சுற்றுலாப்பகுதி) | 20.00 | -- | 6.00 (தகுவக) | 26.00 |
| 29. மாமல்லபுரம் கடற்கரை வளாகத்தில் கூடுதலாக 5 குடில்கள் கட்டுதல் | 25.00 | -- | 10.00 (தகுவக) | 35.00 |
| 30. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை கணினி மயமாக்குதல் | 20.00 | -- | 20.00 (தகுவக) | 40.00 |
| மொத்தம் | **519.00** | **245.50** | **36.00** | **800.50** |



001 ஆகஸ்ட் 28]

**2001–2002–ம் ஆண்டு பகுதி–2 திட்டங்கள்**

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை | | 2001-2002ல் தொகை | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தொடர் | தொடரா | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
| 1. | நிகரி சாதனம் வெளி மாநிலங்களில் உள்ள 4 சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் 3 சுற்றுலா தகவல் மையங்களில் அமைத்தல் | - | 2.00 | - | 2.00 | - | 2.00 |
| 2. | சர்வதேச சுற்றுலா நிகழ்வுகளில் கலந்து கொள்ளல் | 20.00 | - | 20.00 | - | - | 20.00 |
| 3. | புகைப்பட பிரிவை மேம்படுத்துதல் | - | 2.00 | - | 2.00 | - | 2.00 |
| 4. | சுற்றுலா பயண எழுத்தர்களுக்கு சுற்றுலாப் பயணம் ஏற்பாடு செய்தல் | 6.00 | - | 6.00 | - | - | 6.00 |

(ரூ. இலட்சத்தில்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5. | புதுதில்லி, மும்பை, கொல்கத்தா, சண்டிகர் இடங்களில் விளம்பர முகாம் நடத்துதல் | 6.00 | - | 6.00 | - | - | 6.00 |
| | சென்னை, திருச்சி, மாமல்லபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 4 சுற்றுலா அலுவலகங்களில் வெந்நீர்/குளிர்ந்த நீர் சாதனம் வாங்குதல் | - | 4.00 | | 4.00 | - | 4.00 |
| 7. | ஜெய்பூர் (இராஜஸ்தான்), ஆக்ரா, வாரணாசி (உ.பி.) ஆகிய இடங்களில் புதிய சுற்றுலா அலுவலகங்கள் அமைத்தல் | - | 5.00 | - | 5.00 | - | 5.00 |
| 8. | புது தில்லி, கொல்கத்தா, மும்பை மற்றும் பனாஜி (கோவா) ஆகிய சுற்றுலா அலுவலகங்களில் கணினி நிறுவுதல் | | 5.00 | - | 5.00 | | 5.00 |
| | மொத்தம் | 32.00 | 18.00 | 32.00 | 18.00 | - | 50.00 |

223 சென்னை-600 008